**மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி - 627012**

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI - 627012**

**தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்**

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# தமிழக வரலாறும் பண்பாடும்

## பொதுத் தமிழ்

### மூன்றாம் பருவம்

**2024**

**மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 627 012**

## தமிழக வரலாறும் பண்பாடும்

**அலகு** - 1

தொல் தமிழர் - பழைய கற்காலம் - புதிய கற்காலம் - உலோக காலம் - பெருங்கற்காலம் - அகழ்வாராய்ச்சியில் தமிழும் தமிழரும்(கீழடி வரை) - திணை வாழ்வியல்(களவு வாழ்க்கைஇ கற்புவாழ்க்கைஇ உணவுஇ அணிகலன்கள்இ வாணிகம்இ விளையாட்டுகள்) - கல்வியும்இ கலைகளும் - தமிழ் வளர்த்த சங்கம் - சங்க கால ஆட்சி முறை - அயல்நாட்டுத் தொடர்புகள்

**அலகு** - 2

மூவேந்தர் வரலாறு - பல்லவர் வரலாறு - நாயக்கர் ஆட்சி-முகம்மதியர் ஆட்சி - மராட்டியர் ஆட்சி

**அலகு - 3**

போத்துக்கீசியர் - டச்சுகாரர்கள் - டேனிஸ்காரர்கள் - பிரெஞ்சுகாரர்கள் - ஆங்கிலேயர்கள் - பாளையக்காரர்கள் - இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாடு

**அலகு - 4**

மொழிப் போராட்டம் - சமூக மறுமலர்ச்சி - தொழில்நுட்ப வளர்ச்சி

**அலகு – 5**

நிறுத்தக்குறிகள் - கலைச்சொற்கள் - மொழிபெயர்ப்பு.

**பார்வைநூல்**

1, கே.கே.பிள்ளை

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் உலக தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை-113

2, அ.கா.பெருமாள்

தமிழக வரலாறும் பண்பாடும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அண்ணா சாலை சென்னை-2

3, வே.தி.செல்வம்

தமிழக வரலாறும்பண்பாடும் மணிவாசகர் பதிக்கம் சென்னை-108

4, டாக்டர்.மா.இராசமாணிக்கனார்

தமிழக வரலாறும் பண்பாடும் கௌரா பதிப்பக குழுமம்,(சாரதா பதிப்பகம்) திருச்சி-2

5, டாக்டர்,ஆ.இராமகிருட்டிணன்

தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கிய பண்ணை, மதுரை-1

6, க.அ.நீலகண்டசாஸ்திரி

தமிழக பண்பாடும் வரலாறும் ஸ்ரீ செண்பகா பாதிப்பகம் சென்னை-17

7, பேராசிரியர்.டாக்டர்.சு.வெங்கடேசன்

தமிழ்நாடு வரலாறும் பண்பாடும் வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-

## அலகு - 1

## தொல் பழங்கால வரலாறும் சங்ககால வரலாறும்

### அறிமுகம்

தமிழக நிலப்பரப்பின் வரலாறை அறிந்து கொள்வது என்பது இவ்வுலக வரலாற்றின் வேர்ப்பகுதியை அறிந்து கொள்வதற்குச் சமமானது.தமிழகம் மற்றும் அதனை உள்ளடக்கிய பெரும்பாலான தென்னிந்நியப் பகுதிகள்இஉலகம் தோன்றியபோது உருவான உறுதிமிக்க தொன்மைப் பாறைகளால் ஆக்கப்பட்டிருப்பது அதன் வரலாற்றை ஆராய்வதற்குச் சிறந்த சான்றாக உள்ளது.

போரூழிக்காலம் பல ஊழிக் காலத்தை உடையதாக விளங்கியது.ஊழிக் காலம் ஒவ்வொன்றின் தொடக்கத்திலும் கடல் நிலத்தைக் கவா்ந்து சென்றதாக ஆய்வில் உறுதியாக உள்ளது.

ஒரு நாட்டின் நாகரீகமும் பண்பாடும் அந்நாட்டின் புவியியற் கூறுகளாலேயே உருவாக்கப்படுகின்றன. “மலைகளும்இ ஆறுகளும், காற்றுகளும், மழைப்பொழிவுகளும் நாகரீகத்தை உருவாக்குவதிலும் மனிதப்பழக்கவழக்கங்களை நிர்ணயிப்பதிலும் பெரும்பங்கு வகிக்கின்றன” எனப் பேராசிரியர் ராஜையன் சரியாகவே கணித்துக் கூறுகிறாா். “புவியியலும் காலவரன் முறையும் வரலாற்றின் இரு கண்கள்” என ரிச்சா்டு ஹக்லியட் இரண்டிற்குமிடையிலுள்ள தொடா்புகளை அழகிய உவமானத்துடன் விளக்கியுள்ளாா்.

### தமிழகத்தின் இயற்கை மற்றும் நிலஅமைப்புகள்:-

தொல் பழங்காலம், சங்க காலம், இடைக் காலம், அண்மைக் காலம் ஆகிய நான்கு வரலாற்றுக் காலங்களில் தமிழ்நாட்டின் நிலப்பரப்பளவில் ஏற்றத்தாழ்வுகள் இருந்துள்ளன. 1971 ஆவது ஆண்டின் கணக்குப்படி 1,30,000 சதுர கிலோமீட்டா் உடையதாகத் தமிழகம் அமைந்துள்ளது. தென்னிந்தியப் பாறைகள் எண்ணற்ற ஆண்டுகள் அசைக்க முடியாத தன்மையுடையவை. ஆவை, தொன்மை மற்றும் நிலைத்தத் தன்மையால் ‘கேடயநிலம்’ எனப்படுகின்றன.

ஊழிக் காலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் அரிக்கப்பட்டது போக எஞ்சி நிற்பவைகளே தமிழ்நாட்டின் மலைகள் ஆகும். சேலம் மாவட்டத்தில் கஞ்சமலைப்பகுதிப் பாறைகள் உலகிலேயே மிகப் பழமையான பாறை வகைகளைச் சோ்ந்தவை. இன்று இதன் வயது ஏறத்தாழ 450 கோடி ஆண்டுகள் எனத் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தொல் பழங்காலம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளது.

கடல்மட்ட வேறுபாட்டால் கடலுக்குள் மூழ்கிய குமரிக்கண்டம், முற்காலத்தில் வளமிகுந்த நாடாகத் திகழ்ந்துள்ளது. கிழக்கில் சந்தா தீவு முதல் மேற்கில் மடகாஸ்கா் வரையிலும் குமரிக்கண்டம் இருந்துள்ளது. நாவல் மரங்கள் மிகுந்த குளிர்ச்சியான சோலையாகத் திகழ்ந்ததால் நாவல்தீவு என அப்பகுதி அழைக்கப்பட்டது. மேல்நாட்டு நில நூல் வல்லுநா் ‘கொண்ட வனம்’ என கூறியுள்ளாா். இலமூா் என்ற குரங்கினம் அதிகமாக

வாழ்ந்ததால் குமரிக்கண்டம் இலமூரியா எனப்பட்டதாகவும் விலங்கியல் வல்லுநர்கள் கூறுவதாக வரலாற்று ஆசிரியர் வே.தி. செல்லம் குறிப்பிடுகிறார்.

**தமிழக எல்லைகள்**

சங்க கால வடக்கு எல்லை வேங்கடமலை ஆகவும் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு எல்லை கடல்களாகவும் இருந்தன. நிலஅமைப்பு இருவிதமாக ஆராயப்படும் என நிலவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

1. இயற்கைத் தோற்றம்
2. பண்பாட்டுத் தோற்றம்

**பண்டையத் தமிழகத்தின் அமைவிடம்**

பண்டைய காலத் தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டு வந்தது.

**1. சேரநாடு**

மங்களூருக்கருகில் கடலோடு கலக்கும் சந்தகரி ஆற்றுக்குத் தெற்கிலுள்ள மலைப்பாங்கான மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்திருந்தது.

**2. சோழநாடு**

வடக்கில் நெல்லூரிலிருந்து தெற்கில் புதுக்கோட்டை வரையுள்ள பகுதி.

**3. பாண்டியநாடு**

வடக்கில் வெள்ளாறிலிருந்து தெற்கில் கன்னியாகுமரி வரையிலும், கிழக்கில் சோழமண்டலக் கரையிலிருந்து மேற்கில் கேரளாவிற்கு செல்லும் அச்சன் கோயில் கணவாய் வரையிலுமுள்ள பகுதி.

**பண்டைய தமிழக மக்களின் வாழ்க்கை முறை**

நிலவியலுக்கு தகுந்தாற்போல் பண்டையத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

**குறிஞ்சி - மலையும் மலையைச் சார்ந்த நிலமும்**

**முல்லை - காடும் காட்டைச் சார்ந்த நிலமும்**

**மருதம் - சமவெளிநிலம்**

**நெய்தல் - கடற்கரைப்பகுதி**

**பாலை - வறண்ட நிலப்பகுதி**

இங்கு வாழும் மக்கள் தங்கள் தொழில், இசை மற்றும் வழிபடும் தெய்வங்களைக்கூடத் தாங்கள் வாழும் நிலத்தின் இயல்பிற்கேற்றவாறு அமைத்துக் கொண்டனர்.

**தமிழகத்தின் முக்கிய புவியியல் கூறுகள்**

**1. சோழ மண்டலக் கடற்கரை**

சென்னையிலிருந்து தெற்கில் தென்னாற்காடு மாவட்டம் வரை அமைந்துள ் ள பகுதி

**2. தமிழ்நாடு குன்றுகள்**

பாலாறுக்கும் காவிரிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மற்றும் கொல்லிமலை, பச்சைமலை ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய குன்றுகள்.

**3. பெண்ணையாறு, பாலாறு பள்ளத்தாக்குகள்**

**4. கொங்குநாடு**

பாலக்காட்டிற்கும், காவிரிக்குமிடையில் உள்ள பகுதி.(கோயம்புத்தூர், ஈரோடு, சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள பகுதி.)

**5. காவிரி டெல்டா**

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ள பகுதி.

**6. வறண்ட தென்மேற்குப் பகுதி**

வைகைப் பள்ளத்தாக்கின் மேற்பகுதி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கரிசல் மண்பகுதி, தாமிரபரணி பள்ளத்தாக்குப் பகுதி ஆகியன.

## இன மரபு

இனம் என்பது மரபுவழிப் பண்பை உள்ளடக்கியதாகும்.மரபு வழிப் பண்பு அரசையும் அரசியலையும் உருவாக்கக் காரணமான ஒழுக்கம், சமூகம், அறிவியல் ஆகிய பண்புகளை தனக்குள் கொண்டது.

இந்திய மக்களின் உடற்கூறு இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்ததில் பல இனங்களாக மக்களை வகைப்படுத்தியுள்ளனர்.

1. திராவிட இனம்
2. இந்திய - ஆரியஇனம்
3. மங்கோலிய இனம்

# 1. தொல் தமிழர்

## அறிமுகம்

தொன்மைச் சிறப்புமிக்க மூத்த குடியினரான தமிழரின் வரலாறும் பண்பாடும் தோண்டத் தோண்ட நீண்டு கொண்டே செல்கிறது. அத்தகைய நம் முன்னோர்களின் வாழ்வியல் கூறுகளாக அமைந்த பண்பாட்டினைத் தெரிந்து கொள்வதும் அதில் சிறப்பானவற்றைத் தொடர்ந்து பின்பற்றுவதும் இளைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும். 'பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம்' என்பார் பாவாணர்.

## தொல்தமிழர்

தொல் பழங்காலம் என்பது பல மடங்கு ஆண்டுகளை உள்ளடக்கியது. 20 லட்சம் ஆண்டிலிருந்து கி.மு.4000 ஆண்டு வரை உள்ள காலங்கள் தொல்பழங்காலம் எனப்படும். இக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தொல் தமிழர் எனப்பட்டனர். மனிதன் எழுதத் தொடங்கியதற்கு முற்பட்ட காலத்தைத் தொல் பழங்காலம் எனக் கூறலாம்.

1. வரலாற்றிற்கு முந்தைய காலம)
2. வரலாற்றுக் காலம்

வரலாற்றுக்கு முந்தைய காலமே தொல் காலமாகக் கூறப்படுகிறது. இக்காலத்தைக் கற்காலம் என்றும் கூறுவர். இக்காலத்தில் வாழ்ந்த மனித சமுதாயம் விட்டுசென்ற அடையாளச் சின்னங்கள் மிகக் குறைவு. எழுத்து சான்றுகள் இல்லாத காலத்தில் மனிதன் வாழ்ந்து விட்டுச் சென்ற சில அடையாளங்களைக் கொண்டு மனித வரலாற்றை அறிவது தொல்பழங்காலம் வரலாறு ஆகும்.

பரிபாடலில், கீரந்தையார் ஐந்து ஊழி பற்றிக் குறிப்பிடுகிறார். காற்று, தீ, மழை, வானத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் உருவமற்ற ஊழி ஆகியவை பற்றிக் கூறியுள்ளார்.

ஊழி (கால அளவை)

↓

பேரூழி பிரிவுகள் ——— உட்பிரிவுகள் ———→ ஊழி

↓

உயிரினமற்ற பேரூழி ——→

தொல் பேரூழி ——→

இடைப்பேரூழி ——→ திரயாசிக், ஜீராசிக், கிரிடேசியஸ்

கடைப்பேரூழி ——→ இயோசீன்,ஒலிகோசீன்,மையோசீன்

பிலையோசீன்

நாலாங்காற் பேரூழி ⟶ பிலைஸ்டோசீன, ஹோலோசீன்

நிலமானது அழிவைச் சந்தித்துப் புதிய தன்மையை அடைந்தால் அதனை ஒரு ஊழி எனக் கணக்கிட்டுள்ளனர். தமிழ்நாட்டு வரலாறு ஐந்து பேரூழிகளைப் பற்றி விளக்குகிறது.

**தொல் பழங்காலப் பிரிவுகள்**

ஒவ்வொரு பகுதிகளின் அமைப்பிற்கும் சூழலுக்கும் ஏற்ப இப்பிரிவுகள் அமைகின்றன. பெரும்பாலான ஆய்வாளர்கள் தொல்பழங்காலத்தை மூன்று கால அமைப்புகளுக்குள் அடக்குகின்றனர்.

- கற்காலம்
- வெண்கலக் காலம்
- இரும்புக் காலம்

பூமி தோன்றியதிலிருந்து உள்ள இடைவெளிக்காலம் அல்லது பூமியில் உயிரினங்கள் தோன்றிய காலம் முன் வரலாற்றுக் காலமாகக் கருதப்படுகிறது.

**எ.கா.** ஐரோப்பாவின் கிரேக்கம், பண்டைய ரோம் நாகரிகம்.

இந்தியாவின் தொல்பழங்காலம் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

- முதல் கற்காலம்
- இடைக்கற்காலம்
- கடைக்கற்காலம்
- புதிய கற்காலம்
- வெண்கலக் காலம்
- இரும்புக்காலம்

பிற நாடுகளில் இக்காலப் பிரிவுகள், வேறு பொருளில் வழக்கில் உள்ளன. ஆஸ்திரேலியாவில் சில பழங்குடிகள் மிக அண்மைக்காலம் வரை கற்காலக் கருவிகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். எனவே, கால வரலாற்றைச் சூழலை வைத்து ஆராய வேண்டும்.

**2. சிந்து சமவெளி நாகரிகம்**

சிந்துவெளி நாகரீகத்தை தோற்றுவித்தவர்கள் இலெமூரிய மக்களே என்று கூறப்படுகிறது. இவ்வாறு கருதப்படுவதன் காரணம். குமரிநாட்டு யானை, காளை வடிவங்களே ஹரப்பா, மொகஞ்சோதோராவில் புதை பொருள்களில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. கி.மு.1500-இல் இந்தியாவுக்கு வந்த ஆரியரின் பசு, குதிரை ஆகியவற்றின் வடிவங்கள் காணப்படவில்லை. சிந்து வெளியில் யானைகளை முதலில் பார்த்தபோது கையையுடைய விலங்கு (மிருக ஹஸ்தின்) என்று பெயரிட்டனர்.

அரேபிய, வங்கக் கடல் வழியே குமரிக் கண்ட மக்கள் ஹரப்பா, மொகஞ்சோதோராவின் பெருநகரங்களிலும் நாகரிகக் கொடி நாட்டினர். சிந்துவெளி நாகரீகம் ஆரியரின் வருகைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது. அங்கு பேசப்பட்ட மொழி திராவிடமொழியே என்பதனை அறிஞர்கள் நிறுவியுள்ளனர்.

ஹரப்பா, பஞ்சாப் மாநிலத்தில் மாண்ட்கோமாரி மாவட்டத்தில் ராவி ஆற்றிலிருந்து ஆறு கல் தொலைவில் உள்ளது.மொகஞ்சோதோரா சிந்து மாநிலத்திலுள்ள லர்க்கர்னா மாவட்டத்தில் உள்ளது. சிந்து வெளியில் கிடைத்த எழுத்துச் சான்றுகளை ஆய்ந்த அறிஞர் குழு இங்கு வாழ்ந்த பழங்கால மக்கள் திராவிடரே என உறுதி செய்துள்ளது.

எழுத்துச் சான்றுகளில் உள்ள வேல், வேளாளன், ஊர், நாய், வேலூர் முதலிய சொற்களே என்று ஈராசுப் பாதிரியார் காட்டியுள்ளார். அவர் அறியூர், இருபதி, ஈரூர், கூடுமலை, மூன்மலை, நன்பதி ஆகிய ஊர் பெயர்கள் சிந்துவெளி எழுத்துக்களில் காணப்படுவதாகக் கூறுகிறார்.

சிந்துவெளியில் கிடைத்துள்ள மீன் உருவங்கள் பாண்டியரின் தொடர்பைக் காட்டுகின்றன. ஆரியர் மீனை இழிவாகக் கருதினர். சிந்துவெளித் தமிழர் கடலில் கப்பல் போக்குவரத்து நடத்தினர் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

**தொல்தமிழர்**

1. ஆஸ்திரிக் இனத்தவர் பாலஸ்தீனப் பகுதியிலிருந்து தமிழகம் வந்தவர்கள் என ஹர்டனும் ஆஸ்திரேலியாவிலிருந்து தோன்றி இங்கு வந்தவர்கள் என்று சூவலும் கருதுகின்றனர்.

2. சிலர் இந்தோ சீனா, தென்சீனா, நிலநடுக்கடல் பகுதியில் காணப்பட்ட இனத்தவர் என்றும் ஊகிக்கின்றனர்

3. இவர்கள் பழுப்பு அல்லது கறுப்பு நிறம் கொண்டவர்கள். நீண்ட தலை, அகன்ற தட்டையான மூக்கு, அலை அலையாக சுருட்டை மயிரும் கொண்டவர்கள்.

4. இவ்வினத்தவர் ஆஸ்திரேலியா பண்டை இன மக்களோடு நெருங்கிய ஒப்புமை உடையவராக இருப்பதால் ஆஸ்திரிக் மக்களின் மூதாதையர் என மக்களினமரபு நூலார் குறிப்பிடுகின்றனர்.

5. இப்பழங்குடியினர் வரலாற்றுக் காலம் முதல் பல்வேறு பெயர்களால் சுட்டப்பட்டுள்ளனர்

6. வேத காலத்தில் நிஷாதர் என்றும், அதற்குப்பின் சபரர் புளிந்தர் எனவும், கி.பி.6ஆம் நூற்றாண்டில் கோவர், பில்லர் எனவும், இந்நூற்றாண்டில் கோலாரியர், முண்டர் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர்.

7. இவர்கள் உணவுகளைத் தேடித் திரிந்த நிலையில் புதிய கற்காலப் பண்பாட்டினையும் உடன் கொண்டு இந்தியாவிற்குள் நுழைந்தவர்கள் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

8. தென்னிந்திய பழங்குடியினரான மலைவேடர், இருளர், குறும்பர், காடர், சோழகர் மற்றும் பழையர் ஆகியோரிடத்து இவ்வினப் பண்புக் கூறுகள் காணப்படுகின்றன என்கின்றனர்.

9. ஆஸ்திரிக் மக்களின் பேச்சுமொழி கோலாரிய, முண்டா, ஆஸ்திரிக்மொழி என்றும் வழங்கப்படுகின்றது. இதன் கலப்பு வட மற்றும் திராவிட மொழிகளிலும் உண்டு.

10. நெல், வெற்றிலை, கரும்பு பயிரிடல், பருத்தி ஆடை நெய்தல், கரும்பிலிருந்து வெல்லம் செய்தல், யானையை அடக்கி வீட்டு விலங்காக்கல், மஞ்சள் குங்குமம் பயன்படுத்தல், மகப்பேறு வேண்டி அரசமரத்தைச் சுற்றுதல், கண்ணேறு கழித்தல், திதிமுறை ஆகிய பழக்கவழக்கங்கள் இம்மக்களிடம் தோன்றியதாகக் கூறுகின்றனர்.

11. ‘மனம்’ என்னும் கோட்பாடு இவர்களிடம் நிலவியதாகும்.

12. இறந்தோரைப் புதைத்தல், தாழியிலிட்டுப் புதைத்தல், முன்னோர் வழிபாடு ஆகியனவும் இவர்களது பழக்கவழக்கங்கள் எனலாம்.

13. தமிழ் இலக்கியங்களில் நாகர் குடியினர் பற்றிய குறிப்புகள் உண்டு. ஒய்மா நாட்டு நல்லியக்கோடன், நாகர் குலத்தவன் ஆவான். இவர்களும் ஆஸ்திரிக் இனத்தவராகலாம் எனவும் கருதுகின்றனர்.

14. ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியால் கண்டெடுக்கப்பட்ட மன்டை ஓடுகளுள் ஒன்று ஆஸ்திரிக் பழங்குடி மக்களுடைய மண்டையோட்டை ஒத்திருப்பதாக எலியட் ஸ்மித் என்ற அறிஞர் மொழிந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 2. பழைய கற்காலம்

கற்காலம், வெண்கலக் காலம், இரும்புக்காலம் என்று மூவகைகளாகப் பகுத்து விளங்கினர். தற்போது பொதுவாகப் பழைய கற்காலம், புதிய கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் என்ற பாகுபாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பழைய கற்காலம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவை முதல்கற்காலம், இடைக்கற்காலம், கடைக்கற்காலம்

**1.பழுங்கற்காலம்**

பழங்கற்காலத் தமிழகம் பற்றிய செய்திகளைப் புதைபொருள் ஆய்வின் வாயிலாக, புருஸ்பூட் என்பவர் சென்னைக்கு அருகில் பல்லவபுரத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சின் போது கற்கோடாரிகள், உளிகள், கத்திகள் முதலாயவற்றைக் கண்டறிந்தார்.

பழங்கற்காலக்கருவிகள் கரடுமுரடானவை் நன்கு செதுக்கப்பட்டாதவை.

பழங்கற்கால மக்கள்நிலையாக ஓரிடத்தில் தங்காமல் அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கையினை மேற்கொண்டு சமவெளிப் பகுதிகளிலே வாழ்ந்தனர். எனினும் சில சமயங்களில் மலைக் குகைகளில் வாழ்ந்தனர். இவர்கள் உழவுத் தொழில் அறியாதவர்கள். விலங்குகளை வேட்டையாகக் கற்றறிந்திருந்தனர்.

இறந்தவர்களைப் புதைக்கவோ, எரிக்கவோ செய்ய வில்லை. விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் இரையாக்கினர். குடும்ப வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை கிடையாது. இடைக்கற்காலம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இவர்கள் மிகச்சிறிய கற்கருவிகளைச்

செதுக்கிக் கொண்டனர். இடைக்கற்காலக் கருவிகள் திருநெல்வேலி, தூத்துக்குடியைச் சுற்றிக் கிடைத்துள்ளன. வேட்டை வாழ்க்கையே தொடர்ந்தது. இறந்தவர் உடல் புதைக்கப்பட்டன.

**தமிழகத்தில் பழைய கற்கால அகழ்விடங்கள்**

இந்தியாவில் முதன்முதலாகத் தமிழ்நாட்டில் தான் 1863ல் இராபட் புரூஸ் ∴புட் என்பவர் சென்னையில் பல்லாவரத்திற்கு அருகில் கற்காலக் கோடரி ஒன்றை கண்டுபிடித்தார்

**கடைக்கற்கால அகழ்விடங்கள்**

இந்தியாவில் காணப்படும் கடைக்கற்கால நிலைகளில் திருநெல்வேலி 'தேரிகள்' முக்கியத்துவம் பெறுபவை. பேராசிரியர் சூனரும் ஆல்சின் அம்மையாரும், ∴புட்டும் இங்கு நன்கு ஆராய்ந்து கூறினர்.

தாமிரவருணிஆற்றுக்கு வடகே, தூத்துக்குடி, திருச்செந்தூர் செங்கற்பட்டு மாவட்டம் திருமங்கலம், பெரியகுளம் திருமங்கலம் வட்டம் தெ.கல்லுப்பட்டி, திடியன் போடி நாயக்கனூர், கோடாங்கிப்பட்டி, தத்தனோடைமேடு ஆகிய இடங்களிலும் கடைக்கற்காலக் கருவிகள் காணக் கிடைக்கின்றன

**பழைய கற்கால மக்களின் சமூகப் பண்பாடு**

1. பழைய கற்கால மக்கள் பதப்படுத்தப்பட்ட கற்கருவிகளைப் பயன்படுத்தினர். கோடரிகள், ஈட்டிகள், வட்டக்கற்கள், கத்திகள், குழிதோண்டும் கருவிகள் ஆகியன பழைய கற்காலத்தினார் பயன்படுத்திய கருவிகளாகும்.

2. தொடக்கத்தில் இயற்கையில் கிடைத்த பழங்களையும், காய்களையும், கிழங்குகளையும் தின்று வாழ்ந்திருத்தல் வேண்டும். பின்பு காலப்போக்கில் சிறு சிறு விலங்குகளை வேட்டையாடி உண்டனர் எனலாம்

3. மரக்கிளைகளின்மீது தங்கி வாழலாயின. மலைக்குகைகள் போன்ற உருவத்தில் மரக்கிளைகளையும் தழைகளையும் கொண்டு சிறிய வீடுகளை அமைத்துக் கொண்டனர்.

4. மூங்கில்கள் பெருங்காற்றில் ஒன்றோடொன்று ஒன்று உராய்ந்து தீப்பிடித்து எரிதலைக் கண்டதும் தாமும் மரத்துண்டு கொண்டு நெருப்பை உண்டாக்க அறிந்தனர்.தீக்கடைக்கோல் கொண்டும் சிக்கிமுக்கி கற்கள் கொண்டும் நெருப்பை உண்டாக்கினர். உயிரினங்களை நெருப்பில் வாட்டி உண்டனர்.

5. பழைய கற்கால மக்கள் முதலில் தனித்து வாழ்ந்தனர். பின்பு கொடிய விலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள கூட்டமாக வாழத்தலைப்பட்டனர்.

6. முதலில் ஆடையின்றியும் பின்பு இலை தழைகளை ஆடையாக்கியும் கொண்டனர். விலங்குகளை வேட்டையாடி பின்பு தோல்களை உடுத்திக் கொண்டிருக்கலாம்.

7. விலங்குகள் பறவைகள் ஓசையிடுவதைக் கண்டும் கேட்டும் ஓசையிடத் தொடங்கினர். தன் கருத்தை அசைவால் தெரிவித்தனர். பின்பு உருவங்களை ஓவியங்களை வரைந்து காட்டினர். இறுதியில் அதற்கான சொற்களைக் கண்டறிந்தனர்.

## 3.புதிய கற்காலம்

**புதிய கற்காலம்**:

மக்கள் செல்ட்(celt) என அழைக்கப்பட்ட பொழிவுமிக்க கற்கோடாரிகளைப் பயன்படுத்தினர்.கால்நடை மேய்த்தல் அவர்களின் முக்கியத் தொழிலாக அமைந்தது. கி.மு 7000 ஆவது ஆண்டில் மாடு, பன்றிகள், வூட்டு வளர்ப்பில் சேர்க்கப்பட்டன. வழவழப்பான கருவிகள் நன்றாகக் கொத்தி தேய்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

இந்திய புதிய கற்காலப் பகுதி மூன்று பிரிவுகளாக ஆய்வுவாளர்களால் பிரிக்கப்பட்டுள்ளது

- வடமேற்குப் பகுதி
- கிழக்குப் பகுதி
- தெற்குப் பகுதி

**புதிய கற்காலம்**

புதிய கற்காலம் மக்கள், நன்றாகத் தேய்க்கப் பெற்று மெருகிடப் பெற்ற வழவழப்பான கருவிகளைப் பயன்படுத்தினர். சேலம், தருமபுரி மாவட்டங்களிலும், வடஆர்க்காடு மாவட்டத்திலும் புதிய கற்காலக் கோடாரிகள் ஏராளமான தரைமட்டத்திலேயே கிடைத்தன. அவ்வட்டாரத்தில் வாழும் மக்கள் வழவழப்பான இக்கோடாரிகளை **விண்வீழ்கற்கள்** என்று நம்புகின்றனர் என இராபர்ட் புரூஸ்புட் குறிப்பிட்டார்.

இக்கால மக்கள் குடிசைகளில் வாழ்ந்தனர். அக்குடிசைகள் வட்டம் அல்லது நீள்வட்ட உருவில் அமைக்கப் பெற்றிருந்தன. மேற்கூரை எப்படி அமைந்திருந்தது என்பது தெரியவில்லை. குடிசைகளின் சுவர்கள் மூங்கில் சுழிகளைக் கொண்டும் மரக்கிளைகளைக் கொண்டும் செய்யப்பட்டன

இக்காலக் கருவிகளில் மிக அதிகமாகக் காணப்பெறுபவை **கெல்ட்** எனப்படும் கற்கோடாரியாகும். எலும்பினால் செய்யப்பெற்ற சில கருவிகளும் கிடைத்தன. வடஆர்க்காடு பையம்பள்ளி அருகில் மேற்கொள்ளப் பெற்ற அகழ்வாய்விலிருந்து இச்செய்திகளை அறிகிறோம்

புதிய கற்காலத்தில் மட்கலங்கள் பயன்படுத்தப்பெற்றன. கேழ்வரகு, பச்சைப்பயறு முதலியனவும் மாடு, ஆடு, புள்ளிமான், பன்றி ஆகியனவும் உணவிற்கு பயன்பட்டன. புதிய கற்கால மக்கள் மலைத்தொடர்களில் வாழ்நதனர். அருகிலிருந்த சமவெளிகளில் அவர்கள் வேளாண்மை செய்தனர். முதன்டுதலாக வரையறுத்த சமுதாயமாக இவர்கள் வாழ்ந்தனர்.

## 4.உலோகக் காலம்

உலோகங்களின் கண்டுபிடிப்பு மனிதனின் மிகப்பெரிய சாதனையாகும்.

உலோகக் காலமானது செம்புக் காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் என மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. சிலர், உலோகக் காலத்தை செம்புகற்காலம், இரும்புகற்காலம் என இரண்டாகப் பிரிக்கின்றனர்.

### இரும்புக் காலம்

வரலாற்றிக்கு முற்கட்டக் காலத்தின் இறுதியில் வரும் காலம் இரும்புக்காலம் ஆகும். கிமு 1500-லிருந்து இரும்புக்காலம் தொடங்குவதாக உலக வரலாறு கூறுகிறதுஇ அதிகளவிலான இரும்பின் பயன்பாடு தமிழகத்தில் தொடங்கி வட இந்தியாவிற்கு பரவி இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.போருக்கும் உழவுத் தொழிலுக்கும் பயன்பட்ட பல்வேறு இரும்புக் கருவிகள் அகழாய்வு மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

### தமிழகத்தில் இரும்புக்கால நாகரிகம்

- தென் இந்தியாவில் கற்காலத்திற்குப் பிறகு செப்பு வெண்கலக் காலம் தோன்றாது நேரடியாக இரும்புக் கால நாகரிகம் தோன்றியது.
- கற்கால நாகரிகமும் இரும்புக்கால நாகரிகமும் ஒன்றன்மீது ஒன்று படிந்தே கிடக்கின்றன.
- இரும்பில் ஆன கருவிகள் புழக்கத்தில் இருந்த காலத்திலும் கற்கருவிகளும் புழக்கத்தில் இருந்ததை இரும்புக் காலத்தைச் சார்ந்த கல்லறைகள் வழி அறியலாம்.
- இரும்பினைப் புதிய கற்கால மக்கள் கண்டெடுத்தனர் என்பதனைவிட வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்குப் புதியதாகக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று பேரா.நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.
- ஆனால் தென் இந்தியாவில் புதிய கற்கால நாகரிகத்தைத் தொடர்ந்து இரும்புக்கால நாகரிகம் விளங்கியது என்பதே பலரின் கருத்தாக அமைந்துள்ளது.
- வடநாட்டு மக்களின் கொண்ட தொடர்பினால் தென்னாட்டு மக்கள் வெண்கலத்தையும் செம்பையும் பயன்படுத்தக் கற்றிருக்க வேண்டும்.அவ்வாறே இரும்பின் பயனைப் பற்றி வட இந்திய மக்கள் இங்கிருந்து அணிந்திருக்க வேண்டும் என்பது இராமசந்திர தீட்ஷிதரின் கருத்தாகும்
- தமிழகத்தில் இரும்புக் காலச் சின்னங்கள் புதிய கற்காலக் கருவிகளுடன் கலந்து தெற்கே திருநெல்வேலி முதல் வடக்கே கர்நூல் மாவட்டம் வரையில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
- சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைப்பகுதியில் இரும்புக்கால கருவிகள் பல கிடைத்துள்ளன.
- நீண்ட கோடரிகள், அழகிய அரிவாள்கள், கூர்மையான வாள்கள், சுரைகளோடு கூடிய முனைகள் முதலியன சேர்வராயன் மலைப்பகுதிகளில் கிடைத்துள்ளன.
- இரும்புக்கால மக்கள் தாழிகளில் வைத்து புதைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

- ஆதிச்சநல்லூரில் கிடைத்த தாழிகள் வேல்கள், வெண்கல வார்ப்பு உருவங்களாக நாய், கோழி உருவங்களும் இரும்புக் கொடி பட்டங்களும் கிடைத்துள்ளன.

**பெருங்கற்காலம்**

## 5.பெருங்கற்காலம்

பெரிய கற்களைக் கொண்டு மக்கள் அமைப்புகளை உருவாக்கிய காலப்பகுதி பெருங்கற்காலம் அல்லது பெருங்கற்குவைக் காலம் எனப்படும். மக்கள் குழுவாக வாழ்ந்த நிலையில் இருந்து மாறி, குடும்பமாக வாழத் தொடங்கினர். உறவு நிலையில் நெருக்கம் ஏற்கபட்டதால் இறந்தவர்களைப் புதைத்து அவ்விடத்தில் நினைவுச் சின்னங்களை அமைத்தனர்.

பெருங்கற்காலம் என்பது சங்க காலத்தோடு இணைந்த பண்பாட்டுக் காலகட்டமாகும். வரலாற்றுக் காலத்திற்கு இக்காலம் வித்திட்டது எனலாம்.

புதிய கற்காலத்திற்குப் பின்னர் உலோகக் காலத்தில் இறந்தோர்களைப் புதைத்துப் பல கற்சின்னங்கள் ஏற்படுத்தினர். இவை **பெருங்கற் சின்னங்கள் அல்லது ஈமச்சின்னங்கள்** ஆகும். இவற்றில் புதைமேடுகள், கற்குகைகள், கல்படுக்கைகள், தொப்பிக்கல், குடைக்கல், நடுகல், ஈமப்பேழைகள், ஈமத்தாழி, கற்சிடை எனப் பலவகை உண்டு. பிணங்களை அவற்றின் உள்ளே வைத்துப் புதைத்தனர்.

பெருங்கற் சின்னங்கள் குரங்குப் பட்டவை, வாலியார் வீடு, ‘குரும்பன் கோட்டை’ எனப் பலப் பெயர்களால் அழைக்கப்பட்டன.

கோவை மாவட்டத்தில் பல்லடம் பகுதியைச் சார்ந்த செட்டிப்பாளையம் என்னும் ஊர்க்கருவில் கிடைத்துள்ள பெருங்கல் புதைவு வாயிலாக இம்மக்களின் பண்பாடுகளை அறிகிறோம். சானூர், அமிர்தமங்கலம், சங்கமேடு, திருக்காம்புலியூர், அழகரை, உறையூர் முதலிய இடங்களில் கண்டனர். இரும்பினைப் பயன்படுத்தினர்.

திருநெல்வேலியில் தாமிரபரணியாற்றங்கரையில் ஆதிச்ச நல்லூரிலும் செங்கற்பட்டு வட்டத்தில் பாலாற்றங்கரையிலும் சென்னைக்கருகில் திருமுடிவாக்கத்திலும் புதுக்கோட்டையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டத்தின் அருகில் பொட்டல் மேட்டிலும் கிடைத்தன

ஆதிச்ச நல்லூர் அரிக்கமேடு ஆகிய இரண்டு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன.

**தமிழகத்தில் கிடைத்த பெருங்கல் அல்லது ஈமச் சின்னங்கள்**

இறந்தவர்களையோ அல்லது அவர்களது எலும்புகளையோ புதைத்த இடத்தில் பெரிய கற்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஈமச் சின்னங்களைப் பெருங்கல் சின்னங்கள் என்று கூறுகிறோம்.

**கல்திட்டை**

இவை தரைக்கு மேலே அமைக்கப்பட்ட கல்லறைகள் ஆகும்இ இயற்கையாகக் கிடைத்த பெரிய கற்களை அப்படியே நான்கு புறமும் நிறுத்தி சதுரமாக அல்லது நீள் சதுரமான அறை அமைக்கப்பட்டது. குழிவறையின் அடிப்பகுதி முதலிலேயே கற்களால் பரப்பப்பட்டன. அதில் ஈமப் பொருட்கள் வைக்கப்பட்டன. இறுதியில் மேலே பெரிய பட்டைக் கல்லைக் கொண்டு அறை மூடப்பட்டது. மேலே முழுதும் மறைக்கும் வகையில் சல்லிக் கற்கள் அல்லது கூழாங்கற்கள் போடப்பட்டது. இவை கல்திட்டைகள் எனப்பட்டன.

**கல்பதுக்கை**

கல்பதுக்கை தரையைத் தோண்டி சிறிது நிலத்திற்கு அடியில் உருவாக்கப்பட்டது. கல்பதுக்கையில் பயன்படுத்தப்பட்ட கற்கள் பட்டையானவை. இதற்கேற்ற செதுக்கத் தோதுவான லேட்டரைட் போன்ற நொய்மையான கற்கள் கிடைத்த இடங்களில் ‘கல்பதுக்கை’ அமைக்கப்பட்டன. நிலத்தைத் தோண்டி கற்பலகைகள் இறக்கப்பட்டு நிறுத்தப்பட்டன. நேராக நிற்கும் வகையில் ஒவ்வொரு கல்லின் முனையும் ஒரு பக்கம் நீட்டி நிறுத்தப்பட்டது. ஈமப் பொருள் வைக்கப்பட்ட பின் கற்பலகைகள் மூடப்பட்டது. அதற்கு மேல் கூழாங்கற்கள் பரப்பப்பட்டு மேடு செய்யப்பட்டது. மேட்டைச் சுற்றி கல்வட்டம் காணப்பட்டது.

**மண்குலை**

வெறும் குழி வெட்டப்பட்டு அதில் தாழி அல்லது ஈமத்தொட்டியில் ஈமப்பொருள்களை இட்டு மண்ணைக் கொண்டு மூடி தரைக்கு மேல் மண்ணைக் குத்தாக குவித்து வைத்தனர். இது மண்குத்தை அல்லது மண்குலை எனப்பட்டது.

**கல்வரிசை**

சில இடங்களில் ஈமப்பொருள்கள் புதைக்கப்பட்ட இடத்தின்மீது பெரியகல் செங்குத்தாக நிறுத்தப்பட்டது. இது குத்துக்கல் எனப்படுகிறது. சில இடங்களில் வரிசையாக பல கற்களும் காணப்படுகின்றன. இக்கற்கள் 10,15 அடிக்கும் உயரமானவையாகும்.

**தொப்பிக்கல்**

ஈமக்குழி மேல் நான்கு சாய்வாகக் கூம்பிய வடிவத்தில் நிறுத்தப்பட்டன. இந்தக் கற்களின் உச்சியில் வட்டவடிவமான மூடி போன்ற கல் வைக்கப்பட்டது. இவ்வாறான தொப்பிக்கல் காளானைப் போல் உருவம் கொண்டது.

**குடைக்கல்**

ஈமக்குழி மேல் நிறுத்தப்பட்டிருக்கும் குடைக்கல் கேரளப் பகுதிகளில் காணப்படும் பனையோலைக் குடையைப் போன்றது. தொப்பிக்கல்லில் உள்ளதைப் போல் இதில் தாங்குவதற்குக் குத்துக்கற்கள் இல்லை.

**குடைவரைத் தாழிவறைகள**

பாறைகளைத் தாழ்வாகக் குடைந்து அறைகளைப் போல செய்யப்பட்டன. தாழ்வறைக்குள் சுவரை ஒட்டி கல்லிலேயே வசிப்பலகை முக்காலி போன்ற அமைப்புகளும் விடப்பட்டன. உள்ளே ஈமப்பொருள்களை வைத்தபின், மேல்முகடு பலகைக் கல்லால் மூடப்பட்டது.

**பெருங்கல் சின்ன இருப்பிடங்கள்**

கல்குலை,கல்கிடை,கல்திட்டை ஆகியன மொய்யாறு, பவானி, நொய்யல் ஆற்று பள்ளத்தாக்கில் அதிகம் கிடைக்கின்றன. கோபி, சத்தியமங்கலம், கோவை, பொள்ளாச்சி வட்டரங்களிலும் கிடைக்கின்றன. இடைக்கல், தொப்பிக்கல் ஆகிய இரண்டும் கோயம்பத்தூர் மாவட்டத்தில் ஒரு சில இடங்களிலும் காணப்படுகின்றன. ஈமப் பொருளோடு ரோம நாணயங்களும் கிடைத்துள்ளன. இதோடு கிடைக்கும் மட்கலங்களின் மூடிகள் விலங்கு உருவம் கொண்ட மண் மூடிகள் கிடைத்துள்ளன.

தெற்குமாவட்டங்களில் திருநெல்வேலி ஆதிச்சநல்லூரில் தாழிக்காடுகள் காணப்பட்டன. குற்றாலத்தில் கல்குலைகள் காணப்பட்டன. சங்கரன்கோவிலுக்கு அருகிலுள்ள வாசுதேவநல்லூர், பாளையங்கோட்டை, காயல்பட்டினம் ஆகிய இடங்களிலும் தாழிக்காடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம் கழுகுமலை, பழனிமலை, புதுக்கோட்டை, திருச்சி, கரூர், தஞ்சாவூர், திண்டுக்கல், சேலம், தருமபுரி போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன.

## 6.அகழ்வாராய்ச்சியில் தமிழும் தமிழரும்

**அறிமுகம்**

தமிழக வரலாற்றையும் பண்பாட்டையும் தெரிந்து கொள்ள அகழ்வாராய்ச்சி முக்கியத்தடமாகும். இதன்மூலம் கிடைக்கும் ஆதாரங்கள் உண்மையும் நம்பகத்தன்மையும் வாய்ந்தவை. அவை அறிவியலின்வழி நிரூபிக்கப்படுவதால் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக மாறுகிறது அகழ்வாராய்ச்சி ஆங்கிலேயரின் காலத்திலேயே தொடங்கப்பட்டது.

ஆய்வாளார்கள் பலர் ஆர்வத்தின் காரணமாக நீலகிரி முதல் ஆதிச்சநல்லூர் வரை பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர்.

**அகழ்வாராய்ச்சி விளக்கம்**

தொன்மையான இடங்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதும் பதிவு செய்வதும் இவ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

தொல்பொருட்கள் இருக்கும் இடங்கள் தரையில் ஊடுருவக் கூடிய ரேடார் போன்ற கருவிகள் கொண்டு உறுதி செய்யப்பட்ட பின்பு அகழ்வாராய்ச்சி செய்யப்படுகிறது.

**கீழடி அகழாய்வில் தொல்லியல் பொருட்கள்**

பானைகள், முதுமக்கள் தாழிகள், ஆபரண பொருட்கள் உள்பட பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய நூற்றுக்கணக்கான பழங்கால பொருட்கள் பல கிடைத்துள்ளன. இந்த ஏழாம்கட்ட அகழாய்வில் அகரத்தில் மட்டும் விலங்கு உருவபொம்மை, சுடுமண்ணால் ஆன பெண்முகம், செம்பு நாணயங்கள், புகைப்போக்கி குழாய் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளன. கண்ணாடி, யானைதந்தம், சங்கு ஆகியவற்றால் ஆன அணிகலன்களும் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

**கொற்கை அகழ்வாய்வுகள்**

1968 ஆவது ஆணடில் இருந்து தற்போது வரை ஆராய்ச்சிகள் நடைபெறும் இடமான கொற்கையில் முதுமக்கள் தாழி, செவ்வக வடிவ கட்டடம், பிராமி எழுத்து உள்ள பானை ஓடுகள், கரித்துண்டுகள், சாடிகள், எலும்புத் துண்டுகள்,சங்குவளையல்கள் கிடைத்துள்ளன. கி.மு.800ஆம் ஆண்டு முதல் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இங்கு உள்ளன.

போளுவம்பட்டியில் 1979 ஆவது ஆண்டு முதல் நடைபெற்ற அகழாய்வில் கல் மணிகள், சுடுமண் பொருட்கள், மூடிகளுடன் கூடிய கிண்ணங்கள், இரும்புப் பொருட்கள், சங்குவளையல்கள் ஆகியவை கிடைத்துள்ளன. வில் மற்றும் அமர்ந்த நிலையில் உள்ள புலி உருவம் பொறித்த சுடுமண் அரச முத்திரை போன்றவையும் கிடைத்துள்ளன.

**பூம்புகார்**

1994 ஆவது ஆண்டு தொடங்கப்பட்ட சோழருடைய துறைமுகமான காவிரிப்பூம்பட்டினத்து ஆய்வின் அறிக்கையை கேவி சௌந்தராஜன், கேவி. இராமன் ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

**அண்மைய கால அகழ்வாய்வுகள்**

திருவண்ணாமலை மாவட்டம் ஆண்டிபட்டி, தருமபுரி மாவட்டம் மோதூர், மரக்காணம், பரிகுளம், கரூர் மாவட்டம் நெடுகூர், மதுரை மாவட்டம் மாங்குளம், நாகை மாவட்டம் செம்பி கண்டியூர், தரங்கமபாடி, கீழடி, மயிலாடும்பாறை, திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி ஆகிய இடங்களில் 2004 ஆவது ஆண்டு முதல் ஆய்வுகள் தொடங்கப்பட்டன.

**ஆதிச்சநல்லூர்**

புரூஸ்புட் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூரில் 114 ஏக்கர் அளவுள்ள பகுதியில் அகழ்வாய்வு செய்து இரும்புக்கால நாகரித்தினை ஆய்ந்தார். எண்ணிறந்த கருவிகள், இரும்புக்கத்திகள், வாள், பொன் செம்புப் பத்திரங்கள், விலங்கு உருவங்கள் கிடைத்தன. பண்டையத் தமிழக கடவுளான முருகன் அல்லது வேலன் ஆதிச்சநல்லூரில் வழிப்பட்டவர் என அறிவோம்.

அங்கே வாழ்ந்த மக்கள் இரும்ரபயும் வெண்கலத்தையும் தங்கத்தையும் உருக்கவும், வார்க்கவும் அறிந்திருந்தனர். ஆதிச்சநல்லூரில்கிடைத்த பொருட்கள்

அம்மக்களின் சமூகப் பொருளாதார சமய வாழ்வின் மேம்பாட்டினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இங்கு கிடைத்த சான்றுகள் சில திருச்சூரிலும், ஐதராபாத்திலும், ஈஸ்டர் தீவிலும், மேற்காசியாவிலும், கிரீசிலும் கிடைத்த சான்றுகளை ஒத்திருக்கின்றன.பேராசிரியர் நீலகண்ட சாஸ்திர சிந்து வெளியினைச் சார்ந்த பசுபதி வழிபாடு, சேர்வராயன் மலையில் காணப்படும் லிங்க வழிபாடு போன்றவற்றின் அடுத்த வளர்ச்சியே என்றார்.

**அரிக்கமேடு**

சங்ககால வரலாற்றை அறிய உதவுவது அரிக்கமேடு அகழ்வாயாகும். அரிக்கமேடு என்னுமிடத்தில் 1937 முதல் 1941 வரை அகழ்வாயினை மேற்கொண்டவர் ஜோதுப்ராய்ல் ஆவார்.

சர்மார்டிவர் வீலர் இந்திய தொல்லியல் துறை இசைவுடன் அகழ்வாயினை மேற்கொண்டார். அரிக்கமேடு அகழ்வாய்வில் மத்தியத்தரைக்கடல் மட்பாண்டங்கள், கிரேக்க, ரோமானிய உயர்கற்கள், ரோமானிய கண்ணாடி ஜாடிகள், மண்ணாலான பொருட்கள் கிடைத்தன.

மட்பாண்டங்களின்மீது வரி வடிவங்கள் உள்ளன. சங்க இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளுக்கு இக்கண்டுபிடிப்புகள் சான்று பகர்கின்றன. அரிக்கமேடு பண்டைய நகரமாக விளங்கியது. தாலமியின் ‘பொதுகே’ என்னுமிடம் அரிக்கமேடு என்று கருதப்படுகிறது.இது கிரேக்க எழுத்தாளர்களின் ஆதாரங்களுடனும் பொருந்துகின்றது.

**அகழாய்வில் தமிழ் எழுத்துக்கள்**

‘கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து

முன் தோன்றிய மூத்த குடி”

என்று கூறி தமிழ்த்தாய் என்று பிறந்தவள் என்று அறியாதவளாக இருந்து வந்தாள்

அகழ்வாராய்ச்சிகள்வழி கிடைத்த முடிவுகள் தமிழ் எழுத்துக்கள் தோன்றி பரவலாக்கப்பட்ட ஆண்டுகளை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

பொருந்தலிலும் கொடுமணலிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழகத் தொல்லியல் களத்தில் திருப்பு முனையை ஏற்படுத்தின என்கிறார் நிவேதிதா லூயிஸ்.

பொருந்தலில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு பிரிமனைகளிலும் வ-ய-ர என்று எழுதப்பட்டிருந்தது. இந்தக் குறியீடு நெல்மணிகளைக் குறிக்கலாம் எனப்பட்டது. இந்தத் தமிழி எழுத்துக்களின் காலம் கி.மு.490 என்று கணக்கிடப்பட்டது.

ஆதிச்சநல்லூர் ஆய்வில் டாக்டர்.டி.சத்தியமூர்த்தி மற்றும் எம்.டி.சம்பத் இருவரும் தாழி ஒன்றின் ஆறு எழுத்துக்கள் கொண்ட சொல்லைக் கண்டறிந்து கூறினர். தாழியின் உள்ளே க-ரி-ய-ரா-வி-(ண)-த் என்ற எழுத்துக்கள் காணப்பட்டது. இது கி.மு.500ஆக இருக்கலாம் என்றும் கூறினர்.

மாங்குளம் தமிழ்க் கல்வெட்டே தமிழின் மூத்த முதன்மைக் கல்வெட்டு என்று ஆய்வாளர் கருதினர்.ஆனால் அகழ்வாய்வில் புலிமான் கோம்பையில் எடுக்கப்பட்ட கல்வெட்டு அதற்கு முந்தியவை எனக் கண்டறியப்பட்டது. தமிழின் சிறப்பு எழுத்துக்களான ழ,ள,ற,ன ஆகிய எழுத்தமைவுகள் அதில் காணப்பட்டன என்பது அதன் சிறப்பாகும். அதில்,

"பேடு தீயன் அந்துவன்

கூடல் ஊர் ஆகோள்"

என்றமைந்தது அந்துவனின் கல்வெட்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கீழடி ஆய்வில் கிடைத்த பானை ஓடுகளில் தமிழி எழுத்துக்களின் காலத்தைக் கணித்துள்ளது. விரிவான ஆய்வுகள் வந்தால் தமிழின் பழமை இன்னும் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

## கீழடி அகழாய்வு

கீழடி கிராமம் மதுரை நகரிலிருந்து 11கி.மீ தொலைவில் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்துக்குப்பின் இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான அகழாய்வு இதுவேயாகும்.

### அமைவிடம்

மதுரையிலிருந்து இராமநாதபுரத்தின் அழகன்குளம் துறைமுகத்துக்குச் செல்லும் பண்டைய வணிகப் பாதையில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி என்ற ஊரின் கிழக்கே சுமார் ஒரு கி.மீ.தொலைவில், மணலூர் கண்மாயின் மேற்கரையில் உள்ள பள்ளிச்சந்தைத் திடல் என்ற பெயரிலான மண்மேட்டில் இவ்வகழாய்வு தொடங்கப்பட்டது.

தற்போது அகழாய்வு செய்யப்பட்டு வரும் இடம் 3.5 கி.மீ சுற்றளவுடன் 110 ஏக்கர் பரப்பளவில் விரிந்துள்ளது. தொன்மையான ஊர்களான கொந்தகை, மணலூர், அகரம் ஆகியவையும்இப்பகுதியோடு தொடர்ச்சியுற அமைந்துள்ளன.

### நாகரிகம்

செங்கல் கட்டுமானத்தில் வீடுகள், வடிகால்அமைப்புகள், தொழில் கூடங்கள் மற்றும் வணிகம் ஆகியவற்றைப் பார்க்கும் போது, இரண்டாம் நகர-நாகரிகம், கங்கை சமவெளி பகுதிகளில் தோன்றியது அல்லது அதற்கு முன்னதாகவோ தோன்றி இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.(கி.மு.6-ம் நூற்றாண்டு).

தமிழக-உரோம வர்த்தக உறவுகள் குறித்த சான்றின் மூலம் அந்தக் கால மக்களின் வணிகத் தொடர்புகளை அறிந்துகொள்ள முடிகின்றது.இங்கு 40 க்கும் மேற்பட்ட குழிகள் தோண்டப்பட்டன.

முத்து மணிகள், பெண்களின் கொண்ட ஊசிகள், தாயக்கட்டைகள், சதுரங்கக் காய்கள், சுடுமண் பொம்மைகள், சிவப்பு நிறங்களிலான ஏறத்தாழ 1000 கி.கி.

திணிவுடைய மண் ஓடுகள் அகழ்வாராய்ச்சியின் பொழுது கிடைத்திருக்கின்றன. ஒரு வளர்ச்சியடைந்த நகரமாக இது திகழ்ந்ததற்கு இது வலுவான சான்றாக உள்ளது. 'சங்க காலத்தில் கட்டிடங்களே இல்லை என்ற கூற்றை இந்த அகழ்வாய்வு மாற்றியமைத்துள்ளது'. பானை செய்யும் தொழில் கூடங்கள், வெறும் கையால் அமுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வடிநீர் கால்வாய்கள், கூரை ஓடுகள் போன்ற பல அமைப்புகள் காணப்பட்டன.

மேலும், தங்கத்தால் செய்யப்பட்ட ஆபரணங்கள், யானை தந்தத்தில் செய்யப்பட்ட ஆபரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுடுமண் விளையாட்டுப் பொருட்கள், இரும்புக் கருவிகள், தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள், இரத்தினக் கற்களால் ஆன ஆபரணங்கள், சுடுமண் மணிகள், வட்டச் சில்லுக்கள், காதணிகள், தக்களிகள், மனித மற்றும் விலங்குகளின் வடிவில் பொம்மைகள், கருப்பு மற்றும் சிவப்பு நிற உடைந்த பானை ஓடுகள் மற்றும் ரோமானியர் சின்னம் பொறிக்கப்பட்ட பானைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வணிகத் தொடர்பு**

ரோமப் பேரரசுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பை மெய்ப்பிக்கும் படியான, வணிகர்களால் கொண்டு வரப்பட்ட ரௌலட்டட், அரிட்டைன் வகை மண்பாண்டநடகள் கிடைத்துள்ளன. அழகன்குளத்திலும் இத்தகைய பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தமிழ் எழுத்துக்கள்**

'அதன்', 'உதிரன்', 'திசன்' போன்ற தனிநபர்களின் பெயர்களைக் குறிப்பிடும் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

**கீழடி அகழாய்வு காலவரிசை**

**1. முதல் கட்டம்**

கீழடியில் 2015 ஜீன், வைகை ஆற்றங்கரையை ஒட்டிய பகுதிகளில், இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் சார்பில் முதல்கட்ட அகழாய்வைத் தொடங்கியது.

**2. இரண்டாம் கட்டம்**

2016, ஜனவரி அன்று இரண்டாம் கட்ட அகழாய்வு தொடங்கியது. இதில் மருத்துவக் குடுவைகள், பழங்கால உரை கிணறுகள், தொழிற்சாலை, அரச முத்திரை உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் கிடைத்தன. இரண்டாம் கட்ட அகழாய்வின் முடிவில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்தன. இவற்றை ஆய்வுக்கு உட்படுத்தியபோது 2200 ஆண்டுகளுக்கு முந்தைய கால கட்டத்தைச் சேர்ந்தவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

**3. மூன்றாம் கட்டம்**

மூன்றாம் கட்ட அகழாய்வு 2017,ஜனவரி முதல் செப்டம்பர் வரை நடந்தது.மூன்றாம் கட்டப் பணியில் 400 ச.மீ அளவுக்கு 16 குழிகள் இடம் தேர்வு செய்யப்பட்டது.

**4. நான்காம் கட்டம்**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கீழடியில் நான்காம் கட்ட அகழாய்வு பணிகள் 2017 மற்றும் 2018 ம் ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்றது. இதில் 5,820 பொருட்கள் கிடைத்தன. அகழாய்வில் பெறப்பட்ட 6 மாதிரிகள், ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள மியாமி நகரின் பீட்டர் அனாலிடிக் என்ற நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டன. இந்த ஆய்வுகளில் பதினோரு அடி ஆழத்தில் பெறப்பட்ட ஒரு மாதிரி கி.மு. 580-ம் ஆண்டைச் சேர்ந்தது என கண்டறியப்பட்டது.

இந்த அகழ்வாய்வின் போது பெறப்பட்ட பொருட்களில் உள்ள எழுத்து வடிவங்கள் சிந்து சமவெளி நாகரிக எழுத்து வடிவம் மற்றும் தமிழ் பிராமி எழுத்து வடிவங்களுக்கு இடையில் உள்ள ஒரு குறிப்பை நமக்குக் காட்டுவதாக அமைந்துள்ளன.

**5. ஐந்தாம் கட்டம்**

2019-ம் ஆண்டு ஜீன் மாதத்தில்,தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஐந்தாம் கட்ட அகழாய்வு பணிகளைத் தொடங்கியது. இதில் 15 அகழிகள் தோண்டுவதற்குத் திட்டமிடப்பட்டது. அகழாய்வில் எலும்புகளால் செய்யப்பட்ட எழுத்தாணி,தந்தத்தால் செய்யப்பட்ட சீப்பு,அரவைக் கல், பானை ஓடுகள், சதுரங்கக் காய்கள், சூதாட்டத்தில் பயன்படுத்தப்படும் பகடைக் காய்கள், மண் குடவை, பவள மணிகள், சுடுமண் வார்ப்பு, காளையின் தலை, மனித உடல் பாகம், மனித தலை உருவம் போன்றவைகளும் கண்டறியப்பட்டுள்ளன.

கறுப்பு-சிவப்பு நிறப்பானை, கூர்முனை கொண்ட எலும்புக் கருவிகள், நூல் நூற்கும் தக்ளிகள்,(ஆபரண மணிகளைக் கோர்க்கும்), தங்க அணிகலன்கள், மணிகள் போன்றவையும் கண்டறியப்பட்டுள்ளன, குறிப்பாக 520-க்கும் மேற்பட்ட விளையாட்டுப் பொருட்கள், சுடுமண்ணாலான 13 மனித உருவங்கள், 35 காதணிகள், மூன்று விலங்கு உருவங்கள், தங்கம், இரும்பு, செம்பு உலோகத் தொல்பொருட்கள் மற்றும் தமிழ் பிராமி எழுத்து பொறித்த பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சன்னமானகளிமண், செங்கல், சுண்ணாம்புச்சாந்து இரும்பு ஆணிகள் பயன்படுத்திக் கட்டுமானத் தொழில் நுட்பத்தில் வீடுகள் கட்டப்பட்டிருந்தன.கதிரியக்க கரிமக்காலக் கணிப்புப்படி இத்தொல்லியல் களம் கி.மு.600 காலத்தவை என அறியப்பட்டுள்ளது. இந்த அகழ்வாய்வில் 2.600 ஆண்டுகளுக்கு முன்னா் வைகைக் கரை நாகரிகம் சிறந்து விளங்கியதற்கான சான்றுகள் தெரிய வந்துள்ளன. மேலும் ஐந்தாம் கட்ட அகழாய்வில் சுடுமண்ணால் ஆன குழாய் போன்ற அமைப்பாலான வடிகால் அமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. லுனு6.∵3 என்ற ஆய்வுக்குழியில் பணிகள் நடந்தபோது 47 செ.மீ ஆழத்தில் பானையின் விளிம்பு போன்ற அமைப்பு தென்பட்டது. அதனை, கவனமாக தொடர்ந்து வெளிப்படுத்தியபோது, சிவப்பு வண்ணத்தில் நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ள இரண்டு சுடுமண் குழாய்கள் ஒன்றோடு ஒன்று பொருந்திய நிலையில் கிடைத்தன.

இந்த குழாய்கள் 60 செ.மீ நீளமும், 20 செ.மீ அகலமும் கொண்டிருந்தன. இந்தக் குழாய்கள் ஒவ்வொன்றிலும் விளிம்புகளைப் போல ஐந்து வளையங்கள் உள்ளன. இந்த இரு குழாய்களும் ஒன்றோடு ஒன்று நன்கு பொருத்தப்பட்டிருப்பதால், நீரை பாதுகாப்பாகக்

கொண்டு செல்ல இவை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என அகழாய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த சுடுமண் குழாய்க்குக் கீழே பீப்பாய் வடிவிலான மூன்று சுடுமண் குழாய்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்திய நிலையில் காணப்பட்டன. ஆகவே,இந்த இரண்டு குழாய்ப் பாதைகளும் வெவ்வேறு விதமான பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. பீப்பாய் வடிவிலான குழாயில் வடிகட்டி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழாயின் இறுதிப்பகுதி இரண்டடுக்குப் பானை ஒன்றில் சேர்கிறது. ஆகவே, இந்த பீப்பாய் வடிவிலான குழாய் மூலம் அந்தப் பானையில் திரவப் பொருளைச் சேகரித்திருக்கலாம் எனக் கள ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**6. ஆறாம் கட்டம்**

பிப் 2020-ம் ஆண்டில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆறாம் கட்ட அகழாய்வு பணிகளைத் தொடங்கியது. கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது.

## 7.திணை வாழ்வியல்

**திணை வாழ்வியல்**

பண்டைய தமிழரின் நாகரிகம் மற்றும் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ள அடிப்படையாக அமையும் முதன்மையான நூல் தொல்காப்பியம் ஆகும்

**திணை பற்றிய தொல்காப்பியர் கருத்து**

திணை என்ற சொல்லைத் தொல்காப்பியர் மூன்று விதங்களில் பயன்படுத்துகிறார்

1. மொழியைப் பற்றிக் கூறும்போது உலகத்துப் பொருட்களை உயர்த்திணை,அ்.றிணை எனப் பாகுபடுத்தல்

2. மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிப் பேசுகின்ற இடத்தில் அகத்திணை,புறத்திணை எனப் பகுத்து ஒழுக்கமுறையாகக் குறிப்பிடல்

3. பிரிவு என்ற பொருளில் பயன்படுத்தல்

திணையினை தொல்காப்பியர் இரண்டு வகையாகப் பிரிக்கிறார்.

1. அகத்திணை
2. புறத்திணை

இத்திணைகளை மேலும் 7 விதமாகத் தொல்காப்பியர் பகுக்கிறார்.

அகம் என்றால் உள்ளம் என்று பொருள். மனதளவில் உருவாகின்ற காதல் செய்தியைப் பற்றிக் கூறுவது அகத்திணையாகும். கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை ஆகிய ஏழும் அகத்திணைகள் என்கிறார் தொல்காப்பியர். கைக்கிளை, பெருந்திணை தவிர உள்ள ஐந்தும் நிலப்பிரிவுகள் ஆகும்.

இதனை அன்பின் ஐந்திணை என்பர். ஒன்றுபட்ட மனதுடைய இளமைத்தன்மை பொருந்திய தலைவனும் தலைவியும் செய்கின்ற காதலை நில அடிப்படையில் பிரித்துள்ளனர்.

### களவியல்

சமூகத்தில் வாழ்கின்ற பொதுமக்களுக்குத் தெரியாத வகையில் மறைவாக நிகழக்கூடிய காதல் வாழ்க்கை களவு எனப்படும். களவு வாழ்க்கையைக் கூறும் இலக்கணப் பகுதி களவியல் ஆகும்.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்ற நான்கு வகைப் பிரிவுகளில் மக்களின் பண்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன.

களவு என்பது திருமணத்திற்கு முன்னர் நிகழும் உறவு நிலை ஆகும். இது வளர்ந்து திருமணத்தில் முடிவுவது தமிழர் நெறியாகும் என இறையனார் களவியல் உரை கூறுகிறது.

**பத்து வகைப் பொருத்தங்கள்**

காதல்எண்ணம் கொண்ட தலைவன் தலைவிக்குப் பத்து வகைப் பண்புகள் பொருத்தமாக இருக்க வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு

உருவு நிறுந்த காம வாயில்

நிறையே அருளே உணர்வோடு திருடன்

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையை.”

1. ஒரு குலத்தில் பிறத்தல், 2. ஒத்த ஒழுக்கம், 3. வலிமை, 4. வயது, 5. உருவம், 6. அன்பு, 7. அருள், 8. அறிவு, 9. நிறை(அடக்கம்), 10. செல்வம்.

இவையே முற்காலத் திருமண முறைசார் பண்பாடாக இருந்துள்ளது தகுதியில்லாதவரிடம் காதல் செல்வதைத் தொல்காப்பியர் இடித்துரைக்கிறார்

### கற்பியல்

கற்புநிலை என்பது அகவாழ்வின் மற்றொரு பிரிவு ஆகும். தலைவன் மற்றும் தலைவியின் திருமண வாழ்க்கையினைக் கூறுவதே கற்புவாழ்க்கை ஆகும்.ஒருமித்த மனதுடன் காதல் புரிந்த இருவரும் திருமணம் செய்துகொண்டு இணைந்து விடுவர். அகத்திணையானது மனிதவாழ்வில் அன்பையும், இன்பத்தையும் தரவல்லது.இவ்வுலகில் வாழும் மனிதர்கள் இப்படிதான் வாழவேண்டும் என்று அகத்திணை, களவு, கற்பு என ஒவ்வொன்றிக்கும் இலக்கணம் வகுத்தவன் நம் தமிழன் பெருமைக்குரியதாகும். ஒழுக்கநிலையுடன் மேற்கொள்ளப்படும் காதலானது கற்பியல் நிலையைப் பெற்று காவியமாக மலரும்.தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்கின்ற கற்பு நிலையை இரண்டு விதமாகப் பிரிக்கின்றனர்.

1. இல்வாழ்க்கை நிலை

2. பிரிவு நிலை

இல்வாழ்க்கை என்பது தலைவனும் தலைவியும் எந்தவித அச்சமும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் இணைந்து வாழ, குடும்ப உறவுகள் இன்பமடைகின்றனா். பிரிவானது பரத்தையா் பிரிவு, கல்விப் பிரிவு. காவல் பிரிவு, தூதுப்பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள் வயிற்பிரிவு என ஆறு முறைகளில் நிகழும்.

**உணவு**

'உணவெனப்படுவது நிலத்தோடு நீரே' என்று புறநானூறு கூறுகிறது. உணவினது ஒவ்வொரு கூறும் நிலத்தினை நீரையும் சார்ந்திருக்கிறது என்பதை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் புரிந்துள்ளனர். கால்நடை மேய்த்தல், வேளாண்மை போன்ற தொழில்களுக்குப் பின்னணியில் உணவு இருந்தது. எனவே மானிடவியலாளர், மனித சமூக நாகரிகத்தை உணவு உற்பத்தியின் அடிப்படையில் அணுகுகின்றனர்.மக்கள் உணவு ஈட்டுகிற முயற்சி நான்கு நிலைகளில் வளர்ச்சி பெற்றது.

1. கி.மு.10000 ஆண்டிற்கு முன்-வேட்டையாடுதல்,இயற்கை உணவு.

2. கி.மு. 7000 வரை - கால்நடைகளை மேய்த்தல்.

3. கி.மு. 3000 - எளிய முறையிலான வேளாண்மை.

4. கி.மு. 3000 ஆண்டுக்குப் பின் - பண்பட்ட வேளாண்மை.

தொல்காப்பியர் ஐந்து வகை நிலங்களுக்குமுரிய உணவுகள்

குறிஞ்சி - தினை, தேன், மூங்கிலரிசி.

முல்லை - வரகு, சாமை.

மருதம் - செந்நெல், வெண்ணெல்.

நெய்தல் - உப்பு, மீன், பண்டமாற்று முறையில் கிடைத்த பொருட்கள்.

பாலை - சூறையாடிய பொருட்கள்.

உணவோடு நீர் நிலைகளையும் சேர்த்துச் சொல்கிறார்.

முல்லை - காட்டாறு

குறிஞ்சி - அருவி நீர், சுனை நீர்

மருதம் - ஆற்று நீர், பொய்கை நீர், காங் கிணற்று நீர்.

நெய்தல் - மணற்கிணறு

பாலை - கூவல், சுனை நீர்.

தேன், எள், எண்ணெய் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன.

அறுசுவைகள்

இனிப்பு - ஆற்றல்

துவர்ப்பு - வீறு (பெருமை)

கார்ப்பு - வளம்

உவர்ப்பு - தெளிவு

கைப்பு - மென்மை

புளிப்பு - இனிமை

என ஒவ்வொரு சுவையும் வாழ்க்கையின் பண்புகளை வெளிப்படுத்துவதாக கருதினர். அருந்துதல், உண்ணுதல், உறிஞ்சுதல், குடித்தல், தின்றல், துய்த்தல் நக்கல், பருக்கல், மாந்தல், மெல்லல், விழுங்கல்

## அணிகலன்கள்

அழகுபடுத்துதல் என்பது ஒரு கலையாகும். மக்களின் ஒப்பனைகளில் அணிகலன்களின் பங்கு இன்றியமையாத இடத்தை வகிக்கிறது. தொல்பழங்காலத்திற்கு முன்னரே தமிழர்கள் தங்களுடைய கலை மற்றும் அழகுணர்ச்சியை அணிகலன்கள் மூலமாக வெளிப்படுத்தினர். இயற்கையை முதன்மைக் கடவுளாகக் கருதிய தமிழினம், தங்களின் அணிகலனை இயற்கையின் எழில் மிகு கற்கள், பூக்கள், கொடி, ஓலை போன்றவற்றைக் கொண்டு உருவாக்கினர்.

### அணிகலன்களின் வகைகள்

அணிகலன்கள் அணியப்பட்ட உறுப்புகளின் பெயர்களுக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டன. அவை: தலையணிகள், காதணிகள், கழுத்தணிகள், இடையணிகள், கையணிகள், விரலணிகள், கடகங்கள், காலணிகள்.

### களவியல் மாந்தர்கள்

களவு ஒழுக்கம் மேற்கொள்ளும் தலைவன், தலைவி ஆகிய இருவருடன் பாங்கள், தோழி, செவிலித்தாய், நற்றாய் கண்டோர் ஆகியோர்கள் களவியல் மாந்தர்கள் ஆவர்.

### தலைவன்

தலைவன் தலைவிக்கு உரிமை உடையவன். பிறதோறும் தலைவியுடன் தொடர்ந்து வருபவன். மேலும் பிறப்பு, குடிமை, ஆண்மை போன்றவற்றால் சிறந்தவன். இதனை,

"பெருமையும் உரனும் ஆடுஉனே"

என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

**தலைவி**

தலைவனுக்கு உரிமையானவளும் தலைவனைத் தனக்கு உரிடையாக்கிக் கொண்டவளும் ஆவாள். பிறவிதோறும் தலைவனுடன் வருபவள். தலைவனுடன் ஒத்த பிறப்பு, குடிமை போன்றவற்றில் சிறந்தவள். அச்சம், மடம், நாணம் என்ற மூன்று குணங்களும் உடையவள்.

**பாங்கன்**

தலைவனின் உயிர்த்தோழன், தலைவனை நீங்காது தலைவனிடம் பாங்காக நடந்து கொள்வதால் பாங்கன் எனப்பெயர் பெற்றான். களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் நடக்கும் தலைவன் தலைவியின் சந்திப்புகள் அனைத்தும் தோழனின் துணையால் நடப்பவை ஆகும்.

பாங்கன் உதவியால் தலைவன் தலைவியோடு கூடும் கூட்டம் பன்னிரண்டு என்பர். இதனைத் தொல்காப்பியர்,

"பாங்கள் நிமித்தம் பன்னிரண்டு என்ப"

எனும் நூற்பாவின் வழியே அறியலாம்.

**தோழி**

களவு ஒழுக்கத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே ஓர் இணைப்பு பாலமாகத் திகழ்பவள் தோழி. தோழி செவிலித்தாயின் மகள் என்பதனைத் தொல்காப்பியர்,

"தோழி தானே செவிலியது மகளே"

என்கிறார்.

தோழி,தலைவியின் இயற்கைப் புணர்ச்சி நிலையை உணர்ந்ததோடு தலைவியின் களவொழுக்கத்தை அறத்தொடு நிலையில் உணர்த்தம்படிச் செய்பவள். மேலும் தலைவியின் பல்வேறு சூழல்களை விளக்கித் தலைவனிடம் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டுபவள் தோழி தான்வேறு தலைவி வேறு என்றில்லாமல் உயிருக்கு உயிராய் தலைவியுடன் ஒன்றி இருப்பவள் தோழி ஆவாள்.

**செவிலித்தாய்**

செவிலித்தாய் தலைவியின் வளர்ப்புத் தாய். மேலும் தோழியின் தாய் தான் செவிலித்தாய். செவிலித்தாய் தான் தலைவியின் உடல் நல வேறுபாடு கண்டு, தன் மகளான தோழியைக் கேட்டறிந்து தலைவியின் நிலைப்பாட்டை நற்றாயிடம்(தலைவியின் தாய்) உரைப்பவள். இதைத்தான் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல் என்று கூறுவர்.

**கண்டோர்**

கண்டோர்கள், களவுக்காலத்தில் உடன்போக்கு செல்லும் தலைவன், தலைவிக்கு உதவும் எண்ணம் உடையவர்கள். தலைவியைத் தேடி வந்த செவிலித்தாய்க்கு ஆறுதல் கூறித் தேற்றுபவர். சந்தனம் மலையில் விளைத்தாலும் மலைக்குப் பயன்படாமல் அதைப் பூசுவோர்க்குப் பயன்படுவது போல் உன் மகள் உனக்குப் பயன்படாமல் தன்னை விரும்பிய தலைவனுக்குப் பயன்படுவாள் என எடுத்துக்கூறி கண்டோர் செவிலித்தாயைத் தேற்றும் விதம் போன்றவை கண்டோரின் செயல் ஆகும்.

**கற்புக்காலப் பிரிவுகள்**

திருமணம் செய்து கொண்டவர்கள் இல்லத்திலிருந்து நல்லறம் செய்வதே கற்பொழுக்கம் எனப்படும்.

கற்பொழுக்கத்தில் இன்பம் செய்வது பிரிவேயாகும். பிரிவே இல்லற இன்பத்தை மிகுவிப்பது என்று கூறலாம். அதாவது இல்லறத்தின் நடைமுறையில் கணவன் பிரிந்து செல்வது உண்டு. அதனை,

1. பொருள்வயிற் பிரிவு
2. ஓதல் பிரிவு
3. தூதுப் பிரிவு
4. பகைவயிற் பிரிவு(துணைவயின் பிரிவு)
5. பரந்தையிற் பிரிவு என்பதாகும்.

**1.பொருள்வயிற் பிரிவு**

தலைவன் தன் இல்லற வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருளை ஈட்டுதல் காரணமாகப் பிரியும் பொருள்வயின் பிரிவு எனப்படும். இது அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு பிரிவினர்க்கும் உரியது. இதற்குரிய காலம் ஓர் ஆண்டு ஆகும்.

**2.ஓதல் பிரிவு**

தலைவன் கல்வி கற்றலின் காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்லும்‘ஓதல் பிரிவு’ எனப்படும். இதற்குரிய கால வரையறை 3ஆண்டுகள் ஆகும். மேலும் இது,

1. வேதம் ஓதுதல்
2. வேதமல்லாக் கல்வி கற்றல்

என்ற இரு உட்பிரிவுகளை உடையது.

**3.தூதுப் பிரிவு**

அரசர் இருவர் தம்முள் வேறுபட்டு பகை கொண்டு போரிட எண்ணிய சூழலில், அவ்விருவரிடைய பகை நீங்குவதற்காக தலைவன் தூது செல்லுதல் இப்பிரிவு ஆகும். இது அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியது. இதற்குரிய காலம் ஓர் ஆண்டு ஆகும்.

**4.பகைவயிற் பிரிவு(துணைவயின் பிரிவு)**

ஓர் அரசனுக்குப் பகைவர்களால் இடையூறு நேர்ந்த வழி அதனைப் போக்குவதற்குத் துணைபுரியும் நோக்குடன் தலைவன் மேற்கொள்ளும் பிரிவு பகைவயிற் பிரிவு எனப்படும். இது அரசர், வணிகர், வேளாளர் என்னும் மூவர்க்கும் உரியது. இதற்குரிய காலம் ஓர் ஆண்டு ஆகும்.

**5.பரந்தையர் பிரிவு**

தலைவன் பரந்தையிடம் விருப்பம் கொண்டு தலைவியைப் பிரிந்து பரந்தையர் வாழும் பகுதிக்குச் செல்லும் பரந்தையர் பிரிவு எனப்படும். இது,

1. அயல்மனைப் பிரிவு
2. அயற்சேரிப் பிரிவு
3. புறநகர்ப்பிரிவு

என்று மூன்று நிலைகளில் நிகழும் என்பர்.

**தொல்காப்பியர் கூறும் எண்வகை மணம்**

தொல்காப்பியர் எண்வகை மணம் பற்றி கீழ்க்காணும் நூற்பாவில் கூறுகின்றார்.

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்"

இன்பமும் பொருளும் அறனும் என்று சொல்லப்பட்ட அன்போடு புணர்ந்த நடுவிலுள்ள ஐந்திணையில் நிகழும் காமக் கூட்டத்தினை ஆராயும்போது மறையோர் வரையறுத்த எட்டு வகை மனத்தினுள் கந்தர்வ மணத்தோடு ஒட்டிய இயல்பினை உடையதாகும்.

**தமிழர் எட்டுவகை மணம்**

1. அந்தணர் திருமணம்
2. அரசர் திருமணம்
3. வணிகர் திருமணம்
4. வேளிர் திருமணம்
5. வில்லேற்றுத் திருமணம்
6. இளையோர் திருமணம்
7. வலிந்துகொள் திருமணம்
8. யாழோர் திருமணம்

இத்திருமணங்கள் யாவும் சான்றோர் முன்னிலையில் கொடுப்பக் கொள்ளும் தகுதி உடையவை. இதில் முதல் நான்கு திருமண முறைகளும் அதாவது,

1. அந்தணர் திருமணம்
2. அரசர் திருமணம்
3. வணிகர் திருமணம்
4. வேளிர் திருமணம்

இந்நான்கு திருமண முறைகளும் அந்தந்தச் சாதி மரபிலே நடைபெறுவன ஆகும்.

**5.வில்லேற்றுத் திருமணம்**

வில் போட்டியில் வெற்றி பெற்றவனுக்குப் பெண்ணை மணம் செய்து கொடுப்பதாகும்.

**6.இளையோர் திருமணம்**

காமம் நிரம்பாத இளம்பெண்ணிடம் காம உணர்வுடையவன் அன்பு கொண்டு மணப்பதாகும்

**7.வலிந்துகொள் திருமணம்**

தன்னிடம் விருப்பம் இல்லாத ஒரு பெண்ணை ஒருவன் வலிந்து கொண்டு சென்று மணப்பதாகும்.

**8.யாழோர் திருமணம்**

யாழ்ப்பாணர் ஓர் ஊரில் இல்லாமல் புரவலரை நாடிச் சென்று அவரைப் பாடிப் பரிசில் பெறும் இயல்புடையவர். அவ்வாறு வள்ளலை நாடிச் செல்லும் ஒரு பாணர் குடும்பத்தார் வழியில் தம்மைப்போலவே வரும் மற்றொரு பாணர் குடும்பத்தைச் சேர்ந்த பெண் தனிமையில் வரும்போது இருவரும் ஒருவரையொருவர் கண்டு கூடி, பிறகு அவர்தம் விருப்பத்தை பெற்றோரிடம் கூறி மணப்பது ஆகும்.

**தமிழரின் உணவு, உடை, உறையுள் அணிகலன்கள்**

**முன்னுரை**

மனிதனின் அடிப்படைத் தேவைகள் மூன்று ஆகும். உணவு, உடை, உறைவிடம் என்பதாகும். அவை குறித்து இக்கட்டுரையின் கண் சற்றே விரிவாகக் கண்போம்.

**உணவு முறைகள்**

பண்டையத் தமிழர் அரிசி சோற்றையே தம் உணவாகக் கொண்டனர். புழுங்கல் அரிசியை பயன்படுத்தினர். சோற்றுடன் காய்கறி வகைகளையும் உண்பர். கடுகிட்டு தாளிப்பர். மிளகையும், புளியையும், உப்பையும் உணவில் கலந்து கொண்டனர். வடுமாங்காய்,ஊறுகாய் அக்காலத்திலும் உண்டு. பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு ஆகியவற்றையும் பயன்படுத்தினர். பலவிதமான பனியாரங்கள் செய்யப்பட்டன. வேடர்கள்

விரும்பி உண்ட உணவு புளிச்சோறு ஆகும். பண்டைத் தமிழர்கள் ஊன் உண்டனர். பார்ப்பனர்களும் ஊன் உண்டதற்கு பல சான்றுகள் உள்ளன.

மதுவும், யவனர்கள் கப்பலில் கொண்டு வந்த தேறலையும் தமிழர்கள் விருப்பத்துடன் குடித்தனர். அவற்றின் கடுமையை பாம்பின் கடிக்கும், தேள் கொட்டிற்கும் நிகரானது என்று புலவர்கள் கூறியுள்ளனர். கள்ளை பனைமரத்துப் பன்னாடையில் வடிக்கட்டுவர். நாவற்பழங்களை பறித்து உண்பர். இவ்வாறு தமிழரின் உணவு முறைகள் அமைந்தன.

**உடை வகைகள்**

பண்டைத் தமிழர்களில் குறிஞ்சி,முல்லை நில மக்கள் பூவையையும்,தழையையும் கோத்து ஆடையாக அணிந்தனர். கம்பளி ஆடைகளையும் அணிந்தனர். நகர மக்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆடைகளை நெய்தனர். ஆடைகள் பாம்பின் தோலை போன்று மெல்லியதாகவும், பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டும் காணப்பட்டன.

உயர்குடியில் பிறந்த ஆண்கள் இடையில் ஒரு வேட்டியும் மேலாடையும் அணிவர். சிலர் சட்டை அணிவதுண்டு. அரசரும் அவருடைய பணியாளரும் சட்டை அணிவர். இச்சட்டை ‘கஞ்சுகம்’ எனப்படும். பெண்கள் இடையில் புடவையை அணிந்திருந்தனர். மார்பை ஆடையால் மறைக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. அதற்கு மாறாய் சந்தனம், தொய்யில் எழுதி மலர்கள் கொண்டு மார்பை மறைத்தனர்.

புதுமணத் தம்பதிகள் புத்தாடையால் தம் உடலையும், முகத்தையும் மறைத்துக்கொண்டனர். பெண்கள் வெள்ளை நிறப்புடவைகள் அணிந்து பந்தாடினர். நுண்ணிய புடவைகள் மதுரை அங்காடியில் விற்பனையாயின. இவ்வாறு உடை குறித்தவற்றை அறியலாம்.

**உறையுள்**

குறிஞ்சி,முல்லை நிலங்களில் வாழ்ந்த மக்கள் சிறு சிறு குடிசைகளில் குடியிருந்தார்கள். இக்குடிசைகள் ‘குரம்பை’ எனப்படும். நெய்தல் நில பரதவர்களின் வீடுகள் புல்லாலும் வைக்கோலாலும் வேய்ப்பட்டன. மலையடிவாரத்தில் வாழ்ந்த சிலருடைய வீடுகள் தீட்டிய வண்ணம் போல் காட்சியளித்தன.

நகரங்களில் மிகப்பெரிய மாடி வீடுகள் காணப்பட்டன. இவ்வீடுகளுக்கு ‘வேயா மாடங்கள்’ என்று பெயர். இவ்வீடுகளில் சாளரங்கள் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கும். அரண்மனையின் விடி விளக்குகள் எந்நேரமும் எரிந்து கொண்டே இருந்தன. இவை ‘பாவை விளக்குகள்’ எனப்படும். அரண்மனையைச் சுற்றி ஒரு வெற்றுவெளி இருக்கும். அதற்கு ‘செண்டுவெளி’ என்று பெயர். புறமதில்கள் வெள்ளிய சுதையால் பூசப்பட்டு இருந்தன. உட்சுவர்கள் செம்பினால் எழுப்பப்பட்டவை போல காட்சியளித்தன. மாடி மேல் நிலா முற்றம் அமைந்திருந்தது. அரண்மனை போல் வீடுகளுக்கும் சாளரங்கள் இருந்தன. வீடுகளில் இரட்டைக்கதவுகள் அமைப்பதுண்டு. வெளியில் வீட்டு வாசலில் மேடைகள் போடப்பட்டு இருந்தன. அவற்றிற்கு ‘வேதி கைகள்’ என்று பெயர்.

வீட்டின் உட்புறச்சுவற்றில் ஓவியங்கள் எழுதப்படும் வழக்கமும் இருந்தது. செல்வந்தர்கள் தம் மாளிகையைச் சுற்றி பூங்கா அமைத்துக் கொண்டனர். வீடுகளுக்கு பின்புறம் எந்திரக் கிணறுகள் இருந்தன.

வேடர்களின் வீட்டில் நாய்கள் சங்கிலியால் கட்டப்பட்டு இருந்தன. ஆயர்கள் தம் வீடுகளில் வெள்ளாடு, செம்மறி ஆடுகளை வளர்த்தனர். பார்ப்பனர் வீடுகளில் கோழியும்நாயும் நுழையவில்லை. சங்கக்காலத்தில் பூம்புகார் மிகப்பெரியதொரு நகரமாகக் காட்சியளித்தது. இந்நகரின் உட்புறம் பட்டினம் என்றும், புறநகர் மருவூர்ப்பாக்கம் என்றும் அழைக்கப்பட்டன. அங்கு தான் நாளங்காடிகள் நடைப்பெற்றன. 'இரவு நேரக்கடைகள்','அல்லங்காடிகள்' எனப்பட்டன. மதுரை நகரம் சிறப்புற்று விளங்கிற்று. அங்கும் அங்காடிள் காணப்பட்டன. இவ்வாறு மக்களின் வீகளும், மன்னரின் அரண்மனைகளும் காட்சியளித்தன.

**அணிகலன்கள்**

பண்டைத் தமிழகப் பெண்கள் தம் உடலில் பாதியை ஆடையாலும், மீதியை அணிகலன்களாலும் மறைத்துக் கொண்டனர். அணிகலன்களால் தம்மை ஒப்பனை செய்துக்கொண்டனர். முத்தும் பவளமும் இதர மணி வகைகளும் இழைத்துப் பலவகையான அணிகள் செய்யப்பட்டன. கைதேர்ந்த கம்மியர்கள் இவற்றை செய்தனர்.

மகளிர் அணிந்த அணிகலன்கள் சிலவற்றை சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. கால்விரல், மோதிரம், சதங்கை, அரையில் அணியும் முத்து வடம், மாணிக்கமும் முத்தும் கொண்ட தோள் வளையல்கள், சங்கவளை, பவள வளை, குதம்பை என்னும் காதணி ஆகியவையாகும்.

குழந்தை அணிகலன்களுக்கு அளவே இல்லை எனலாம். நெற்றியில் சுட்டியும், பிறையும், பொன் சங்கிலியும் பூட்டுவார்கள். கழுத்தில் ஐம்படைத்தாலியும், புலிப்பல் தாலியும் அணிவிக்கப்பட்டன. வீரர்களில் சுறாமீனைப் போன்று மோதிரம், மணிகள் உள்ளிட்ட சதங்கைகள் மணியும் பவளமும் கோத்த அரைஞாண் இடையிலும் அணிவிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. பெண்கள் மாணிக்கம், முத்துக்களை பரல்களாக இட்டனர். வெள்ளிக்கம்பியில் கோர்க்கப்பட்ட மலர்களையும் அணிந்தனர்.

தமிழ்நாட்டு அணிகலன்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. கொடுமணம் என்ற ஊரில் செய்யப்பட்ட அணிகலன்கள் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டன. தலைக்கோலத்தில் பெண்கள் ஆர்வம் காட்டினர். நீண்டு வளர்ந்த கூந்தலையே விரும்பினர். ஐந்து வகையான தலைக் கோலம் செய்தனர். பெண்கள் ஒப்பனைக்கு நூறு வகை பூக்கள் பயன்பட்டன. மலர் சூடாதிருப்பதை பெண்கள் இழிவாகக் கருதினர். கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டினர். கண்களுக்கு மைத்தீட்டுவர். மைத்தீட்டும் குச்சி 'கோல்' எனப்படும். நறுமண பாக்கும் வெற்றிலையும் போடுவார்கள்.

ஆண்மக்கள் தலையில் பூச்சூடிக் கொள்வது வழக்கம். இவற்றை கண்ணி என்றழைத்தனர்.

## தமிழர் நடத்தி வந்த கடல் வாணிபம்

சங்க கால வாணிபத்தை உள்நாட்டு வாணிபம், வெளிநாட்டு வாணிபம் என இருவகையாகப் பிரிக்கலாம். உள்நாட்டு வாணிபத்திற்குப் பொன்னையும் பயன்படுத்தினர் எனலாம். நெல்லுக்கு விலையாக நெய்தல் நிலத்து உப்பு பண்டமாற்றாகப் பயன்பட்டது. தானியங்களைக் கடனாகப் பெற்று அதே தானியத்தைத் திருப்பி கொடுக்கும் துறைக்குக் 'குறி எதிர்ப்பு' என்று பெயர் இருந்தது.

## உள்நாட்டு வாணியம்

உள்நாட்டு வாணிபத்திற்கு நாளங்காடி, அல்லங்காடி என இருவகை அங்காடிகள் இருந்தன. நாளங்காடி என்பது பகல் நேரத்திலும், அல்லங்காடி இரவு நேரத்திலும் செயல்பட்டன.

இவை புகார், மதுரை முதலிய நகரங்களில் இருந்தன. பொருள்களின் விலை எழுதித் தொங்கவிடப்பட்டன. வணிகரகள் கூட்டமாகச் சென்று வாணிகம் செய்தனர்.அக்கூட்டத்திற்கு **'வாணிகச் சாத்து'** என்று பெயர். **'எட்டி காவிதி'** முதலிய பட்டங்கள் வணிகர்களுக்கு அரசரால் வழங்கப்பட்டன. கழுதை, வண்டி, படகு, பாய்மரக் கப்பல்கள் சரக்குகளைக் கொண்டு செல்லப் பயன்பட்டன. சுங்கச் சாவடியில் சுங்கம் பெற்றனர்.

## அயல்நாட்டு வாணிபம்

காரவேலனின் ஹதிகும்பாக்கல்வெட்டு, அமராவதி ஸ்தூபி, அனுராதபுரம் கல்வெட்டு ஆகியன வாயிலாகக் கலிங்கம், ஆந்திரா, இலங்கை ஆகிய பகுதிகளுடன் மேற்கொண்ட வாணிபம் பற்றி அறிகிறோம். சாவகம், சாவக நாடு எனக் கிழக்கிந்தியத் தீவுகளை அறிந்திருந்தனர். சாவக நாடு சென்று அங்குக் கிடைத்த வாசனைப் பொருள்களையும் பவளத்தையும் பட்டுத் துகிலையும் வாங்கிக் கொண்டு வந்து இங்கு விற்றனர். பிற நாட்டாரும் தமிழகத்தில் வந்து வாணிபம் செய்தனர்.

## வாணிபம் செய்த பிறநாட்டார்

அயல்நாடுகளிலிருந்து கப்பலோட்டி வந்த வேறு மொழிகளைப் பேசிய மக்கள் தங்கியிருந்ததைப் பட்டினப்பாலை, வாயிலாக அறிகிறோம். முசிறியில் வாணிபம் செய்த அராபியர் அந்த இடத்திற்குப் பந்தர் (அராபிய மொழியில் கடைவீதி) என்று பெயரிட்டு அழைத்தனர்.

ரோம் நாட்டிலிருந்தும் கிரேக்கத்திலிருந்தும் வாணிபத்தின் பொருட்டு வந்து தங்கினர் என்பதற்கு தாலகி, பிளினி, ஸ்டிராபோ முதலானவர்களின் குறிப்புகள் சான்றாகின்றன. ரோம், கிரேக்க நாட்டுக் காசுகள் அகழ்வாயில் கிடைத்துள்ளன.யவனர் தமிழர் தொடர்புக்கு மத்திகை, சுருங்கை, கலம், சன்னல் முதலிய கிரேக்க மொழிச் சொற்களும் 'யவனர் தந்த வினைமான் நன்கலம்' 'யவனர் நன்கலம் தந்த தன் கமழ்தேறல்' ஆகிய தமிழ் இலக்கிய வரிகளும் சான்றாகின்றன. சீன வணிகரும் தமிழகம் வந்து வணிகம் செய்தனர்.

**விலை பொருளும்,விளை பொருளும்**

கரும்பைப் பிழிந்து வெல்லமும்,சர்க்கரையும் செய்தனர். கள்ளும்,மதுவும் செய்தனர். மதுவினை ‘தென் கட்தேறல்’, ‘மணங்கமழ் தேறல்’, ‘அரவு வெகுண்டன்ன தேறல்’ என்று மதுவின் தன்மை குறித்துக் கூறுகின்றன. சிறுபாணாற்றுப் படையில் மிளகுக் கொடியைப் பைங்கறி நிவந்த பலவின் நிழல் என்று குறிப்பிட்டனர். யவன வணிகர் மரக்கலங்களில் வந்து பொன்னைக் கொடுத்து மிளகைப் பெற்று சென்றதை அகநானூறு, ‘பொன்னோடு வந்து கறியோடு பெயரும்’ என்று குறிப்பிடுகிறது.

தமிழகத் துணிகள் பாடலிபுத்திரம், காசி முதலிய பகுதிகளுக்கும் சென்றன. பட்டைப் பற்றி கொட்டைக் கரைய பட்டுடை என்று பொருநராற்றுப் படை கூறுகின்றது. உமணப் பெண்டிர் உப்பை ஊருக்குள் கொண்டுபோய் விற்றனர்.

சங்குகளை எடுத்து வளையல்களாக்கி விற்கும் சிறப்புடன் நடபெற்றது. முத்துக்களைச் சிலம்புகளில் வைத்து உருவாக்கினர். நெல்லுக்குப்பதில் யானைத் தந்தங்களைப் பெற்றனர். விலை மதிப்புடைய மணிக்கக்கற்கள் பற்றியப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. உள்நாட்டு விற்பனைப் பொருட்களில் உப்பும், நெல்லும் அடங்கும்.

பட்டினபாலை வாயிலாக முத்திரைப் பெற்று ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த செய்தியினை அறிகிறோம்.

முசிறி, கொற்கை கொல்லத்துறை, எயிற்பட்டிணம்,தொண்டி ஆகியன முதன்மைத் துறைமு கங்களாக விளங்கின. புகார் என்னும் காவிரிப் பட்டினமே அயல்நாட்டார் வந்து குழுமி நிறைந்திருந்த சிறப்புப் பெற்ற துறைமுகமாகும். சுங்க வரிக்காக இருந்த பொருள்கள் அங்கே மலைபோல் குவிக்கப்பட்டிருந்தனவாம். நெடுஞ்சாலைகளைப் பெருவழி என அழைத்தனர்.

**வணிக மரபினர்**

புலவர்களில் சிலர் வணிகப் பரம்பரையினர் என்பதனை மதுரை அறுவை வாணிகன், மதுரைக்கூலவாணிகள், உறையூர் இளம்பொன் வாணிகன்,காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகர் கணியன் பூங்குன்றன் முதலானோர் பெயர்கள் காட்டுகின்றன.

**சாதவாகனர் காலம்**

சாதவாகனர் காலத்தில் பொருள் உற்பத்தி செய்து வாணிபம் புரிவதற்கென்று பல குழுக்கள் இருந்தன. அவை “சிரினி” எனப்பட்டனர். சாதவாகனர்களின் தலைநகரான பிரதிஸ்தானா சிறந்த உள்நாட்டு வணிக மையமாக விளங்கியது. மேற்கு கரையில் உள்ள பாரிகாஸா என்ற துறைமுகத்தின் வாயிலாகவும், கிழக்கு கரையிலுள்ள தாம்ரலிப்தி என்ற துறைமுகத்தின் வாயிலாகவும் வெளிநாட்டு வர்த்தகம் நடைபெற்றது. யக்ஞஸ்ரீ சதகர்ஹி என்ற சாதவாகன மரபு மன்னன் வெளியிட்ட நாணயங்களில் கப்பல்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இது அம்மன்னன் காலத்து கடல் வாணிபச் சிறப்பை வெளிப்படுத்துகிறது. சாதவாகனர் காலத்தில் தான் முதன்முதல் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பும் கலாச்சாரத் தொடர்பும் ஏற்பட்டுள்ளது.

## தமிழக விளையாட்டுகள்

விளையாட்டு என்பது விரும்பியாடும் ஆட்டம். விளை-விருப்பம், ஆட்டு-ஆட்டம்.

i. சிறுமிகளை விலங்குகளிடம் இருந்து காப்பது போல நடித்து விளையாடுவது ‘கெடரால்’ என்றும்,
ii. உழவர்கள் பயிர் செய்வது போல நடித்து விளையாடுவது ‘பண்ணை விளையாட்டு’ என்றும் தேவநேயப்பாவாணர் கூறுகின்றார்.

பிள்ளைத்தமிழ், குழந்தைகளுக்கான பத்துப் பருவங்களைக் கூறுகின்றது.

i. சிறார்கள் சிறுவீடு கட்டி விளையாடுவது சிற்றில்.
ii. தெருவில் பறையடித்து விளையாடுவது சிறுபறை.
iii. அம்மானை என்பது சிறுமிகள் வட்டமாக அமர்வது பாடல் பாடி விளையாடுவது.
iv. கழங்கு என்பது, சிறுமிகள் கல் வைத்து விளையாடும் விளையாட்டாகும்.

### வீர விளையாட்டுகள்

இவ்வகை விளையாட்டுகள் மனிதனுக்கும், விலங்கிற்கும் இடையில், மனிதனுக்கும், மனிதனுக்கும் இடையில் என இரண்டாகப் பிரிப்பர்.

i. முதல் வகைக்கு ஏழு தழுவலையும், பாரி வேட்டையையும் சான்றாகச் சுட்டலாம்.
ii. சிலம்பாட்டம், புலிவேடம் முதலியவை இரண்டாம் வகைக்குச் சான்று.

### அ)ஏறு தழுவுதல்

மஞ்சுவிரட்டு அல்லது ஏறு தழுவுதல் என்பது தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று. காளையின் கொட்டேறி என்னும் திமிலைப் பிடித்து அடக்குவது சங்ககால முறை. கொம்பைப் பிடித்து முறுக்கி அடக்குவதும் உண்டு. சிறு தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையதாக இவ்விளையாட்டைக் கருதுகின்றனர். அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள், மழையின்மை முதலிய குறைகள் நீக்கப்பட்டால், பொங்கல் நாளன்று சல்லிக்கட்டு விடுகிறோம் என்ற வேண்டுதலின் அடிப்படையிலும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது.

### ஆ)சிலம்பாட்டம்

நடசாரி என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் சிலம்பாட்டத்தின் தோற்றம் பற்றிக் கதையாகக் கூறப்பட்டுள்ளது. இச்சிலம்பாட்டத்தில் பலவிதமான சுவடு முறைகள் கையாளப்படுகின்றன.

i. உடலிலுள்ள வர்ம நாடிகளை நோக்கி அடிக்கும் சுவடுமுறைக்குத் தட்டுவர்மச்சுவடு.
ii. ஒருவர் இடம் பார்த்து அடிப்பதும் அவ்வடியை இன்னொருவர் தடுப்பதும் அடிச்சுப் பிரிவு.

iii. ஒருவர் கைகொண்டு அடுத்தவரைப் பூட்டிப் பிடிப்பதும், அப்பூட்டிலிருந்து பிடிப்பட்டவர் தம்மை விடுவித்துக் கொள்வதும் பூட்டுப் பிரிவு ஆகும்.

**இ)சடுகுடு**

இவ்விளையாட்டு, பாண்டிய நாட்டில் குட்டி என்றும், சோழ நாட்டில் பளிச்சப்பிளான், பலீன் சடுகுடு என்றும், தென் சோழ நாட்டில் சடுகுடு என்றும் அழைக்கப்படுகிறது.

i. மூச்சுப்பிடிப்பதைப் பாட்டம் என்று அழைப்பர்.
ii. பாடிச் செல்பவரைக் கொம்பு சுற்றிப் பாடுவன் என்று சொல்வது உண்டு.
iii. பாடிச் செல்லும்போது தனி வீரமும், பிடிக்கும்போது கூட்டு வீரமும் உடையது இவ்விளையாட்டு. கபடி என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது.
iv. பிடிப்பட்டவரை விலக்காமலே, பிடிப்பட்டவரின் எண்ணிக்கையை மட்டும் ஆட்ட இறுதியில் கணக்கில் கொள்ளும் ஆட்டத்தைச் சஞ்சீவி ஆட்டம் என்றும், பிடிப்பட்டவரைக் கடைசி வரை சேர்க்காமல் ஆட்டத்தை முடித்துக் கொள்வதை ஆடாது ஒழியும் ஆட்டம் என்றும் கூறுவர்.

**8.பண்டைய கல்வி கலை**

எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றப்பட்டன. இவற்றுடன் வானியல் கல்வி ஒருவனுக்கு உயர்வளிக்கும் என உறுதியாக நம்பியதால் எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர். அக்காலத்தே கல்வி கற்கும் இடங்களாக மரத்தடியும், ஊர் மன்றமும், ஆசிரியர் வீடும், வீட்டுத்திண்ணைகளும் அமைந்திருந்தன. பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது.

**பழந்தமிழரின் கலைகள்**

கலைகளில் ஓவியம், இசை, கூத்து, நாடகம் ஆகியவை சிறப்புற்று விளங்கின. சங்க இலக்கியங்கள் வழிநின்று சுவர்களின் மேல் வண்ணங்கள் தீட்டியிருந்தவை அறியலாம். நாடக அரங்குகள் முதலான இடங்களில் ஓவிய எழினிகள் தொடங்கவிடப்பட்டன. சிற்பங்களையும் மக்கள் பயின்று வந்தனர்.

இசை, நாடகம், நாட்டியம் ஆகிய கலைகளின் பழந்தமிழர் மிகுந்த உயர்நிலையை அடைந்தனர். சிலப்பதிகார அரங்கேற்று காதையின் மூலம் இதன் சிறப்புகளை அறியலாம். பாணர், பாடினி, கூத்தர், விறலியர் என்றவாறு மன்னரின் முன் ஆடியும், பாடியும் இவர்கள் பரிசிலைப் பெற்றனர். கலைகள் பற்றிய தமிழ் நூல்கள் பல உள்ளன. அரங்கில் மூன்று விதமான எழினிகள் பயன்படுத்தப்பட்டன. அவை

1. ஒருமுக எழினி - ஒரு பக்கமான நகர்தல்
2. பொருமுக எழினி - இரு பக்கமும் பாதியாகநகர்தல்
3. கரந்து வரல் எழினி - திரையின் மேல்சுருட்டப்படுதல்

என்றவாறு வகைப்படும்

கூத்துகள் பல வகைப்படும். பொதுக்கூத்துகள் 11 வகைப்படும். தமிழரின் கூத்துகள் 'நாட்டியம்' என்னும் பெயரில் இன்றளவும் நடைப்பெற்று வருகின்றன. அக்காலத்தில் யாழும் குழலும் இன்னிசைக் கருவியாகக் கருதப்பட்டன. நரம்பு எண்ணிக்கையை கொண்டு யாழின் வகைகள் பிரிக்கப்பட்டன. இவ்வாறு கலைகள் குறித்து அறியலாம்.

**சங்க கால கல்வி நிலைகள்**

சங்க காலத்தில் ஆணும் பெண்ணும் கல்வி பெற்றிருந்தனர். சிலர் புலமை பெற்று விளங்கினர். எழுத்தறிவு பெற்றவர்களாக பெரும்பான்மையோர் இருந்தனர். மட்பாண்டங்களில் கிடைக்கும் தமிழ் எழுத்துக்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. சங்க காலத்தில் முறைப்படுத்தப்பட்ட கல்விமுறை வளர்ச்சி பெற்றிருந்தது. கல்வி நிலையங்கள் இருந்தனர். பாகுபாடின்றி அனைவருக்கும் கல்வி வழங்கப்பட்டது. அதானல்தான் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்கை நன்றே"

என்று பாடியுள்ளார்.

(ஆக-இரியர்) குற்றம் இல்லாதவர் ஆசிரியர் ஆயினர். அவர்கள் மாணாக்கரின் அறியாமை என்னும் குற்றத்தையும் களைந்தனர். ஆசிரியர்கள் மாணவர்களால் நன்கு மதிக்கப்பட்டனர். சமூகத்தில் ஆசிரியர்களுக்கும் புலவர்கட்கும் உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருந்தது. அதனால்தான் 'கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்றும் 'எத்திசை செலினும் சோறே' என்ற தன்னம்பிக்கையும் கற்றவரிடத்தே காணப்பட்டது எனலாம்.

வணிகருக்கும் போர்ப்படை வீரருக்கும் சிறந்த பட்டம் வழங்கப்பட்டது போல சிறந்த ஆசிரியர்களுக்கும் பட்டம் வழங்கப்பட்டுள்ளன. ஆயிரம் மாணாக்கர்களை ஆதரித்துக் கல்வி புகட்டிய ஆசிரியர், 'கிடங்கில் குலபதி நக்கண்ணனார்' என்பவருக்கும் 'குலபதி' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது அதற்குச் சான்றாகிறது.

இளம் வயதிலேயே கல்வி ஆரம்பமாகிறது. முடிப்பதற்கு வயதில் எல்லையே இல்லை. கல்வி நிலையத்தில் இளம் பாலாசிரியர், பாலாசிரியர், உயர்கல்வி நிலையங்களுக்கான ஆசிரியர் ஆகியோரும் காணப்பட்டனர். உயர்கல்வி பெரும்பாலும் வெளியூர்களில் சென்று கற்றனர். எனவே கல்விக்கான பிரிவு மூன்றாண்டுகள் எனப்பட்டது. எண்ணும் எழுத்தும் துவக்க நிலை கல்வியாகிறது. தொடர்ந்து கணித அறிவையும் வழங்கினர். அளவை வாய்ப்படுகளையும் கற்றுத் தேர்ந்தனர். பனையோலையை எழுதப் பயன்படுத்தினர். வானியல் கல்வியும் உயர்ந்த நிலையில் இருந்தது. முதுகண்ணன் சாத்தனார் வானியலுக்குப் பயன்படுத்திய தமிழ்ச் சொற்களும் நுட்பங்களும் வானியல் அறிவான் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுவனவாகும்.

சாத்தனாரின் அறிவியல் கோட்பாடு அறிவியல் வளர்ச்சியின் வித்தும் விளக்கமாகும். பொதுக்கல்வியுடன் அன்றாட வாழ்க்கைத் தேவையான கல்வியும் வழங்கப்பட்டன. பெண்களுக்கு மனைஇயல், இசை, நாடகம் போன்ற தனிப்

பயற்சியளிக்கும் கல்வியுமிருந்தது. இலக்கிய, இலக்கணக் கல்வியும் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சங்க காலத்தில் கல்வி அறிவை வளர்க்கவும் ஒழுக்கத்தைப் பேணவும், சமநிலையை உருவாக்கவும் பயன்பட்டதால் கல்விக்கு உயரிய இடம் தமிழர் தந்தனர்.

**சங்க காலத்தில் சிறப்புற்றிருக்க ஆடல்கள்**

| **ஆடல் வகைகள் பதினொன்று** | |
|---|---|
| **நின்றாடல்** (6) | **வீழ்ந்தாடல் (5)** |
| அல்லியம்<br>கொடிகொட்டி<br>குடைக்கூத்து<br>பாண்டரங்கம்<br>மல்லியம் | துடி<br>கடையம்<br>பேடு<br>மரக்கால்<br>பாவை |

**நின்றாடல்**

| | |
|---|---|
| அல்லியம் | கண்ணன் யானையின் தந்தத்தை ஒடித்ததைக் காட்டும் ஆடல் |
| கொடுகொட்டி | சிவபெருமான் முப்புரத்தை எரித்த பொழுது,வெற்றிலையில் கைகொட்டி ஆடிய ஆடல். |
| குடைக்கூத்து | முருகன் அவுணரை வென்றபோது ஆடிய ஆடல் |
| மல்லியம் | கண்ணன், வாணன் என்னும் அசுரருடன் போர் செய்ததைக் காட்டும் கூத்து. |

**வீழ்ந்தாடல்**

| | |
|---|---|
| துடி | சூரபதுமனை வென்ற பிறகு, கடலினை மேடையாகக் கொண்டு முருகன் ஆடியதைக் கூறும் கூத்து. |
| கடையம் | இந்திரன் மனைவி ஆயிராணி, உழத்தி உருவத்தோடு ஆடியது. இது உழத்திக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது. |
| பேடு | காமன் தன் மகனான அநிருத்தனைச் சிறை மீட்பதற்காக,வாணனுடைய சோ என்னும் நகரத்தில் பேடியுருவம் கொண்டு ஆடியது. |
| மரக்கால் | கொற்றவை தன்னை எதிர்த்து பாம்பு, தேளாக வந்து அசுரரைக் கொல்வதற்காக ஆடிய ஆடல் |
| பாவை | அசுரரை வெல்ல திருமகள் ஆடிய ஆடல் |

**சங்ககாலத்தில் செழிப்புற்றிருந்த கலைகள்**

சங்ககாலத்தில் பல்வேறு கலைகள் செழித்திருந்தன. அவற்றுள் இசைக்கலை,நாடகக்கலை,சிற்பக்கலை,ஓவியக்கலை கட்டிடக்கலை ஆகியனன குறிப்பிடத்தகுந்தனவாகும்.

**இசைக்கலை**

எல்லா உயிர்களையம் இசையச் செய்ததனால் இசை என்று பெயரிட்டனர் என்கிறார் வே.தி.செல்லம் அவர்கள். சங்க இலக்கியங்களில் இசைக்கருவிகள், பண்கள், இசைவாணர்கள் பற்றிய எண்ணற்ற செய்திகள் இடம் பெறுகின்றன. தோல்கருவி, தொளைக்கருவி, கஞ்சக் கருவி, நரம்புக்கருவி என்னும் நால்வகைக் கருவிகளை பயன்படுத்தியுள்ளனர்.

**பண்ணும் பறையும்**

திணைதோறும் பண்கள் இருந்தன. குறிஞ்சிக்கும் குறிஞ்சிப் பண், முல்லைக்கு சாதாரிப்பண், மருதத்திற்கு மருதப் பண், நெய்தலுக்கு இரங்கற்பண், பாலைக்குப் பஞ்சரப் பண்ணும் என வகுந்திருந்தனர். குறிஞ்சிக்கு தொண்டகப் பறை, முல்லைக்கு ஏறுகோட்பறை, மருதத்திற்கு நெல்லரி கிணையும் முழுவும், நெய்தலுக்கு மீன் கோட்பறையும், நாவாய்ப் பம்பையும், பாலைக்குத் துடியும் பறையும் பயன்பட்டன.

**யாழும் குழலும்**

யாழ் என்னும் கருவி சங்க காலத்தில் மிகவும் முக்கியமான நரம்புக் கருவியாகும். இதிலும் குறிஞ்சியாழ், முல்லையாழ், மருதயாழ், விளரியாழ், பாலையாழ், பேரியாழ், சீரியாழ், மகரயாழ், சகோடயாழ் எனப் பலவகைகள் காணப்பட்டன. குழற்கருவிகள் தூம்புக் கருவிகள் எனப்பட்டன. இதில் கொன்றைக்குழல், குமுதக் குழல் என்ற வகைகள் உண்டு துளை நோக்கில் ஐம்புழை, ஏழ்புழை என்றிரு வகைகள் உண்டு. குழல்கள் மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி இவற்றில் செய்யப்படுவது நலம் என்று நூல்கள் உரைக்கிறது. மேலும் வங்கியம், வேய்ங்குழல் என்றும் அழைக்கப்பட்டன.

**ஆற்றுப்படை நூல்கள்**

பொருநர், கூத்தர், விறலியர், பெரும்பாணர், சிறுபாணர் பாடல்களைப் பாடியம் இசைக்கருவிகளை இசைத்தும் மக்களையும் வேந்தரையும் வள்ளலையும் மகிழ்வித்து வந்துள்ளனர். இதனை ஆற்றுப்படை நூல்கள் தெளிவுற எடுத்துரைக்கிறது. இந்நூல் யாழின் அமைப்பைப் படம் போல் பிடித்து காட்டுகின்றன. இசைவாணர்களாக விளங்கியவர்களின் வாழ்க்கை முறையையும் அவர்கள் கண்ட ஏற்ற இறக்கத்தினையும் தெளிவுப்படுத்துகிறது இந்நூல்கள்.

**சிலப்பதிகாரமும் அடியார்க்கு நல்லார் உரையும்**

முத்தமிழும் நடனமிடும் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் காதை பல்வேறு இசைக்கருவிகள் அவை இயங்கும் விதம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கிறது. அதற்கு உரையெழுதியுள்ள அடியார்க்கு நல்லார் மிக விரிவான இசைக்குறிப்புக்களையும், இசைக்கருவிகள் பற்றிய செய்திகளையும், இசை நூல்களையும் பற்றி விரித்துரைக்கிறார்.

**இசைக் கல்வெட்டு**

சங்ககாலக் கல்வெட்டு ஒன்று ஈரோட்டிலிருந்து காங்கேயம் செல்லும் பாதையில் அரசலூரை அடுத்துள்ள நாகமலை ஆண்டிப்பாறையில் உள்ளது. இது 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பிராமி எனப்படும் தாமிழி எழுத்துக்களால் ஆனது. இதில் பல்வேறு இசைக்குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. தமிழிசையின் பழமையை உணர்த்தக் கிடைத்த பெரும் பொக்கிஷமாகும்.

**நடகக்கலை**

சங்ககாலத்தில் கூத்தர் எனப்பட்டோர் நாடகக் கலையின் முன்னோடி ஆவர். கலித்தொகை நாடகக் கலைக்குத் தொடர்பு காட்டுகின்றன. சிலம்பில் இசை தழுவிய ஆடல்கள் காட்டப்படுகின்றன. நாடக மேடை அமைப்பு, இசைக்கருவிகள் குறித்த செய்திகளும் விரிவாகப் பேசப்படுகின்றன. சிவனுடன் கொடுகொட்டி, திருமாலுடன் அல்லியம், முருகனுடன் துடிக்கூத்து, குடக்கூத்து, ஆகியன இணைக்கப் பெற்றன. துர்க்கையுடன் மரக்கால் ஆட்டமும் திருமகளுடன்ப் பாடை ஆடடையும் இணைக்கின்றன. இவை இசை நாடக வடிவத்தில் அமைந்தனவாகும்.

**ஓவியக்கலை**

பண்டைக் காலத்திலேயே பச்சையிலை சாறு செங்குழம்பு காவிநிறம் போன்ற நிறங்களில் பாறை ஓவியங்கள் தமிழகத்தில் காணக் கிடைக்கின்றன. சங்க காலத்தில் ஓவியச் செந்நூல் ஒன்றை மணிமேகலை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். நெடுநல்வாடையில் அரண்மனைக் கட்டிலில் ஓவியம் தீட்டப்பட்ட செய்தி உள்ளது. சித்திரம் தீட்டப்பட்ட பகுதி அல்லது அறை சித்திரமாடம் எனப்பட்டது. சிவந்த நிற பூக்களையும் படர்ந்த வள்ளியையும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தது என நெடுநல்வாடை விளங்குகிறது. திருப்பரங்குன்றம் ஆலயத்தில் சித்திரமாடத்து ஓவியங்கள் பரிபாடலில் சுட்டப்படுகிறது.

**சிற்பக்கலை**

உருவங்களைக் கல்லிலோ,மண்ணிலோ மரத்திலோ படிய வைப்பது படிமம் ஆகும். வீரர்கள் அல்லது விலங்குகளின் உருவத்தை படிமமாக்கி அதனை உருவம் என்று அழைத்தனர். தொல்பழங்காலத்தில் பல்வேறு சுடுமண், உலோக சிற்பங்கள் இருந்தமையை அகழ்வாய்வுகள் வெளிப்படுத்துகின்றன. தொகை நூல்களில் வீரர்களின் உருவம் செதுக்கியிருப்பதை இலக்கியங்கள் விளங்குகிறது. அகழ்வாராய்ச்சி சான்றுகளும் கிடைத்துள்ளது. கல், மண், பாறை ஆகியவற்றில் பழமை வடிக்கும் அழகுக்கலை சங்க காலத்தில் விரிவடைந்திருந்தது.

**கட்டிடக்கலை**

சங்க காலத்தில் எளியவர்கள் குடிலிலும் வசதி படைத்தவர்கள் மாட மாளிகையில் வசித்தனர். மருத நிலத்தினைச் சார்ந்த நகரங்களில் வசதிமிக்க கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. வசதி மிக்க வணிகர் வீதியான மதுரை வீதிகள் மாடமாளிகைகள் நிறைந்திருந்தது. புகார் நகரமும் வானளாவிய மாடங்களைக் கொண்டது எனப் பார்க்கிறோம். வானதோய் மாடம், நெடுநிலை மாடம், வேயா மாடம், நீரணி மாடம், மாட புலி மறுகிற் கூடல் போன்ற சொற்றொடர்கள் கட்டிடக்கலை வளர்ச்சியைச் சுட்டும். செங்கல், சுண்ணாம்பு மரம் ஆகியவற்றை கட்டுமானத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். அரண்மனைகள், கோட்டைச் சுவர், அகழி போன்ற அமைப்புடைய தலைநகரங்களும் இதற்குச் சான்றாகிறது.

## 9.தமிழ் வளர்த்த சங்கம்

**அறிமுகம்**

முற்காலத்தில் தமிழகத்தைச் சேரர், சோழர், பாண்டியர் ஆகியோர் ஆட்சி செய்தனர். அறநெறியில் நாட்டையும் மக்களையும் வழிநடத்திய மூவேந்தர்கள், தாய்மொழியாகிய தமிழை மிகவும் நேசித்தனர். மொழியைக் காப்பதற்காகச் சேர, சோழ, பாண்டியர், கவிபாடும் திறன் கொண்ட புலவர்களை ஆதரித்து, மிகுந்த மதிப்பளித்தனர். ஆனாலும் தமிழ் இலக்கியங்களைப் பேணி, மொழியை வளர்க்கும் நோக்குடன் சங்கம் உருவாக்கிய பெருமை, பாண்டிய மன்னர்களையே சேரும். எனவே பாண்டிய நாட்டை ‘தமிழ்ப்பாண்டிநாடு’ என்றனர்.

**சங்கம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்**

முக்காலத்தில் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக ஈழநாடு இருந்தது. ப∴றுளி ஆற்றிற்கும் குமரிக்கோட்டிற்கும் இடையே இருந்த பெரும் நிலப்பகுதியாக பழைய பாண்டிய நாடாக இருந்தது. இதன் தலைநகர் தென் மதுரை எனப்பட்டது. ஏழு பனைநாடு, ஏழு தெங்குநாடு, ஏழு முன்பாலைநாடு, ஏழுபின்பாலை நாடு, ஈழநாடு, நாகநாடு, பெருவளநாடு போன்ற 49 நாடுகள் மற்றும் ஆறுகள், மலைகள், காடுகள் கொண்ட நாடு பாண்டியநாடு எனப்பட்டதாக அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.

**தலைச் சங்கம்**

**அமைவிடம்:** கடல் கொள்ளப்பட்ட தென்மதுரை.

**மொத்தப்புலவர்கள்** - 4449 பேர்.

சங்கத்தில் இருந்த முக்கியப் புலவர்கள்: அகத்தியர், திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள், குன்றம் எறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் (குபேரன்)

கடலுக்குள் மூழ்கிப் போன குமரிக் கண்டத்தில் அமையப் பெற்ற இந்த மாநகரம் தெனமதுரையானது, பாண்டிய அரசர்களின் முதல் தலை நகரம் ஆகும்.

| | | |
|---|---|---|
| தொடக்கம் | : | கி.மு.9000(நக்கீரனாரால் கணக்கிப் பெற்றது) |
| சங்கம் நடைபெற்ற காலம் | : | 4400 ஆண்டுகள் |
| பின்பற்றப்பட்ட இலக்கண நூல் | : | அகத்தியம் |
| படைக்கப்பெற்ற நூல்கள் | : | அகத்தியம், பரிபாடல், முதுகுருகு, களரியாவிரை |
| சங்கத்தை நடத்திய அரசர்கள் | : | 89பேர், காய்ச்சின வழுதி முதல் கடுங்கோன் வரை |
| புலவர்களாகசெயல்பட்டஅரசர்கள் | : | 7 பேர் |
| ஆறு | : | ப∴றுளி ஆறு |
| மலைத் தொடர் | : | பன்மலை அடுக்கு |

தலைச்சங்கம் பற்றிய ஆதாரங்கள் அனைத்தும் கி.மு.2387 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட கடற்கோளாறினால் அழிந்திருக்கும்.

**இடைச் சங்கம்**: கபாடபுரம்

கபாடபுரம் பற்றிய ஒரு சிறு குறிப்பு : கபாடபுரம் பாண்டிய மன்னர்களின் இரண்டாவது தலை நகரம் ஆகும். இந்த நகரமும் கடலுக்குள் மூழ்கிப் போன குமரி கண்டத்திலேதான் அமைந்து இருந்தது.

| | | |
|---|---|---|
| தொடக்கம் | : | கி.மு. 4600(நக்கீரனால் கணிக்கப் பெற்றது) |
| நடைபெற்ற காலம் | : | 3700 ஆண்டுகள |
| புலவர்களின் எண்ணிக்கை | : | 3700 |
| பின்பற்றப்பட்ட இலக்கண நூல்கள் | : | அகததியம், தொல்காப்பியம். |
| படைக்கப்பெற்ற நூல்கள் | : | தொல்காப்பியம்,புராணம் பூத புராணம் இசை நுணுக்கம்மலி,குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் |
| சங்கத்தைநடத்திய அரசர்கள் | : | 59 பேர் ; வெண்டேர்ச்செழியன் முதல் முடத் திருமாறன்வரை |
| புலவர்களாகசெயல்பட்ட அரசர்கள் | : | 5 பேர் |

இந்த சங்கம் இருந்தமைக்கு ஆதாரங்கள், வால்மீகி ராமாயணத்தின் கிஷ்கிந்தா காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அர்ததசாத்திரம் நூலில் கௌடில்ய மகரிஷியும் இதைப பற்றி எழுதி உள்ளார். இச் சங்கம் மூன்றாம் கடற்கோளால் அழிந்தது. தொல்காப்பியத்தைத் தவிர ஏனைய நூல்கள் அனைத்தும் அழிந்தன.

**3.கடைச்சங்கம்**

| | | |
|---|---|---|
| சங்கத்தின் பெயர் | : | கடைச்சங்கம் |
| அமைவிடம் | : | மதுரை(வைகைஆற்றங்கரையில்அமைந்துள்ள தற்போதைய மதுரைமாநகர் |
| தொடக்கம் | : | கிமு.900 (நக்கீரனாரால் கணிக்கப் பெற்றது ) |
| நடைபெற்ற காலம் | : | 1850 ஆண்டுகள் |
| புலவர்களின் எண்ணிக்கை | : | 449 |
| பின்பற்றப்பட்டஇலக்கணநூல்கள் | : | அகத்தியம்,தொல்காப்பியம் |

**படைக்கப்பெற்ற நூல்கள் :** குறுந்தொகை, நெடுந்தொகை, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பற்று, கலித்தொகை, எழுபதுபரிபாடல், கூத்து, வரி, சிற்றசை, பேரிசை

**சங்கத்தை நடத்திய அரசர்கள் :** 49 பேர் முடத் திருமாறன் முதல் உக்கிர பெருவழுதிவரை. முடத் திருமாறன், கபாடபுரம் விட்டு வெளியேறி மதுரையில் ஆட்சி அமைத்தான்.

**மன்னர்களுள் புலவர்களாக இருந்தவர்கள்:** 3 பேர்

# சங்ககால ஆட்சிமுறை

## சங்ககால ஆட்சி முறை:

தமிழகத்தின் தொடக்கக் கால அரசாட்சி முறை, உலகின் பிற பகுதிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக அமைந்தது. சங்க இலக்கியத்தில் ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட மன்னர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு எனத் தமிழகம் மூன்று பிரிவுகளாக இருந்துள்ளது. மேற்குக் கடற்கரையோரப் பகுதி சேர நாடு. கிழக்குக் கடற்கரையின் வடபகுதி சோழ நாடு, தென் பகுதி பாண்டிய நாடு என்ற எல்லைகளைக் கொண்டு முற்காலத் தமிழகம் அமைந்தது. அசோகரின் கல்வெட்டுகளில் சேர சோழ பாண்டியர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

“வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு”(செய்யுளியல்-75)

என்று மூவேந்தர் பற்றித் தொல்காப்பியர் விவரிக்கிறார்.

## ஆட்சியமைப்பும் சூழலும்

சங்ககாலத்தில் ஊராட்சி, நகராட்சி என்று அமைப்புகள் இருந்தன. ஊரின் நடுவில் மக்கள் கூடிப்பேசும் மன்றங்கள் இருந்துள்ளன. பெரிய மரத்தடியில் மன்றம் கூடியது. குறிப்பாக வேப்ப மரத்தின் அடியில் மக்கள் கூடிய செய்தியை,

“மன்ற வேம்பின் ஒண்பூ உறைப்ப” (371)

எனப் புறநானூறு கூறுகிறது. மன்றத்தில் முதியோர் கூடினர். மக்களின் வழக்குகளைத் தீர்க்கும் பணி சிறப்பாக நடைபெற்றது. ஊர்ப் பொதுக் காரியங்கள், சமூக நலத்திட்டங்கள் இங்கு வைத்துப் பேசப்பட்டன. சிற்றூர், பேரூர், மூதூர் எனப் பல பெயர்களோடு ஊர்கள் அமைந்திந்திருந்தன. நாட்டின் பிரிவுகள் கூற்றம், கோட்டம், நாடு என்றும் அழைக்கப்பட்டன.

சங்க காலத் தமிழகத்தில் சில நகரங்கள் இருந்தன. உலகெங்கிலும் நகர அரசமைப்பு இருந்தாலும் தமிழகத்தில் மிகப் பழங்காலத்திலேயே திட்டமிடப்பட்ட நகராட்சி இருந்தது. அதற்குக் காரணம் நமது அரசபரம்பரைகளிடம் இருந்த சிறந்த ஆட்சி அமைப்பு எனலாம்.

## நிர்வாக அமைப்பு

ஐம்பெருங்குழு -- அமைச்சர், புரோகிதர், தானைத் தலைவர், தூதுவர், சாரணர்.

என்பேராயம் -- கரணத்தியலவர், காவிதியர், கனகசுற்றம், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர்.

மன்னனுக்கு அரசவை இருந்தது. அதன் கீழ் அரசுப் பணிகள் செய்யப்பட்டன. மன்னனே அவைக்குத் தலைவன் அரசவையில் அரசனோடு அரசியும் சேர்ந்திருக்க அனுமதி இருந்தது. அமைச்சர், அரசு அலுவலர்கள், புலவர், மன்னனின் நண்பர்கள் ஆகியோருக்கு அவையில் முக்கியத்துவம் இருந்தது. குறுநில மன்னர்களுக்கும் அவை(சபை) இருந்தது. பாரியின் அவையில் கபிலரும் அதியமான் அவையில்

அவ்வையாரும் செங்குட்டுவன் அவையில் பரணரும் அமர்ந்திருந்ததாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அரசனுக்கு ஆலோசனை வழங்கி சரியான முறையில் நெறிப்படுத்துவதே அவை உறுப்பினர்களுடைய நோக்கமாக இருந்தது. அரசவையில் பிறப்பிக்கப்பட்ட மன்னனுடைய ஆணைகளை முரசு கொட்டி மக்களுக்கு அறிவித்தனர். மக்களின் மனுக்களைப் பெற்று அவர்களுக்குச் சரியான முறையில் நீதி வழங்குவதே அரசின் முக்கியக் கடமையாக இருந்தது.

**சங்ககால ஆட்சிமுறையின் தன்மையின் ஆராய்வுகள்**

சங்ககாலத்தில் தமிழகம் முடியுடை மூவேந்தர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. அவர்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களாவர். இவர்களைத் தவிர குன்றுப் பகுதிகளில் குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந்த வந்தனர். சங்ககால ஆட்சி முடியாட்சி முறையாகும். அது மரபு வழி முடியாட்சி முறையாக இருந்தது. அதாவது மன்னா் இறந்ததும் அவரது மூத்த மகன் மன்னனாக முடிசூட்டிக் கொள்வதுதான் மரபு. இந்த மரபு பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டாலும் சில சமயங்களில் அரசுரிமை குறித்து மன்னனின் புதல்வரிகளிடையே சச்சரவு மூண்டுள்ளது. சங்ககால மன்னரின் பொதுவாக வல்லாட்சியாளாகளாக இருந்தாலும் அவர்களது ஆட்சி நல்லாட்சியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

அரசனைக் கோ, மன்னன், வேந்தன், கொற்றன், இறைவன் என்று பல பெயர்களில் அழைத்தனர். அரசனாக அரியனை ஏற வயது வரம்பில்லை. மக்களைக் காத்து முறையாக நீதி வழங்குதல் அரசனின் கடமை, அரச தருமத்தைக் காப்பதோடு பொருளுதவி வேண்டுவோருக்குப் பொருளுதவி அளித்தல், தன் பாதுகாப்பின் கீழ் உள்ளோரை அன்புடன் அரவணைப்பதும் அரசனின் கடமைகளாகும்.

சட்டங்களைப் பாதுகாத்துப் பயன்பெறச்செய்ய வேண்டும். தேவை ஏற்பட்டால் முரசறிவித்துச் சட்டத்தின் திருத்தத்தைத் தெரிவித்தார். இவ்வாறு வெளியிடும் ஆணைகளை எதிர்க்கவோ, எதிராணைகளை வெளியிடுவதோ ஒருவராலும் இயலாது. அரசனுக்கு எல்லா அதிகாரங்களுமிருந்தன. நாட்டின் நடைபெறும் நன்மை தீமைகள் அரசனின் பண்னைப் பொறுத்தே ஏற்பட்டன.

**அரசன் அரியணை ஏறுதல்**

அரசனின் மரபிற்கேற்றவாறு முடிசூட்டும் விழாக்களில் பயன்படுத்தப்படும் அரசுரிமைச் சின்னங்களுடன் அரச குடும்பத்தின் மூத்தோர், முதியோர், பரம்பரை ஆலோசகர்கள் ஆகியோரால் முடிசூட்டி விழா நடைபெற்றது. மன்னரின் பிறந்தநாள் விழா போவே முடிசூட்டி விழாவும் கொண்டாடப்பட்டது. முடிசூட்டி விழாவில் நார் முடியையும், கருப்பு மணிகளால் ஆன ஆக ஆரத்தையும் அணிந்தபின் முறையான முடியையும், ஆரத்தையும் அணிவார்கள். மன்னன் போர்க்களத்தில் உயிர்நீத்தால் அங்கேயே இளவரசனுக்கு முடிசூட்டப்படும்.

**அரசவை**

அரசனின் அவை, மன்றம், ஓலக்கம், இருக்கை, வேட்டவை எனப்பல பெயர்களால் அழைக்கப்பட்டது. அரசவையின் அரசனின் இல்லத்தவர்களும், அரசு அலுவலர்களும் பொதுமக்களும் கூடினர்.

சங்ககால மன்னர்கள் அரசவையில் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பெற்றுச் சிறப்பை அடைந்தவர்கள். புலவர்கள் இலக்கியம் பற்றி விவாதித்ததோடு அரசனிடம் குறை கண்டால் அவரைத் திருத்தவும் செய்தனர்.அரசவையின் தலையாய பணி அரசனுக்கு அறிவுரை கூறிச் சிறந்த முறையில் ஆட்சி அமைக்க உதவுவதாகும்.

### கொடைத்திறன்

அரசர்கள் புலவர்களுக்கும், கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தனர். ஒரு சிலர் ஈயாமனங்கொண்டு விளங்கினர். புலவரகள் தம் சிறப்பிற்கு இழிவைத் தருகின்ற பரிசுகளை ஏற்க மறுக்கத்தோடு, அரசனின் கையால் பரிசில்களை வாங்கினரேயன்றி, அரசன் வழங்காது மற்றவர் மூலமாக வழங்கினால் மறுத்துவிடுவர்.

### வேள்விகள்

தமிழக மன்னர்கள் முதலில் வேள்விகள் நடத்தியதாகத் தெரியவில்லை. ஆரியர்களின் பண்பாடு தமிழர்களின் பண்பாட்டில் கலந்த பின்னரே வேள்வி நடைபெற்றதாகத் தெருகிறது. இராசசூயம் முதலான பல வேள்விகள் நிகழ்ததாகச் சங்ககால நூல் நமக்கு அறிவிக்கின்றன.

### அரசுரிமைச் சின்னங்கள்

படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், மாலை, முடி ஆகியன அரசுரிமைச் சின்னங்களாகும். படை என்பது வாளைக் குறிக்கும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அம்பையும் குறிக்கும் என்று நச்சினார்க்கினியர் வாதிடுகிறார்.

### கோட்டை

கோட்டைச் சுவர்கள் மிகவும் உயரமாகவும்,அதைச் சுற்றி அகழிகள் ஆழமாகவும் இருந்தன. கோட்டைச் சுவர்கள் சுட்ட செங்கற்களைக் கொண்டும், செம்மண் சாந்து பூசியும் அமைத்திருந்தனர். சூரிய ஒளிகள் அதன்மீது பட்டவுடன் செப்புத்தகடுகள் போல் மின்னின. கோட்டைக்கு இரு மதில்கள் உள்ளன. கோட்டைக் கதவுகள் எதிர்த் திசையிலிருந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டன. கோட்டைக் கதவுகளை யானைப் படையினைக் கொண்டு திறக்கச் செய்தனர். நிறையப் படைக் கருவிகளுமிருந்தன.

### செங்கோல்

செங்கோல், அரியணை, முடி வெண்கொற்றக்குடை ஆகியவை அரசனின் வெளிப்படைச் சின்னங்கள் வெண்கொற்றக் முடை மக்கள் அரசனிடத்துப் பெற்ற பாதுகாப்பினை எடுத்துக் காட்டுவது போலச் செங்கோல் நீதியை எடுத்துக்காட்டியது.

### அரியனை

அரசுரிமைச் சின்னங்களில் ஒன்றான அரியனை அரசர்களின் இருக்கையினைக் குறிக்கும் சொல். சிங்க உருவங்கள் அரசர்களின் அரியணையைத் தாங்கி நிற்கும்

**முரசு வகைகள்**

போரின்போதும் அமைதிக் காலத்திலும் முரசினைப் பயன்படுத்தினர். முரசுக்கட்டில் எனப்பட்ட முரசின் இருக்கை அரண்மனையில் இருந்தது. தெய்வீக இயல்புகள இருப்பதாகக் கருதி புனித நீராட்டி, மாலையிட்டு வழிபட்டனர். முரசு கரிய மரத்தால் செய்யப்பட்டு மேல் தோல் வாரால் இலுத்துக் கட்டப்பட்டிருக்கும்.

வீரமுரசு, தியாக முரசு, நியாய முரசு என முரசு மூன்று வகைப்படும். அவை முறையே வெற்றிமுரசு, கொடைமுரசு, நிதிமுரசு எனப்படும்.

**வாள்**

சங்க காலத்தமிழ் மன்னர்கள் வாள்வீழ்ச்சியிலும், சிறந்து விளங்கினர். உறையுடன் கூடிய வாளை உடையோடு இணைத்துக் கட்டியிருந்தனர்.முரசு, மலர் சூட்டி வணங்கப்பட்டது போல வாளையும் வணங்கினர்

**கொடியும் சின்னமும்**

சங்ககால மன்னர்கள் தங்களுக்கென தனிக்கொடிகளைக் கொண்டிருந்தனர். அக்கொடிகளில் தங்கள் அரசு மரபுச் சின்னங்களைப் பதித்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| பாண்டியா | - | மீன் கொடி |
| சேரா | - | வில் கொடி |
| சோழா | - | புலிக் கொடி |

அதே போல தங்கள் மரபிற்குரிய மாலைகளையும் அணிந்திருந்தனர். அவை

| | | |
|---|---|---|
| பாண்டியா | - | வேப்பம்பூ மாலை |
| சேரர் | - | பனம்பூ மாலை |
| சோழா | - | அத்திமாலை |

இவை தவிர ஒவ்வொரு மன்னரும் தங்களுக்கென தனி யானை, முதிரை, தேர் ஆகியவைகளையும் கொண்டிருந்தனர்.

**சிறப்புப் பட்டங்கள்**

தன் கடமையைச் சிறப்புடன் செய்து முடித்ததைப் பாராட்டும் வகையிலும். ஊக்குவிக்கும் வகையிலும் பல பட்டங்களை மண்ணர் அளித்து சிறப்பித்தார். எட்டி,காவிதி ஆகிய விருதுகள் சாதாரண விருதுகள் ஆகும். மாராயம் சிறப்பு மிக்க மனிதர்களுக்கு அளிக்கப்பட்டது. ஏனாதி விருது உள்ளாட்சித் துறை,படைத்துறை உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பெற்றது.

**முத்திரைகள்**

கொடிகளில் காணப்பட்ட சின்னங்களே முத்திரைகளில் காணப்பட்டன. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களின் பைகளில். ஈரக்களிமண்ணால்.செய்யப்பட்ட முத்திரையைப் பயன்படுத்தினார்.

**அரசு சக்கரம்**

திருமாலின் கையில் உள்ள சக்கரமானது அடியார்களைக் காப்பது போல அரசனும் தன்பால் பற்றுக் கொண்டோரைக் காப்பது கடமையாகும்.

**பட்டத்து யானை**

பட்டத்து யானையின் இருபக்கமும் கட்டப்பட்டுள்ள மணி அசைந்து மன்னனின் வருகையை அறிவித்தது. மன்னன் யானையிலிருந்து இறங்கியவுடன் மணிகூர் அகற்றப்படும். மாவுத்தர்கள். முள் வேலியைக் கொண்டு மதங்கொண்ட யானைகளை அடக்கினர்.

**குதிரை**

யானைக்கு அடுத்தகடியாகக் குதிரைகள் அரசர்களால் பயன்படுத்தப்பட்டன. அரசன் சவாரி செய்யும் குதிரைக்கு நெய் கலந்த உணவு அளிக்கப்பட்டது. குதிரையின் தோற்றம் எடுப்பாகத் தோன்ற பிடரிமயிர் அழகாகக் கத்தரித்து விடப்பட்டது. அரசர்களால் பயன்படுத்தப்பட்ட குதிரைகளுக்கு அரசின் பெயர்களே சூட்டப்பட்டன.

**தேர்**

குதிரை பூட்டப்பெற்று, இரண்டு சக்கரங்கள் கொண்ட தேர் பயன்பட்டது. நேரில் புறங்களில் மணிகளைக் கட்டி அரசர்களின் வருகையை உணர்த்தினர்.

**கிராமங்கள்**

கிராம நிருவாகத்தைப் பொறுத்தமட்டில் மன்றம், பொதியில், அம்பலம் ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. “சேரி” என்றால் தாழ்ந்தவர்கள் வாழும் பகுதி என்றெண்ணுவது தவறாகும். சேர்ந்து வாழுமிடமே சேரியாகும்.

மன்றம், பொதியில், அம்பலம் எல்லாம் கிராம அவையைக் குறிப்பதேயாகும். இவை சிறு, சிறு வழக்குகளைத் தீர்த்தன. மன்றம், பொதியியல் ஆகியவற்றில் வயதில் பெரியோர் அதிகாரம் செலுத்தினர்.

**நகரங்கள்**

குறுவழிபாதைகளோ, நெடுவழிப்பாதைகளோ நாட்டில் இல்லை ஆனால் நகரங்களில் பெரிய சாலைகள் முக்கிய சாலைகளை இணைத்தன.போரிலிருந்து திரும்பிவரும் அரசன் வயல் வழிக்கடந்து வந்தான் என்ற செய்திகளிலிருந்து சாலைகள் பெருமளவில் இல்லையென்பது உறுதிப்படத்தப்படுகிறது ஆனால் நகரங்களைக் காவல் காக்க ‘ஊர்க்காவலர்களும்’ தூய்மைப்படுத்த, ‘துப்புறவுப் பணியாளர்களும்’ இருந்தனர்.

பொதுவான மாளிகை ஒன்றும் இருந்ததாகத் தெரிகிறது. புகார், கொற்கை, மதுரை, முசிறி, வஞ்சி, காஞ்சி முதலியன குறிப்பிடத்தக்க நகரங்களாகும்.

**படை நிர்வாகம்**

ஆற்றல் மிக்கோரையும் விரைந்து செயல்படுவோரையும் போரில் விருப்பமுடையோரையும் கொண்டு விளங்கியது படை அரசரே படைக்குத ரதேவையான படைக்கலங்களை நிருவகித்தார். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, என்று வரிசை முறைக் காணப்பட்டது. தானைத் தலைவன் அரசருக்கு அடுத்தபடியாக கருதப்பட்டான்.

**குற்றங்களும் அதற்குரிய தண்டனைகளும்**

1. பிறன்மனை நயத்தல் கடுங்குற்றமாகக் கருதப்பட்டு விரும்பியவனது கால் துண்டிக்கப்பட்டது.
2. பொய் கூறுதல், பொய் சாட்சியளித்தல் பாவம் என்று கருதப்பட்டு பொய்ச்சாட்சி சொன்னவரின் நாக்கு துண்டிக்கப்பட்டது.
3. தன்னை விரும்பியவன் திருமணத்திற்கு முன் உறவாடி பின் மறுத்தால் அப்பெண் அவையில் முறையிட்டால் குற்றவாளியை மூன்று கவர் முட்கள் உடைய கிளையில் கட்டிச் சாம்பலைத் தலையில் கொட்டினர்.
4. நிலவரி செலுத்தவில்லையெனில் தண்டனை வழங்கப்பட்டது
5. அரச துரோகத்திற்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது

**காவல் மரம்**

சங்ககால அரசர்கள் தம் அரசிற்கும், மரபிற்கும் உரியதாகக் கொண்டு இருந்த புனிதமான மரம் ஒன்றினைக் காவல் மரம் என அழைத்தனர். தெய்வீகத் தன்மை இருப்பதாக் கருதப்பட்ட இம்மரம் வெட்டப்பட்டால் நகரம் அழிந்துவிடும் என எண்ணினர். அரசன் தன் யனையினை எதிரியின் காவல் மரத்தில் கட்டிவிட்டால் அதை இழிவான செயலாகக் கருதினர்.

**ஐம்பெருங்குழு,எண்பேராயம்**

இவை அரசனுக்கு ஆலோசனை வழங்கவும், உதவி புரியவும் ஏற்படுத்தப்பட்டன. ஐம்பெருங்குழுவில் மக்கள் பிரதிநிதிகள், ஆசான், நிமித்தீகர், மருத்துவர், அமைச்சர்கள் ஆகியோர் இருந்தனர்.

எண்பேராயத்தில் கரணத்தியலவர், கருமக்காரர், கனச்சுற்றம், கடைக்காப்பாளன், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளிமறவர் ஆகியோர் இருந்தனர்.இவர்கள் தவிர புரோகிதர், நாழிகைக் கணக்கர் ஆகியவர்களும் அரசருக்கு உதவினர்.

**அமைச்சர்கள்**

அரசர்களுக்கு அலோசனை கூற அமைச்சர்கள் இருந்தனர். கடியலூர் உருத்திரங்கண்ணனார் அவர்களைச் "சுற்றம்" என்று கூறுகின்றார். அவர்கள் கருசியும், காலமும், செய்கையும், செய்யும் வினையும் வாய்ப்ப வாய்ந்தவர்களாயிருந்தனர்.

குடிகளைக் காத்தல், நீதி நூல்களைக் கற்றுத் தீவினைகளை அகற்றுதல், முயற்சி செய்தலின் கண் அசைவின்மை ஆகிய குணச்சிறப்புகள் உடையவனே அமைச்சனாவான்.

பகைவர்க்குத் துணையாக இருந்தவர்களைப் பிரிக்க வேண்டி இருந்தால் பிரித்தலும் அவர்களைத் தம்பால் இனிய சொற்களால் பேணிக் கொள்வதும் பிரிந்தாரை மீண்டும் சேர்த்துக் கொள்வதும் அமைச்சரின் பணியாகும். அரசரிடம் தீய செயல்புலப்பட்டால் அதனைத் திருத்துவதும் அமைச்சரின் பொறுப்காகும்.

**தூதர்கள்**

ஓர் அரசனின் பிரதிநிதியாக மற்றவர்கள் அவையில் செயல்பட்டவர்களே தூதர் ஆவர். துதர்கள் நடுநிலையாளர்கள். கடமையுணர்ந்து, பொருத்தமான காலத்தையறிந்து எதிரிகளை உணர்ந்து செய்திகளை உரைப்பவர்களே தூதர்களில் முதன்மையானவர் என்பது வள்ளுவரின் வாக்கு. இருவகைப்பட்ட தூதர்களில் முதல் வகைப்பட்டவர்கள் அரசனின் அமைச்சர் தகுதி பெற்றிருந்தனர். தம் நாட்டு நலன்களைப் பிறநாட்டு அமைச்சரவையில் பேணிப் பாதுகாப்பது அவர்கள் கடமை.

இரண்டாவது வகையினர் ஒரு குறிப்பிட்ட பணிக்கெனச் சிறப்பாக அனுப்பப்படுவார்கள். இந்நிலையில் புலவர்களும் பங்கு கொண்டுள்ளனர்.

**ஒற்றர்கள்**

பழங்கால மன்னர்களால் ஏராளமான உளவாளிகள் நியமிக்கப்பட்டிருந் அமைதிக்காலததிலும், போர்க்காலத்திலும் லேவு பார்க்கப்பட்டது. சங்கேதக் குறிப்புக்களைக் கொண்ட மாறுப்பட்ட ஒலிகள் மூலம் தம் செய்தியினைத் தெரிவிப்பார். துஞ்சாது இரகசியச் செய்தியறிந்து திறமையுடன் சந்தேகத்திற்கிடமின்றி கூறும் துணிச்சலும் ஒற்றர்களுக்குத் தேவையான இயல்புகள்.

**நீதி**

அரசர்கள் நீதி வழங்கிடத் தகுதியுள்ளவர்களின் துணையோடுசெயல்பட்டனர். நகரங்களிலும், கிரமங்களிலும், நீதிமன்றங்களிலும் காணப்பட்டன. நகரங்களில் அரசன் நீதி வழங்கினார். கிரமங்களில் அரசனின் பிரதிநிதிகள் நீதி வழங்கினர்.

அரசனின் முற்றமே நீதிமன்றமாகச் செயல்பட்டது. வெளிப்படையாக விசாரணை நடைபெற்றது. கருக்கலைப்பு, பசுவின் மடியறுத்தல், பார்ப்பனர் கொலை ஆகியவைகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. இன்றைய நாள் போல அந்நாளில் சட்டம் என்பதில்லை. செய்த குற்றங்களுக்கேற்ப தண்டணை அளிக்கப்பட்டது.

**அரசரின் வருவாய்**

சங்ககால அரசர்கள் பல்வேறு விதமான வரிகளை வசூலித்தனர். நேர்மையான வழிமுறைகளில் வரி வசூலித்தலைப் புலவர்கள் வற்புறுத்தினார்கள். நில உற்பத்தியில் 1.∴6 பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. நிலவரியே பொதுமான வருவாயாகும்.

**நச்சினார்க்கினியர் கூறும் வருவாயின் வேறு வழிகள்**

1. திருடர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட உரிமையாளர் யார் என்று கண்டுபிடிக்க முடியாத திருட்டுப் பொருட்கள்.

2. சுங்கம்

3. 1.∴6 பங்கு நிலவருவாய்

4. பார்ப்பனர்களுக்கு இறையிலி நிலங்கள் வழங்கியபோது பெற்றுக் கொண்ட பெயரளவுத் தொகை.

5. போரின் விளைவால் எதிரியின் நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளல்

6. வாணிபத்தின் மூலம் திரட்டப்பட்டவை.

7. சட்டத்தை மீறுவோரிடம் வசூலிக்கும் அபராதத் தொகை

8. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள் மீதான வரிகள்.

சங்ககால ஆட்சிமுறை பின்னர் வந்த அரச மரபினருக்கு வழிகாட்டத்தக்கதாய் விளங்கியது. சங்ககாலத்திலேயே ஊராட்சிமுறை சீராக நடைபெற்றது. அத்தகைய ஊராட்சி முறையே பாண்டியர், சோழர் காலத்தும் தொடர்ந்து. ஆட்சித் துறையில் ஒளிபொருந்திய காலம் என்று இக்காலத்தைக் கூறலாம்.

## 11.அயல்நாட்டுத் தொடர்புகள்

**அறிமுகம்**

‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்கிறது மூதுரை. தாலமி, பிளைனி, பெர்புளூஸ் என்ற பல அறிஞர்களும் தமது நூலில் பதிவிட்டுள்ளனர். சங்க இலக்கியங்களும் கடல் துறைமுகங்கள், வணிகங்கள், ஏற்றுமதி இறக்குமதி செய்த பொருள்கள், யவனர் பற்றிய குறிப்புகளை பல இடங்களில் பதிவு செய்துள்ளன. மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது பொருள் என முற்காலத் தமிழர்கள் எண்ணினர். அயல்நாடுகளுடன் மேற்கொண்டிருந்த வணிகத் தொடர்பானது தமிழரின் நாகரீகம், பண்பாடு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. அயல்நாட்டுத் தொடர்பினால் தமிழர்களின் தனித்திறன் உலகெங்கும் பரவியது.

தமிழர்கள் அயல்நாட்டுடன் கொண்டிருந்த தொடர்பினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. மேலை நாடுகளுடன் கொண்ட தொடர்பு.

2. கீழை நாடுகளுடன் கொண்ட தொடர்பு.

தமிழ்நாட்டின் மேற்கில் அமைந்துள்ள நாடுகள் மேலை நாடுகள் எனப்படும். கிழக்கில் அமைந்துள்ள நாடுகள் கீழை நாடுகள் எனப்படும்.

**மேலை நாடுகள்**:- கிரேக்கம், ரோம், எகிப்து, பாபிலோனியர்,

அரேபியா, சுமேரியா.

**கீழை நாடுகள்** :- சீனம், மலேசியா, சாவகம், வடபோர்னியா.

தமிழ்நாட்டுப் பண்டங்களுக்கு மேலை நாடுகளில் நல்ல மதிப்பு இருந்தது. எனவே, தமிழர்கள் ஏலம், இஞ்சி, மிளகு போன்ற பொருட்களை அதிகமாக ஏற்றுமதி செய்தனர். 3000 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்ரேல் நாட்டின் மன்னர் சாலமனுக்கு மூன்று ஆண்டுக்கு ஒரு முறை சேரநாட்டு துறை முகத்திலிருந்து அகில் யானை தந்தம் போன்ற பொருட்கள் கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டன.

**சங்ககாலத் தமிழரின் அயல்நாட்டு வாணிபத் தொடர்புகள்**

**முன்னுரை**

சங்ககாலப் பொருளதார வாழ்க்கையில் ஒருபுறம் செல்வச் செழிப்புமிக்க செல்வர் வாழ்வதையும், மறுபுறம் மிகவும் மோசமான வறுமை நிலை நிலவுவதையும் காண்கிறோம். அடுப்பில் பூனை தூங்க,அண்ணையின் மார்பில் பால் அருந்தச் சென்ற குழந்தை பாலின்றி தவிக்க வேளைக்கீரையை அவித்து உண்ண வேறு எவரும் பார்த்திடக் கூடாதே என்று கதவைத் தாழிடும் நிலையை ஒருபுறம் காணகிறோம்.

சங்ககாலப் பொருளாதாரம் வேளாண்மைப் பொருளதாரமே ஆகும். தொழில்கள் நகர்ப்புறம் சார்ந்தனவாகவே அமைந்தன. அயல்நாட்டு வாணிபத்திற்குத் துணைசெய்யும் பொருட்டே கடலில் கலம் செலுத்துதல் முதலான தொழில்கள் நடைபெற்றன. வேளாண்மை, மீன்பிடித்தல், வேட்டையாடுதல் முதன்மைத் தொழில்களாகும். நெசவுத் தொழில், கட்டிடத் தொழில், கருவிகள் செய்தல் இரண்டாம் நிலையின.

சங்ககாலப் பொருளதார வாழ்விற்கு உறுதுணையாக விளங்கிய வாணிபம் குறித்து முதலில் காண்போம். பின்னர் வேளாண்மை, தொழில்கள் குறித்துக் காண்போம். ஒரு நாட்டின் தொழில்களிலே உழவும் வணிகமுமே தலைசிறந்தன.

**சங்க கால வாணிபம்**

மதுரைக் காஞ்சியில்,

"வியன்மேவன் விழுச்செல்வத்து
இருவகையானிசை சான்ற
சிறுகுடிப் பெருந் தொழுவர்
குடி கெழீஇய நானிலவரோடு"

என வரும் அடிகளுக்கு உரைகூறிய நச்சினார்க்கினியர் "உலகத்துத் தொழில்கள் மேலோகச் செல்லும் உழவு, வாணிகம் என்கின்ற இரண்டு கூற்றாலே அகிலம் பொருந்து தலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்தினநாளடு நலத்து

வாழ்வாருடனே”எனக்கூறுவதிலிருந்து தமிழ்நாட்டில் வாணிகமும், உழவும் பெற்றிருந்த செல்வாக்கு விளங்கும்.

**வணிகர் - புலவர்**

சங்ககாலத்தில் வணிகர்களும் புலவர்களாய் விளங்கினர். கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். அறுவை வணிகன் இளவேட்டனார். மதுரைப் பண்ட வணிகன் இளநத்தனார், உறையூர் இளம்பொன் வாணிகன், சாத்தங்கொற்றனார் முதலானோர் பெயர்களே அவர்கள் மேற்கொண்ட வாணிபங் குறித்துக் கூறும்.

**வாணிபப் பிரிவு**

சங்க கால வாணிபத்தினை உள்நாட்டு வாணிகம், வெளி நாட்டு வாணிகம் என இருவகையாகப் பகுக்கலாம். உள்நாட்டு வாணிபத்திற்குப் பண்டமாற்று முறையும், வெளிநாட்டு வாணிபத்திற்குப் பொன்னையும் பயன்படுத்தினர் என்று கருத இடமுள்ளது. நெல்லுக்கு விலையாக நெய்தல் நிலத்து உப்பு பண்டமாற்றாகப் பயன்பட்டது. தானியங்களைக் கடனாகப் பெற்று அந்த தானியத்தைத் திருப்பி அளிக்கும் முறைக்குக் குறிஎதிர்ப்பு என்னும் பெயர் இருந்தது.

காரவேலனின் ஹதிகும்பாப் பட்டயம், அமராவதிதூபி, அனுராதபுரம் கல்வெட்டு ஆகியவை வாயிலாகக் கலிங்கம், இலங்கை, ஆந்திரம் ஆகியவற்றுடன் மேற்கொண்ட வாணிபம் குறித்து அறிகிறோம். கிழக்கிந்தியத் தீவுகள் சாவகம், சாவக நாடு என அறியப்பட்டன.

உரோமாபுரிக்கும் இந்திய நாடுகளுக்கும் நெருங்கிய வாணிபத் தொடர்பு இருந்தது. பெண்கள் அழகு செய்வதற்கான வாசனைப் பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ததனால் உரோம நாட்டின் செல்வம் வீணாகச் செலவானதைத் தசிந்தசு(Tacitus) என்னும் மேனாட்டாசிரியர் குறிக்கின்றார். உரோமரின் பொன் இவ்வகையில் வீணாக்கப்படுவதைப் பற்றிப் பிளினியும் கூறுகின்றார். சோப்பு என்பவர் தமிழ்நாட்டு வியாபாரிகள் மிளகு வாணிபத்தால் ஈட்டும் பெருஞ்செல்வம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

தாலமி ‘கேரோ பொத்துரர்’(Kero bothurar)க்குரியதலைநகரான கரூராவைக(Karura) குறிக்கின்றார். இது சேரநாட்டுத் தலைநகரான கருவூரையே குறிப்பிடுகிறது எனக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். காவிரிப்பூம்பட்டினத்தைத் தாலமி ‘காபேரிசு’(Khaberisu) எனக் குறிப்பிட்டுள்ளார். இவர் குறிப்பிடும் காபேரிசு காவிரிப்பூம்பட்டினம் தான் என டாக்டர் பர்டினல் கூறுகின்றார். பெரிபுளுசில் ‘கொல்கி’(Colchi) என்று ஒரு நகரம் கூறப்படுகின்றது. இது சங்க நூல்களில் காணப்படும் கொற்கையே என சோப்புக் கூறுவார்.

மேலே நாட்டு நூலாசிரியர்கள் தரும செய்திகள் சங்க நூல்களும் காணப்படும் செய்திகளுடன் ஒத்திருக்கின்றன.

உரோமாபுரியோடு தமிழர் செய்த வாணிகத்திற்குக் கிடைத்துள்ள ரோமானியக் காசுகள் சான்று பகர்கின்றன. தமிழ்நாட்டில் விளைந்த பொன்னும், முத்தும், சங்கும், மிளகும் மெல்லிய ஆடையும் மேலை நாட்டவரைக் கவர்ந்தன. பொன் கொணர்ந்து

மிளகை வாங்கிச் சென்றனர் என்பதை அகநானூறு ‘பொன்னொடு வந்து கறியொடு பெயரும்’ என்று குறிப்பிடுகிறது.

கடலால் வந்த நிமிர்ந்த செலவினையுடைய குதிரைகளும் மிளகுப்பொதிகளும் வேறு பல அரிய பொருடள்கள் பலவும் திரண்டு செல்வம் தலை தெரியாது அகன்றுள்ள இடங்களை உடைய தெருக்களைப் பற்றிப் பட்டினப்பாலை பாடுகின்றது. நாட்டுப் பொருள்களை விற்றுப் பொன்னுடன் திரும்பி வரும் பெரும் நாவாய்களைப் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

வெளிநாடுகளிலிருந்து கடலின் மேல் மரக்கலங்களில் வந்த பண்டங்கள் புகார்க் கரையில் இறக்குமதியாயின. உள்நாடுகளில் இருந்த வண்டிகளில் வந்த பண்டங்கள் கடலில் ஏற்றுமதியான. அளந்து அறிய முடியாத அவ்வளவு ஏராளமான பண்டங்கள் வெள்ளம் போலப் பெருகி வந்தன. இவ்வாறு பண்டங்கள் பெருகிப் பெருகிச் செல்லும் நிலை மழைக் காலத்தில் கடலிலிருந்து மேகம் முகந்த நீர் மலையில் ஏராளமாகப் பொழிதலையும், மலையில் பொழிந்த வெள்ளம் மீண்டும் கடலில் சென்று சேருதலையும் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. கடலில் வணிகம் செய்த தமிழ்மக்கள் கலம் செலுத்துமிடத்தில், வணிகக் காற்றின் வரவும் காலமும் அறிந்து அதனைச் செல்லும் ஆற்றல் பெற்றிருந்தனர். வெண்ணிக்குயத்தியார் கரிகால் வளவனை.

“நனியிரு முந்நீர நாவாயோட்டி

வளி தொழிலாண்ட வரவோன் மருக”

எனப் பாடினார். வணிகக் காற்றினை வளி என்றழைத்தனர்.

மேலை நாடுகளிலிருந்து வந்த வணிகர் யவனர் எனப்பட்டனர். இச்சொல் ஐஔனிஸ் என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து திரிந்து வநதது. தமிழ்ப் பாடல்கள் உரோமானியர், கிரேக்கர் உள்ளிட்ட அனைவரையும் யவனர் என்றே கூறும். முல்லைப் பாட்டு ஆசிரியர் யவனரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பட்டினப்பாலை வேறு வேறு மொழி பேசும் பல்வேறு நாட்டவர் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்ததாகக் கூறுகிறது.

ஏற்றுமதிப் பண்டங்கள், இறக்குமதிப் பண்டங்கள் பண்டக சாலையில் சேர்த்து வைப்பர். அங்கு மன்னனது முத்திரைகளை மூடைகளுக்கு இடுவர். பண்டகசாலையில் இம்மூடைப்போர்கள் வானளாவிய மலைகளைப் போல் விளங்கின. இவற்றின் மீது நாய்கள், ஆட்டுக்கிடாய்கள் ஏறி மான்கள்போல் துள்ளி விளையாடும்.

நாட்டின் கரையோரங்களில் செல்லுவதற்குரிய சிறுசிறு ஓடங்களையும், பிறநாட்டு வணிகத்திற்குத் துணைபுரியும் பெரிய நாவாய்களையும் தமிழர் வைத்திருந்தனர். உள்நாட்டு ஓடம் ‘ப.ஃறி’எனப்பட்டது. பட்டினப்பாலை வல்வாய்ப்ப.ஃறி’ என்று கூறும். பெரியோராயினும் சிறியோராயினும் வருவோரை இரு கரையிலும் மாறிமாறிக் கொண்டு போய் விடும் நீர்த்துரையிடத்துள்ளவை ‘அம்பிகள்’ எனப்பட்டன.

பெருங்கடலில் ஓடும் கலம் நாவாய் எனப்படும். அசையாத கம்பத்தினை அசைக்கும் யானைகள் 6 பாலப் புகாரின் திரையை உடைய துறைகளில் நாவாய்கள் நிற்கும்.

அந்நாவாய்களின் பாய் மரத்தில் கொடிகள் பறக்கும். கொடிகள் அசையும். நாவாய்களைப் பற்றி மதுரைக்காஞ்சி கூறும். சிறந்த நாவாய்களிற் குதிரைகள் கொண்டு வரப்பட்டன.இத்தகைய பெரிய கப்பல்கள் வங்கம் எனவும் வழங்கின. 'முந்நீர் வழங்கு நாவாய்' 'திரை மூன்றுரைத் தூங்கு நாவாய்' 'நாவாய் சூழ்ந்த நளி நீர்ப்படப்பை' ஆடியற் பெருநாவாய் என்று புறம், பட்டினப்பாலை, பெரும்பாண், மதுரைக் காஞ்சி முதலியன கூறும்.

உலகு புடை பெயர்ந்தாலொத்த அச்சம் தோன்றும் வங்கம் புலால் வீசும் பெரிய கடலின் நீரை இடையிடையே பிளந்து செல்லும். சிறிய ஓடங்கள் பெருங்கப்பல்களைப் பற்றிய செய்திகள் கிரேக்க வரலாற்று நூலாசிரியர் தரும் செய்திகளோடு ஒத்துள்ளன. பெரிபுளுசு ஆசிரியர் குறிப்பிடும் மூன்று வகைக் கப்பல்கள் ப.்.றி, தோணி, அம்பி ஆகலாம். கப்பல்கள் கலம் என்று எட்டுத்தொகை நூல்களில் வழங்கப்பட்டன. கடற்கரைப் பட்டினங்களில் கலங்கரை விளக்கம் இருந்ததைப் பெரும்பாணாற்றுப் படை கூறுகிறது.

தமிழகத் துறைமுகங்களில் காவிரிப்பூம்பட்டினம், முசிரி, கொற்கை ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கன.

**காவிரிப்பூம்பட்டினம்**

காவிரியின் வடகரையில் அமைந்திருந்த சோழ நாட்டின் பெருந்துரைமுகம். புகார் எனவும் அழைக்கப் பெற்றது. இதனைத் தலைநகரமாகக் கரிகால் வளலன் மாற்றினான். காவிரியாறு அகலமும ஆழமும் கொண்டு விளங்கியது. பாரம் ஏற்றிய கப்பல்கள் பாய் சுருக்காது சென்று அதன் கரைகளில் வெளிநாட்டிலிருந்து வந்த பண்டங்களை இறக்கும்.

அத்துறைமுகத்தின் கரையில் உயர்ந்த மேடைகளும் பண்டகசாலைகளும் இருந்தன. அவ்விடத்தில் குவித்து வைக்கப்பட்ட பொருள்களுக்குச் சோழ அரசு முத்திரை இடப்பட்டது. இத்துறைமுகத்தில் வாழ்ந்த மேனாட்டவர் பற்றி பட்டினப்பாலை 'புலம்பெயர் மாக்கள் கலந்தினிதுரையும் முட்டாச்சிறப்பின் பட்டினம்' என்று கூறும். சுங்க வரி பெறப்பட்டது.

காவிரிப்பூம்பட்டினம் குறித்துச் சங்க காலத்திற்குப்பின் இலக்கியங்களில் குறிப்பு ஏதும் இல்லை என்பது குறிபபிடத்தக்கது.

கப்பல்களில் புரவிகள் வந்து இங்கு இறங்கின. மிளகு மூடைகள் வண்டிகளில் வந்தன. வடமலைப் பிறந்த மணியும், பொன்னும் குடமலைப் பிறந்த ஆரமும் அதிலும் தென்கடல் முத்தும், குணகடல் பிறந்த பவளமும், கங்கை, காவிரிப் பயன்களும், ஈழத்து உணவும், காடிகத்து ஆக்கமும் அருமை பெருமை சான்ற பொருட்கள் காவிரிப்பூம்பட்டினத்து மருகுகளில் மண்டியும் மயங்கியும் கிடக்கின்றன எனப் பட்டினப்பாலை கூறும்

வடமலைப் பொன் என்பது சோட்டநாகபுரியிலிருந்து கிடைத்த பொன்னாயிருக்கலாம் என்பர். புகார் நகரத்தினுள் பண்டமாற்று முறையில் தேனைக் கொடுத்து மீனைப் பெறுதல் கரும்பையும் சோற்றையும் கள்ளுக்காகவும் மான் இறைச்சிக்காகவும் கொடுத்தல் ஆகிய

பண்டமாற்று நடைபெற்றதைப் பொருநராற்றுப் படை கூறும், காவிரிப்பூம்பட்டினம் சிலப்பதிகாரக் காலத்திற்குப்பின் கடலால் சூழப்பட்டு மறைந்தது.

**முசிறி**

மேலைநாட்டு வணிகர் எளிதில் அடையுமிடமாக முசிறி விளங்கியது. இந்நாட்டிலிருந்துதான் மிளகு ஏற்றுமதியாயிற்று. இப்பகுதித் துறைமுகம் மேலை நாட்டவரால் முசிரிஸ் என வழங்கப்பட்டது. கொடுங்கல்லூருக்கு அருகில் முசிறி இருந்தது எனக் கலைக்களஞ்சியம் கூறும். நாவாய்கள் பல இத்துறைமுகத்தில் நெருங்கி நின்றன.

புறநானுற்றிலிருந்து மீன்களைக் கொடுத்துப் பெற்ற நெற்குவியில், வீடும் உயர்ந்த தோணியும் பிரித்தறிய முடியாதவாறு காண்பவரை மயங்கச் செய்யும் மனையிடத்தே குவிக்கப் பெற்ற மிளகு மூடைகளும், மரங்க்கலங்கள் கொண்டு வந்த பொன்னாலாகிய பொருள்களும் மலைநாட்டுப் பொருள்களும், கடல் பொருள்களும் இத்துறைமுகத்தில் நெருங்கிக் கிடந்தன என அறிகிறோம்.

யவனர் மரக்கலங்கள் பொன்னொடு வந்து மிளகுடன் திரும்பிச் செல்வதை அகநானூறு(149)

"யவனர் தந்த விளை மாணன் கலம்

பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

என்று குறிப்பிடுகிறது. பெரிபுனுசு ஆசிரியர் கூறும் செய்திகள் இலக்கியங்கள் கூறும் செய்திகளை ஒத்துள்ளன. இப்பட்டினத்திற்குட்பட்ட நாட்டிலிருந்து வரும் மிளகும் யானைத் தந்தங்களும் பட்டும் ரத்தினஙகளும் ஏற்றுமதியாயின எனப் பெரிபுனுசு ஆசிரியர் கூறுகிறார்.

**கொற்கை**

இது பாண்டியரின் துறைமுகமாகும். முத்துக்குப் பெயர் போனது. மதுரைக் களஞ்சியும், சிறுபாணாற்றுப்படையும், கொற்கையில் சிறப்புற நடைபெற்ற முத்து வாணிகம் பற்றிக் கூறுகின்றன. சூல் முற்றி நளி முதிர்ந்த சீரிய முத்தினையும் விளங்குகின்ற சங்கினை உடைய பெரிய சங்கு குளிப்பார் இரும்பினையும் கள்ளாகிய உணவினை அருந்தும் குடிகளைக் கொண்ட சீறூர்களையுடைய கொற்கையென மதுரைக் காஞ்சி குறிக்கும்.

கொற்கையிலுள்ள உமணர் வளர்க்கும் மந்திகள் மகளிரின் பல் போன்ற செறிந்த நீர்மையுடைய முத்தைக் கிளிஞ்சலின் வயிற்றகத்தே இட்டு நிரப்புவன எனச் சிறுபாணாற்றுப் படை கூறும். கொற்கை முத்தை 'கொற்கையும் பெருந்துறை முத்தின் அள்ள' என்று அகநானூறு கூறுகிறது.

கொற்கையில் வெண்மையான ஓடங்களினின்றும் கருமையான கடலிலே மூங்கிச் சுறாவின் வாயினின்று தப்பி வலம்புரிச் சங்கையெடுத்து வந்து வெற்றிச் சங்கை ஊதும் பரதவர் நிறைந்திருந்ததை அகநானூறு கூறுகிறது.

கொற்கையில் முத்துக் குளித்தவர்கள் சிறையிலிருந்த குற்றவாளிகள் என பெரிபுளுசு நூலாசிரியர் கூறுகிறாா. மேனாட்டவர்களாலும் சிறப்பிக்கப்பட்ட நகரம் கொற்கை, கொற்கை முத்துக்களே அகநானூறு, நற்றிணை, சிறுபாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சியில் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

**வாணிபம் செய்த பிறநாட்டவர்**

முசிறியில் வாணிபம் செய்த அராபியர் அந்த இடத்திற்குப் பந்தர்(அரேபிய மொழியில் கடைவீதி) என்று பெயரிட்டனர். உரோமானிய, கிரேக்கர் வாணிபம் செய்ததும் யவனர் என அழைக்கப் பெற்றதும் அறிந்ததே. உரோமானியக் கிரேக்கக் காசுகள் இன்றும் கரூரில் ஏராளமாகக் கிடைக்கின்றன. மத்திரை, சருங்கை கலம், சன்னல் முதலிய கிரேக்கச் சொற்கள் தமிழ் மொழியில் கலந்தன. சீன வணிகரும் தமிழகம் வந்தனர்.

**விலைபொருளும் விளைபொருளும்**

அக்கால வாணிபப் பொருள்கள் குறித்துப் பட்டினப்பாலையிலும், மதுரைக்காஞ்சியிலும் விளக்கமாகக் காணலாம். இறக்குமதியானவற்றில் குதிரைகள், மணி, பொன், கங்கை காவிரிப்பயன்கள், ஈழத்து உணவு, காடிகத்து ஆக்கம் குறிப்பிடத்தக்கன. ஏற்றுமதியானவை முத்து, மிளகு, சந்தனம், அகில், தமிழகத் துணிகள், சங்கு வளையல்கள், உள்நாட்டு விற்பனைப் பொருள்களில் நெல்லும், உப்பும் அடங்கும். நெல்லுக்குப் பதில் யானைத் தந்தங்களைப் பெற்றனர்.

உமணப் பெண்டிக் உப்பை ஊருக்குள் எடுத்துச் சென்று விற்றனர். பவளம் நடுவாணிபப் பொருள், முத்துக்குச் சமமாகப் பிளினி இதைக் கூறுவார். பையசு என்ற உரோமானிய அரசனின் மனைவி பௌலீனா என்பவள்40,00 பொன் மதிப்புடைய இரத்தினங்களாலும் முத்துக்களாலும் தன்னை அலங்கரித்திருந்தாள் எனப் பிளினி கூறுகிறார். பெரிபுளுசு ஆசிரியர் சந்தனம் பற்றிக் கூறுகிறார். ஆனால் அவர் அகில் பற்றிக் கூறவில்லை.

கிரேக்கர் தமிழகத்து மிளகை உணவுக்கும், மருந்துக்கும் பயன்படுத்தினர். கிப்போகிரிட்டசு மிளகை இந்திய மருந்து என்றார். உரோமாபுரியில் ஒரு இராத்தல் மிளகின் விலை பதினைந்து தெனாறி என்றும் இந்தியாவில் அவ்விலையில் அரைப்பட்டு கூட இல்லை என்று பிளினி கூறுகிறார்.

மயிலைக் குறிக்கும் துசி என்னும் ஹீப்ருச் சொல் தமிழ்ச் சொல்லான தோயையிலிருந்து பிறந்தது. ஹீப்ரு மொழியில் உள்ள தமிழ்த˙தொடர்புடைய சொற்கள் இவை. பீட்டூா = வெற்றிலை, ஹெல் = ஏலம், கேரி = கரி, ஜெங்கிரில் = இஞ்சி வேர், அஹல் = அகில்.

5 மதிபெண் வினாக்கள்

1. தொல் தமிழா் யார்? விளக்குக
2. பழைய கற்காலம், புதிய கற்காலம் சிறுக்குறிப்பு தருக.
3. இரும்பு காலம் பற்றி விவரி?
4. சங்க கால மக்களின் வாழ்க்கை முறையை கூறு?

5. முச்சங்கங்களை பற்றி எடுத்துரைக்க?

8 மதிப்பெண் வினாக்கள்

1. தமிழகத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியை தொகுத்து எழுது
2. சங்க கால ஆட்சி முறையை விவரி
3. பெருங்கற்கால ஈமச்சின்னங்களை வரிசைப்கடுததி விவரி
4. திணைச்சார் வாழ்வியலை விவரி
5. பண்டைத் தமிழரின் அயல்நாட்டு வாணிகத்தை விவரித்து எழுது.

## அலகு-2

## ஆட்சியர் வரலாறு

## 11.மூவேந்தர் வரலாறு

**அறிமுகம்**

பண்டைத் தமிழ் நிலத்தைத் தாய்போல் காத்து வந்தவர்கள் மூவேந்தர்கள் ஆவர். ஊலகெங்கும் தமிழ் மணக்கக் காரணமானவர்களும் அவர்களே! தமிழக வரலாற்றில் முதன்மையானவர்களும் அவர்கள்தான் ஆட்சியாளர்களாக மட்டுமின்றி வீரமும் ஈரமும் கொடையும தாய்மண் பற்றும் நிறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். மூவேந்தரும் ஒருங்கிணைந்து நின்றபோது அழிக்க இயலாத சக்தி படைத்தவர்கள் ஆயினர். சிறு சிறு மோதல்களால் ஒருவரை ஒருவர் முரண்பட்டபோது அந்நியர்கள் வந்து புகுந்தனர்.

மூவேந்தர் வரலாறு, சங்க கால மூவேந்தர் வரலாறு, பிற்கால எழுச்சி வரலாறு என்று இருவகையில் அமைகிறது. சங்க கால வரலாற்றைப் பெரும்பான்மையாக இலக்கியங்கள் வழியே அறிய முடிகிறது. பிதமிற்கால வரலாறு கல்வெட்டுகள், செப்பேடுகள், அகழ்வாராய்ச்சிகள் வழியும் அறிய முடிகிறது.

புதிற்றுப் பத்து சேரர்களின் வரலாற்றைத் தெரிவிக்கும் வரலாற்றுப் பெட்டகம் ஆகும். புறநானூறு, அகநானூறு பாடல்கள் வழியும்கூட சேரர்தம் வரலாற்றைக் கணிக்க முடிகிறது. சோழர், பாண்டியர் வரலாற்றை புறநானூறு மதுரைக்காஞ்சி ஆற்றுப்படை நூல்கள் வழியும் விரிவாக அறிய முடிகிறது. பிற்காலச்சோழர், பாண்டியர்தம் வரலாறு கல்வெட்டு, செப்பேடு அகழ்வாராய்ச்சிகள் மூலம் தெளிவுறுகிறது. இவர்தம் கலை படைப்புகளும் புகழை வாணோங்க இன்றும் சொல்லி நிற்கிறது.

## சேரர்கள்

**சேரநாடு**

குட்டநாடு, குட நாடு, பூழி நாடு, குன்றநாடு, மலை நாடு, கொங்கு நாடு, பொறை நாடு, உடம்பற்காடு, அகப்பாக் கோட்டை

ஆயிரைமலை, நேரிமலை, செருப்பு மலை.

நறவு, முசிறி, தொண்டி.

**சேர மன்னர்களின் கொடைத்திறம்**

சேர மன்னர்கள் தாம் பெற்ற இன்பம் எல்லாரும் பெற வேண்டும் என்று எண்ணியவர்கள். கோடை உள்ளம் கொண்டவர்கள். தம்மை நாடி வரும் வறியவர்களின் பசிப்பிணி நீக்கி, புத்தாடை தந்து மகிழ்வித்து மகிழ்ந்தவர்கள் ஆவர்.

செல்வ சுடுங்கோ வாழியாதன் என்னும் சேரமன்னன் பெரும் பொருளைப் பிறருக்குக் கொடையாகக் கொடுக்க ஒரு நாளும் வருந்தமாட்டான் என்று பதிற்றுப்பத்து கூறுகிறது.

சேரன் செங்குட்டுவன் தனக்கு ஒருவரைச் சோற்றையும் பிறருக்கு இன்னொரு வகை சோற்றையும் சமைத்து வழங்காதவன் என பரணர் எடுத்துரைக்கிறார்.

“சோறு வேறென்னா ஊன்றுவை அடிசில்” (பதிற்றுப்பத்து-5ம்பத்து) என்ற வரிகளை அதனை உணர்த்தும்.

போரில் பெற்ற செல்வத்தை எளியோர்க்கு வாரி வழங்கினான் செங்குட்டுவன் என்பதை,

“பெரிய வாயினும் அமர் கடந்து பெற்ற

அரிய என்னாது ஓம்பாசி வீசி”-( பதிற்றுப்பத்து-5ம்பத்து)

என்ற அடிகள் விளக்கும்.

இளஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன் வறுமையில் வாடுபவரின் துன்பம் தீரும் அளவு பொருள் வழங்கியவன் என்றும் பதிற்றுப்பத்து எடுத்துரைக்கிறது.

வறட்சிக் காலத்தில் பாணர், கூத்தர் முதலான பரிசிலரின் பசிப்பிணியைப் போக்கி, தக்க அணிகலன்களை வழங்கி செங்குட்டுவன் வாழ்வித்தான் என்று பதிற்றுபத்தின் மூன்றாம் பத்து விவரிக்கிறது.

கலங்காய் கண்ணி நார்முடிச்சேரல் தான் பகைவரோடு போரிட்டுக் கவர்ந்த பொருளை பாணர் முதல் இரவலர் வரை அவர்தம் மனம்கொள்ளும் வரை பங்கிட்டுக் கெடுத்தான் என்றும் பதிற்றுபத்து எடுத்துரைக்கும்.

இவ்வாறு சேர மன்னர்கள் பலரும் இரவலர்க்கும் பாணருக்கும் கலைஞர்களும் புலவர்க்கும் இன்ன பொருள் என்று எண்ணாது கேட்பவர் மனம் பொருந்தும் வகையில் மகிழும் வரை கொடுத்து உதவும் கொடை உள்ளம் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

**சங்க கால சேரர் வரலாறு**

தொல்காப்பியரால் மண்புகழ்வர் தண்பொழில் வரைப்பு என்றும் ‘மூவேந்தர் நாடு’ என்றும் அழைக்கப்பெற்ற தமிழகத்தை ஆட்சி செய்த முடியுடைய வேந்தர் மூவராவர். அவர்களுள் குடபுலம் என்று வழங்கப்பெற்ற மேற்குப்பகுதியான சேர அரசர்கள் ஆண்டுள்ளனர்.

**சேர நாடு**

கொங்கணக் கடற்கரைக்குத் தெற்கேயுள்ள மேற்குக் கடற்கரையும் கொங்குநாடும் இணைந்த பகுதி சேரநாடாகும்

**சேரர் தலைநகர்**

சேர நாட்டின் தலைநகரமாக விளங்கியது வஞ்சி அல்லது கருவூர் ஆகும். கருவூர் என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்தொற்றுமையின்மை நிலவுகிறது. கருவூர், தொண்டி, நறவு, மாந்தை, வஞ்சி முதலானவை சேர நாட்டின் பேரூர்களாகும். சேர நாடு, உம்பற்காடு அல்லது வேழக்காடு என்றும் வழங்கப்பெறும். சேரர், வானவர், வில்லவர் என்று அழைக்கப்பட்டனர். தோல்காப்பியர் சேரரையே முதலில் குறிப்பிடுகிறார்.

**இரு கிளைகள்**

சேரர் இருகிளையினர் ஆவர். ஒரு கிளையினர் உதியன் சேரலாதன் வழியினர். மற்றொரு கிளையினர் இரும்பொறை வழியினர். உதியன் சேரலாதன் வழியினர் வஞ்சியைத் தலைநகராகவும், இரும்பொறை மரபினர் தொண்டியைத் தலைநகராகவும் கொண்டு அரசு செலுத்தினர்.

**உதியஞ்சேரலாதன் மரபினர்**

சங்க இலக்கியங்களிலிருந்து நாம் அறியும ் காலத்தால் முற்பட்ட முதல் சேர மன்னர் உதியன் ஆவார். மூரஞ்சியூர், முடிநாகனார் மாமூலனார், இளங்கீரனார், கோட்டமும் பலத்துத்துஞ்சிய சேரமான் இளங்கோவடிகள் ஆகியோர் அவரைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இவருடைய மனைவி பெயர் நல்லினி ஆகும்.

நெடுஞ்சேரலாதன்,பல்யானை செங்கெழுகுட்டுவன் ஆகிய இருவரும் மகன்கள் ஆவர். கீழக்கிலும் மேற்கிலும் கடல்களை எல்லைகளாகக் கொண்டிருந்தனர். பாண்டவருக்கும் சோறளித்து உதவியதால் அச்சிறப்புப் பெயரினைப் பெற்றதாக முடிநாகராயரும் இளங்கோவடிகளும் கூறினர்.

இதனை ஏற்றுக் கொள்வது கடினமாயுள்ளது. முன்னோர் செயல் உதியன் மீது ஏற்றிக் கூறியிருக்க வேண்டும் அல்லது பாரதப்போர் நிகழ்ச்சியை நாடகமாக்கி ஆண்டுத்தோறும் நடித்துக் கொண்டாடும் இறுதி நாளன்று வழக்கப்படி அனைவருக்கும் சோறளித்ததை இவ்வாறு போற்றியிருக்க வேண்டும்.

கரிகாற்சோழனுடன் போரிட்டு அதனால் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர்விட்டதாகக் கூறப்படும் பெருஞ்சேரலாதன் இவரே என்று வரலாற்றாசிரியர்கள் சிலர் கூறுகின்றனர். தன்னை நாடி வந்த புலவரைப் போற்றி இரவலருக்குப் பரிசில் அளித்தார் என்று அகநானூற்றுப்பாடல் ஒன்று கூறுகின்றது.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**

நெடுஞ்சேரலாதனின் தந்தை உதியஞ்சேரன், தாய் வெளியன் வேண்மாள் என்ற வேளிர் குலத்தலைவன் மகளான நல்லினி. இமயத்தில் புலி சின்னம் பொரித்தால் இமயவரம்பன் என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றாா. யுவனாடகளைப் போரில் வென்று

சிறைப்பிடித்து வந்து அவர்களை விடுவிக்க அவர்களிடம் மீட்புப்பணமாகப் பொன்னும் மணியும் பெற்றார்.

தன் பகைவர்களின் காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தினார். வேற்ப.ஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற சோழ மன்னருடன் போரிட்டுக் களத்தில் உயிர் நீத்தார். போரில் சோழனும் மாண்டார்.

நெடுஞ்சேரலாதனின் இரு மனைவியருள் ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகளான நற்சோனை அவள் செங்குட்டுவன். இளங்கோவன் ஆகிய இரு ஆண்களைப் பெற்றெடுத்தாள். மற்றொரு மனைவி, வேளாவிக் கோமான் பதுமனின் மகள். அவளுக்குக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் இருமன்கள் உண்டு நெஞ்சேரலாதன் 58 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். குமட்டூர் கண்ணனார் என்ற புலவருக்கு உம்பற்காடு என்னும் வளம் நிறைந்த பகுதியில் ஐநூறு ஊர்களைக் கொடையாக வழங்கினார்.

**பல்யானை செங்கெழுகுட்டுவன்**

பல யானைகளைக் கொண்டிருந்தமையால் இப்பெயர் பெற்றார். தன்னை எதிர்த்த சோழர், பாண்டியர், வேளிர் கூட்டணியை முறியடித்தார். அவர்தம் கடலரணையும், காட்டரணையும் அழித்தார். பாலைக் கௌதமனார் என்ற புலவரின் வேண்டுகோளின் பேரில் பத்து வேள்விகிள நடத்தினார் இம்மன்னர் 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளார்.

**களங்காய்க்கண்ணி நாரமுடிச்சேரன்**

இமயவரம்பனின் இளைய மனைவியின்(வேளாவிக் கோமான்பதுமன் மகள்) வளிந்நில் பிறந்தவர் இச்சேரமன்னர். முடிசூட்டு விழாவின்போது சேரமன்னர்கள் வழக்கமாய் அணியும் முடியும் மாலையும் பகைவர் சதியின் விளைவால் கிடைக்காமல் போனதால் களங்காய்க் கண்ணியிலான முடியையும் நாரினாலான மாலையையும் அணிய வேண்டியதாயிற்று. எனவே இப்பெயர் பெற்றார்.

இவர்கடம்பில் பெருவாயில், வாகைப் பெருந்தலை ஆகிய இடங்களில் நன்னன் என்னும் அரசரைத் தோற்கடித்து அவருடைய காவல் மரமான வாகை மரத்தை வெட்டி வீழ்த்தினார். அவ்வெற்றினைப் புகழ்ந்து பாடிய காப்பியாற்றுக் காப்பியனார் என்ற புலவருக்கு பரிசிலாக நாற்பது நூறாயிரம் பொண் கொடுத்தார். 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளார்.

**செங்குட்டுவன்**

நெடுஞ்சேரலாதனின் மனைவி நற்சோணை வயிற்றில் உதித்தவர் இவர். இவரது மனைவி இளங்கோவேண்மாள். கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் கடைசிக் கால் நூற்றாண்டில் ஆட்சி செலுத்தினார். கொங்கர்களையும், சோழர்களையும், பாண்டியர்களையும் தோற்கடித்தார். கடல்நீரை அரணாகக் கொண்டு வாழ்ந்தவர்களைத் தோற்கடித்து **'கடல்பிறகோட்டிய செங்குட்டுவன்'** எனச் சிறப்புப் பெற்றார்.

மோகூர்ப் பழையனையும், அவருக்குத் துணையாக வந்த சோழர், பாண்டியரையும் தோற்கடித்தார். நேரிவாயல் என்னும் இடத்தில் தன்னை எதிர்த்த ஒன்பதின்மரைத் தோற்கடித்தார்.

கண்ணகிக்குச் சிலையெடுக்க வடபுலத்திற்குப் படையெடுப்பு நிகழ்த்திச் சென்று கனகவிசயரைத் தோற்கடித்து, அவர்கள் தலையில் கல்லேற்றி வந்தார். தன்னைச் சிறப்பித்துப் பாடிய பரணருக்கு உம்பற் காட்டின் வருவாயை வழங்கினார்.

**ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும், வேளாவிக் கோமான் பதுமன் மகளுக்கும் பிறந்த இரண்டாவது மகன், களங்காய்க் கண்ணின் உடன்பிறப்பாவார். நாட்டின் வட எல்லையில் வாழ்ந்திருந்த ஓரினத்தவர் நாட்டினுள் புகுந்து அங்குள்ள ஆட்டு மந்தைகளைக் கவர்ந்து சென்றதைக் கண்டு கடுஞ்சினமுற்றுப் படையுடன் சென்று அம்மந்தைகனை மீட்டு கொண்டு வந்ததால் அப்பெயர் பெற்றார்.

இவரது கொடைச் சிறப்பினைக் காக்கைப் பாடினியார், நச்செள்ளையர் ஆகிய புலவர்களுக்கு நூறு ஆறாயிரம் கானப் பொருளையும் ஒன்பது துலாம் நிறையுள்ள பொன்னும் அளித்தார்.

## இரும்பொறை மரபினர்

**அந்துவன் சேரல் இரும்பொறை**

சேரமரபின் மற்றொரு பிரிவினராகிய இரும்பொறை மரபின் முதல் மன்னன் அந்துவன் சேரன் ஆவார். இவரது தலைநகர் கருவூர் ஆகும். இவரது சமகாலச் சோழ அரசர் கோப்பெருநற்கிள்ளி ஆவார். இவருடன் நல்லுறவு இல்லை.

**செல்வக் கடுங்கோ வாழியாதன்**

செல்வக் கடுங்கோ கொடை சிறப்பினால் சிறப்பித்துக் கூறப்படுக்கிறார். தன்னைப் பாராட்டிய கபிலரைக் குன்று ஒன்றின் மீது ஏறச்செய்து அவரது கண்ணிற்குத் தெரியும் இடங்களையெல்லாம் கொடையாக வழங்கினார். சோழ பாண்டிய மன்னர்களைத் தோற்கடித்தார். தோற்கடிக்கப்பட்ட சோழ பாண்டியர் பெயர் தெரியவில்லை. பொய்யில் செல்வக் கடுங்கோ எனவும் அழைக்கப்பட்டார்.

**பெருஞ்சேரல் இரும்பொறை**

தகடூரை ஆண்ட அதியமான் நெடுமானஞ்சியைத் தோற்கடித்தார். சோழ, பாண்டிய மன்னர்கள், வேளிர் சிலரும் அதியமானுக்குத் துணை நின்றனர் தகடூர்க் கோட்டை இவ்வெற்றிக்குப் பின் அழிக்கப்பட்டது இரும்பொறையின் மற்றுமொரு வெற்றி கழுவுள் என்ற ஆயக்குலத் தலைவனைப் பணியச் செய்ததாகும்.

சேர நாட்டின் எல்லையில் இருந்த பூமி, கொல்லிக் கூற்றம் ஆகிய பகுதிகளிலும் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டினார். புலவர் அரிசில் கிழார் பொன்முடியை ஏனைய புலவர்கள் போற்றிப் பாராட்டினார்.

அரிசில் கிழாருக்கு ஒன்பது நூறாயிரம் பொன் கொடை வழங்கினார் இவரது முரசுக் கட்டிலில் படுத்துறங்கிய மோசிகீரனார் என்ற புலவரைக் கொலை செய்யாது வெண்சாமரம் வீசி நின்றாராம்.

**இளஞ்சேரல் இரும்பொறை**

புதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகம் இவர் சோழபாண்டியரையும், விச்சிமலையினையும், அதனைச் சூழ்ந்து நின்ற காட்டையும், குறுநிலங்களையும் வென்று ஐந்து பெருங்கோட்டைகளை அழித்து அடிமைப்படுத்தினர் என்று கூறுகிறது. பெருங்குன்றத்துக்கிழார் இவரைப் புகழ்ந்து பாடியமைக்காக முப்பதாயிரம் காணமும், ஊரும் கொடையாகப் பெற்றார். பதிற்றுப்பத்து மேலே காணப்பட்ட மூவரைப் பற்றி குறிப்பிடுகிறது.

**யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை**

இந்தச் சேர மன்னரின் தலைநகர் தொண்டியாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோடு போரிட்டுத் தோற்றார். அவரால் சிறைபிடிக்கப்பட்டிருந்தபோது தந்திரமாகத் தப்பி வந்து மலையமான் திருமுடிக்காரியிடம் தோற்றார்.

மருதம் பாடிய இளம் கடுங்கோ, கோக்கோதை மார்பன் மாரிவெண்கோ, கணைக்காலிரும்பொறை ஆகிய சேரமன்னர்களின் வரலாற்றையும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**“மானம் இழந்து பின் உயிர் வாழேன்”**என்று கூறிய கணைக் காலிரும்பொறை சோழன் கோச்செங்கணனால் சிறை பிடிக்கப்பட்டுக் காவலர் அருந்த நீர் தர மறுத்து அவமதித்து அளித்தமையால் நீரை ஒழித்து வடக்கிருந்து உயிர் நீத்தவர். பொற்கையார் என்ற புலவர் சொல் கேட்டுச் சோழன் இவ்வரசனை விடுவிக்க ஆணையிட்டபோது இவர் இறந்திருந்தார்.

## சோழர்கள்

**சோழ நாட்டின் எல்லைகள்**

கடலைக் கிழக்கு எல்லையாகவும், கோட்டைக் கரையை மேற்கு எல்லையாகவும், வெள்ளாற்றைத் தெற்கு எல்லையாகவும் ஏணாட்டை வடக்கு எல்லையாகவும் கொண்டு சோழநாடு திகழ்ந்தது என்று பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

பட்டினப்பாக்கம், மருவூர்ப் பாக்கம், குடந்தை, ஆர்க்காடு, பிடவூர், நெய்தலங்கானல், குராப்பள்ளி, கழார், போர், பொத்தி, தலைச்செங்காடு, சாய்க்காடு, வல்லம், வெண்ணி, செம்பியன், சென்னி, கிள்ளி, வளவன்.

**சோழ நாடு**

காவிரியின் சமவெளிப் பகுதியான திருச்சி, தஞ்சாவூர், தென்னதற்காடு மாவட்டங்கள் அடங்கிய பகுதி சோழ நாடாகும்.

**நாடும் தலைநகரும்**

சோழ நாட்டின் எல்லைகளாகக் கிழக்கில் வங்காள விரிகுடாக்கடல், தெற்கில் வெள்ளாறு, மேற்கில் கோட்டைக்கரை என்ற அரண், வடக்கில் கடிலம் ஆறு ஆகியன எல்லைகளாய் அமைத்திருந்தன. தலைநகராக விளங்கியவை கோழியூர் எனப்படும் உறையூரும், புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினம் எனப்படும் புகாரும் ஆகும்.

**சோழ மன்னர்கள்**

**(i)உருவப்ப.்.றோர் இளஞ்சேட்சென்னி**

சங்க நூல்காளால் அறியப்படும் முதல் சோழ மன்னர் இவரேயாவார். ஆழகிய பல பெரிய தேர்களைக் கொண்டிருந்ததால் இவர் இப்பெயர் பெற்றார். இவர் படைமாட்சி மிக்கவர் என்று பராணரால் பாராட்டப் பெற்றவர். வம்பவடுகரை ஓட்டி பாழி என்ற களத்திலே வென்றவர். புலவரைப் போற்றிய புரவலர். இவரது மகனே கரிகாற்சோழன்.

**(ii)கரிகாலன்**

தாய் கருவுற்றிக்கும் போதே கரிகாலனின் தந்தை இறந்துவிட்டதால் சிறுவனான அவர் அரசு காட்டில் ஏற எதிர்ப்புகள் இருந்தன. சூழ்ச்சியின் விளைவாக அவர் சிறைப்பட்டார் என்றும், சிறைச்சாலைக்குத் தீ வைக்கப்பட்டுத் தப்பியபோது கால் கருகியதால் கரிகாலன் என்ற பெயர் பெற்றார் என்பர். யானைகளுக்குக் காலன்(எமன்) போன்றவர் ஆதலால்(கரிஸ்ரீயானை) கரிகாலன் என்ற பெயர் பெற்றார் என்பர். சிலர் கரிகாலன் என்ற பெயரில் இரண்டு பேர் இருந்திருக்கலாம் என்பர்.

**போர்க்கள வெற்றிகள்**

வெண்ணி என்ற இடத்தில் தன்னை எதிர்த்த சேர, பாண்டிய மன்னர்களையும், ஒன்பது வேளிர்களையும் தோற்கடித்தார். வாகைப் பறந்தலையில் ஒன்பது வேளிர்களை வென்றார். பட்டினப்பாலை வடவர், குடவர், தென்னவர், ஒளியர், அருவாளர் ஆகியோரை வென்றதாகக் கூறுகிறது. இமயம்வென்று அங்கு புலிச்சின்னம் பொறித்தார். இலங்கை சென்று சிறைப்பட்டவர்களை இங்கு கொணர்ந்து காவிரிக்குக் கரையமைத்தார்.

**பிற சிறப்புச் செயல்கள்**

காவிரிக்குக் கரையாகக் கல்லணையமைத்து பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனாருக்கு பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தது, வேள்வி சாலைகள் அமைத்தது. முதியோன் வேடமிட்டுத் தீர்ப்பு வழங்கியது.

**(iii)குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்**

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர், சேர நாட்டின் கருவூர்க் கோட்டையை முற்றுகையிட்டு அழித்து சேரமன்னர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை வென்றார். திருக்கோவலூர் மலையமானைத் தோற்கடித்தார். அவரது பிள்ளைகளை யானையின் காலால் இடறச் செய்து கொலை செய்ய முயன்றபோது கோவூர் கிழார் என்ற புலவரால் காப்பாற்றப்பட்டார்கள். துளுநாட்டுக் கோசர்களையும், பாண்டியன் பழையன்

மாறனையும் தோற்கடித்தார். **'குளமுற்றம்'** என்ற இடத்தில் இறந்ததால் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் எனப்பட்டார்.

**(iv)நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி**

நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் சமகாலத்தவர்கள். நலங்கிள்ளி புகாரிலிருந்தும், நெடுங்கிள்ளி ஆவூரிலிருந்தும் ஆட்சி புரிந்தனர். நலங்கிள்ளியின் படை வலிமையினை ஆலந்தூர் கிழார் என்ற புலவர் புகழ்ந்துரைக்கிறார். அவரது படைகள் பனந்தேப்பு வழியே அணிவகுத்துச் சென்றால், முன்னால் செல்லும் படை நுங்கினையும், இடையில் செல்லும் படை பனம்பழத்தையும், இறுதியில் செல்லும் படை பனங்கிழங்கையும் தின்னும் வாய்ப்பும் பெறும் என்று மிகைபடக்கூறினார். அப்படை பனந்தோப்பினைக் கடக்க அத்துணைக் காலம் பிடிக்குமாம்.

**ஆவூர் முற்றுகை**

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் மாறுபாடு கொண்டனர் நெடுங்கிள்ளியின் ஆவூர்க்கோட்டையினை நலங்கிள்ளி முற்றுகையிட்டார். முற்றுகையை முறியடித்து வெளிப்போந்து நெடுங்கிள்ளி சண்டையிடாமையால் அவரிடம் புலவர் கோவூர்கிழார் மக்கள் துயருருவதை எடுத்துக் கூறினார். நெடுங்கிள்ளி கோட்டையைப் பகைவரிடத்து விட்டு வெளியேறினார்.

**உறையூர் முற்றுகை**

நெடுங்கிள்ளி வெளியேறி உறையூரைக் கைப்பற்றிக் கொண்டார். நலங்கிள்ளியைப் பாடிப்பரிசில் பெற்ற இளந்தத்தன் என்ற புலவரை ஒற்றன் என நெடுங்கிள்ளி கொலை செய்ய முயன்ற போதும் கோவூர் கிழார் தலையிட்டுப் புலவரைக் காத்தார். "ஒரு குடியில் அதாவது சோழ மரபில் பிறந்த நீவிர் இருவரும் போர் புரிதல் முறையன்று, உம்மில் எவர் தோற்பினும் பழி உம் குடிக்கே" என்று அறிவுரை கூறினார். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியைத் தோற்கடித்து உறையூரைக் கைப்பற்றினார். இறுதியில் நலங்கிள்ளி நெடுங்கிள்ளியைக் காரியாறு என்ற இடத்தில் தோற்கடித்தார்.

**இராச சூயம்**

வேட்ட பெருநற்கிள்ளி போரில் பெரும் வெற்றி பெற்ற மன்னனொருவனால் நடத்தப்பட்ட வேள்வியே இராசசூயமாகும். இவ்வேள்வியை இயற்றிய பெருநற்கிள்ளி பெருவீரனாதலால் இப்பெயர் பெற்றார்.

சோழர் இருவரும், சேரர் மாரிவெண்கோவும், பாண்டியன் காணப் பேரரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும் நட்புடன் சேர்ந்து வாழ்ந்ததை ஔவையார் மகிழ்ச்சியுடன் பாராட்டினார். மாந்தரஞ் சேரலிரும்பொறை என்ற சேர மன்னர் பகையுணர்வு கொண்டிருந்ததால் அவருடன் போர் செய்து வென்றார். இவ்வரசனுக்கு முள்ளுர் மரபின் மலையன் உதவி செய்தார்.

**(v)குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன்**

தாமோதரனார் என்ற புலவர் உப்புச்சுமையை ஏற்றிச் செல்லும் வண்டியை மணலிலும் சேற்றிலும் சிறிதும் தயங்காது இழுத்துச் செல்லும் எருதின் வலிமையுடையவர் என்று புகழ்ந்துள்ளார். பாண்டியர் பெரும்வழுதியோடு நட்புப் பூண்டிருந்ததைக் காக்க கண்ணனார் என்ற புலவர் இருவரையும் புகழ்ந்து பாடுகிறார்.

**(vi)கோப்பெருஞ்சோழன்**

கோபெருஞ்சோழனும், புலவர் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் சந்திக்காமலேயே ஆழ்ந்த நட்புப் பூண்டவர்கள் அரிய நட்பிற்கு இலக்கணமாய் விளங்கியவர்கள். கோபெருஞ்சோழனின் மக்கள் தந்தை உயிருடன் இருக்கியிலேயே அரியணை ஏற விரும்பித் தந்தையுடன் போர் செய்தனர். இந்தப் பிள்ளைகள் தந்தையினை எதிர்த்துப் போர் செய்தனர் என்னும் பழிச்சொல் பாண்டிய, சேர அரசவைகளை அடையுமுன்னரே வாழ்நாளை முடித்துக் கொள்ள வேண்டுமென வடக்கிருந்து உயிர் நீத்தார்.

**(vii)கோச்செங்கண்ணான்**

சங்க காலச் சோழர்களில் இறுதியானவர் என்று கருதப்படுகிறார். கணைக்கால இரும்பொறை என்னும் சேர மன்னனைத் திருப்போர்ப்புறம் என்னுமிடத்தில் போரிட்டுத் தோற்கடித்துக் கைதியாக்கிக் குடவாயில் கோட்டத்தில் சிறை வைத்தார். இழிவு செய்யும் காவலர் கையினால் தண்ணீர் பருக விரும்பாது உயிர் நீத்தார் கணைக்கால் இரும்பொறை. அரச நாட்டுக் கழுமலம் என்ற கோட்டையை முற்றுகையிட்டு அதனைக் காத்து நின்ற கணையனைத் தோற்கடித்தார். பெரிய புராணம் என்னும் பிற்கால நூல் கோச்செங்கண்ணானின் வரலாற்றைக் கூறுகிறது. அம்பர், வைகல், நன்னிலம், திருவக்கரை, ஜலகண்டபுரம் திருக்கோயில்கள் இவ்வேந்தனால் எழுப்பப்பட்டவையாம்.

**பிற சோழர்கள்**

வளவன், கிள்ளி, கிள்ளிவளவன் செறாப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி, நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, போர்வைக்கோ பெருநற்கிள்ளி வேற்ப.ஃ.றடக்கை பெருவிறற்கிள்ளி ஆகிய வேறு பல சோழ மன்னர்களும் சோணாட்டை ஆண்டனர். எனினும் இவர்களைப் பற்றிய விவரமான செய்திகள் கிடைக்கப் பெறவில்லை.

**சங்ககாலச் சோழர் வரலாறு**

சங்ககால இலங்க்கியங்களே சோழர் கால வரலாற்றை அறிய உதவுவனவாகும். சோழர் வரலாற்றை ஒரே சீரான தொடர்ச்சியான கால வரன்முறையில் எழுதுவது கடினமாக உள்ளது. சங்க இலக்கியங்கள் அன்றி ஆதராமில்லாமையால் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறி கிக்கும் சங்ககாலப் பாடல்களின் மூலம் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு ஒருவாறு சோழர் வரலாற்றைத் தொகுக்கலாம்.

**பிறப்பெயர்கள்**

சோழர்கள் கிள்ளி, வள்ளன், செம்பியன், சென்னி என்றும் அழைக்கப்பட்டன. சோழநாடு 'காவிரிநாடு'இ 'காவிரிசூழ்நாடு'இ 'காவிரி புரக்கும் நாடு' என்றும் 'நீர் நாடு'இ 'புனல் நாடு' எனவும் அழைக்கப்பட்டது. சோழநாட்டு நகரங்களில் புகார், உறையூர், அழுந்தூர், ஆவூர், இடையாறு, குடந்தை முதலியன குறிப்பிடத்தக்கவை. சோழரும் புலவர் போற்றும் சிறப்பு எய்தியவர்களே.

**சோழர் கால ஆட்சிமுறை**

தமிழக வரலாற்றில் நிலப்பரப்பில், கலை, வணிகம், பண்பாடு, பரிமாற்றத்தில் என பல வகையிலும் உன்னதமாகத் திகழ்ந்த அரசு சோழப் பேரரசு ஆகும்.

சோழ நாட்டின் தலைவன் அரசன் ஆவான். அரசனின் வாரிசுகள் அடுத்த அரசன் ஆவான். வாரிசு இல்லாதபோது குடும்பத்தின் மூத்த உறுப்பினர் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாட்டின் உட்பிரிவுகளாக மண்டலம், வளநாடுகள், நாடு அல்லது கூற்றம் ஆகியன ஆட்சியை எளிதாக்கின. இராஜராஜன் காலத்தில் நாடு 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

அரசருக்கு உதவியாகச் சிற்றரசர்கள் இருந்தனர். பழுவேட்டரையர், இருக்கு வேளிர்கள், மழவர்கள், மிலாடு, கங்கர்கள் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தோர் ஆவர்.

சோழ அதிகாரிகளாக இருந்தவர்கள் முத்தரையர், சேரிராயர், சம்பவரையர், வாணிபதிராயர், காலிங்கராயர் போன்றோர் சிற்றரசர்களாவர்.

அரசருக்கு ஆலோசனை கூற அமைச்சர்களோடு 'இராஜகுரு' என்பவரும் உண்டு. இராஜேந்திரன் காலத்தில் ஈசான சிவன், சர்வ சிவன், என்ற இராஜகுருக்களும் இருந்தனர்.

ஆணைகளை உரிய இடங்களுக்கு அனுப்ப விடையில் அதிகாரி இருந்தார்.

'நாடுகாவல்' என்னும் அதிகாரி நாட்டின் இந்நாள் காவல்துறைக் கண்காணிப்பாளர் போன்று பணிகளைச் செய்தனர்.

வரிகளை வசூலிக்கும் அதிகாரிகளும் இருந்தனர். அரசு உயர் அலுவலர்கள் 'பெருந்தனம்' என்றும், கீழ்மட்ட அலுவலர் 'சிறுதனம்' என்று அழைக்கப்பட்டனர்

தொல்லை தரும் சுங்கவரியை நீக்கி 'முதாலம் குலோத்துங்க சோழன்' 'சுங்க தவிர்த்த சோழன்' எனப் புகழப்பட்டான்

படையை எல்லாப் பிரிவுக்கும் அரசனே தலைவன், முப்பதிற்கும் மேற்பட்ட படைப்பிரிவுகள் இருந்தன. வில்வீரர், கைக்கோளர், குஞ்சரமல்லர், குதிரைசேவகர் என்ற பெயர்களை படைவீரர்கள் அழைக்கப்பட்டனர்.

படைத்தலைவர்கள் மாதண்ட நாயக்கர் என அழைக்கப்பட்டனர் படைகள் கடகம் அல்லது படைவீடு என்ற இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

நீதி வழங்குவதற்கு எழுதப்பட்ட சட்டங்கள் கிடையாது சமய தர்மே சட்டப் பாரம்பரியமாகப் பயன்பட்டது. பெரிய குற்றங்களுக்கு மரண தண்டனை வரை வழங்கப்பட்டது.

**சோழர்களின் கோவில் பணிகள்**

சங்ககால முதல் கோவில்கள் இருப்பினும் பல்லவர் காலத்தில் கல்லில் குடையப்பட்ட கோவில்கள் உருவாயின.

விஜயாலய சோழன் காலத்தில் கற்றளிகள் கட்டும் மரபு பரவலாயிற்று முதலாம் ஆதித்தன் காலத்தில் கோவில் பெருகின என்று அன்பில் செப்பேடு கூறுகிறது.

சோழ அமைச்சர்கள், அதிகாரிகள் கூட கோவில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டன. திருவாடு துறை கோவில் திருக்களிற்றுப் பிக்சன் என்ற அதிகாரி பல கோவிலில்களைக் கட்டியவன் கூறி சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

விஜயாலய சோழன் தஞ்சையில் நிதம்ப தேனி என்று துர்க்கைக்குக் கோவில் எடுத்திருக்கிறான். நார்த்தாமலை விஜயாலய சோழீஸ்லரம் என்ற கோவிலும் இவன் திருப்பணியாகும்.

முதலாம் பராந்தகன் சிதம்பரம் தில்லை கோவிலில் பொன்வேந்தன். இவன் திருவாடுதுறை, திருவிடைமருதூர், சுறுமூர், திருச்செந்தூர் ஆகிய ஊர்களில் கோவில்களைக் கட்டியுள்ளான்.

இராசாத்தின் திருநாவலூரில் இராசாதித்தேஸ்வரம் என்ற கோவிலைக் கட்டினான்

கண்டராதித்தன் பாடல் பெற்ற கோவில்களைக் கற்றளியாக்கினான். இவன் மனைவி செம்பியன் மாதேவி கோவில்களுக்கு செப்புவிக்கிரகங்கள் கொடுத்துள்ளனர்.

முதலாம் இராஜராஜன் வாழ்நாள் சாதனைகளில் தஞ்சாவூர் பிரகதீஸ்வரம் கோவில் கட்டியது ஆகும். இக்கோவிலைத் திருநாவுக்கரசரும் கருவூர்த்தேவரும் பாடியுள்ளார்

இராஜராஜன் மனைவி திருவையாற்றில் சிறிய கோவில் ஒன்று கட்டினார்.

இராஜராஜன் செம்பியன் மாதேவியார் பேரில் மேல்பாடியில் ஒரு கோவில் எடுத்துள்ளான்

முதலாம் இராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் அதன் கம்பீரத்தை சைவத்தை உலகுக்குப் பறைசாற்றி நிற்கிறது.

முதலாம் குலோத்துங்கன் கும்பகோணத்தில் சூரியனார் கோவிலைக் கட்டினான்

இரண்டாம் இராசராசன் தமிழகத்தின் புகழபெற்ற தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோவிலைக் கட்டியிருக்கிறான்.

மூன்றாம் குலோத்துங்கன் சைவத் திருமுறைகளைப் பாதுகாக்கும் மடங்கள் பலவற்றை நிறுவியவன்.

காடவகுல சிற்றரசன் முதல் கோப்பெருஞ்சிங்கன் என்பவன் சிதம்பரம் கோவிலின் தெற்கு கோபுரத்தைக் கட்டினான்

முதல் குலோத்துங்கனின் படைத்தலைவன் ஆழ்ந்த சிவபக்தன் இவன் திரிபுவனம், திருப்புகலூர் கோவில்களின் உள்ளே மண்டபங்களை எடுத்துள்ளான். இவன் மூவர் தேவாரத்தை செப்பேடுகளில் எழுதச் செய்தான்

**சோழர் காலக் கலைகள்**

**முன்னுரை**

பல்லவர்களைப் போன்றே சோழப் பேரரசர்களும் கோவில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்துக் கொண்டனர். பல்லவரும் பாண்டியரும் வளர்த்த குடைவரைக் கோயில் அமைக்கும் முறை இவர்களது ஆட்சியின் துவக்கத்தில் மறைந்து கொண்டிருந்தது கி.பி.866ல் விஜயாலச் சோழனின் தலைமையில் தொடங்கப்பட்ட இப்பேரரசின் பகுதிகளாக திருச்சி, தஞ்சாவூர், வடஆற்காடு மாவட்டங்கள் விளங்கின. இப்பகுதிகள் காவிரிப்படுகையில் அமைந்திருந்ததால் இவர்களது கோவில் கட்டிங்கள் ஆற்றோரங்களில் மலர்ந்தன.

**சோழர் கலையின் தனித்துவம்**

சோழர் காலத்தில் சிறப்புப் பெற்ற கலைளைச் சோழர் கலைகள் எனலாம். கட்டிடக் கலையும் சிற்பக் கலையும், வண்ண ஓவியக் கலையும், பெரும்பாலும் பொதுக்கட்டிடங்களிலும் கோயில்களில் வளர்க்கப்பட்டன. பல்லவர்கள் மலையிலிருந்து குடைந்து எடுக்கிற கோயில்கள், மண்டபங்களைக் கட்டினர். பல்லவர் கால இறுதியில் ஆரம்பமான கல்கோயில்கள் கட்டுவது விரிவாகப் பரவியது. சோழ ஆட்சியின் பரப்பும் செல்வமும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணணமுமாக விரியவும் பெருகவும் செய்தன. அதற்குத் தகுந்தவாறு அவர்கள் கட்டிய கோயில்களும் நிலப்பரப்பிலும் உயரத்திலும் கலைத்துறையிலும் தனிச் சிறப்புகளுடன் விளங்கின. தஞ்சையிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும் சோழர்கள் கட்டிய கோயில்கள் இன்றும் அவர்களது செழிப்பையும் உயர்வையும் காட்டி நிற்கின்றன. இன்னும் சோழரின் கட்டிடத் திறனுக்கு முடிசூட்டியது போல அமைந்திருப்பது கும்பகோணம், தாராசுரம், திரிபுவனம் ஆகிய இடங்களில் அவர்கள் அமைத்த கோவில்கள் ஆகும்.

**முற்கால பிற்கால சோழர் கலைகள்**

சோழர் காலக் கட்டிடக் கலை வரலாற்றை அறிஞர்கள் முற்கால சோழர் கலைகள், பிற்காலச் சோழர் கலைகள் எனவும் பிரிக்கின்றனர். முற்காலம் என்பது கி.பி. 866-985 வரையிலானதாகும் என்பர். விசயாலயச் சோழன் முதல் இராஜராஜன் காலம் வரையிலானதாகும்.இராஜராஜன் சோழப் பேரரசை விரிவுபடுத்தியதால் பிற பகுதிகளின் கலைகள் இணைந்து தனித்துவத்துடன் பிற்காலச் சோழர் கலைகள் விளங்கின.விஜயாலயச் சோழீச்சுவரம், மூவர் கோயில், நாகேஸ்வரசுவாமி கோயில், திருக்கட்டளை சுந்தரேஸ்வரர் கோயில்,குரங்குநாதர் கோயில், பிரம்மபுரீஸ்வரர் கோயில் ஆகியன முற்காலச் சோழர் காலத்தவையாகும். தஞ்சை பெருவுடையார் கோயில், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம் கோயில்கள் பிற்காலச் சோழர் காலக் கலைகளின் சிறப்பை விவரிப்பவனாகக் காணப்படுகின்றன.

**விஜயாலயச் சோழீச்சுரம்**

புதுக்கோட்டை அருகே நார்த்தாமலையில் விஜயாலய சோழீச்சுரம் என்ற கோயில் உள்ளது. இதனுடைய காலம் குறித்த கருத்து வேறுபாடு அறிஞர்களிடையே உண்டு. விஜயாலயச் சோழனது காலம் என்று சிலரும் முத்தரையர் காலம் என்றும் சிலரும் கூறுவர். இங்கு பிரதான கோயிலைச் சுற்றி எட்டு பரிவாராலயங்களும் தனித்தனியே அமைந்துள்ளன. மேற்கு நோக்கியுள்ள வட்டவடிவமான பிரதான கருவறையைச் சுற்றி சதுரவடிவம் மூடப்பட்ட திருச்சுற்று அமைந்துள்ளது. இது சாந்தார வகைக் கருவறை அமைப்பாகும். இங்குள்ள துவாரபாலகர் சிற்பங்கள் அழகானவையாகும். இதன் ஹாரத்தில் நாட்டியச் சிற்பங்கள் உள்ளன. இதே காலத்தவையயாகத் திருச்சி மாவட்டம் காளியாப்பட்டி, திருப்பூர், விசலூர் ஆகிய இடங்களில் விசயாலன் கட்டிய கோயில்கள் காணப்படுகின்றன.

**மூவர் கோயில்**

திருச்சி மாவட்டம் கொடும்பா;ர் இருக்குவேளிர் சிற்றரசர் பூதிவிக்கிரம கேசரியால் கட்டப்பட்டது. மூவர் கோயிலில் உள்ள மூன்று விமானக் கருவறைகள் மன்னன் மற்றும் அரசியர் இருவர் பெயராலும் கட்டப்பட்டவையாகும். இதனுடன் பதினாறு துணைக்கோயில்கள் அமைந்திருந்தன. இரண்டு கோயில்களின் உபானத்தின் மீது விரிந்த தாமரையைக் கவிழ்த்து வைக்கப்பட்டிருப்பது போன்ற அமைப்பு உள்ளது. இது பத்மபு'கல அதிட்டான அமைப்பு ஆகும். மூவர் கோயிலைக் கம்போடியா மற்றும் ஜாவா நாட்டுக் கோயில்களுடன் ஒப்பிடலாம்.

**குரங்கு நாதர் கோயில்**

கி.பி.907இல் முதலாம் பராந்தகன் கபலத்தில் கட்டப்பட்டது. இது திருச்சி மாவட்டம் சீனிவாசநல்லூரில் அமைந்துள்ளது. இது சதுர வடிவில் அமைந்த சாந்தார அமைப்புடைய கோயிலாகும். இதனையே பின்னர் இராஜராஜனும் இராஜேந்திரனும் பின்பற்றினார்.

**தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்**

இராஜராஜசோழனின் தஞ்சைப் பெரிய கோயில் இப்பேரரசனின் கீர்த்தியை எடுத்துக்காட்டுவதாகும். முந்தயை கோயில்களைவிட பரப்பிலும் அமைப்பிலும் கலைநுணுக்கத்திலும் சிறந்த இக்கோயில் கலை வல்லுநர்ளின் மிகப்பெரும் சாதனையாகும். சதுர வடிவ விமானம் 13 தளங்கள் கொண்ட 60 மீட்டர் உயரம் (சுமார் 216 அடி) கொண்டது. இதன் உச்சியில் உள்ள கல் 80 டன் எடையுள்ளது. விமானச் சுவர்களில் இரண்டு வரிசையாக தேவகோ'டச் சிற்பங்கள் உள்ளது. விமானத்தின் உச்சியில் கிரீவப் பலகையில் வைக்கப்பட்டுள்ள நந்திகள் மாமல்லபுரத்தினை நினைவூட்டுகின்றன. கோயிலுக்கு முன் உள்ள நந்தி 12 அடி உயரமும் 191.∴2 அடி அகலமும் கொண்டது. கருவறையில் மிகப்பெரிய லிங்கம் பீடத்தின் மீது அமைந்துள்ளது. நுழைவாயிலில் பெரியதும் சிறியதமான வாயில்கள் உள்ளன. சிரியதுகேரளாந்தகன் வாயில் என்றும் பெரியது இராஜராஜன் திருவாயில் எனவும் அழைக்கப்படுகின்றன. முதல் தளத்தில் உட்சுவரில் 108 நடனக் கரணங்கள் அமைந்துள்ளன. சோழர் கலைகளின் உச்சத்தை இக்கோயில் இன்றும் விளக்கி நிற்பதாகும்.

**கங்கை கொண்ட சோழபுரம்**

முதாலம் இராசேந்திர சோழன் ஆட்சிக்கு வந்தபின் கங்கைச் சமவெளியின் வெற்றியின் நினைவாகக் கட்டப்பட்டதே கங்கை கொண்ட சோழீச்சுரம் ஆகும். இங்கு தஞ்சை பெரிய கோயிலை ஒத்த அதனை விட சிறிய அளவிலான கோவில் உள்ளது. இராஜேந்திரன் அரண்மனை அமைந்த இடம் 'மாளிகை மேடு' என அழைக்கப்படுகிறது. இங்கு காணப்படும் கோவிலின் கருவறையில் தேனியின் உருவம் காணப்படுவது இராசேந்திரனின் சாதனையாகும். முதன்முதலாக அம்மனுக்குத் தனிக்கோயில் அமைந்ததும்.முகமண்டபத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தூண்களைக் கொண்ட அமைப்பு ஏற்படுத்திப் பிற்கால ஆயிரங்கால் மண்டபங்களுக்கு முன்னோடியாக விளங்கியதும், நவக்கிரகப்பலகை ஒன்றை அமைத்துள்ளதும் ஆகும்.

**தாராசுரம்**

இரண்டாம் இராஜராஜன் காலத்தில் கும்கோணத்தருகே தாராசுத்தில் கட்டப்பட்டது ஐராவதேசுவரா் கோயில் ஆகும். இதன் மாகமண்டபம் சக்கரங்களின் மீது நிற்கும் ரதம் போன்ற அமைப்புடையது. ஐந்து தளங்களைக் கொண்டது. மேல் தளங்களின் மூலைகளில் கா்ணக்கூடுகள் சதுரம், எண்கோணம், வட்ட வடிவங்களைக் கொண்டுள்ளன. விமானச் சுவா்ப் பகுதிகள் 63 நாயன்மாா்களின் வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்கள் உள்ளன.

**ஓவியக்கலை**

நாா்த்தாமலை விஜயாலய சோழீச்சுரம், மலையடிப்பட்டி குகைக்கோயிலும் ஓவியங்கள் காணப்பட்ட சுவடுகள் உள்ளன. தஞ்சைக் கோயிலிலும் சுவரில் சோழா் கால ஓவியச் சுவடுகள் உள்ளன. சிவபெருமான் கயிலைக்காட்சி. அமா்வு நிலையும் ஓவியமாக்கப்பட்டன. பெண்கள் நடனமாடும் காட்சிகளும் உள. சேரமானும் சுந்திரமூா்த்தி நாயனாரும் கயிலைக்குச் செல்வதும் அங்கு அவா்களை வரவேற்பதுமான காட்சிகள் ஓவியமாக்கப்பட்டுள்ளன. சுந்தரா் பெருமானின் திருமணக்காட்சி, சிவபிரான் முப்புரம் எரிந்த வரலாறு ஆகிய ஓவியங்களும் உள்ளன. இதைத்தவிர இராவணன் கயிலையைத் தூக்குதல் காட்சியும் இடம் பெற்றுள்ளது. இன்னும் இரு உருவங்கள் ஓவியமாக்கப்பட்டுள்ளன. இதனை அறிஞா்கள் முதாலாம் இராஜராஜனும் அவரது குரு கருவூா்த்தேவரும் எனக் கணிக்கின்றனா். இங்கு காணப்படும் அனைத்து ஓவியங்களும் 'நாடகத் தொகுதி' போல் அமைந்த உணா்ச்சி மிகுந்த கண்கவா் உள்ளம் கவா் ஓவியங்களாகும்.

## பாண்டியா்கள்

**பாண்டிய நாடு**

மதுரைத் தலைநகராகக் கொண்ட பாண்டியமண்டலம் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களைத் தன்னத்தே கொண்டுள்ளது.

**பாண்டியர் மரபு**

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே பாண்டியர்கள் குறிக்கீடு இன்றி ஆண்டு வந்துள்ளனர் என்பது அசோகரின் 'த்தாபுரம், பிரம்மகீரிக் கல்வெட்டுச் செய்திகள் வாயிலாக நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. பாண்டியர் மரபு மிகவும் தொண்மையான ஒன்றாகும். "கபாடபுரம்" கோட்டை பொன்னும் முத்தும் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது என்று வால்மீகி இராமாயணத்தில் குறிப்பு உள்ளது.

வியாகசரின் பாரதம் அர்ச்சுனன், பாண்டியன் மகளை மணந்தார் என்று குறிப்பிடுகிறது.

சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த கிரேக்கதூதர் மெகஸதனிக இண்டிகாவில் தென்கோடியில் (இந்தியாவில்) பாண்டிய நாடு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். காரவேலனின் ஹதிகும்பா குகைக் கல்வெட்டுகளும் பாண்டிய மன்னர் பற்றிச் சான்று பகர்கின்றது.

யவணர்களைத் தென்பாண்டிக்கு இழுத்து வந்தது முத்தேயாகும். தென்பாண்டிக் கடலில் கிதை்த முத்தினால் ரோமப் பேரரசுக்கும் தமிழகத்திற்கும் வாணிபத் தொடர்பு இருந்தது எனத் தெரிகிறது. ஏராளமான ரோம நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பாண்டிய மன்னன் ஒருவன் அகஸ்டஸ் மன்னரின் அரசவைக்குத் தூது அனுப்பிய செய்தியை ஸ்ட்ராபோ குறித்துள்ளார்.

**பாண்டிய மன்னர்களின் சாதனை**

கபாடபுரம், மதுரை, தென்மதுரை ஆகிய இடங்களில் முதல், இடை, கடைச் சங்கமென முச்சயங்களை நிறுவித் தமிழை வளர்த்தனர். கொடியில் கயலும், அடையாள மாலையாக வேப்பமாலையும் கொண்டிருந்தனர். கூடற்கோமான், செழியன், தென்னவன், மீனவன், வழுதி மாறன் என்று பாண்டிய மன்னர்கள் அழைக்கப்பெற்றனர்.

**தலைநகர்**

பாண்டியர்களின் எல்லையாக வடக்கே வெள்ளாறும், தெற்கே குமரிமுனையும், மேற்கே பெருவெளியும் கிழக்கே கடலும் அமைந்திருந்தன. தென்பகுதியிலிருப்பதால் தென்னகம் என்று அழைக்கப்படுகிறது. இது ஐம்பத்தாறு மைல் பரப்பளவாகும்.

கன்னியாகுமரிக்குத் தெற்கே பெரும் நிலப்பரப்பு வரை பாண்டிய நாடு பரவிருந்ததாகவும் அங்கு அதன் தலைநகரான தென்மதுரை இருந்ததாகவும் கூறப்படுகிறது. ப∴றுளி ஆறும் தென்மதுரையும் கடலினால் அழிக்கப்பட்டன என்று சிலப்பதிகார அடிகள் வலியுறுத்துகின்றன.

அதன்பின் கபாடபுரம் தலைநகராக இருந்ததெனவும் அதுவும் கடலால் அழிந்தவுடன், மதுரையே அதன் தலைநகராயிற்று எனவும் கூறப்படுகிறது பாண்டியர்களின் துறைமுகமாக கொற்கை இருந்தது.

## சங்ககாலப் பாண்டிய மன்னர்கள்

### அ)நிலந்தருதிருவின் நெடியோன்

பாண்டிய மன்னர்களுள் இம்மன்ன் முற்பட்டவர். வடிவம்பலம் நின்ற பாண்டியன், மாகீர்த்தி போன்ற பல பெயர்களும் உண்டு. நீண்ட காலம் ஆட்சி செய்ததால் நெடியோன் என்ற பெயர் ஏற்பட்டது. தொல்காப்பியர் அரங்கேறியது இவரது அவையில்தான். ப∴றுளி யாரும் தலைநகரும் அழிந்ததும் இவரது காலத்திலேயாகும். இவ்விழப்பை ஈடுகட்ட வடபகுதியினை வென்றார்.

### ஆ)பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

இப்பாண்டிய மன்னர் வேள்விகள் பல நிகழ்ச்சியதால் இப்பெயர் பெற்றார். வேள்விக்குடிச் செப்பேடுகள், கொற்கைசைச் சேர்ந்த நற்கொற்றன் என்பானுக்கு வேள்வி நிகழ்த்திட அவ்வூரைக் கொடையாக வழங்கிய செய்தியினைக் கூறுகிறது. நெட்டியமையார் என்ற புலவர் "மானம் இழந்து வாழும் நின் பகைவர்களின் எண்ணிக்கை அதிகமா? சிறந்த வேள்விகளை முடித்து நாட்டிய வேள்வித் தூண்களின் எண்ணிக்கை அதிகமா?" என வினா வெழுப்பியுள்ளார்.

### இ)பாண்டியன் அறிவுரை நம்பி

கோப்பெருஞ் சோழனைப் பாடிய பிசிராந்தையார் இந்த மன்னவனைப் பற்றியும் பாடியுள்ளார். பாடல் இயற்றுவதிலும் சிறந்தவராக இவ்வரகன் விளங்கினார். குழந்தைச் செல்வத்தின் சிறப்பினை விளங்கும் பாடலில் காணப்படும் "சிறுகை அளாவிய கூழ்" என்ற பாடல்வரி இலக்கியச் சிறப்புடையது. நேர்மையாக வரி பெறுவதன் பயனையும் பற்றிப் பாடல் எழுதியுள்ளார்.

### ஈ)ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

பாண்டியன், நாட்டின் எல்லைப் பகுதியைச் சோழரிடமிருந்து மீட்டதால் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்னும் பெயர் பெற்றார். மையல் ஊர் மாதவன், எயில் ஊர் ஆந்தை, அந்துவஞ் சாத்தன் ஆதன் அழிசி, இயக்கன் முதலானோர் இவர்தம் நட்பிற்குரியவர்கள். இவர் மனைவி பூதப்பாண்டியன் இறந்த துயர் தாங்காது அவர் ஈமத்தியில் மாண்டார். கைம்மை நோன்பின் கொடுமையை இவர் பாடிய பாடல் உணர்த்தியது.

### உ)ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

ஆரிய அரசர்களைத் தோற்கடித்து விரட்டியதால் 'ஆரியப்படைகடந்த' என்று அடைமொழியால் சிறப்பித்துக் கூறப்பட்டார். சிலப்பதிகார நிகழ்ச்சிகள் மதுரையில் நடந்ததும் பிழையான நீதி வழங்கி வளையாத செங்கோலை வளையச் செய்தமையால் "யானே கள்வன்" என உயிர்நீத்து நீதி நிலைநாட்டிச் சாய்ந்த பாண்டிய அரசர் இவரேயாவார்.

**ஊ)வெற்றிவேல் செழியன்**

ஆரியப்பகை டந்த நெடுஞ்செழியனின் தம்பியாவார். இவர் காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது. அதனை போக்கிடப் பத்தினித் தெய்வம் கண்ணகிக்கு விழாவெடுத்துப் பொற்கொல்லா் ஆயிரவரைக் கொன்று சினம் துணித்தார் என்றும் சிலம்பு கூறுகிறது. சித்திரமாடத்தில் இறந்தமையால் ‘சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்’ என்ற பெயரினையும் பெற்றார்.

**எ)தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்**

மிக இளையோனாய் இருக்கையிலேயே அரியணை ஏறியவர். சங்க காலப் பாண்டிருள் சிறந்தவர். தம்மை இளையோன் என்று எண்ணி எதிர்த்த சேரன், ஐந்து வேளிர் ஆகியோரைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தவர். தலையலங்கானம் என்னுமிடத்தில் தோல்வியுறச் செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

இவ்வெற்றியின் பயனாய் மிழலைக் கூற்றம், முத்தூர்க் கூற்றம், ஆகிய நிலப்பகுதிகள் பாண்டிய நாட்டுடன் இணைக்கப்பட்டன. சேரநாட்டை வென்று பொற்பாவை ஒன்றினைக் கொணர்ந்தார். கொங்கரையும் திறை செலுத்த மறுத்த பரதவரையும், குட்டநாட்டவரையும் வென்று பணிய வைத்தார். மாங்குடி மருதன், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் குறிப்பிடத்தக்க இவர்காலப் புலவர்கள். நெடுநெல்வாடையும் மதுரைக் காஞ்சியும் செழியனின் பண்புநலன்களைப் போற்றுகின்றன.

**ஏ)கானப்பேரெயில் உக்கிரவழுதி**

இன்றைய காளையார் கோவிலே கானப் பேரெயில் என்று அழைக்கப்பட்ட பகுதியாகும். அங்கு வேங்கை மார்பன் என்னும் பெயருடையோன் ஆட்சி செய்தான். வேங்கை மார்பனைத் தோற்கடித்துக் கோட்டையைக் கைப்பற்றினார். இவ்வெற்றியினால் கானப் பேரெயில் கடந்த, எனும் அடைமொழி பெற்றார். மூலங்கினார் என்னும் புலவர் இவ்வெற்றியினைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். சங்கப் பாடல்களில் அகநானூறு என்னும் நூலினைத் தொகுத்தவர்.இவர் பாடல் இயற்றும் வல்லவர் சேர மன்னர்கள் மாரி வெண்கோ, சோழன் இராச சூயயாகம் வேட்ட பெருநற்கிள்ளியுடன் நட்புப் பூண்டிருந்தார். இம்மூவரும் ஒரு சேர வாழ்ந்ததை ஔவையார் பாராட்டியுள்ளார்.

**பிற பாண்டிய மன்னர்கள்**

இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன், மாறன் வழுதி, வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, பொற்கைப் பாண்டியன், மூடத்திருமாறன் முதலிய சேரமன்னர்கள் பற்றியும் இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம் சேர, சோழ மரபுகள் போலவே பாண்டிய மரபும் வரலாற்றிலிருந்து மறைந்தது.

**சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் வரலாறு**

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களைப் பற்றி நாம் அறிந்திட சங்க கால நூல்களே ஆதாரங்களாக உள்ளன. ஆனால் அவ்விலக்கிய நூல்கள் எழுதப்பட்ட காலங்கள் முரண்படுகின்றன. வெவ்வேறு புலவர்களால் பாடப்பெற்றிருப்பதால் பாண்டிய வரலாற்றை தொடர்ச்சியாக காலமுறைப்படி எழுதிட இயலவில்லை. சங்ககால

இலக்கியங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு ஒருவாறு பாண்டியர் வரலாறு தொகுக்கப்பட்டு உள்ளது.

**பிற்காலப் பாண்டியர்களின் சமயப் பணிகள்**

சங்க கால சமயப்பூசல் இல்லாத அமைதியான காலமாக இருந்தது அதற்குப்பின் வந்த களப்பிரர், பல்லவர் காலம் சமயப்பூசலின் காலமாக இருந்தது. சமண, பௌத்த சமயத்தவர் செல்வாக்குப் பெற்றனர். சைவரும் வைணவரும் புற சமயத்தவரை விரட்டுவதில் பெருமுயற்சி உடையர் ஆயினர்.

திருஞாணசம்பந்தர் பாண்டியனை சைலனாக மாற்றினார். நின்ற சீர் நெடுமாறனின் அரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சைவ சமயம் தழைக்கப் பாடுபட்டனர். திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரவழைத்தவர்களும் அவர்களே!

பாண்டிய நாட்டின் திருஆலவாய்,திருஆப்பணூர், மதுரை திருப்பரங்குன்றம், திருவேடம், திருக்கொடுங்குன்றம் ஆகியவற்றைப் பற்றி சம்பந்தர் பாடினார். மதுரையில் சமணர்களை அனல்வாதம், புனல்வாதம் செய்து வென்றார்.

திருஆலவாய், திருப்புத்தூர், இராமேஸ்வரம், திருப்பூவனம் ஆகிய தலங்களை அப்பர் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் நண்பர் சேரமான் பெருமாள் நாயனாருடன் மதுரைக்கு வந்து திருப்பரங்குன்றம் திருவேடகம் கோவில்களுக்குச் சென்று பாடி வழிபட்டனர்.

மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுண பாண்டியனின் அமைச்சராயிருந்தார். இவர் சிதம்பரத்தில் பௌத்தர்களை வாதத்தில் வென்றார்

பாண்டிய மன்னர்கள் பலரும் சைவக் கோவில்களின் வளர்ச்சிக்கும் பெருந்தொண்டு புரிந்தனர். பல நீவந்தங்கள் வழங்கி, விழாக்கள் நடத்தினர். பாண்டியன் வரகுணன் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவன் கோயிலுக்கு 290 பொற்காசுகள் அளித்தார்

வீரபாண்டியன் மனைவி திருவொற்றியூர் கோயிலுக்கு பொண் ஆபரணங்கள் வழங்கினார்.

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் சிதம்பரம் கோயிலுக்குப் பொண் வேய்ந்தார். மதுரைக் கோவிலில் கீழைக் கோபுரத்தை அமைத்தார்.

குலசேகர பாண்டியன் மதுரைக் கோவிலின் சாமி சன்னிதி அர்த்த மண்டபம் கட்டினார். மேலைக் கோபுரம் பராக்கிராம பாண்டியனால் கட்டப்பட்டதாகும்.

கோவில்களில் நாள்தோறும் இசைமழை பொழிம் பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. அதிகாலையிலும் இரவிலும் தேவாரப் பாடல்கள் பாடப்பட்டன. மார்கழி மாதத்தில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டன.

நாயன்மார்களின் சிலைகள் கோவில்களில் வைக்கப்பட்டன.

மதுரை மடம், பிட்சாமடம், திருவரூர் மடம், காசிமடம் போன்ற மடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

நம்மாழ்வார், பெரியாழ்வார்,ஆண்டாள், மதுரகவியாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்களும் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர். இவர் தம் தொண்டால் வைணவம் வளர்ந்தது.

பெரியாழ்வார் பாண்டியனின் வேண்டுகோளின்படி மதுரை சென்று திருமாலின் பெருமைகளைப் பரப்பினார்.'பட்டர்பிரான்'என்று சிறப்பிக்கப்பட்டார். திருப்பல்லாண்டும், பெரியாழ்வார் திருமொழியும் வைணவ இலக்கியங்களாயின.

திருக்கோட்டியூர் நம்பி, திருவாய்மொழிப் பிள்ளை போன்ற ஆச்சாரியர்களும் திருமாலுக்குத் தொண்டு செய்தனர். வைணவ மடங்கள் பலவும் ஏற்படுத்தப்பட்டன.

மதுரையைச் சுற்றியிருந்த ஆனைமழை, பரங்குன்றம் ஒருவகம், பப்பாரம், பள்ளி, பேராந்தை, இருங்குள்ளம், அருங்குன்றம் என்ற எட்டுமலைகளில் சமணமயத்தினர் செல்வாக்குடன் இருந்தனர்.

சமண தீர்த்தங்கரர்களின் புடைப்பு சிற்பங்கள் செய்விக்கப்பட்டன. கழுகுமலையில் சமணத் திருவுருவங்கள் பல பாறையில் செய்விக்கப்பட்டன. பாகுபலி, பார்சுவநாதர், நேமிநாதர், மகாவீரர், இலக்கி, அம்பிகா போன்ற பல சமணத் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

பௌத்தப்பள்ளி ஒன்று மதுரை மாநகரில் இருந்தது. தருமபாலர் என்ற பௌத்த ஆசிரியர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். இராமேஸ்வரம் அறியாங்குன்று பகுதியில் பௌத்தப்பள்ளி ஒன்று இருந்து அழிந்து போனது.

**பாண்டியர் கால சமூகமும் பண்பாடும்**

**முன்னுரை**

சங்ககாலத்தில் பேரரசாக இருந்த பாண்டியர்கள் சமூகத்தையும் தமிழையும் இணைத்தே வளர்த்தனர். இடையில் பாண்டியர்கள் வீழ்ச்சியினால் சிற்றரசர்களாகவும் குறுநில மன்னர்களாகவும் இருந்து வந்தனர். கி.பி.11ம் நூற்றாண்டில் சோழர்களின் இசைவுடன் ஆட்சியைப் புதுப்பித்தனர். 13ம் நூற்றாண்டில் சோழர்கள் வீழ்ச்சியடைந்தனர். இந்நிலையில் பாண்டியர்கள் வீறு பெற்று எழுந்தனர். அவர்களுள் சடையவர்ம குலசேகரன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன். இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் முதலியோர் பாண்டியர் தம் வலிமையைப் பெருக்கி நாட்டைக் காத்தனர்.

**பாண்டியர் ஆட்சியும் அரசியலும்**

பாண்டி மண்டலம் என்பது மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மூன்று ஜில்லாக்களைக் கொண்டது. இவை பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டது நாடு பல கூற்றங்களை உள்ளடக்கியது. நாடுகளையும் கூற்றங்களையும் உள்ளடக்கியது வளநாடாகும். இங்கனம் வகுக்கப்பட்ட பாண்டி நாட்டிற்கு அரசனே தலைவன். அமைச்சர், படைத்தலைவர், அரையர், நடுவகை முதலானோர் அரசு அதிகாரிகள் ஆவர்.

**அரசிறை**

குடிகள் அரசர்க்கு நிலவரி செலுத்தினர். இதனின்றி தறியிறை செக்கிறை, தட்டார்ப்பட்டம், இடைவரி என்பது போன்ற வரிகளையும் செலுத்தினர்.

**வணிகமும் தொழிலும்**

பாண்டி நாட்டில் வணிகம் செழித்திருந்தது. மதுரை கொற்கை நகரங்களில் கிடைத்துள்ள ரோமாபுரி நாணயங்கள் அதற்குச் சான்றாகும். பண்டங்களை ஓரிடத்திலிருந்து கொண்டு செல்ல பெருவழிகள் இருந்தன. சுமந்து செல்ல கோவேறு கழுதைகளும் வண்டிகளும் பயன்பட்டன. இடையே பாதுகாவலுக்காக காவற்படைகள் அமைக்கப்பட்டிருந்தன. வணிகர்கள் கூட்டமாகச் செல்வது வாணிகச் சாத்து எனப்பட்டது. சிறந்த வணிகர்க்கு 'எட்டி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.முத்துக்குளித்தல், சங்குறுத்து வளையல் செய்தல், உப்பு விளைவித்தல், நூல் நூற்றல், ஆடை நெய்தல் முதலிய தொழில்கள் பாண்டிய நாட்டில் டைபெற்றன.

**கல்வி**

கடைச்சங்க காலத்தில் கல்வி இன்றியமையாதது என்பதை மன்னர்கள் அறிந்திருந்தனர். எனவே பாண்டிய நெடுஞ்செழியன் அறவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்று பாடினான். பெண்களும் எளியோரும் விருப்பப்படி கற்றனர். சங்கம் வைத்து தமிழ் வளர்த்து புலவர்களை ஆதரித்தனர்.

**சமயநிலை**

பாண்டியர்கள் அனைவரும் பெருபாலும் சைவ சமயத்தினராக இருந்தனர். உமையம்மையார் மீனாட்சி என்ற பெயருடன் மதுரையை ஆண்டார் என்றும், சோம சுந்தர பாண்டியர் என்ற பெயருடன் சிவபெருமான் மதுரையை ஆண்டார் என்றும் புராணக் குறிப்புகள் காணப்படுகின்றனர் பாண்டிய நாட்டு மக்கள் பெரும்பான்மை சைவ சமயத்தினர். தவிர வைணவர், சமணர், பௌத்தராகவும் இருந்தனர். மன்னர்கள் சமயப் பொறையோடு மக்களை ஆண்டனர். பிற்காலத்தில் சில சமப்பூசல்களும் உண்டு என்பர்

**சமூக அமைப்பு**

பாண்டிய நாட்டில் 'சாதி' என்ற சொல்லுக்குப் பதில் குடி என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டது. அந்தணர், வணிகர், வேள்ளாளர், மறவர், வலையர், கைகோளர், தச்சர், தட்டார், இடையர், குயவர், பரையர், பள்ளர், சண்டாளர் போன்ற பல்வேறு பிரிவினர் காணப்பட்டனர்.

அந்தணர்கள் உயரிடம் வகித்தனர். அமைச்சர், படைத்தலைவராகவும் செசயல்பட்டனர். வணிகர்கள் நகரத்தார் செட்டியார் எனவும் அழைக்கப்பட்டனர். வேளாளர் என்போர் அநதணருக்கு அடுத்த இடத்தைப் பிடித்தருந்தனர்.

இவர்கள் பூமிபுத்திரர் என்றும் சித்தரமேழி பெரிய நாட்டார் எனவும் அழைக்கப்பட்டனர். பொதியமலை ஆய்நாடு ஆயர்கள் அதிகம் வாழ்ந்த நாடாகும். பாண்டிய நாட்டிலும்

வலங்கை இடங்கைப் பிரிவுகள் இருந்தன என்று தென்கரை, பெருங்குளம், பொன்னமராவதி கல்வெட்டுகளும் கூறுகின்றன.

**நீதியும் தண்டனைகளும்**

மன்னர்கள் நீதி செய்வதில் நடுநிலைமையுடையவராக இருந்தனர். கிராமங்களில் நீதி செய்யும் முறைமைகளும் இருந்தன. பெருங்குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வரை வழங்கப்பட்டுள்ளது.

**ஆடை ஆபரணங்கள்**

ஆடைகளில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. எளிவர்கள் மிக எளிமையான ஆடையே உடுத்தினர். செல்வந்தரும் மன்னர்களும் அரசு அதிகாரிகளும் மேலாடை அணிந்தனர். ஆபரணங்கள் அணிவதில் மன்னரும் அவரது குடும்பத்தினரும் அதிக கவனம் செலுத்தினர். உயர்ரக முத்துக்கள் நவரத்தினங்கள் ஆன அணிகலன்களை அணிந்தனர்.

**உணவுப் பழக்கவழக்கங்கள்**

பாண்டிய நாட்டு மக்கள் தங்கள் வீட்டைச் சாணம் மெழுகி சுத்தமாக வைத்திருந்தனர். தரையில் அமர்ந்து உணவு உண்ணுவதை அனைவரும் மேற்கொண்டனர். கூழானாலும் குளித்துக் குடித்தனர். உணவை இடக்கையால் தொடுவதில்லை. நீரை அண்ணாந்து குடித்தனர். மது அருந்துவது தீமையும் குற்றமுமானது எனவும் எண்ணினர்.

**பெண்கள் நிலை**

பெண்கள் அரசு அலுவல்களில் மற்றும் பொதுப்பணிகளில் பங்கெடுக்கவில்லை. கூலிவேலை, காய்முடைதல், நெசவு, பால் பொருட்கள் விற்றல், மீன் விற்றல், நாற்று நடல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர். பெண்களின் திருமணம் பெற்றோர் விருப்பப்படியே நடந்தது. பெண் வீட்டார் திருமணச் செலவை ஏற்றனர். தேவரடியார் கோவிலில் நடனமாடி வாழ்ந்தனர். மடங்களில் பொட்டு கட்டு விடப்பட்ட பெண்களும் இருந்தனர். உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது.

**பொருளாதார ஆதாரம் வேளாண்மை**

விவசாயமே பாண்டிய நாட்டின் ஆதாரமாக விளங்கியது. ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் வெட்டி பராமரித்தனர். இதற்கென தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். கிணறுகள், ஓடைகள் நீர்நிலை ஆதாரமாக இருந்து வந்தன. வரி பணமாகவும், பொருளாகவும், நெல்லாகவும் செலுத்தினர். நிலங்களைப் பதிவு செய்யும் ‘ஆவணக்களர்’ இருந்தது. கொற்கையில் ‘நாணயச் சாலை’ இருந்தது. பாண்டியர்கள் காசு, பொன், காணம், பழங்காசு, ஈழக்காசு, அச்சும், கிரமம், பணம், புதுக்குளிகைப் பணம் போன்ற நாணயங்கள் புழக்கத்தில் இருந்தது.

**சங்ககால குறுநில மன்னர்களின் வரலாறு**

சேர, சோழ, பாண்டியர் தவிர ஏராளமான குறுநில மன்னர்கள் அவர்களைச் சுற்றிலும் ஆட்சி செலுத்தினர். மூவேந்தர்களுக்குப் போர், அமைதிக் காலங்களில்

துணையாக நின்றனர். குறுநில மன்னர்கள் பொதுவாக வேளிர்கள் என்று அழைத்தது போவே நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதாலன உரையாசிரியர்களும் அழைத்தனர்.

**பொருள்**

கபிலர், புறநானூற்றுப் பாடலில் வேளிரின் தோற்றம் பற்றி விளக்கிக் கூறுகிறார். புலிகடிமால் என்பது வேளிர்களின் பட்டயங்களில் ஒன்றாக இருந்தது. தமிழகத்தின் எல்லையிலே முதலில் தோன்றிய வேளிர் பின்னர் தமிழ்ப் பகுதிகளுக்குப் பரவினர். வேளிர் சிலர் மூவேந்தர்களை விட செல்வாக்குப் பெற்றமையால் மூவேந்தர்களின் பொறாமைக்கு ஆளாயினர்.

**தொன்மை**

சங்க இலக்கியங்களில் குறுநில மன்னர்களே புலவர்களால் பெரிதும் புகழ்ந்துரைக்கப்பட்டனர். புறநானூற்றில் 13 ஆற்றுப்படைப் பாடல் வருகின்றன. அதில் எட்டுப் பாடல்கள் குறுநில மன்னர்களைப் புகழ்பவை. மூவேந்தர் காலம் முதலே வேளிரும் ஆட்சி செலுத்தியவர்கள் என்று பரிமேலழகர் கூறுகிறார். நச்சினார்க்கினிரும் அவ்வாறே உரைக்கிறார். தொல் முதிர்வேளிர், தொக்முது வேளிர், எவ்வித தொல்குடி முதலிய சொல்லாட்சி அவர்களின் தொன்மையைக் காட்டும்.

**மணஉறவு**

இவ்வேளிர்கள் தங்கள் புதல்வியரை மூவேந்தர்களுக்கு மணம்முடித்துக் கொடுத்துள்ளார். உருவப்பறோ் இளஞ்சேட் சென்னியினை அழுந்தூர்வேள் மகள் மணந்தாள். நாங்கூர்வேள் மகளைக் கரிகாலனும், வெளியன் வேண்மாள் மகளை உதியஞ்சேரலாதனும், வேள் ஆவிக்கோமான் மகளை இமயவரம்பனும் மணந்தது சான்றுகாளாகும்.

**முடி அணிதல்**

முடி அணியும் உரிமை மூவேந்தருக்கே இருந்தது என்பதற்குத் தொல்காப்பியம் சான்றாகும். பெயா தெரியாத புலவர், அண்ணி என்ற கூறுகிறார்.(அன்னியும் பெரியன் அவனினும் விழுமிய அருபெருவேந்தர்).

**கடையெழு வள்ளல்கள்**

கீழ்க்கண்டோரை கடையெழு வள்ளல்கள் என்று அழைக்கும் மரபு உள்ளது. பெருஞ்சித்திரனார், கடையெழு வள்ளல்கள் பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நல்லி என வரிசைப்படுத்துகிறார்.

இத்தலைவர்களால் ஆளப்பட்ட பகுதிகள் இடைகழிநாடு, ஓய்மாநாடு, துளுநாடு, நாஞ்சில்நாடு, பூமிநாடு, முக்காவல்நாடு, குன்றநாடு, பறம்பு நாடு, எருமை நாடு, கோணாடு, புண்ணாடு, பல்குன்றக்கோட்டம், முத்தூற்றுக் கோட்டம், மிழிலைக் கோட்டம் முதலியனவாம்.

## 12.பல்லவர்கள்

### பல்லவர் வரலாறு

பல்லவர்கள் காஞ்சிபுரத்தை அரசு தலைமையாகக் கொண்டு கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் வடக்குப் பகுதியை ஆண்டனர். இவர்களைப் பற்றிக் கூறும் பட்டயங்கள் ஆரம்ப காவத்தில் பிராகிருதத்திலும் பின்னர் சமஸ்கிருதத்திலும் இறுதியில் தமிழிலும் காணப்படுகின்றன.

தமிழ் மரபிலிருந்து மாறுபட்டிருந்தன. வட இந்தியர்கள் புனித இடங்களாகக் கருதிய ஏழு நகரங்களுள் ஒன்று காஞ்சிபுரம் ஆகும். இத்தகைய நகரத்தை மையமாகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவர்கள் எங்கிருந்து வந்தனர்? என்பது குறித்தும் அவர்கள் யார்? என்பது குறித்தும் பல்வேறு கருத்துகள் நிலவின.

பிராகிருதப் பட்டயங்களால் அறியப்படும் வரலாற்றை முற்காலப் பல்லவர் காலம் எனப்படும். அடுத்து சமஸ்கிருதப் பட்டயங்களின் அறியலாகும் வரலாற்றை இடைக்காலப் பல்லவர் காலம் என்றும் தமிழ்ப் பட்டயங்களின் காலம் பிற்காலப் பல்லவர் காலம் என்றும் கூறலாம்.

முற்காலப் பல்லவர்களுள் மிக முக்கியமானவன் சிவகந்தவர்மன் ஆவான். இவன் நாட்டின் எல்லையை வடக்கில் கிரு'ணாநதி வரையில் தெற்கில் தென்பெண்ணையாறு வரையிலும் விரிவுபடுத்தியிருந்தான். இடைக்காலப் பல்லவர்களுள் முக்கியமானவர்கள் குமாரவி'ணு, சுந்தவர்மன், வீரவர்மன், இரணியகந்தவர்கள், சிம்மவர்மன் முதலியவர்களாவர் தொண்டை மண்டலத்திலிருந்த பல்லவர்கள் விரிவடையத் தொடங்கினர்

### பல்லவர் கால சமூக நிலை

சங்ககாலம் சமயக்காழிப்பு அற்ற பிற பாகுபாடுகள் இல்லாத சமூகமாக இயங்கி வந்தது. பக்தி இயக்கங்ளோடு சமயப் பிரிவனையும் சாதி பிரிவினைமளும் தொடங்கி பரவலாக ஆரம்பித்தன. இரண்டாம் மகேந்திரவர்மன் வர்ணாசிரம தர்மத்தைக் கடைபிடித்தான் என்று தெரிய லருகிறது.

பல்லவர் காலச் சமூகம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பிரிவினைகளைக் கொண்டாக மாறியது. ஆந்தணர் சமூகத்தில் உயர் மதிப்பு பெற்றனர். பிரம்மதேயமாக நிலங்களைப் பெற்றனர். அரசு அதிகாரிகளாகவும், அரசரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் முக்கிய பங்கும் பெற்றிருந்தனர். அமைச்சர், திருமந்திர ஓலை நாயகர், கிராமக் கணக்கர், கரணத்தார், வாரிய உறுப்பினராகவும் இருந்துள்ளனர்.

சத்திரியர் என்போர் அரச குலத்தைச் சேர்ந்தோர் ஆவர். மன்னர்களில் சிலர் சைவ நாயன்மார்களாகவும் இருந்தனர். கற்றறிந்த மேதைகளாகவும் காணப்பட்டனர். காடுகளை அழித்து நாட்டை உருவாக்கி 'காடு வெட்டிகள்' எனப் பெயர் பெற்றனர். அக்னிஸ்தோமா, அஸ்வமேதா, வாஜபேயா போன்ற யாகங்களைச் செய்தனர். தானம், மானியம் போன்றவற்றை வழங்கின மிக்கவர்கள்.

வைசியர் என்போர் வணிகர்கள் ஆவர். இந்தோசீனா, இந்தோனேசியா, இலங்கை, பாரசீக வளைகுடா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

கலை வல்லுநர்கள், ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள் செய்தல், எண்ணெய் தாயரித்தல், ஆடு மாடு வளர்த்தல், மட்பாண்டம் செய்தல் போன்ற தொழில்கள் செய்வோர் இருந்தனர். திருப்பாணாழ்வாரும், நந்தனாரும் கோயில்களுக்குள் அனுமதிக்கப்படாததை பெரியபுராணம் சுட்டுகிறது. அவ்வாறான நிலையும் பல்லவர் காலத்தில் இருந்ததை அறிய முடிகிறது.

பல்லவர் காலத்தில் பெண்கள் சமயப்பற்று மிகுந்தவராய் இருந்தனர். உயர்குடிப் பெண்கள் ாதாரணப் பெண்களும் சமயப் பணிகள் செய்துள்ளனர். பெண்களுக்கு சொத்துரிமை இருந்தது பலதார மணங்கள் இருந்துள்ளனர். பெண்கள் நெசவு, நூல் நூற்றல், பூ விற்றல், பால் விற்றல், பணிகளைச் செய்துள்ளனர். உடன்கட்டை ஏறுதல் பற்றிய குறிப்புகள் இல்லையெனினும் நடனமாதர் கணிகையர் எனப்பட்டனர்.

உணவுப் பழக்கவழக்கங்களில் அரிசி முதலிடம் பெறுகிறது. நெய், பால் போன்ற முக்கிய உணவுப் பொருட்கள் ஆகும். அப்பம், இனிப்பு கலந்த பால், பருப்பு போன்றன உணவில் சேர்க்கப்பட்டன. ‘அக்கார அடியில்’ என்னும் சர்க்கரைப் பொங்கள் கடவுளுக்குப் படைக்கப்பட்டது. வெற்றிலை போடும் பழக்கம் இருந்துள்ளது. அவல் அமுது, தயிர்சோறு, இறைச்சி உணவும் உண்ணப்பட்டது.

காறை என்ற கழுத்தணி, கடிப்பு, செவிப்புத்தோடு, குண்டலம், மகரக்குழை போன்ற காதணிகள், பாதகம், சிலம்பு போன்ற காலணிகளும் பெண்கள் அணிந்தனர். குழந்தைகள் கிண்கிணி, அரைத்தொடர், ஐம்படை பட்டம், கங்கனம், கட்டி போன்ற அணிகலன்களை அணிந்துள்ளனர்.

பல்லவர் காலத்தில் உயர்குல ஆண்கள் நீண்ட அங்கியான வேட்டி அணிந்தனர். கழனிகளில் பணிபுரிவோர் மிகச்சிறிய ஆடையான கோவணம் அணிந்தனர். செல்வந்தரும்,அரசர்களும் ‘உத்தரீயம்’ அணிந்தனர். கலிங்கம், பட்டு, பீதாம்பரம், மஞ்சளாடை துவர் ஆடைகளை அணிந்துள்ளனர்.வீரர்களுக்கு ‘நடுகல்’ எடுக்கும் பழக்கம் இருந்தது. பாவை நோன்பு இருக்கும் பழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. தை மாதம் மன்மதனை வணங்கும் வழக்கம் இருந்துள்ளது. மடலேறுதல் இருந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு பல்லவர் காலத்தில் மக்கள் பல்வேறு பழக்கவழக்கங்களைக் கடைபிடித்து

**பல்லவர் காலம் தமிழகத்திற்குத் தந்த கலைச் செல்வங்கள்**

**முன்னுரை**

பல்லவர் என்போர் தென்னிந்தியாவில் கி.பி.275 முதல் கி.பி.897 வரை சுமார் 550 ஆண்டுகள் தமிழகத்தில் நிலைத்து ஆட்சி செய்தவர்கள். இவர்கள் மணிபல்லவத் தீவிலிருந்து வந்தவர்கள்: தொண்டை மண்டலத்து பழங்குடிகள்: பஹலவர்கள் எனும் பாரசீக மரபினர் என்று பல்வேறு கருத்துக்கள் உண்டு. இவர்களது ஆட்சி வடக்கே கிரு‘ணா நதி முதல் தென்முக காவிரி வரை பரந்திருந்தது. இவர்கள் தமிழகத்தில் செய்த கலைப்பணிகள் இன்று வியக்கத்தக்கதாய் அமைந்துள்ளது. அதனை இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

## கலை இலக்கிய வளர்ச்சி

பல்லவர் காலத்திலேயே தமிழ்நாட்டில் இந்து சமய மறுமலர்ச்சியும் சிற்பம், இசை, ஓவியம், கட்டிடக்கலை முதலிய கலை வளர்ச்சியும் இலக்கியமும் அவர்கள் காலத்தில் உச்சநிலையையடைந்தன. கலை ஆர்வலர்களான பல்லவர்கள் எல்லாக் கலைகளிலும் ஒருமித்த ஆர்வம் காட்டினார்கள். தாமே பண்களைத் தொகுத்தும் பாடியும் மகிழ்ந்தனர். இசைக் கருவிகளில் புதிய மாற்றங்கள் செய்தனர். ஓவியங்களில் இருந்த ஈடுபாடு சித்தன்னவாசல் ஓவியங்கள் மூலம் அறியலாம். மாமல்லபுரம் கட்டிடக்கலை, சிற்பக் கலை சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

### இசைக்கலை

பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இசைக்கருவிகளுடன் அடியார் புடைசூழ பாடிக்கொண்டு ஆலயங்கள் தோறும் சைவத்தையும் வைணவத்தையும் வளர்த்தனர். தாளத்தோடு இன்னிசையைப் பரப்பினர். நாயன்மார் பதிகங்களில் சாதாரி, குறிஞ்சி, சீகாமரம், பியந்தைக் காந்தாரம், செவ்வரி, கொல்லி, பாலை பணிகள் காணப்படுகின்றன. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி போன்ற வகைகளை சார்ந்த யாழ், குழல், வீணை, தமருகம், சக்கரி, கொக்கரி, கரடிகை, மொந்தை முழவம், தக்கை, துந்துபி, குடமுழா, உடுக்கை, தடி, தாளம் முதலிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. திருநீலகண்டயாழ்ப்பாணர். ஆனாயானார் போன்ற இசைப் பேரறிஞர்கள் சமயம் வளர்த்தனர். சதுரஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீரணம் எனும் தாள வகைகளில் கடைசியான சங்கீரணம்' என்பதனைப் புதியதாகக் கண்டு அதன் வகைகளை ஒழுங்குகளை அமைத்த காரணத்தால் மகேந்திரவர்மன் 'சங்கீரண சாதி'யென அழைக்கப்பட்டான். புதுக்கோட்டை குடுமியான் மலையில் இசை மாணவர்களுக்காக பண்களை வகுத்துத் தந்தவர் உருத்திராச்சாரியார் என்பவர் ஆவார். பரிவாதினி எனும் வீணையில் வல்லவனாகவும் மகேந்திரவர்மன் திகழ்ந்தான்.

### ஆடற்கலை

மகேந்திரவர்மன் காலத்து சித்தன்னவாசல் ஓவியங்கள் பல்லவர் காலத்து நடனக்கலை பெற்றிருந்த ஏற்றத்தினைக் கூறும் விண்ணகரம் எனப்படும் வைகுந்தப் பெருமாள் கோவிலில் ஆடவரும் பெண்டிரும் அணி செய்து கொண்டு ஆடி நடிக்கும் காட்சி சிற்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலத்து கோயில்களுள் இசையும் கூத்தும் வளர்க்க அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர் என்றும் பெண்கள் இருந்தனர். காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவபெருமான் ஆடிய நாதாந்த தூக்கிய திருவடி நடனம் சிற்ப வடிவத்தில் செதுக்கப்ட்டுள்ளது.

### கட்டிடக்கலை

மகேந்திரவர்மனால் தமிழகத்தில் கட்டப்பட்ட குகைக்கோயில்கள் மலைச்சரிவுகளில் குடைந்து அமைத்தவையாகும். இவை சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவாணர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் சிவன் கோயில்களாக அமைந்துள்ளன. மாமண்டூர், மகேந்திரவாடி சிங்காவரம், நாமக்கல் ஆகிய இடங்களில் பெருமாள் கோயில்களாக உள்ளன. திருச்சி மேற்கு குடைவரைக்கோயில் லிதாங்குர பல்லவேஸ்வர கிருகம் மகேந்திரவர்மன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு

மாறிய செய்தியையும் கூறுகிறது. மாமல்லபுரத்தில் உள்ள தருமராசா் மண்டபமும் கொடிக்கால் மண்டபமும் இம்மன்னரால் அமைக்கப்பட்டவை. இங்கு நரசிம்மவா்மனால் அமைக்கப்பட்ட பஞ்சாபண்டவ தோ்கள் ஒரே கல்லைக் கோயிலாக அமைத்துக் கொண்ட கட்டிடக் கலை அமைப்பைச் சோ்ந்ததாகும். திரௌபதியம்மன் தோ் என்றழைக்கப்படும் கோயில் 'தூங்கானை மாடம்' என்ற கலை அமைப்பைச் சோ்ந்ததாகும். பரமேஸ்வரவா்மன் கூரம் என்னும் சிற்றூரில் அமைத்த சிவன் கோயில் தமிழகத்து முதல் கற்கோயில் ஆகும்.

**சிற்பக்கலை**

பல்லவா் தம் குகைக் கோயில்களில் (துவாரபாலகா்) வாயிற்காவலா்,வி'ணு, சிவன், லிங்கம், இசைவாணா், முயலகன், ஆதிவராகா், வராக, வாமன அவதாரங்கள், கங்கைக் காட்சி, அா்ஜுனன் தவம், கோவா்த்தன கிரியைக் கண்ணன் கு பிடித்தது போன்ற காட்சிகளைச் சிற்பங்களாக அமைத்துள்ளனா். கோயில்களின் தூண்களும், சுவா்களும்,, போதிகைகளும் விமானங்களும், கண்கவரும் சிற்பங்களைக் கொண்டு திகழ்கின்றன. மகாபலிபுரம் பல்லவா்களின் சிற்பக்கலைக் கூடமாகவே திகழ்கிறது.

**ஓவியக்கலை**

1400 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட சித்தன்ன வரை ஓவியங்கள் வண்ணக் கலவை மாறாது பல்லவா் கால ஓவியங்களில் தன் சிறப்பை உணா்த்துவனவாகும். இவ்வோவியங்கள் சமண சமயத்தை சாா்ந்தவையாகும்.

**மகேந்திரவா்மனின் சாதனைகள்**

மகேந்திரவா்மனின் ஆட்சிக்காலம் பல வகைகளிலும் தமிழ் வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்பங்கள் நிறைந்த காலமாகும். இக்காலகட்டத்தில்தான் புதியதொரு சகாப்தம் தமிழக வரலாற்றில் தொடங்குகிறது. அதைக் குறித்துக் காட்டும் நிகழ்ச்சிகள் பல.

முதலாவதாக,முழுமையான தமிழ்ப் பண்பாடு கொண்ட முதல் பல்லவமன்னன் மகேந்திரவா்மன்தான். தமிழ்க் கல்வெட்டுக்கள் இவா் காலத்தில்தான் தொடங்குகின்றன.

இரண்டாவதாக, தென்னக ஆதிக்கத்திற்காக பல்லவ – சாளுக்கிய போா் இம்மன்னன் காலத்தில்தான் தொடங்குகிறது.

மூன்றாவதாக, தமிழகத்தில் சமண சமயத்தின் செல்வாக்கு மங்கீ சைவ சமயம் தழைத்தோங்கத் தொடங்குகிறது.

நான்காவதாக, குடைவரைக் கோவில்கள் மலைச்சரிவுப் பாரைகளின் அமைக்கும் முறையும் இக்காலத்தில்தான் தொடங்குகிறது.

**பல்லவ- சாளுக்கியப் போா்**

வாதாபியில் வலியதொரு அரசை நிறுவிய சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி, வேங்கி நாட்டைக் கைப்பற்றிய பின் வெற்றிகரமான காஞ்சி நகரினுள்ளும் படையுடன் புகுந்தான். புலிகேசியின் அய்ஹொளே. கல்வெட்டுக் கூறுவது போல்.

சாளுக்கியப் படைகள் கிளப்பிய புழுதியில் பல்லவ வேந்தனின் புகழொளி மங்கியது. பல்லவன் காஞ்சிக் கொட்டைக்குள் பதுங்கிக் கொண்டான். அப்படைகள் காவிரிக் கரை வரை வெற்றிப்பவனி சென்றன. பல்லவர்களின் காசக்குடிப் பட்டயம், மகேந்திரவர்மன் தன் பகைவர்களை புள்ளலூரில் அழிததான் என்று கூறுகிறது. இதில் ‘பகைவர்’ என்பது சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. இதிலிருந்து முதலில் திடீரெனத் தலைநகரினுள் நுழைந்த சாளுக்கியப் படையைக் கண்டு கோட்டையினுள் பதுங்கிக் கொண்ட பல்லவன் தன் பகைவன் தெற்கில் காவிரி வரை சென்று மீண்டும் அயர்ந்து வரும்போது புள்ளலூரில் திடீரெனத்தாக்கி தோற்கடித்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. இப்போரில் சாளுக்கியருக்கு துணையாக வந்த கங்கநாட்டு துர்விநீதனும் தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

### சைவ சமயத்தைத் தழுவுதல்

முதலில் சமண சமயத்தைச் சார்ந்திருந்த மகேந்திரவர்மன் பின்னர் அப்பர் முயற்சி காரணமாக சைவ சமயத்தைத் தழுவினான். மன்னன் **எவ்வழி குடிகள் அவ்வழி”** என்ற வழியில் விரைவில் தொண்டை மண்டலத்து மக்களும் சைவ சமயத்தைத் தழுவினர். இது தமிழகத்தில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வழி கோலியது.

### குடைவரைக் கோயில்கள்

மலைகளை வெட்டிக் குடைந்து கோயில்கள் அமைக்கும் முறையைத் தமிழகத்தில் முதலில் புகுத்தியதும் மகேந்திரவர்மனே யாவான் அவன் மண்டகப்பட்டில் அமைத்த குகைக்கோவில் தான் கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமல் பிரம்மா, வி‘ணு, ஈஸ்வரனுக்குக் கோவில் கட்டியதாகப் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளான். இவ்வகையில் இதுவே முதற்கோவிலாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மற்றும் மாமண்டூர், மகேந்திரவாடி, பல்லாவரம், சீயமங்கலம், வல்லம், தளவானூா., திருக்கழுக்ன்றம், திருச்சி ஆகிய இடங்கனில் குடவரைக் கோவில்களை அமைத்துள்ளான்.

### அருங்கலைகள்

மகேந்திரவர்மன் நடனம், நாடகம், இசை, சிற்பம், ஓவியம் ஆகிய அருங்கலைகளை நலமுற வளர்த்தான்.

### சித்தன்னவாசல் சிறப்பு

அஜந்தா முறையிலான வண்ண ஓவியங்கள் சித்தன்னவாசல் என்ற குகைக் கோவிலில் தீட்டச் செய்தான். இது அக்கால ஓவியங்கலைச் சிறப்பிற்குச் சான்று பகர்கின்றது. அக்குகைவாயில் தீட்டியுள்ள காந்தர்வ நடன ஓவியம் அக்கால நடனக் கலைச்சிறப்பை விளக்குகிறது. குகையினுள்ளே செதுக்கப்பட்டுள்ள தீர்த்தங்கரர் சிலைகள் சிற்பக் கலை வளர்ச்சியை எடுத்துரைக்கின்றன.

### குடுமியாமலைக் கல்வெட்டு

புதுக்கோட்டை மாவட்டத்தல் உள்ள குடுமியாமலையில் காணப்படும். கல்வெட்டுச் செய்திகள் மகேந்திரவர்மனின் இசைக்கலைத் திறனுக்குச் சான்று பகிர்கின்றன. அதில் உள்ள வாசகமாவது **“இக்கல்வெட்டு இசை மான நன்மைக்காகப் பன்புகளை**

**வகுத்துத்தந்த உருத்திராச்சாரியர் மாணவனான அரசன் கட்டளைப்படி வெட்டப்பட்டது"** இதில் "அரசர் என்று கூறப்பட்டவன் மகேந்திரவர்மனே. "மத்தவிலாசப் பிரகசேனம" வடமொழியில் வல்லுநரான மகேந்திரவர்மன் எழுதிய நாடகமாகும். இது அக்கால பல திறப்பட்ட சமயம் சார்ந்தவர்களின் வாழ்க்கை நிலையை படம்பிடித்துக் காட்டுகிறது.

இவ்வாறு பல துறைகளில் பற்றும் பயிற்சியும் கொண்ட மகேந்திரவர்மன் 'விசித்திர சித்தன்' என்ற சிறப்புப் பெயர் சூட்டிக் கொண்டது முற்றிலும் பொருத்தமாகும்.

**நரசிம்ம வர்மனின் சாதனைகள்**

**சாதனைகள்**

மகேந்திரவர்மன் காலத்தில் முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைத்த பல்லவ அரசு அவர் மகன் நரசிம்மவர்மன் காலத்தில் ஏறுநடை போட்டது. சகல துறைகளிலும் தந்தை காலத் தொடர்ச்சியாக அமைந்து மகனது காலம் அத்துறைகளின் வளர்ச்சியாவே இருந்தது.

**பல்லவ-சாளுக்கியப் போர்**

மகேந்திரவர்மன காலத்தில் பல்லவப் பேரரசின் மீது சாளுக்கியப் புலிகேசி தொடர்ந்த தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கத் தீர்மானித்தான். மீண்டும் படையெடுத்து வந்த புலிகேசியை நரசிம்மன் (கூரம் பட்டயம் கூறுவது போல்) மணிமங்கலம், பாரியாளம், சூரமாரம் ஆகிய இடங்களில் தோற்கடித்து புறமுது காட்டியோடச் செய்து அவனது முதுகில் "வெற்றி" என்ற சொல்லை எழுதினான். பல்லவனது படை சாளுக்கியர் தலைநகரமாகிய வாதாபிவரை படையெடுத்துச் சென்று அந்நகரைத் தாக்கி அழித்தது. அகத்தியர் வாதாபி என்ற அரக்கனை அழித்தது போல் நரசிம்மன் வாதாபியை அழித்தான் எனப் பட்டயங்கள் போற்றுகின்றன. இதன் காரணமாக "வாதாபி கொண்டான்" என்ற சிறப்பு பெயரைப் பெற்றான்.

**பிற போர்கள்**

கூரம் பட்டயமானது நரசிம்மன் சேர, சோழ, பாண்டிய, களப்பிரர்களை முறியடித்தான் எனக் கூறுகிறது. ஆனால் அப்போரில் எவ்வாறு தோற்கடித்தான் என்ற விபரத்தைத் தரவில்லை. பாண்டியரது சின்னமனூர்ப் பட்டயமானது அரிசேகரி பராங்குசன், பல்லவனை (நரசிம்மனை) சங்கரமங்கை என்ற இடத்தில் தோற்கடித்தததாகக் கூறுகின்றது. அதன்பின் (புலிகேசிக்குப்பின்) சாளுக்கிய அரியணை குறித்து நடைபெற்ற போட்டியில் நரசிம்மன், ஆதித்தவர்மனை ஆதரித்தான் என்றும் இறுதியில் பிந்தியவனே வெற்றி பெற்றான் என்றும் அதன் பாரணமாக துர்விநீதன் தான் நரசிம்மனைத் தோற்கடித்து விட்டதாகத் தன் பட்டயத்தில் கூறிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

**இலங்கைப் படையெடுப்பு**

நரசிம்மவர்மன் காலத்தில் இலங்கை அரியணை உரிமை குறித்து மாறவர்மன் என்பவனுக்கும், அட்டதத்தன் என்பவனுக்குமிடையில் சச்சரவு மூண்டது. இதில் தோல்வியுற்ற மானவர்மன் காஞ்சி நகர் வந்து நரசிம்மன் ஆதரவைக் கோரினான். உடனே

பல்லவன் பெரும் கப்பற்படையொன்றைத் திரட்டி மாறவர்மனுக்கு உதவியாக அனுப்பி வைத்தான். அதன் பயனாக அவன் தன் போட்டியாளனை விரட்டிவிட்டு இலங்கை அரியணையில் அமர்ந்தான். விரைவில் மாறவர்மானுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. மீண்டும் அரியணை இழந்து நரசிம்மனின் படைஉதவியை நாடினான். ஆரண்டாம் முறையாகப் பல்லவப் படை இலங்கை சென்று மாறவர்மனின் எதிரிகளை முறியடித்து அவனை உறுதியாக அரியணையில் அமர்த்தித் திரும்பியது. இது அக்காலத்தில் பல்லவ கடற்படை வலுவிற்குச் சான்று பகர்கின்றது. இதிலிருந்து மாமல்லபுரம் அக்காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கியிருக்கிறது எனத் தெரிய வருகிறது.

**மாகபலிபுரம் கல்ரதங்கள்**

கட்டிடக் கலையிலும் நரசிம்மன் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றினான். மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயில்கள் இப்போது கல்ரதங்களாக முன்னேற்றம் பெற்றன. மகாபலிபுரத்தில் உள்ள தருமராசா் தோ், பீமசேனன்தோ், அா்ச்சுணன் தோ், திரௌபதிதோ், சகாதேவன் தோ் எனப்பட்ட பஞ்சபாண்டவா் ரதங்கள் சிறப்பானவை மற்றும் மகிடாசுரமண்டபம். வுராகமண்டபம், கிரி மூா்த்தி மண்டபம் ஆகியவைகளும் சிறப்பானவைகளே அம்மண்டபச் சுவா்களில் உள்ள சிற்பங்கள் குறிப்பாக துா்க்கை, மகிசாசுரனை வதம் செய்வதைச் சித்தரிப்பவை கலை நுட்பம் வாய்ந்தவை. பெரியதொரு பாறைச் சுவரொன்றின் மீது அா்ச்சுணன் தவக்காட்சி அல்லது கங்கை இறங்கி வரும் காட்சி சுவரோவியச் சிற்பங்களாக அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

**யுவான் சுவாங் வருகை**

நரசிம்மன் காலத்தில் புகழ்பெற்ற சீனப்பயணி யுவான் சுவாங் ஹா்வுப் பேரரரையும், சாளுக்கிய .அரசையும் சுற்றிப் பாா்த்துவிட்டு காஞ்சிபுரம் வந்தடைந்தாா். அவா், “அந்நகா் ஆறு கல் சுற்றளவுடையது, சுற்றிலுமுள்ள நிலம் செழிப்பானது, மக்கள் நெஞ்சுரமும், நோ்மையும் மிக்கவா்கள் பௌத்தத் துறவிகள் பதினாராயிரம் போ் உள்ளனா் புத்தரே காஞ்சிக்கு வந்ததாகக் கூறப்படுகிறது நாளந்தாப் பல்கலைக்கழகப் பேராசிரியா் தா்மபாலா் இந்நகரைச் சோ்ந்தவா்” என்ற பல வரலாற்றுக் குறிப்புக்களை அவா் விட்டுச் சென்றுள்ளாா்.

**மதிப்பீடு**

மாமல்லன் என்ற சிறப்புப் பட்டம் பெற்ற நகரசிம்மன் பல்லவமரபின் மாபெரும் வெற்றிவீரா், வாதாபி கொண்டது. இலங்கைக்குப் படையனுப்பியது மகாபலிபுரம் கல்ரதங்களை அமைத்தது ஆகியவை அவரை தென்னிந்திய வரலாற்றின் தலைசிறந்த மன்னா்களுள் ஒருவராக்கிவிட்டது.

## 13.நாயக்கா் ஆட்சி

**விஜயநாகர பேரரசும் நாயாக்கா்களும்**

பாண்டியா்களின் ஆட்சி வீழ்ச்சி அடைந்தவுடன் அமஜழகத்தில் அயலாா் ஆதிக்கம் தோன்றியது. இசுலாமியா் படையெடுப்பினால் தமிழகம் தாக்குண்டு மதுரையில் சுல்தானியா் அரசு ஏற்பட்டது. போசாளா் ஆட்சியின் வீழ்ச்சியை அடுத்து விசயநகரப் பேரரசு வலிமை பெறத் தொடங்கியது. இதனால் சுல்தானிய ஆட்சி ஒழிக்கப்பட்டுத்

தமிழகம் முழுவதும் விசயநாகரப் பேரரசின் ஒரு பகுதியாக மாறியது. இதற்கு பின் தமிழகத்தில் மூன்று நூற்றாண்டுகள் விசயநகரப் பேரரசு ஆட்சி நிலவியது. ஹரிஹரனும் அவனுடைய தம்பியும் துணையரசனுமாகிய புக்கர், புக்கரின் மகன் குமாரகம்பண்ணன். கம்பண்ணனின் மனைவி ‘கங்காதேவி’ எழுதிய ‘மதுராவிசயம்’ என்ற சமஸ்கிருத நூல் சுல்தன்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போர்களை விளக்குகிறது.

சுல்தானியர் ஆட்சிக்கு பின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த குமாரகம்பண்ணன் இந்து ஆலயங்களை வழிபாட்டுக்கு மீட்பதில் அதிக கவனம் செலுத்தினான். அடுத்து ஆட்சிக்கு வந்த இரண்டாம் ஹரிகரன் நாட்டைப் பல மண்டலங்களாகப் பிரித்தான். தமிழக விஜயநகரக் பிராந்தியம் வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. தேவராயர் காலத்தில் நிர்வாக முறையில் மாறுதல் ஏற்பட்டது. இதன்படி குறுநிலப் பகுதியில் நாயக்கர்கள் என்ற ஒருவகை படைமானிய நிர்வாகிகளும் மண்டலாதிபதிகளாக அமர்த்தப்பட்டன.

**நாயக்கர் ஆட்சியின் துவக்கம்**

விஜயநகரப் பேரரசர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளுக்குத் தளபதிகளை அரசுப் பிரதிநிதிகளாய் அமர்த்தி ஆட்சி செய்தனர். தொடக்கக் காலத்தில் பேரரசுக்கு அடங்கியிருந்த இவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு பேரரசிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டனர். செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய நகரங்களைத் தலைநகராகக் கொண்டு நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. 1532இல் தஞ்சையில் நாயக்கர் ஆட்சி தொடங்கியது. செஞ்சியில் கி.பி.1509லும், மதுரையில் 1529லும் தொடங்கியது. 1529ம் முதல் 1736ம் ஆண்டு வரை 207 ஆண்டுகள் மதுரையில் மிக நீண்டகாலமாக நாயக்கர் ஆட்சி நீடித்தது.

**செஞ்சி நாயக்கர்கள்**

வடக்கே நெல்லூர் முதல் கொள்ளிடம் வரை துவக்கத்தில் செஞ்சி நாயக்கர் எல்லையாக அமைந்திருந்தது. பின்னர் அவர்தம் எல்லை பாலாறு முதல் கொள்ளிடம் லரையிலானதாக சுருங்கியது. 1509 முதல் கிரு‘ணப்பநாயக்கர் தன்னாட்சியுடன் ஆட்சி செய்து வந்தனர். பின்னர் 1649ல் செஞ்சியை பிஜப்பூர் கைப்பற்றும் வரை ஆண்டனர்.

**தஞ்சை நாயக்கர்கள்**

தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்டு சோழ மண்டலத்தை ஆண்டவர்கள் தஞ்சை நாயக்கர்கள் ஆவர். இப்பகுதியின் முதல் மன்னராகத் திகழ்ந்தவர் சேவப்பநாயக்க் ஆவார்.

**மதுரை நாயக்கர்**

கம்பணர் காலத்தில் மதுரையில் நாயக்கர் ஆட்சி தொடங்கியது. எனினும் அரசர் கிரு‘ண தேவராயர் காலத்தில்தான் வலிவு பெற்றது தொடர்ந்து பலர் ஆண்டனர் எனினும் திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர், இராணி மங்கம்மாள் ஆகிய மூவருமே புகழ் பெற்றவர்கள் ஆவர்

## நாயக்கர்கள் ஆட்சி

விசயநகரத்தினுடைய நிர்வாகம் அமைப்பின்வழி தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி தோன்றியது. பேரரசில் ஏற்பட்ட ஓயா அரசுரிமைப் போட்டி நாயக்கர்களின் சுயாட்சிக்குத் துணைப்புரிந்தது. 1542ல் அச்சுதராயன் மறைவுக்குப்பின் விசயநகரத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தமிழகத்து நாயக்கர்கள் பயக்படுத்திக் கொண்டனர். மதுரையை ஆண்ட விஸ்வநாத நாயக்கர் நிர்வாக ஒழுங்குகள் ஏற்படுத்தி நாயக்கர்தம் வலிமையை நிலைநாட்டினான்.

தமிழ்நாட்டின் பெரும்பகுதியும் விசயநகரத்தோடு இணைக்கப்பட்டது. தமிழகத்தின் பகுதியை தஞ்சை, மதுரை, செஞ்சி, வேலூர் நாயக்கப் பகுதிகளாகப் பிரித்தனர். மதுரை நாயக்கர்கள் தங்களது பகுதியை 72 பாளையங்களாகப் பிரித்தனர். நாயக்கரும் பாளையக்காரரும் தனித்தனியாக நிர்வாகத்தை நடத்தினர். புாளையக்காரர் நாயக்கருக்குக் கீழும் நாயக்கர்கள் விஜய நகர ஆட்சிக்குக் கீழும் செயல்பட்டனர். நுாயக்கர் ஆட்சிப் பகுதியில் நாயக்கரே ஆட்சியின் தலைவராவார். இவர்களுக்கு உதவியாக அமைச்சர்களும் செல்வந்தர்களும் இருந்தனர். இவரின் தலைமை அமைச்சர் தளவாய் ஆவார்

## இராணுவமுறை

நாயக்கர் காலத்தில் இராணுவ வளர்ச்சிக்கு அதிகமாக பணம் செலவழிக்கப்பட்டது. பழைய போர்க் கருவிகளோடு தோட்டா, துப்பாக்கி, வெடி மருந்துகளும் பயன்படுத்தப்பட்டது. பாளையங்களின் படையில் அமாம்பியூன்கள், கட்டபுடிபியூன்கள், மெரிஸினரி பியூன்கள் என்ற பிரிவுகளும் இருந்தனர். நீதியும் சட்டமும் சமயச் சார்புடையனவாகவும், அறநெறி சார்ந்ததாகவும் அடைந்தது. கிருஷ்ணதேவராயர் தனது ‘ஆமுக்திமால்யதத்’ எனும் நூலில் ஓர் அரசன் எப்போதும் தர்மத்தின்மீது ஒரு கண் வைத்தே ஆட்சி நடத்த வேண்டும் என்று கூறுயுள்ளார். குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன.

## நாயக்கர் கால பொருளாதார நிலை

நாயக்கர் காலத்தில் பொருளாதாரம் பெருகியிருந்தபோதும் மக்கள் துன்பப்பட்டனர் என்று கிறித்துவப் பாதிரியார்கள் தங்களது கடிதங்களில் எழுதியுள்ளனர்.

அந்தப்புரங்களை அழகுபடத்துவும், கோயில்கள், மண்டபங்கள் கட்டவும் பெரிய பணத்தை செலவு செய்தனர். குடிமக்கள் தம் வயிற்றுப் பசியைப் போக்க எம்முயற்சியும் எடுக்கவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நஞ்சை, புஞ்சை நிலங்களில் பல்வேறு பயிர்களும் மரங்களும் பயிரிடப்பட்டன.

மூன்று முக்கிய நிலக்கொடைகள் வழங்கப்பட்டன. அவை பிரம்மதேயம், தேவதானம், மடப்புரம் எனப்பட்டன. கல்வி வேள்விகளில் சிறந்த பிராமணர்க்கு அளிக்கப்பட்ட கொடை பிரமமதேயம் எனப்பட்டது கோயிலுக்காகக் கொடுக்கப்பட்டவை தேவதானம் ஆகும். இராணுவச் சேவைக்குத் தரப்படும் மானியங்கள் படைப்பற்று எனப்பட்டது.

பல்லக்கு தூக்குவோர்க்கு ‘தண்டிக்கு’ என்ற நிலமானியமும், பாணர், படைத்தலைவரின் உயிரைக் காக்கும் வீரர்களுக்கு உதிரப்பட்டி என்ற நிலமானியமும் வழங்கப்பட்டன.

பாளையக்காரர்கள் தங்கள் வசூலிக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பங்கு வருவாயை நாயக்கர் அரசுக்குத் தர வேண்டியிருந்தது.

கூரை வீடு, மாடிவீடு, ஆடு, மாடு, எருது போன்ற சொத்துக்களை வைத்திருந்தவர்களிடம் சொத்துவரி வசூலிக்கப்பட்டது

நிலவரியானது பொதுவாக விளைச்சலின் பாதியாகவோ, இக்கட்டான காலங்களில் சற்றுக்கூடவோ இருந்தது.

கிராமத் தலைவர்களாக மணியக்காரர், கணக்கன் போன்றோரும் தச்சன், கருமான், சாலியன், வண்ணார், நெசவு செய்வோர், இடையர், பரதவர் போன்றோரும் ‘தொழில்வரி’ செலுத்தினர்.

திருவிழாக் காலங்களில்’பிடாரி’ என்ற வரி திருமணத்திற்கு திருமண வரியும் வசூலிக்கப்பட்டது.

புல்வரி, செம்பொன்வரி, அரிசிக்காணம், மாலக்காணம், போன்ற வரிகள் வியாபரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டன.

ஏற்றுமதி, இறக்குமதிக்காக மார்க்கத்தாயம், ஸ்தலதாயம் போன்ற வரிகள் விதிக்கப்பட்டது

நீர்ப்பாசனத்திற்காகப் பணம் செலவிடப்பட்டது. கிருஷ்ணதேவராயர் ‘ஆமுக்த மால்யதா’ என்ற நூல் நீர்ப்பாசன வசதி அமைத்தால் ‘வரப்புயரை நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும்’ என்று கூறுகின்றது.

நாட்டின் வருமானம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செலவிடப்பட, கிருஷ்ணதேவராயர் திட்டமிட்டார். அவையாவன ஒரு பகுதி அரண்மனை தொடர்பான செலவுக்கும், நன்கொடைகளுக்கும் இரண்டு பகுதி அராணுவத்துக்கும் செலவிடப்பட வேண்டும், நான்காவது பகுதி கருவூலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

நிலங்களை தானம் வழங்கி உயர்குடியினரின் தரத்தையும் மதிப்பையும் காப்பதில் அதிகச் செலவிட்டனர். சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்ந்த எம்முயற்சியும் எடுக்கப்படவில்லை.

நாணயச் சாலைகள் ஏராளம் இருந்தன. நாணயங்களில் வைணவ சமயச் சின்னங்களும், சைவ உருவங்களும் அனுமன், கருடன், நரசிம்மர், சரஸ்வதி, பிரம்மா, காளை, சங்கு, சக்கரம், திருமால், மன்னன் கைகூப்பி நிற்றல் ஆகிய உருவங்கள் காணப்பட்டன. வெளிநாட்டவர் நாணங்களை போர்த்துக்கீசிய குருசடோவும், பாரசீகரின் தினாரும், இத்தாலியரின் டபுனோரினும், குகாட்டும் புழக்கத்தில் இருந்தன.

**நாயக்கர் கால சமயநிலை**

நாயக்க மன்னர்கள் சிவன் அல்லது விஷ்ணுவை போற்றி வந்தனர். கிறித்துவ சமயம் தமிழகத்தில் வேரூன்றத் தலைப்பட்டது இஸ்லாமியர் பலர் குடியேறினர்

சைவ சித்தாந்த கருத்துகளைப் போதிப்பதற்கு மடங்களை நிறுவினர். அம்மடங்களுக்கு மானியமும் வழங்கினர். தருமபுரம் மடம், திருவாவடுதுறை ஆதினம், திருப்பனந்தாள் காசிமடம், திருவொற்றியூர் அரங்கராயர் மடம் போன்றன இக்காலத்தில் தோன்றியனவாகும்.

சைவ சமயப் பிரிவினரான பாசுபதர்கள், காளாமுகர்கள் திருச்சி, மதுரைப் பகுதிகளில் அதிகம் தங்கிருந்தனர். பிமங்கண்ட தேவரின் சைவ சித்தாந்த கருத்துக்கள் அடங்கிய ‘சிவஞான போதம்’ தோன்றியது.

கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர், இராமராயர், திருமலை முதலானோர் வைணவத்தைப் பேணி வளர்த்தனர். தமிழ்மொழியைப் பின்பற்றியவர்கள் தென்கலை வைணவர்கள் எனவும் வடமொழியைப் பயின்றவர்கள் வடகலை வைணவர்கள் எனவும் அழைக்கப்பட்டன.

நாயக்க மன்னர்கள் கோவில்களின் வாயில்களில் ஓங்கி வளர்ந்த கோபுரங்களைக் கட்டினர். வசந்த மண்டபங்களையும் கட்டினர். மதுரை சித்திரைத் திருவிழாவை திருமலை நாயக்கர் துவக்கி வைத்தார்.

காஞ்சியிலும் நாகப்பட்டினத்திலும் பௌத்த சமயத்தவர் வாழ்ந்தனர். காஞ்சி ஏகாமபரநாதர் கோயிலில் இவர்கள் காலததில் செதுக்கப்பட்ட பௌத சிற்பங்கள் காணப்படுகின்றன.

படைவீடு, சந்திரகிரி, ஜைனகாஞ்சி, செம்பை, கரந்தை, நாகர்கோவில் போன்ற இடங்களில் நல்லுறவு இருந்தது.

இஸ்லாமியப் படையெடுத்து வந்தபோது இந்துக்களை விஜய நகரப் பேரரசுசர்களும் நாயக்கர்களும் காத்தனர். இஸ்லாமியர் பலர் வந்து குடியேறினர். விஜய நகரப் படையில் இஸ்லாமிய வீரர்கள் இருந்தனர். இந்து-இஸ்லாமியர் இடையே நல்லுறவு இருந்தது.

மதுரை வீரப்ப நாயக்கர் ஆட்சியில் மதுரையில் கிறித்துவ மடாலயம் ஏற்படுத்தப்பட்டது. போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த பெர்ணாண்டஸ் 1610ல் அனுமதி பெற்று திருச்சபையைக் கட்டினார்.

இத்தாலியைச் சேர்ந்த இராபர்ட்-டி-நொபில் 1660இல் மதுரை வந்து தமிழ்மொழி கற்று, சந்நியாயைப் போன்று காவி அணிந்து உத்திராட்சை கொட்டை அணிந்து குடிசையில் வாழ்ந்து கிறித்தவத்தை எடுத்துரைத்தார்.

1680ல் மதுரை வந்த இராமநாதபுரம் பகுதியில் தமது சமயப்பரப்பில் பணியைச் செய்தார். இவர் கைது செய்யப்பட்டு பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளானவராவார்.

இவ்வாறான மன்னர்களின் செயல்பாட்டினால் நாயக்கர் காலத்தில் சமயப் பொறை இருந்தது அறிய முடிகிறது.

**நாயக்கர்களின் ஆட்சி முறை**

**முன்னுரை**

விஜயநகரப் பேரரசு தமிழகத்தைக் கைப்பற்றிய போது அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மகா மண்டலேஸ்வரர்களாக நியமித்தனர். பொதுவாக படைத்தளபதிகளே மகா மண்டலேஸ்வரதுகளாக நியமனம் பெற்றனர். நயக்கர் என்றாலே படைத்தளபதி என்று பொருள். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ஆளுநர்களாக நியமனம் பெற்றால் விஜயநகரப் பேரரசின் ஆட்சி முறையையே நாயக்கர்களும் பின்பற்றினர். ஏற்கனவே தமிழகத்தில் நிலை பெற்றிருந்த மன்னராட்சி முறைமைகள் விஜயநகரப் பேரரசின் முறைகளோடு இணைந்து காலச்சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதியதொரு ஆட்சி முறையாக உருவானது. அதுதான் நாயக்கராட்சி முறை.

விஜயநகரப் பேரரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட காலத்திலும், புறக்கணித்த காலத்திலும் நாயக்கர்கள் முழு இறைமை பெற்ற மன்னர்களாகவே ஆட்சி புரிந்தனர். எனவே நாயக்கராட்சி, மன்னராட்சி முறைமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நாயக்கர் பதவியும் மன்னர் பதவியைப் போல் மரபு வழி வாரிசிசுமைக்குட்பட்டிருந்தது. தந்தைக்குப் பின் மூத்த மகன் அரியணை ஏறும் உரிமை பெற்றிருந்தனர். தந்தை இறந்த போது மகன் சிறுவனாக இருந்தால் காப்பாளர் ஆட்சி முறை பின்பற்றப்பட்டது. ராணி மங்கம்மாள் தனது பேரன் விஜய ரெங்க சொக்கநாதர் வயதிற்கு வரும் வரை பகர ஆளுநராக ஆட்சி புரிந்தார். அதேபோல் அரசி மீனாட்சி, விஜயகுமாரன் என்ற அரச குடும்பத்துச் சிறுனைத் தத்து எடுத்துக் கொண்டு பகர ஆளுநராக ஆட்சி புரிந்தார். வாரிசு இல்லாத மன்னர் தத்து எடுப்பது அங்கீகரிக்கப்பட்டது.

**நாயக்கர்களின் அதிகாரம்**

நாயக்கர் அரசர்கள் எந்தவித தடைகளாலும் கட்டுப்படுத்தப்படாத முழு அளவிலான எதேச்சதிகாரிகளாகவே செயல்பட்டனர். ஆனால் நடைமுறையில் அவரது அதிகாரம் பல்வேறு மரபுவழிப் பழக்கவழக்கங்களாலும் சமுதாயப் பாரம்பரியங்களாலும் கட்டுப்படுத்தப்பட்டது. எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டங்கள் நாட்டில் இல்லை என்பது உண்மைதான். எனினும் வேதங்களும் ஸ்மிருதிகளும் தர்ம சாஸ்திரங்களும் எழுதப்பட்ட சட்டங்களை விட வலிமை பெற்றவைகளாக இருந்தன. அரசர் அவற்றிற்கு கட்டுப்பட்டவராகவே கருதப்பட்டார்.

**படை அதிகாரம்**

**“துப்பாக்கி முனையிலிருந்து தான் அதிகாரம் பிறக்கிறது”** என்று கூறப்படுவதுண்டு. படை வலிமைதான் அதிகாரத்தின் பிறப்பிடம் என்று அது கூறுகிறது. உண்மையில் நாயக்க மன்னர்களின் அதிகாரமும் அவர்கள் படை வலிமையிலிருந்துதான் தோன்றுகிறது. நாயக்க மன்னர்கள் பலர் சிறந்த படைத் தளபதிகளாக போர் முனைக்கு படைகளை நடத்திச் சென்றுள்ளனர்.

**நிர்வாகத் தலைமை**

நாட்டின் நிர்வாகத் தலைமையிடத்தை நாயக்கர் பெற்றிருந்தார். அனைத்து நிர்வாகப் பிரிவுகளிலும் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் நாயக்கரிடமே இருந்தது.

**ஆடம்பரம்**

பிறஎதேச்சதிகார அரசர்களைப் போல் நாயக்கர்களும் ஆடம்பர வாழ்க்கை நடத்தினர். அரசவை தர்பார் டாம்பீகமாக நடத்தப்பட்டது. மிகப்பெரிய அந்தப்புரத்தைக் கொண்டிருந்தனர். பல மனைவியரை மணம் புரிந்திருந்தனர். மதுரை நாயக்கருக்கு 700 மனைவியாகள் இருந்ததாக முஸ்லீம் பயணி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் அனைவரும் முறைப்படி மணம்புரிந்த சட்ட பூர்வ மனைவியரா என்பது கேள்விக்குறி. இவர்கள் தவிர ஆசை நாயகியர்களும் பலர் உண்டு.

**சில தார்மீகப் பொறுப்புகள்**

நிர்வாகப் பொறுப்புக்களைத் தவிர சில தார்மீகப் பொறுப்புக்களையும்ட நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது. அவை,

1. ஆலயங்களுக்கு திருப்பணி புரிதல்.

2. அந்தணர்களுக்கு குடியிருப்பு வசதியளித்தல்.

3. நவராத்திரி போன்ற சமய திருவிழாக்களை ஆடம்பரமாகக் கொண்டாடுதல்.

4. இவை போக எஞ்சிய பணத்தில் மக்கள் நலப் பணிகள் பலவும் புரிதல், வேளாண்மை வசதி, சத்திரம் கட்டுதல் போன்ற பணிகளைப் புரிதல்.

5. அங்கீகாரம் பெற்ற சாதி துறைகளைப்(வர்ணாஸ்ரம தர்மம்) போற்றுதல்.

**அமைச்சர்கள்**

ஆட்சித்துறை நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் அமைச்சர்களாயிருந்தனர். இவர்கள் நிர்வாகத்தை திறம்படநடத்தமன்னருக்கு உதவி புரிந்தனர். ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் மன்னர் விருப்பம். அத்தகைய அமைச்சர்களுள் ஐவர் முக்கியமானவர்கள்:

**1.தளவாய்**

அமைச்சர் பதவியும் படைத்தலைமைப் பதவியும் சேர்ந்ததே தளவாய் பதவியாகும். படையாட்சிப் பொறுப்பு இவரிடமிருந்தது.இதுவே நாட்டின் மிக உயரிய பதவியாகவும் இருந்தது. இவரிடம் நிர்வாக அதிகாரங்களுமிருந்தன. வெளி உறவு சார்ந்த அதிகாரங்களையும் இவர் செலுத்தினார். ஏறத்தாழ இன்றைய பிரதம அமைச்சரை ஒத்திருந்தார். அரிய நாதர், இராமப்பையன், நரசப்பையன், தஞ்சை கோவிந்த தீட்சிதர் ஆகியோர் தளவாய் பதவி வகித்து புகழ் பெற்றவர்கள் ஆவர்.

**2.பிரதானி**

இவரது முக்கியப் பணி நாட்டின் வரவு செலவு கணக்குகளைக் கவனிப்பதாகும். இவர் நிதி அமைச்சர்போல் செயல்பட்டார்.உயர் அதிகார வரிசையில்இரண்டாமிடம் இவருக்குத் தான்.

**3.இராயசம்**

இவர் அரசுச் செயலர் ஆவார். நாட்டின் நிர்வாகத் துறைகளின் செயல்பாட்டைக் கண்காணித்தார். தற்கால முதன்மைசெயலருக்கு நிகரான பணிகளைப் புரிந்தார்.இவர்களைத் கணக்கு வழக்குகளைக் கவனிக்க கணக்காளரும், வெளிநாட்டு விவகாரங்களை கவனிக்கஸ்தானாதிபதியும் இருந்தனர். இந்த உயர் பதவிகளைப் பெரும்பாலும் பிராமணர்களே வகித்தனர். படைத்தலைமையையும்கூட (தளவாய்) அவர்கள் வகித்தது குறிப்பிடத்தக்கது.

**போர்ததுறை**

நாயக்கர் நிர்வாகத்தின் அடிப்படைக் கூறுகளாக விளங்கியவை இராணுவமும் ஒற்றர் படையுமாகும். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை போன்ற பாரம்பரிய படையமைப்பு முறைகளே இருந்தன. பின்னாளில் பீரங்கிப் படைப்பிரிவும் தோன்றியது. நீண்ட ஈட்டி, வாள் போன்ற ஆயுதங்களோடு பழங்கால துப்பாக்கிகளையும் பயன்படுத்தினர். படைக்குத் தேவையான யானைகளைப் அரோயர்களிடமிருந்தும் வாங்கினர். நீண்ட கடற்கரையைக் கொண்டிருந்த நாயக்க அரசுகள் கப்பற்படையின் இன்றியமையாமையை உணரவில்லை எனவே கப்பற்படை வலிமைமிக்க ஐரேப்பிய அரசுகளோடு போர்புரிய இயலவில்லை. டச்சுக்காரர்கள் திருச்செந்தூர் ஆலயத்தைக் கைப்பற்றியபோது அவர்களை விரட்டுவதற்கு நாயக்கர் முயற்சி எடுக்காததற்குக் காரணம் கப்பற்படையின்மையே. சடைக்கத்தேவர் இராமேஸ்வரம் தீவில் பதுங்கியபோது அவரைக் கைது செய்ய திருமலை நாயக்கர் போர்த்துக்கீசியர் உதவியை நாட நேரிட்டது.

ஒற்றர் படைக்கு உரிய முக்கியத்துவம் அளித்தனர்.

**வருவாய்த்துறை**

நிலவரியே நாட்டின் முக்கிய வருவாயாக இருந்தது. இந்த நிலவரி அறிவியல் ரீதியில் நிர்ணயிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பொதுவாக நிலங்கள் நஞ்சை அல்லது புஞ்சை எனப் பிரிக்கப்பட்டன. மேய்ச்சல் நிலங்களும் உண்டு மொத்த விளைச்சலில் பாதி வரியாக வசூலிக்கப்பட்டது. மூன்றிலொரு பகுதி வரியாக வசூலிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. போர்க்காலங்களில் அதிகப்படியான தொகை வசூலிக்கப்பட்டது. வசூல் முறை கொடுங்கோன்மை வாய்ந்ததாக இருந்தது. படைபலத்தைப் பயன்படுத்தியே அவை வசூலிக்கப்பட்டன. போர்களும் வெளிநாட்டுப் படையெடுப்புகளும் மிகுந்த அக்காலத்தில் வரி விதிப்பும் வரி வசூலும் கடுமையாகவே இருந்தது.

இவை தவிர சொத்துவரி, வணிகவரி, தொழில்வரி, பாசிவரி, ஏரிவரி போன்ற வரிகளும் வசூலிக்கப்பட்டன.

போர்க் கொள்ளையும், திறைப் பொருளும், பறிமுதலும், பாளையக்காரர் வரிவசூலும் பிற முக்கிய வருவாய் மூலங்களாகும்.

**நீதி**

மன்னர் சட்டத்தை உருவாக்குபவர் அல்லர், தர்மநெறிச் சட்டங்களுக்குட்பட்டவர் மன்னர் தலைமை நீதிபதியாய் கருதப்பட்டாலும் அவரே எல்லா வழக்குகளையும் விசாரித்து தீர்ப்புக் கூறுவதில்லை. தலைநகரின் நீதிமன்றமிருந்தது. அதில் பல நடுவர்கள் இருந்தனர். பிரதானி நீதித்துறையைக் கண்காணத்து வந்தார்.

நீதி விசாரணையானது பெரும்பாலும் தல நிறுவனங்கள் சார்ந்த பணியாகவே இருந்தது. சிற்றூர் நீதிமன்றங்கள், சாதிப் பிரமுகர்கள் அடங்கிய நீதிமன்றங்கள், கோவில் நீதிமன்றங்கள் ஆகியவைகளும் இயங்கின. கிராமங்களில் வழக்குகள் பஞ்சாயத்தாரால் முடிவு செய்யப்பட்டன. வழக்காறு, ஆவணம், சாட்சி ஆகியவற்றின் நீதி வழங்கப்பட்டது.

பொதுவில் தண்டனைகள் கடுமையாக இருந்தன. கை, கால்கள் வெட்டப்படல், யானையின் கால்களில் இடரப்படல் போன்ற கடுமையான தண்டனைகள் தரப்பட்டன. சித்திரவதை அனுமதிக்கப்பட்டது.

அனைவருக்கும் ஒரே மாதிரியான நீதி வழங்கப்படவில்லை. பிராமணர்களுக்கு தனிப்பட்ட நீதி, தண்டனை வழங்கப்பட்டது. சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

**மாநில அரசு**

மைய அரசினையும் பாளையங்களையும் இணைக்க மாநில ஆளுநர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆட்சிப்பிரிவு சீமை எனப்பட்டது. இவர்களின் அதிகாரம் இடத்திற்கு இடம் மாறுபட்டது. திருநெல்வேலி, சத்தியமங்களம், திருச்சி ஆகியவை முக்கிய மாநிலங்களாகும், மாநில ஆளுநர்களுக்கு உட்பட்டு பாளையக்காரர்கள் இருந்தார்கள்.

**பாளையங்கள்**

மதுரை நாயக்க அரசு, நிர்வாக வசதிக்காக “பாளையங்கள்” என்ற குறுநிலப் பிரிவினை ஏற்படுத்தியது. மதுரை தளவாய் அரிய நாத முதலியார் 72 பாளையங்களை உருவாக்கினார் எனக் கூறப்படுகிறது. பாளையக்காரரின் முக்கியப் பணி அமைதியை நிலை நாட்டுவது, வரிவசூல் செய்வது, படை சேகரிப்பது ஆகியவைகளாகும். மைய அரசு கேட்கும் போது படையெடுத்து உதவுவது இவர்களது கடமை, வரிவசூலில் மூன்றிலொரு பகுதியை மைய அரசிற்கு வழங்கினார்கள். (இவற்றின் தோற்றம், அமைப்பு, நிர்வாகம் பற்றிய விபரங்கள் அடுத்த பாடத்தில் தரப்பட்டுள்ளன.)

**தல அரசுகள்**

இடைக்காலத்தில் பாண்டிய, சோழப் பேரரசு காலத்தில் தமிழகத்தில் தழைத்தோங்கிலிருந்த ஊர், சாலை, நாடு, நகரம் ஆகிய உள்ளாட்சி நிறுவனங்கள் மறைந்து போயின, அவைகளுக்குப் பதில் ஆயகர் முறை தோன்றியது. இம்முறையில் மூன்று முக்கிய அரசு அலுவலர்கள் பண்டைய கிராம பஞ்சாயத்துப் பணிகளைப் புரிந்தனர்.அவர்கள்,

1. கர்ணம் : நிலவருவாய் கணக்குகளை வைத்திருப்பவர் நிலங்களின்பரப்பு,தன்மை பற்றிய பதிவேட்டை பராமரிப்பவர்.

2. கர்ணம் : வரி வசூல் செய்பவர்.

3. கர்ணம் : காவல் பணி புரிபவர்.

இவர்கள் தவிர புரோகிதர், பொற்கொல்லர், கொல்லன், தச்சன், குயவணான், நாவிதன், சக்கிலி ஆகியோரும் தங்களுக்குரிய பணிகளைப் புரிந்தனர். ஊதியங்களுக்குப் பதிலாக இறையிலி நிலங்கள் வழங்கப்பட்டன.

**நாயக்கர் கால கலை, இலக்கியம் மற்றும் கல்வி வளர்ச்சி**

விஜயநகரப் பேரரசு வழியாகத் தோன்றிய நாயக்க அரசர்கள் காலத்தில் அப்பேரரசு பாணியில் தமிழகத்தில் கலை வளர்ச்சியடைந்தது. ஆனால் சோழப் பேரரசு காலத்தைப் போன்று மகோன்னத நிலை அடையவில்லை. நாயக்க மன்னர்கள் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சி கலை இலக்கியத்திலும் எதிரொலித்தது. கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியக்கலை, இசைக்கலை, நடனக்கலை ஆகிய அனைத்தும் பெரும்பாலும் சமயத்தை மையமாகக் கொண்டே வளர்ச்சியடைந்தன.

**இலக்கிய வளர்ச்சி**

நாயக்க மன்னர்கள் தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டவர்கள. எனவே தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு அரசவை ஆதரவு கிடைத்த அளவிற்கு தமிழ் இலக்கியத்திற்கு கிடைக்கவில்லை. எனினும் தமிழ் புலவர்கள் ஆங்காங்கேயுள்ள குறுநிலத் தலைவர்கள் ஆதரவில் இலக்கியங்கள் படைத்து தமிழ் மொழியை வளப்படுத்தினர். அக்காலத்தில் வடமொழி செல்வாக்குடன் திகழ்ந்ததால் வடமொழிச் சொற்களே தமிழில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. அம்மொழிச் சொற்கள் கலந்த மணிப்பிரவாள நடை பிரபலமானது இக்காலத்தில்தான்.

சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களோ இராமாயணம் போன்ற காவியங்களோ இயற்றப்படவில்லை. பிரபந்த இலக்கியங்களே பெரும்பாலும் பாடப்பட்டன. குறிப்பாக தூது, குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், காதல், கலம்பகம், அந்தாதி மற்றும் தல புராணங்களும் சிற்றிலக்கியங்களிலும் தான் இயற்றப்பட்டன.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று பெரும்பாலான இலக்கியங்களின் உட்கரு சமயம்தான். எனவேதான் வரலாற்றாளர் டி.வி. மகாலிங்கம் "பெரும்பான்மையான நூற்கள் சமய நோக்குடையவை. வைணவ, சைவ, சமயத் தத்துவங்களை விளக்குபவை. குறிப்பிட்ட வழிபாட்டு இடங்களைப் புகழும் பாடல்களைக் கொண்டவை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**நாயக்கர் காலக் கலைகள்**

**கட்டிடக்கலை**

திராவிடக் கட்டிடக்கலை விஜயநகரப் பேரரசு காலத்தில் முழுமை பெற்றது என்று கூறுவர். அது தமிழகத்தில் பரவியது நாயக்கர்கள் காலத்தில் தான். இன்று தமிழகத்தில்

காணப்படும் இந்துக் கோவில்கள், கோபுரங்கள், மண்டபங்கள் நாயக்கர்கள் காலத்தில் கட்டப்பட்டனவை தான். அவைகளுள் முக்கியமானவை:

**1. மதுரை புதுமண்டபம்**

மதுரை மீனாட்சியம்மன் கோவிலை ஒட்டியுள்ள புதுமண்டபங்கள் திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது.

**2. சிதம்பரம் கோவில் ஆயிரங்கால் மண்டபம்**

**3. திருநெல்வேலிக்கருகிலுள்ள கிருஷ்ணாபுரம் மற்றும் கடையம் கோவில்**

**4. வேலூர் பேரூர் கோவிலின் கல்யாண மண்டபங்கள்**

**5. மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் வடக்கு கோபுரம், ஆயிரங்கால்மண்டபம், மூர்த்திமண்டபம், வீரப்பமண்டபம்.**

**6. திருநெல்வேலி நெல்லையப்பர்கோவில் மற்றும்திருவண்ண மலைக் கோவில்கள் திருப்பணி.**

**7. செஞ்சி ராஜகிரி மலையடிவாரத்திலுள்ள வெங்கடரமாண சாமி கோவில்.**

**8. ஸ்ரீரங்கம்,இராமேஸ்வரம்கோவில்களிலுள்ள சுற்றுச்சுவர்கள்**

**9. வண்டியூர்த் தெப்பக்குளம்**

**10. செஞ்சிக்கோட்டை,வேலூர்க்கோட்டை**

செஞ்சிக் கோட்டையை பிமண்டோ, பாதிரியார் ‘கிழக்கின் டிராய் நகரம்’ என்று கூறியுள்ளார்.

**11. மதுரை மஹால்**

திருமலைநாயக்கர் கட்டியுள்ள இந்த அரண்மனை தென்னகத்து தாஜ்மகால் எனப் போற்றப்படுகிறது. இந்தக் கட்டிடத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் இஸ்லாமிய கட்டிடக்கலையின் வளைவு மாடங்களைக் கொண்டதுதான்.

**சிற்பக் கலை**

மதுரையில் திருமலை நாயக்கர் கட்டிய புதுமண்டபத் தூண்களில் காணப்படும் அழகான சிற்பங்கள், யாழிகள், நாயக்கர் மன்னர்களின் உருவச்சிலைகள், ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்பரங்குன்றம், அழகர்கோவில் ஆகிய கோவில் மண்டபங்களில் காணப்படும் சிற்பங்கள், குறிப்பாக சிவபெருமாள் காளியுடன் நடனம் செய்யும் சிற்பம்,

முருகன் ஆறு திருமுகங்களுடன் மயல் வாகனத்திலமாந்து நிற்பதைக் காட்டும் சிற்பம். மதுரை மீனாட்சியம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத்தில் காணப்படும் சிற்பங்கள் - பிட்சாடனர் உருவம், மோகினி வடிவம் காளியின் நடனச்கிலை, சிவனது ஊர்த்துவதாண்டம் திருநெல்வேலிக் கருகிலுள்ள கிருஷ்ணாபுரம் கோவிலில் காணப்படும் அழகிய சிற்பங்கள், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் உள்ள இசைத்தூண்கள், சுசீந்திரம் கோவிலிலுள்ள பெரிய அனுமன் சிலை, மீனாட்சியம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத்தின் முகப்புத் தூண்களில் காணப்படும் அரிச்சந்திரன், குறுவன் குறத்தி சிலைகள் ஆகியவை நாயக்கர்களின் படைப்புகளே.

**ஓவியக் கலை**

தமிழகத்திலுள்ள ஆலய பிரகாரச் சுவர்களின் காணப்படும் வண்ண ஓவியங்கள் அனைத்தும் நாயக்கர் காலத்தில் தீட்டப்பட்டவைகளே. அவையனைத்திலும் விஜயநகரப் பாணி பிரதிபலிப்பதைக் காணலாம் ஸ்ரீரங்ககோவில் மண்டபத்தில் தீட்டப்பட்டுள்ளவைகளை அதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

மதுரை மீனாட்சி கோவிலில் ஊஞ்சல் மண்டபத்தின் எதிரில் உள்ள மண்டபத்தின் மேல் விதானத்தில் சிவபெருமான் அங்கையற் கண்ணியை மணமுடித்த காட்சி அற்புதமாய் தீட்டப்பட்டுள்ளது. இத்திருமணக் காட்சியை ராணி மங்கம்மாளும் அவரது பேரன் விஜயரங்க சொக்கநாதரும் பார்த்து ரசிப்பது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு புறத்தில் மீனாட்சியம்மை எட்டுத் தசைக் காவலருடன் போரிடும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அங்கையற்கண்ணியிடமிருந்து அந்தணர் செங்கோலைப் பெறுவதை ராணி மங்கம்மாளும் பணிப்பெண்களும் பார்த்து போன்ற சித்திரமும் ரசிக்கத்தக்கது.

பொற்றாமரைக் குளத்தில் எதிரில் உள்ள சுவர்களில் சிவபெருமாண் 64 திருவிளையாடல்களும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. நாயக்கர்கள் கால மக்களின் உடை, அணிகலன்கள், கூந்தல் ஒப்பனை ஆகியவற்றை இந்த ஓவியங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

திருக்குற்றலத்திலுள்ள சித்திர சபையிலுள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை.மற்றும் கும்பகோணம், செங்கம், பட்டீசுரம், தில்லை, திருவெள்ளறை முதலிய இடங்களிலுள்ள கோவில்களும் நாயக்கர்கள் கால ஓவியங்களை காணலாம்.மற்றும் சமண சமய ஓவியங்கள் பல நாயக்கர் காலத்தை சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. திருப்பருத்திக்குனறம் என்னுமிடத்தில் சமண தீர்க்கங்கரர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன

**“தஞ்சை இரகுநாதபியுதயம்”** என்னும் நூலில் இரகுநாத நாயக்கர் கால ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவர் ஸ்ரீராமசதனம் என்னும் அரண்மனையைக்கட்டி அதில் ஸ்ரீஇராமர் பட்டபிஷேகத்தை ஓவியமாக வரையச் செய்தார் என்றும் விஜயபவனம் என்ற ஓர் அரண்மனையில் அவர் பெற்ற வெற்றிகளை ஓவியங்களாகத் தீட்டியுள்ளார் என்றும் அந்நூலில் குறிப்புகள் உள்ளன. மற்றும்

கும்பகோணம் இராமசாமி கோவிலிலும் தஞ்சைப் பெருவுடையார் கோவிலிலும் காணப்படும் ஓவியங்கள் தஞ்சை நாயக்கர் காலத்தவை என்று கூறப்படுகிறது.

**செப்பு படிமங்கள்**

சோழர் காலத்தை போன்று நாயக்கர்கள் அழகிய நுண்கலை மிகு அரிய செப்புபடிமங்களை உருவாக்கிவிடவில்லை என்றாலும் அந்த அரிய கலையை அழித்து விடாது பாதுகாத்த பெருமையை பெறுகிறார்கள்.

ஸ்ரீரங்க கோவிலில் இரண்யனை வதம் செய்யும் நரசிம்மாவதார செப்புருவமும், சேரன் மாதேவி கோவிலில் உள்ள ருக்மணி சத்யபாமா படிமங்களும், மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலுள்ள பிச்சையேந்தும் பெருமாள். கால் மாறியாடிய சிவன் படிமங்களும், ஸ்ரீவைகுண்டம் கண்ணபிரான் கோவிலிலுள்ள லட்சுமி நரசிம்மர், நெல்லையப்பர் கோவிலில் உள்ள காந்திமதி, பாவநாசக் கோவிலுள்ள அகத்திய முனி படிமங்கள் ஆகியவை குறிபபிடத்தக்கவை.

**கல்வி**

இடைக்கால இந்திய அரசர்கள் மக்களுக்கு பொதுக்கல்வி அளிப்பது தங்கள் கடமை எனக் கருதவில்லை. கல்வி கற்பது அவரவர் விருப்பத்திற்கு விடப்பட்டது. சாதி அமைப்புகளும் மக்களும் தங்களுக்குரிய தொழிலுக்கேற்ற கல்வியை அளித்து வந்தனர்.

இந்துக் கோவில்களில் வேதங்களையும் அவற்றோடு சேர்ந்த கலைகளையும் கற்றுக் கொடுக்க பாடசாலைகள் இருந்தன. இந்த பாடசாலைகளுக்கு மன்னர்களும் தனவந்தர்களும் வணிகர்களும் மானியங்கள் அளித்தனர். கிராமத்தில் உள்ள முதியவர்(ஆசான்) தம்மிடம் வரும் மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்றுக் கொடுத்து வந்தார். இதுவே **"திண்ணைப் பள்ளிக் கூடங்கள்"** எனப்பட்டன. மாணவர்கள் ஆசானுக்கு பணமாகவோ, பொருளாகவோ ஊதியம் அளித்து வந்தனர். மாணவர்கள் மணலில் எழுதினர். பெரியவர்கள் எழுத்தாணியால் ஓலைச் சுவடிகளில் எழுதினர்.

மசூதிகளில் **"மதரசா"** எனப்பட்ட இஸ்லாமியப் பள்ளிகள் நடைபெற்று வந்தன. அங்கு பெரும்பாலும் சமயக்கல்விதான் அளிக்கப்பட்டது. குர்ஆன் ஓதுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

தற்கால கல்விமுறைக்கு இக்காலத்தில் தான் அடித்தளம் அமைக்கப்பட்டது. அதற்கான பள்ளிகளை கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் நடத்தினர். அங்கும் சமயம் சார்ந்த கல்விதான் முக்கியமாக அளிக்கப்பட்டது. அக்கல்வியுடன் எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்பட்டது. அப்பள்ளிகளில் கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது இந்துக்களும் பயின்றார். மதுரையில் **பெர்லின்டன்** என்ற பாதிரியார் இந்து சமய மாணவர்களுக்கும் தாமே ஒரு பள்ளி வைத்து நடத்தியுள்ளார். முதன் முதல் நூற்கள் அச்சிடப்பட்டது. இக்காலத்தில் தான் 1677-இல் தூத்துக்குடி அருகிலுள்ள புன்னகைக்காயலில் அச்சுயந்திரம் நிறுவப்பட்டது. **"ஞானோபதேச சருக்கம்"** என்ற நூல்தான் முதலில் அச்சிடப்பட்டது. பின்னர் தரங்கம்பாடியில் டேனியர்கள் அச்சுயந்திரம் அமைத்தனர்.

பிராமணர்களுக்கு வேதங்களையும் வடமொழியையும் கற்றுக்கொடுக்க பாடசாலைகள் தொடங்கப்பட்டன. வேதங்களைப் பயில்லது தான் கல்வியின் மிகச்சிறந்த பயனாகக் கருதப்பட்டது. இத்தகைய பாடசாலைகளுக்கு மன்னர்கள் ஏராளமான மானியங்களை அளித்தனர். அந்தணர் குடியிருப்பான அக்ரகாரங்களில் இப்பாடசாலைகள் இயங்கின. இராபர்ட் டி நோபிலி தாம் எழுதிய கடிதத்தில் மதுரை நகரில் 200, 300 மாணவர்களாயுள்ள பல வகுப்புகளில் 10000 பிராமண சிறுவர்கள் கல்வி பயின்று வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

## 14. முகமதியர் ஆட்சி

### முகம்மதியர்கள் - அறிமுகம்

பாண்டிய நாட்டில் கி.பி.1142ஆம் ஆண்டு துவங்கியது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சேர மன்னனான சேரமான் பெருமாள் பாஸ்கார ரவிவர்மா என்பவரின் காலத்தில் இசுலாம் மேற்கு மலபார் கடற்கரை பகுதிகளில் அறிமுகமாகியது. பின்னர் இது கன்டை மற்றும் தமிழக பகுதிகளிலும் பரவியது. வணிக நோக்குடன் சில அராபிய, எகிப்து மற்றும் துருக்கிய குழுக்கள் தமிழகத்தின் சோழ மண்டல கடற்கரை பகுதிகளில் வந்து தங்கினர். இவர்கள் மூலமாக இசுலாமிய மதத்தை ஏற்றுக்கொண்டவர்கள். வர்த்தக மற்றும் அயல்நாட்டு ஏற்றுமதியின் காரணமாக அந்தந்த பகுதியை ஆண்ட மன்னர்களுக்கு நெருக்கமானார்கள். அவர்களில் பலர் ஆட்சிப் பொறுப்புகளில் பங்கேற்றனர். இதே நேரத்தில் சில வட இந்திய இசுலாமிய அரசுகளில் எல்லை விரிவாக்க நடவடிக்கைகளின் மூலமாகவும் சில இஸ்லாமிய அரசுகள் தமிழகத்தில் ஏற்பட்டன.

### பாண்டிய சுல்தான்கள்

பாண்டியர்களாது ஆட்சிக் காலத்தில் அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்து பின்னர் அவர்களின் கீழ் சிறிய நிலப்பரப்பை ஆளும் உரிமை பெற்றவர்கள் பாண்டிய சுல்தான்கள் ஆவர். இவர்களுள் சையத் இப்ராகிம் மற்றும் சுல்தான் சுமாலுதீன் இராவுத்தர் ஆகிய இருவர் முக்கியமானவர்கள் ஆவர்.

### மதுரை சுல்தான்கள் (கி.பி.1335 - 1378)

கி.பி.1323ல் பராக்கிரம தேவ பாண்டியன் காலத்தில் உலூகான் படையெடுத்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றினார். முகம்மது-பின்-துக்ளக் ஆட்சியில் மாபார் என்றழைக்கப்பட்ட தமிழகம் தில்லி சுல்தானியத்தின் 23 மாநிலங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. சுல்தான் ஜலாலுத்தின் ஹஸன்ஷா என்பவர் மதுரையில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பின்பு இவர் டில்லியிலிருந்து பிரிந்து மதுரையை சுதந்திரபிரதேசமாக அறிவித்தார். இவர் வழி வந்தவர்களே மதுரை சுல்தான்கள் ஆவர்.

### ஆற்காடு நவாப்புகள் (கி.பி.1690 - 1801)

ஆற்காடு நவாப்புகள் எனப்படுவோர் 1690 - 1801வரை தென்னிந்திய கன்னட பகுதிகளை ஆண்ட மன்னர்கள் ஆவர். இவர்கள் தலைநகரம் இன்றைய சென்னை அருகில் உள்ள ஆற்காடு ஆகும். தமிழக வரலாற்றில் மிக முக்கியமான இவர்கள் பொதுவாக கன்னட நவாப்புகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஆட்சியின்

பொழுதுதான் ஆங்கிலேயர்கள் முகலாய ஆட்சியாளர்கள் உதவியுடன் இந்தியாவில் காலூன்ற ஆரம்பித்தனர்.

**நவாப்களின் வீழ்ச்சி**

பதின்மூன்றாவது நவாபான முகம்மது கவுஸ்கான் (கி.பி.1825-1855) வாரிசு இல்லாமல் இறந்தார். இதனால் அவரது ஆட்சி ஆங்கில அரசின் கீழ் சென்றது. 1867ல் குலாம் முகம்மது கவுஸ்கானின் சிறிய தந்தை பிரித்தானிய மகாராணி விக்டோரியாவிடம் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டார். அதன்படி அவர்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வரி வசூல் செய்யும் உரிமையை ஆங்கிலேயர் பெற்றனர்.

**மதுரையை ஆண்ட சுல்தான்கள் பெயர் வரிசை**

1. ஜலாலுத்தின் அஷன்லா - கி.பி. 1333 - 1340 வரை
2. அலாவுதீன் உத்தொஜ - கி.பி. 1340 - 1341 வரை
3. குத்புதீன் - கி.பி. 1341 (40 நாட்கள்)
4. கியாஜீத்தின் தம்கானி - கி.பி. 1341 - 1344 வரை
5. நலிருத்தீன் - கி.பி. 1344 - 1355
6. அடில்ஷா - கி.பி. 1355 - 1358 வரை
7. பக்ருத்தீன் முபாராக்ஷா - கி.பி. 1359 - 1371 வரை
8. அலாவுதீன் சிக்கந்தர்ஷா - கி.பி. 1372 - 1378 வரை

**மதுரையில் முகம்மதியர்கள் ஆட்சி ஏற்பாடுகள்**

பிற்காலப் பாண்டிய வேந்தர் குலசேகர பாண்டியனுக்கு சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் என்று இரு புதல்வர்கள் இருந்தனர்.

வீரபாண்டியன் கி.பி.1296ல் இளவரசுப் பட்டம் எய்தினான்.

சுந்தரபாண்டியன் கி.பி.1303ல் பட்டம் ஏற்றான்

வீரபாண்டியன் திறமையையும் வீரத்தையும் கண்டு அவனைத் தனக்குப் பின் அரசனாக வேண்டும் எனப் பணித்தான் தந்தை குலசேகர பாண்டியன்

இதனால் ஏற்பட்ட சகோதர யுத்தத்தால் இருவரும் வேறு மன்னர்களைத் துணைக்கு அழைத்தனர்.

அவ்வாறு சுந்தரபாண்டியன் டில்லி சுல்தான் அலாவுதின் கில்ஜியிடம் உதவி வேண்டினான்.

மாலிக்கபூர் மதுரையை கொள்ளையிட்டான். “பாண்டிய நாட்டிலிருந்து 512 யாயைகள்,5000 குதிரைகள்,500 மணங்குப் பொன், முத்துக்கள், அணிகலன்கள் அடங்கிய

பெட்டிய ஆகியனவற்றை மாலிக்கபூர் கொள்கை கொண்டான்” என்று வரலாற்றிஞர் அமீர்குங்ரு எழுதியுள்ளார்.

மறுபடி சிறிது காலம் இரு சகோதரர்களும் சண்டையிட்டப்படி ஆட்சியைத் தொடர்ந்தனர். திருவாலங்காட்டு மன்னன் சேரன் இரவிவர்ம பாண்டியன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான்.

சேரனைக் காகதியர்கள் வென்று மதுரையைக் கைப்பற்றினர். பின் சிற்றரசர்களும், பாண்டியர்களும் ஆண்டனர். பின்பு நிகழ்ந்த முகம்மதியப் படையெடுப்புகளில் முகம்மது பின் துக்ளக் என்ற உலூக்கான் மதுரையைக் கைப்பற்றி முதன்முதலில் 1323ல் சுல்தான்களின் ஆட்சியை நிறுவினான்.

பாண்டிய நாடு துக்ளக் இராஜ்ஜியத்தின் 23 மாகாணங்களில் ஒன்றாக இணைக்கப்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு டில்லி சுல்தான் தொடர்பை அகற்றி ஜலாலுதீன் ஆசன்ஷா தன்னை மதுரை சுல்தானாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான்.

## மதுரையில் சுல்தான்கள் ஆட்சியினால் ஏற்பட்ட சமூக விளைவுகள்

### முன்னுரை

மதுரை சுல்தான்கள் பதினான்காம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு செயல்பட்ட அரசாகும். பாண்டியர் வீழ்ச்சியடைந்தபின் நடைபெற்ற இஸ்லாமிய படையெடுப்புகளால் தோன்றிய இந்த முகம்மத் அரசு பின்னர் விஜயநகரப் பேரரசு படையெடுப்புகளால் அழிக்கப்பட்டது. இதுவே தமிழகத்தில் தொடர்ச்சியாக ஆட்சி புரிந்த ஒரே இஸ்லாமிய அரசாகும்.இம்முகம்மதிய அரசு ஆட்சியினால் ஏற்பட்ட சமூக விளைவுகளைக் கட்டுரையில் காணலாம்.

### ஆட்சி குறிப்புகள்

மதுரை சுல்தான் ஆட்சி பற்றி இரு சமகாலத்திய சான்றுகள் வரலாற்றாசிரியர்களுக்குக் கிடைத்துள்ளன. இபின்பதூதாவின் குறிப்புகள் மற்றும் கங்கதேவியின் ‘மதுராவிஜயம்’ என்ற இரண்டும் ஆகும். மதுராவஜயம் “குளிக்கும் பெண்களின் மார்பில் பூசிய சந்தனம் கலந்து வெளிர் நிறமாக ஓடிய தாமிரபரணி சுல்தான்கள் ஆட்சியில் பலியிடப்பட்ட பசுகளின் இரத்தம் கலந்து சிவந்து ஓடியது” எனக் குறிப்பிடுகின்றது. பின்னர் கி.பி.1378ல் விஜயநகரப் பேரரசர் முதலாம் புக்கராயர் மகன் குமார கம்பணன் மதுரை சுல்தான்களை வென்று மதுரையில் நாயக்கர் ஆட்சியை நிறுவினான்.

### மொழி வளர்ச்சி

இஸ்லாமியர்கள் மொழி வளர்ச்சிக்கு ஆதரவளித்தனர். இக்காலத்தில் இந்து இஸ்லாமிய பிராந்திய மொழி இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றது. புதிய மொழியாகிய உருது பரவலாகியது. உருது மொழியில் புதிய இலக்கியங்கள் தோன்றின. இதே காலத்தில் பாரசீக மொழியில் பல வரலாறுகளும் சுயசரிதைகளும் கடிதங்களும்

எழுதப்பட்ட மேலும் இஸ்லாமியர்களின் வரவினால் காகிதத்தைப் பயன்படுத்துதல் காகிதங்களில் படங்களைப் பதித்தல் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன.

**கல்வி வளர்ச்சி**

முஸ்லீம் ஆட்சியாளர்கள் கற்றறிந்த அறிஞர்களை ஆதரித்தனர். கல்வி கற்றவர்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்டனர். முஸ்லீம் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது நாட்டின் பல்வேறு பகுதிகளில் கல்வி நிறுவனங்களும் நூல் நிலையங்களும் நிறுவப்பட்டன. கவிஞர்களும் எழுத்தாளர்களும் தத்துவஞானிகளும் இஸ்லாமிய ஆட்சியாளர்களின் அவையை அலங்கரித்தனர். அச்சங்கள் இல்லாததால் கையால் எழுதுவதற்கு தனிநபர்கள் நியமிக்கப்பட்டனர். கல்விக் கூடங்களில் சமயக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. மாணவர்களுக்கு அரபு மொழி கட்டாயமாகப் போதிக்கப்பட்டது.

**கலை, கட்டிடக் கலையில் மாற்றம்**

முஸ்லீம் ஆட்சிக் காலத்தில் கலை கட்டிடக் கலையில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் ஏற்பட்ட மலாமியக் கலை இந்துக் கலையைப் போன்றே அழகும், தூய்மையும் உடையதாக விளங்கின. இரண்டும் இணைந்து சரசானிக் கட்டிடக்கலை உருவானது. இதில் பராம்பரிய அம்சங்களான கைவேலைப்பாடுகள் அழகான வடிவமைப்புகள் காணப்பட்டன. இதனைப் பின்பற்றி புதிய பல நினைவுச் சின்னங்கள், வீடுகள், தெருக்கள் மற்றும் ஆலயங்கள் உருவாயின. இந்த சரசானிக் கலையின் அடிப்படையில் அணிகலன்களும் செய்யப்பட்டன.

**தமிழ் முஸ்லீம் சமுதாயத்தின் தோற்றம்**

தமிழ் சமுதாயததினர் ஆரம்பத்தில் முஸ்லீம்களை எதிரிகளாகவே கருதினர். ஆனால் நாளடைவில் தங்கள் பகைமையை மறந்தனர். இதனால் இவ்விரு கலாச்சாரங்களும் இணைந்தன. இதன் விளைவாகத் **'தமிழ் முஸ்லீம் சமுதாயம்'** உருவானது.

**கலாச்சார இணைப்பு**

இந்து முஸ்லீம் இணைப்பு ஏற்பட்டதன் விளைவாக முஸ்லீமகள் ஆடை அணியும் முறை, மற்றும் சில சடங்குகளை இந்துக்களைப் போன்று ஆடம்பரமான திருவிழாக்களை நடத்தினர். இந்துப் பெண்களை வலுக்கட்டயமாக முஸ்லீம்கள் திருமணம் செய்தனர். இதனால் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இஸ்லாமியர் வருகைக்கு முன் சாதிக் கொடுமை வேரூன்றி இருந்தது. உயர் சாதியினார் என்று கருதப்பட்டவர் பிற சாதியினரை இழிவாகக் கருதினர். ஆனால் முஸ்லீம்களின் வருகைக்குப் பின் சாதிக் கொடுமை தணிந்தது எனலாம்.

**இஸ்லாமிய மதத்தின் வளர்ச்சி**

முஸ்லீம்கள் தங்கள் சமயத்தைத் தமிழகத்தில் பரப்பி மிகவும் ஆர்வத்தோடு செயல்பட்டனர். இந்துக்கள் பலர் இஸ்லாமிய சமயத்திற்கு மாறினர். இதனால் இந்து

மதம் நலிவடைந்தது. இதனால் இந்து மதத்தைப் பாதுகாக்கப் பக்திநெறி போன்ற பல இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**தமிழர்களின் வெளி உலகத் தொடர்பு**

முஸ்லீம்களின் வருகையால் தமிழகத்தில் நிலவி வந்த பல பாரம்பரியத் தடைகள் நீக்கப்பட்டன. இதன் விளைவாக அதுவரை தமிழ்நாட்டில் ஒதுங்கி வாழ்ந்து வந்த தமிழர்கள் வெளி உலகுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தனர். இதனால் தமிழர்களின் வெளிஉலகத் தொடர்பு அதிகரித்தது.

**இந்துகள் மீதான கொடுமைகள் அதிகரிப்பு**

முஸ்லீம்கள் இந்து சமுதாயத்தின் மீது பல கட்டுப்பாடுகள் விதித்தனர். இந்துப் பெண்களும் பர்தா அணிய வற்புறுத்தப்பட்டனர். இந்து ஆலயங்கள் அடிக்கடி சூறையாடப்பட்டன. இந்துக்களின் சமய உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்து தெய்வங்கள் நிந்திக்கப்பட்டன. இதனால் இந்து சமயம் நலிவடைந்தது.

**இந்துக்களின் மீதான வரிப்பளு**

இஸ்லாமிய ஆட்சியில் இந்துக்கள் மீது அதிகமான வரி போடப்பட்டது. புதிய வரியாகிய ஜிசியா, வருமானவரி, வீட்டுவரி, சுங்கவரி போன்றவை விதிக்கப்பட்டன. நிலவரி கடுமையாக வசூலிக்கப்பட்டது. விவசாயம் புறக்கணிக்கப்பட்டது.

**முஸ்லீம்களின் தமிழ்நாட்டுப் படையெடுப்பு**

டெல்லியில் கில்ஜியின் ஆட்சி தொடங்கியதனால் இஸ்லாமியர் தமிழகத்தில் நுழைய ஏதுவாயிற்று. அலாவுதீன்கில்ஜியின் தென்னக வெற்றி என்று சொல்வன விட மாலிக்காபூரின் வெற்றி என்றே கூறவேண்டும்.

அமீர்குசுரு, ஜியாவுதீன், பாரணி முதலியோரின் குறிப்புகள் வாயிலாக மாலிக்காபூரின் பாண்டிய நாட்டுப் படையெடுப்பினையும் தமிழகத்தில் இஸ்லாமிய நுழைவனையும் பற்றிய செய்தியினை அறிகிறோம். மாலிக்காபூரின் பாண்டியப் படையெடுப்பு பாண்டியப் பேரரசின் வறுவின்மையையும். அதன் வீழ்ச்சியின் தொடக்கத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. 1311 ஏப்ரலில் மாலிக்காபூர் மதுரை நோக்கி படையெடுத்தார்.

**இராமேசுவரம்**

மாலிக்காபூர் இராமேசுவரம் வரை சென்று டெல்லி திரும்பினார். அங்கு மசூதி ஒன்று கட்டினார். ஆனால் டாக்டர். கிருட்டிணசாமி இராமேசுவரம் வரையிலான மாபெரும் படையெடுப்பு என்பதற்கு மேல் மாலிக்காபூரின் படையெடுப்பிற்கு எவ்விதம் முதன்மையுமில்லை என்கிறார்.. “வெறும் தாக்குதலாகவே அமைந்த மாபார்ப் படையெடுப்பு அக்காலத்தில் வெற்றிச் சிறப்புடைய படையெடுப்பு என்று கூற இயலாது அதனால் நிலையான விளைவுகளேதுமில்லை” என்பது நீலகண்டனாரின் கணிப்பு.

**இரு படையெடுப்புகள்**

இரு இஸ்லாமியப் படையெடுப்புகள் மாலிக்காபூரின் படையெடுப்பிற்குப் பின் ஏற்பட்டன. மதுரையின் மேல் இரவிவர்மன் குலசேகரத் திருவடி என்ற வேணாட்டு அரசனும் மும்மடி நாயக்கரும் படையெடுத்தனர். சிற்றரசர்கள் ஆங்காங்கே தனியரசு செலுத்தினர் சேதிராயர், வாணாதிராயர், சம்புவரையர் முதலானோர் பிளாந்ததால் பாண்டியர் ஆதிக்கம் ஒடுக்கப்பட்டது. இச்சூழ்நிலையில்தான் படையெடுப்புகள் நிகழ்ந்தன.

**குஸ்ருகான் படையெடுப்பு (1318)**

இரண்டு படையெடுப்புகளில் முதலாவது படையெடுப்பு டெல்லி சுல்தான் முபாரக் ‘ாவினால் அனுப்பப் பெற்ற குஸ்ருகான் என்பவரால் ஏற்பட்டது. ஆனால் அரசத்துரோகக் குற்றம் சாட்டப்பெற்று மதுரையில் தங்கிய குஸ்ருகான் டெல்லிக்குத் திருப்பியனுப்பப் பெற்றார். சுல்தானைக் கொன்று அரியணை ஏறினான்.

**உலூக்கானின் படையெடுப்பு**

டெல்லியின் சுல்தான் கியாசுத்தீன் தன் மகன் உலூக்கான் அல்லது முகமது பின் துக்ளக்கைப் பாண்டிய நாட்டை வெல்ல அனுப்பினார். டில்லி சுல்தான் ஆட்சியை நிறுவிய துக்ளக்கின் மாநிலங்களில் மதுரையும் ஒன்றாயிற்று டெல்லி திரும்புகையில் ஜலாலுத்தின் அசன்‘ாவை அரசப் பிரதிநிதியாக நியமித்துச் சென்றார். இவ்வாறு முகமது பின் துக்ளக் பாண்டிய நாட்டை வெனறு அதனை டில்லி சுல்தானியத்துடன் நிரந்தரமாக இணைப்பதற்காகவே வந்தான் அதன்பின் “மாபார்” என்று முஸ்லீம் ஆசிரியர்களால் அழைக்கப்பட்ட பாண்டியநாடு துக்ளக் அரசின் 22 மாநிலங்களுள் ஒன்றானது. ஜலாலுத்தின் அஸன்‘ா தன் ஆளுநராக நியமிக்கப்பட்டான். இல்லிதமாக மதுரை பாண்டியப் பெரரசு சவப்பெட்டியின் கடைசி ஆணியும் அடிக்கப்பட்டுவிட்டடது.

**மதுரைச் சுல்தானிய வரலாறு**

மதுரையில் மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்குப் பின் அவனது இருமகன்களான சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், ஆகிய இருவரும் வாரிசுரிமை குறித்து சச்சரவிட்டுக் கொண்டிருந்தபோது மாலிக்காபூர் படையெடுப்பு நிகழ்தது. இப்படையெடுப்பு சூறாவளி போன்ற திடீர் தாக்குதல் இருந்தது. கொள்ளையடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. எனில் நிலைத்த அரசியல்விளைவுகள்எதனையும்இதுவிளைவிக்கவில்லை எனினும் பாண்டியப் பேரரசின் அடிப்படையை ஆட்டம் காணச் செய்துவிட்டது மேலும் இது பல படையெடுப்பிற்கு முன்னோடியாகவும் ஆகிவிட்டது. 1318-இல் மற்றொரு தளபதி குஸ்ருகான் இது போன்ற சூராவளிப் படையெடுப்பை நிகழ்த்தினான்.

ஆனால் 1323- இல் நடைபெற்ற முகமது பின் துக்ளக் படையெடுப்பு இவற்றினின்றும் மாறுபட்டது. அவன் மதுரையைக் கைப்பற்றி, அங்கு தனது ஆறுநராக ஜலால் உதீன் அஸன்‘ா என்பவனை நியமித்தான் மதுரை டில்லி சுல்தானியத்தின் 22-வது மாநிலமாயிற்று.

**மதுரை சுல்தானியம் நிறுவப்படல்**

ஆளுநராக இருந்த அஸன்'ா தம்மை முழு சுதந்திரமுள்ள சுல்தானாக ஆக்கிக் கொள்ள விரும்பினான். இவ்வாறு அவனைச் செய்யத் 'தூண்டியதற்கு இரு காரணங்கள் உண்டு, ஒன்று, சுல்தானியத் தலைநகரான டில்லியிலிருந்து மதுரை வெகுதொலைவிலிருந்தது. இரண்டு, சுல்தான் துக்ளக் பல்வேறு இடங்களில் தோன்றிய உள்நாட்டுக் குழப்பங்களை அடக்க முடியாது திணறிக் கொண்டிருந்தது.

எனவே 1333 அல்லது 1334- இல் தன்னை மதுரை ல்தானாகப் பிரகடணப்படுத்திக் கொண்டான். இவ்வாறு மதுரை டிலிலிப் பேரரசிலிருந்து விடுபட்டு 'தனி சுல்தானியமானது. சுல்தான் துக்ளக், அஸன்'ாவின் துரோகத்தைக் கேள்விப்பட்டு பெரும்படையுடன் மதுரை வந்தான். வழியில் அவனது படைகள் தொற்று நோயால் நலிவடையத் தொடங்கியதால் மதுரை படையெடுப்பைக் கைவட நேர்ந்தது. மதுரை சுல்தானியம் தற்காலிகமாகத் தப்பித்தது. 46 ஆண்டுகளே நீடித்த இச்சுல்தானியம் அரசு படுகொலைகள் நிரைந்த கொடூர ஆட்சியாக இருந்தது.

**அஸன்ஷா (1335-1340)**

மதுரை சுலதானியத்தின் முதல் சுல்தான். இவன் அலாவுதீன் உதான்ஜி என்பவனால் கொல்லப்பட்டான்.

**அலாவுதீன் உதான்ஜி (1340-1341)**

அஸன்'ாவைக் கொன்ற உதான்ஜி சுல்தானாக அரியணை ஏறினான். இவன் ஹொய்சல மன்னன் மூன்றாம் வல்லாளனை எதிர்த்து போர் புரிந்த போது. எங்கிருந்தோ வந்த அம்பு ஒன்று அவன் உயிரைப் பறித்தது.

**குதுப்உதீன் (1341)**

உதான்ஜியின் மருமகனான குதுப்உதீன் அரியனை ஏறினான. ஆனால் அவன் நாற்பது நாள் தான் ஆட்சி செய்ய முடிந்தது. அதற்குள் அவன் படுகொலை செய்யப்பட்டான்.

முதுப்உதீனுக்குப் பின் அசன்'ாவன் மருமகனான கியாதுடீன் தாமகன் சுல்தானானான். இவன் இந்துக்களை மிகவும் கொடூரமாக நடத்தினான். இவன் காலத்தில் தான் இபன்தூதா கப்பல் விபத்தில் சிக்கி தமிழகத்திற்கு வந்தார். அவர் சுல்தானின் கொடிய பண்புகளை விளக்கியுள்ளார்.

ஹொய்சல மூன்றாம் வல்லாளன் மதுரை சுல்தானியத்தை அழித்தொழிக்கப் பெரும்படையுடன் மதுரை நோக்கி வந்தான். வழியில் தன்னை எதிர்த்த முஸ்லீம்களை தோற்கடித்துத் துரத்தினான். இறுதியில் கண்ணனூர் கொப்பம் என்ற இடத்தில் முஸ்லீம் படைகளை முற்றுகையிட்டான். ஒரு லட்சம் வீரர்கள் செய்த முற்றுகையை 6000 முஸ்லீம் வீரர்கள் ஆறுமாதம் சமாளித்தனர். பின் சமாதானப்பேச்சு வார்த்தை ஆரம்பிப்பது போல் நடித்து துரோகத்தனமாய் ஹொய்சலர் மீது திடீரெனப் பாய்ந்தனர். இந்த எதிர்பாராதத் தாக்குதலால் குழப்பமடைந்த ஹொய்சலப் படை சிதறியோடியது. வல்லாளர் முஸ்லீம் வீரர்களிடம் சிக்கினார். அவர்களிடமிருந்த செல்வங்கள் எல்லாம் தந்திரமாய்

அபகரிக்கப்பட்ட பின் இரக்கமற்ற வகையில் கொல்லப்பட்டார். அவரது உடலில் வைக்கோல் அடைக்கப்பட்டு மதுரை கோட்டையில் இந்நிகழ்ச்சி நடைப்பெற்ற சிறிது நாளில் காலரா நோய் பரவி சுல்தானின் மனைவி, தாய் இறுதியில் சுல்தான் ஆகிய அனைவரும் மரணமடைந்தனர்.

**நசிருதீன் (1342-44)**

அரியணை ஏறியவுடன் தனக்குப் போட்டியாக வரக்கூடிய கியாகதீன் மருமகனைக் கொன்று அவன் மனைவியை தான் மணந்து கொண்டான்.

**அடில்ஷா (1344-59)**

இவனது ஆட்சிக்காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை.

**முபாரக் ஷா (1359-71)**

இச்சுல்தான் காலத்தில் விஜயநகரப் பேரரசுப் படைத்தளபதி குமார கம்பணர் மதுரை மீது படையெடுத்து வந்தார். முதலில் அவர் தொண்டை மண்டலத்தில் ராஜகம்பிரியத்தைத் தலைநகராகக் கொண்ட சம்புவரையர்களைத் தோற்கடித்து காஞ்சி நகரினுள் நுழைந்தார். பின்னர் அங்கிருந்து மதுரை நோக்கிப் படையெடுத்து வந்தார். படையெடுப்பு பற்றிய முழு விவரங்களையும் அவனது மனைவி கங்காதேவி சமஸ்கிருத மொழியில் எழுதிய நூலான "மதுராவிஜயம்" தருகின்றது. அவர் சுல்தானைத் தோற்கடித்துக் கொன்ற மதுரையில் மீண்டும் இந்து ஆட்சியையும், தர்மத்தையும் நிலைநாட்டியதாகக் கூறுகிறது. அதன்பின் மதுரை விஜயநகரப் பேரரசின் மாநிலமாயிற்று.

## 15. மராத்தியர் ஆட்சி

**மராட்டியர்கள்**

தஞ்சாவூரில் நாயக்கரின் ஆட்சி நிறைவுற்றபின் 1676-இல் மராத்திய தளபதி வெங்கோஜி தஞ்சையைக் கைப்பற்றித் தன்னை அரசராக அறிவித்தார். இவரைத் தொடர்ந்து இவரது மரபினர்கள் மராத்திய ஆட்சியைத் தொடர்ந்தனர்.

நாட்டை 5 சுபாக்களாகப் பிரித்தனர். பட்டுக்கோட்டை, மாயவரம், மன்னார்குடி, கும்பகோணம், திருவடி ஆகியனவாகும். ஒவ்வொரு சுபாவிலும் ஒரு 'சுபேதார்' நியமிக்கப்பட்டார். இந்த சுபாக்கள் பல சீமைகளாகவும், சீமைகள் மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இந்த மாகாணங்கள் பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டன. மராத்தியர் ஆட்சியில் சுமார் 6,000 கிராம்ஙகள் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் கர்ணம், வெட்டியான், தலையாரி, நீர்கண்டி போன்ற அதிகாரிகள் இருந்தன.

அக்கிரகாரங்களுக்கு அருகில் வெளிநாட்டவர் தங்குவதும் கிறித்தவ சமயம் பரப்பப்படுவதும் தடை செய்யப்பட்டது. மருத்துவர், துணி துவைப்பவர், சவரம் செய்வோர்

முதலியார், ஒவ்வொரு கிராமத்திலும் குடியமர்த்தப்பட்டனர். புலதார மணம் இருந்தது. தேவதாசிகள் பழைய பெருமையை இழந்தனர். திருமணங்கள் ஆரிய முறைப்படி நடைபெற்றன. நீதித்துறையில் மாற்றம் செய்யப்பட்டது. உயர் நீதிபதியும் துணை நீதிபதிகளும் நியமிக்கப்பட்டனர். சுவார்ட்ஸ் என்ற பாதிரியார் குறிப்புகளிலிருந்து “குறிப்பாக அமர்சிஸ் காலத்தில் நீதித்துறை சீர்கேடு அடைந்தது. ஊழலும் நீதிக்கு விலை பேசுவதும் பெருகியது” என்று தெரிய வருகிறது. வுரி செலுத்தத் தவறியவர்கள் சிறையிடலக்கப்பட்டனர். வரி ஏமாற்றுபவரை ஆட்டுக்கல்லைச் சுமந்து வலம வரச் செய்யும் தண்டனை கொடுக்கப்பட்டது நடந்தது.

**தஞ்சாவூரில் மராத்தியர்கள் கால வரிசை**

| | | |
|---|---|---|
| வெங்கோஜி | - | 1674 – 1684 |
| முதலாம் சாகுஜி | - | 1684 – 1712 |
| முதலாம் சரபோஜி | - | 1712 – 1728 |
| துக்கோஜி | - | 1728 – 1736 |
| இரண்டாம் சரபோஜி | - | 1798 – 1832 |

**மரத்தியார் கால சமூக வாழ்வு**

தமிழ்நாட்டில் மராத்தியர்கள் ஏறத்தாழ 200 வருடங்கள் (கி.பி.1659) முதல் கி.பி 1855 ஆட்சி செய்தனர்.

இவர்கள் நாட்டை ஐந்து சுபாக்களாகப் பிரித்தனர். பட்டுக்கோட்டை, மாயவரம், மன்னர்குடி, கும்பகோணம், திருவடி ஆகியனவாகும். சுபாக்கள் சீமைக்களாகவும், சீமைகள் மகாணங்களாகவும் மகாணங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு கிராமத்திலும் கர்ணம், வெட்டியான், தலையாரி, நீர்கண்டி போன்ற அதிகாரிகள் இருந்தனர்.

பிராமணர்கள் கல்வி கற்று வேதங்கள் அறிந்தவராயிருந்தனர். மன்னர்கள் இவர்களுக்கு நிலங்களை வழங்கி தானங்களும் பல செய்தனர்.

மருத்துவர், துணிதுவைப்போர், சவரம் செய்வோர் முதலியவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருந்தனர்.

போர்த்துகீசியரும், டச்சுக்காரரும் தமிழகம் வந்து குடியேறத் தொடாங்கினார்.

புலதார மணம் வழக்கத்திலிருந்து. தேவதாசிகள் பழைய பெருமை இருந்தனர்.

திருமணங்கள் ஆகியவை முறைப்படி நடந்தது.

குழந்தை மணம் மலித்திருந்து. வட இந்தியாவில் தோன்றிய இப்பழக்கம் தமிழகத்திலும் பரவியது.

நீதித்துறையில் மாற்றம் செய்தனர். ஓர் உயர்நீதிபதியும் துணை நீதிபதிய் நியமிக்கப்பட்டனர்.

குற்றவாளிகளுக்கு கொலைத் தண்டனை, தண்டம், சித்ரவதை தலைநகரை விட்டு வெளியேற்றுதல் போன்ற முக்கிய தண்டனைகளாயிருந்தன.

வரி செலுத்தத் தவறியவர்களைச் சிறையிலடக்கும் அதிகாரம் அமீன்களுக்குக் கொடுக்கப்பட்டது. சில நேரங்களில் ஆட்டுக் கல்லைச் சுமந்து வரச்செய்து கிராமத் தெருக்களில் ஊர்வலம் வரச் செய்வதும் உண்டு.

புலால் மறுத்தல் உயர்குடிக் குடும்பங்களில் பரவலாக்கப்பட்டது.

சுல்தான்களின் தாக்கத்தால் அரச குடும்பத்தார் பகட்டான ஆடைகள் அணிந்தனர்.

கிறித்துவ சமயம் காலூன்றியது. சுவார்ட்ஸ் பாதிரியார் மராத்திய மன்னர்களுக்கு ஆலோசகராகவும் ஆசிரியராகவும் இருந்தார்.

காரைக்கால், நாகப்பட்டினம் துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதி வணிகங்கள் நடைபெற்றன.

தமிழ்மொழியை வளர்க்கவில்லை எனினும் அது தானாகவே வளர்ந்தது பல்வேறு தமிழ் இலக்கியங்கள் மலர்ந்தன.

தியாகராஜர், முத்துசுவாமி தீட்சிதர், ீயாமசாஸ்திரி ஆகிய மூன்று இசைக்கலைஞர்கள் இசைக் கலையில் புதுமையைப் புகுத்தி வளர்த்தனர்.

மராத்தியர்கள் ஐரோப்பியர் தம் வரவை சமாளிக்க வேண்டி இருந்ததால் பிற கலைகளில் அதிக நாட்டம் கொள்ள இயலவில்லை.

கிறித்தவர் அல்லாத பொதுமக்கள் கற்க பொதுப்பள்ளிகள் முதன்முதலாக மராத்தியர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

**தஞ்சையில் மராத்தியர் ஆட்சி**

பதினேழாம் நூற்றாண்டில் தக்காணத்தில் மராத்தியர்களுக்கும் முகலாயர்களுக்குமிடையில் எழுந்த ஆதிக்கப்போட்டி அவர்களை தமிழகத்திற்கு இழுத்து வந்தது. தமிழகத் அப்போது நிலவிய நிலையற்ற குழப்பமான சூழ்நிலை இருவரது ஆதிகத்தையும் தமிழகத்தில் நிலைநாட்ட உதவியது. முகலாயர்கள் ஆற்காட்டிலும் மராத்தியர் தஞ்சையிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

தஞ்சையில் மராத்தியர் ஆட்சி ஒரு திட்டமிட்ட முயற்சியினால் நிறுவப்படவில்லை. தஞ்சையில் நடைபெற்ற ஆதிக்கப்போட்டி மராத்தியருக்கு அழைப்பு விடுத்தது. ஒருவரை எதிர்த்து மற்றொருவருக்கு உதவச் சென்ற மராத்தியப்படை இருவரையுமே புறக்கணித்து விட்டு தன் ஆதிக்கத்தை எளிதில் நிலைநாட்டியது. அவ்வாறு 1676-இல் நிறுவப்பட்ட மராத்தியர் ஆட்சி பல ஏற்ற இறக்கங்களுடன் 1855 வரை நீடித்து. அவ்வாண்டில் டல்ஹௌஸி பிரபுவின் சந்ததியில்லாக் கொள்கை, சம்மட்டி அடியாக மராத்தியர் ஆதிக்கத்தின் மீது விழுந்தது.

**மராத்தியர் தஞ்சையைக் கைப்பற்றுதல்**

1673-இல் மதுரைக்கு தஞ்சைக்குமிடையே நடைபெற்ற போரில் தஞ்சை தோற்கடிக்கப்பட்டது. தஞ்சை நாயக்கர் விஜயராகவர் குடும்பத்தோடு மடிந்தார். தஞ்சை, மதுரை நாயக்கராட்சிப் பகுதியாகியது. மதுரை நாயக்கர் சொக்கநாதர் தமது சகோதரரின் மகன் அழகிரி என்பாரை தஞ்சை ஆளுநராக நியமித்தர். விரைவில் அழகிரி தம்மை சுதந்திர ஆட்சியாளராக ஆக்கிக்கொண்டார்.

இந்நிலையில் தஞ்சை நாயக்க அரசில் ராயசமாகப் பணியாற்றிய வெங்கண்ணா என்பார் தஞ்சையில் மீண்டும் நாயக்கராட்சியைப் புதுப்பிக்கத் திட்டமிட்டார். அழிந்து போன நாயக்க அரசமரபில் செங்கமலதாஸ் என்பார் எப்படியோ தப்பிப் பிழைத்து நாகப்பட்டினத்தில் ஒரு வணிகர் வீட்டில் மறைந்து வாழ்வதாக அறிந்தார். அவரை மீண்டும் தஞ்சை அரியணையில் ஏற்ற பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார். சுல்தான் தமது தளபதிகளுள் ஒருவரான வெங்காஜி (அல்லது எக்கோஜி) என்பாரை ஒரு படையுடன் தஞ்சைக்கு அனுப்பினார். இந்த வெங்காஜி வரலாற்றுப் புகழ்பெற்ற மராத்திய தலைவர் சிவாஜியின் தந்தையான 'ாஜிக்கு இன்னொரு மனைவி மூலம் பிறந்தவர். அவர் தஞ்சை சென்று அழகிரியை தோற்கடித்து விரட்டி விட்டு செங்கமலதாசை அரியணையில் அமர்த்தினார். பின் உடனே நாடு திரும்பாமல் கும்பகோணத்தில் முகாமிட்டு நிலவரங்களைக் கவனித்து வந்தார்.

விரைவில் வெங்கண்ணாவிற்கும் புதிய நாயக்கர் செங்கமலதாசிற்குமிடையில் கருத்து வேறுபாடு மூண்டது. நாயக்கர் தன்னை வளர்த்த நாகப்பட்டின வணிகருக்கு முக்கியத்துவம் அளித்து வெங்கண்ணாவைப் புறக்கணித்தார். இதனால் பொறாமையும் ஆத்திரமும் அடைந்த வெங்கண்ணா கும்பகோணத்தில் முகாமிட்டிருந்த வெங்காஜியை தஞ்சைம மீது படையெடுத்து செங்கமலதாசை விரட்டுமாறு தூண்டினார். இச்சமயத்தில் பீஜப்பூரில் சுல்தான் அடில் ‘ா மரணமடைந்துவிட்டதால் வெங்காஜி தன் விருப்பப்படி செயல்பட முடிந்தது அவர் வெகு எளிதில் செங்கமலதாசைத் தோற்கடித்து விரட்டி விட்டு தஞ்சையைக் கைப்பற்றி தாமே ஆட்சி செய்யத் தொடங்கினார். இவ்வாறு 1676-இல் தஞ்சையில் மராத்தியர் ஆதிக்கம் நிறுவப்பட்டது.

சூழ்ச்சித்திறன் மிக்க வெங்கண்ணாவிற்கு எந்தப் பொறுப்பும் அளிக்காது தம் பாதுகாப்பில் வைத்துக் கொண்டார். அதனால் விரக்தியடைந்த வெங்கண்ணா எப்படியோ தப்பியோடி தலைமறைவானார். அதன்பின் அவரைப்பற்றி வேறு எந்த விவரமும் தெரியவில்லை.

தஞ்சையில் மராத்தியர் ஆட்சி ஏற்பட்டது குறித்து இரு தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று சிவாஜி தஞ்சையைக் கைப்பற்றி தன் ஒன்றுவிட்ட சகோதரியிடம் ஒப்படைத்தார் என்பதாகும். இரண்டு வெங்காஜயின் தந்தை ‘ாஜியின் கர்நாடகா ஜாகீரில் தஞ்சையும் அடங்கியிருந்தது. எனவே தந்தைக்குப் பின் மகன் அதனை மரபுவழி ஜாகீரக ஆசி புரியத் தொடங்கினார். இந்த இரு கருத்துக்களும் முற்றிலும் தவறானவை எனச் சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டு விட்டது.

**தஞ்சை மராத்தியர் ஆட்சியில் கலை. இலக்கிய வளர்ச்சி**

மராத்தியர் ஆட்சியிலும் கலை இலக்கியம் வளர்ச்சியுற்றது. இடைவிடாப் படையெடுப்புகளுக்குள் சிக்கித் தவித்தாலும் தஞ்சை மராத்திய மன்னர்கள் கட்டிக்கலை, இலக்கியக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை போன்ற அருங்கலைகளிலும் சாதனை படைக்கத் தவறவில்லை. “மராத்தியர்களின் தஞ்சை மாபெரும் கலைகளின் நஞ்செய்” என்று கூறுமளவிற்கு அக்கலைகள் செழித்தோங்கின.

**கட்டிக்கலை**

மராத்திய மன்னர்கள் புதிய கோவில்கள் எதுவும் கட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் ஏற்கனவே கடடப்பட்ட ஆலயங்களைப் பழுது பார்த்தனர். புதிய பகுதிகளைக் கட்டினர். சான்றாக தஞ்சை பிரகதீசுவரர் ஆலயத்தினுள் அமைந்துள்ள கணபதி ஆலயம் மராத்திய மன்னர்களால் கட்டப்பட்டது. மற்றும் அங்குள்ள அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் சரபோஜி மன்னரால் கட்டப்பட்டவையாகும். தாம் பதவி ஏற்றதன் நினைவாக

அப்பெரிய கோவிலுக்கு விலை மிகுந்த அணிகலன்களையும் வெள்ளிப் பாத்திரங்களையும் அளித்தார்.

இரண்டாம் சரபோஜி மன்னர் தஞ்சை பெரிய கோவிலின் வடக்கு திருச்சுற்றை கட்டினார் மற்றும் சிதம்பரம் கோவிலைப் புதுப்பித்தபோது கோவில் விமானத்தில் பொற்றகடுகளைப் பதித்தார். மற்றும் வைத்தீஸ்வரன் கோவிலும் சித்தாமூரிலுள்ள சைவ வை'ணவக் கோவில்களும் மராத்திய மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டன.

**கோட்டைகள்**

மராத்திய மன்னர்கள் கோட்டைகள் கட்டுவதில் வல்லவர்கள். வல்லம் குன்றின்மீது கோட்டை கட்டினர். தேவனாம் பட்டிணத்திலும் கோட்டை கட்டினார். தஞ்சை கோட்டை புதுப்பிக்கப்பட்டது.

**மனோரா**

மராத்திய மன்னர்கள் கட்டிய மாளிகைகளுள் இரண்டாம் சரபோஜி மன்னர் சாளுவநாயக்கன் பட்டினத்து கடற்கரையில் கட்டிய "மனோரா" என்ற மாளிகை சிறப்பானது. எண் கோண வடிவத்தில் கட்டப்பட்ட இக்கட்டிடத்தைச் சுற்றி அகழியும் மதிலும் அமைக்கப்பட்டன. இது அம்மன்னனின் கோடை கால தங்குமிடமாக இருந்தது. 1815-இல் நெப்போலியான் வாட்டர்லூ போரில் இறுதியாகப் தோற்கடிக்கப்பட்டதன் நினைவாகக் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**சத்திரங்கள்**

ஏற்கனவே கூறியபடி சத்திரங்கள் கட்டுவதில் மராத்திய மன்னர்கள் சாதனை படைத்துள்ளனர். மதுரை ராமேஸ்வரம், மணமேல்குடி, நீடாமங்கலம், தாராசுரம், அம்மாசத்திரம், ராஜாமடம், மின்பகல், ஒரத்தநாடு ஆகிய இடங்களில் சத்திரங்கள் கட்டியுள்ளனர். தஞ்சைப் பகுதியில் மட்டும் 16 சத்திரங்கள் கட்டியுள்ளனர். ஒரத்தநாட்டில் இரண்டாம் சரபோஜி தன் ஆசை நாயகி முத்தம்மா பெயரில் கட்டிய சத்திரம பிறவற்றைவிட பெரியது. இச்சரத்திற்கு ஆண்டொன்றிக்கு முப்பத்தி மூவாயிரம் ரூபாய் வரமானம் வரவ கை செய்யப்பட்டிருந்தது. இங்கு இலவசமாக உணவு பரிமாறப்பட்டது.

**சலங்கரை விளக்கம்**

நாகப்பட்டினத்தில் கலங்கரை விளக்கமும், கோடிக்கரை விளக்கத்தூணும் மராத்தியர்களால் கட்டப்பட்டன.

**அச்சுக்கூடம்**

இரண்டாம் சரபோஜி மன்னர் 1805-இல் சமஸ்கிருத அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினார்.

**சிற்பங்கள்**

நாயக்க மன்னர்களைப் போன்று நுண்கலைத் திறன்மிக சிற்பங்கள் மராத்தியர்கள் உருவாக்கவில்லை.

திருவிடைமருதூர் கோவிலுள்ள பாபை விளக்கு சிற்பம், சரபோஜி மன்னனின் பளிங்குச்சிலை, ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் உருவச்சிலை ஆகியவை மராத்தியா சிற்பத்திறனுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

**ஓவியக்கலை**

மராத்திய ஓவியங்கள் சித்திர இலக்கண அடிப்படையில் அமைந்தவை என்று கூற முடியாவிட்டாலும் அதற்கென சில தனிக் கூறுகளும் அழகும் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளுள் முக்கியமானவை.

1. தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் சுப்மணியர் சன்னதி சுவர்களில் உள்ள நடன மாதர் ஓவியங்கள்.
2. மராத்திய மன்னர்கள் ஓவியங்கள்.
3. துணியில் தீட்டப்பட்டு மரச்சட்டமிடப்பட்ட ஓவியங்கள் இவை பெரும்பாலும் இராமயாணம் மற்றும் பாரதக் காட்சிகளை விளக்குபவை.
4. கண்ணாடி ஓவியங்கள்.
5. சரஸ்வதி மகாலில் உள்ள ஓவியங்கள்.

**இசைக்கலை**

கர்நாடக இசையின் தற்கால வடிவமைப்பு மராத்தியர் அரசவையில் தான் தோன்றியது. இரண்டாம் சரபோஜி மன்னர் அரசவையில் பல இசைக் கலைஞர்கள் இருந்தனர். **“இசை மூவர்”** என்று போற்றப் பெற்ற

**தியாகராசர்**

**முத்துசாமி தீட்சிதர்**

**சியாமா சாஸ்திரிகள்**

ஆகிய இவர்கள் வகுத்த பாதையில்தான் இன்றைய கர்நாடக இசைக்கலைஞர்கள் ஏறுநடை போடுகின்றனர். ஆனால் தமிழ் இசைப்பாடல்கள் எதுவும் பாடாதது ஒரு பெரும் குறைபாடு. பெரும்பாலும் தெலுங்கு இன்னிசைப் பாடல்கள் தான் பாடியுள்ளனர்.

**தியாகராசர் (1767 – 1847)**

தந்தையிடம் கவிதா சக்தியையும் தாயிடம் இசைஞானத்தையும் பெற்ற தியாகையரின் கரு சொண்டி வெங்கடரமணய்யர், தெலுங்கு, சமஸ்கிருதம், தமிழ், மராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்ற இவர் தெலுங்கு கீர்த்தனைகள் பாடியுள்ளனர். திவ்யநாம கீர்த்தனைகளை சம்ஸ்கிருதத்தில் எழுதியுள்ளார். பஜனைகளில் பாட பல திவ்விய நாம கீர்த்தனைகளையும் உற்சவ சமம்பிதாயக் கீர்த்தனைகளையும் இயற்றினார். நௌகா சரித்திரம், பிரகலாத பக்தி வி'யம், சீதாராம விஜயம் என்ற மூன்று இசை நாடகங்களை இயற்றியுள்ளார். இசைக்கலைக்கே தன் வாழ்வை அர்ப்பணித்த தியாகய்யர் துறவியாகவே வாழ்ந்தார்.

**முத்துச்சாமி தீட்சிதர் (1776 – 1845)**

திருவாரூரில் பிறந்த இவர் தமது தந்தை இராமசாமி தீட்சிதரிடம் இசையும் வீணையும் கற்றார். இவரது குரு சிதம்பர யோகி. இவர் நாயன்மார் மற்றும் ஆழ்வார்களைப் போல் சைவ வை'ணவை திருத்தலங்களுக்குச் சென்று பல கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

**சியாமா சாஸ்திரிகள்**

திருவாரூரில் பிறந்த இவர் தஞ்சை சென்று ஆதியப்பர் என்பாரிடம் இசை கற்றார். இவர் 300-க்கு மேற்பட்ட உருப்படிகள் இயற்றியுள்ளார். பெரும்பாலும் காமாட்சி அம்மனைப் பற்றியே பாடினாலும் மதுஜர மீனாட்சியம்மன் மேல் பாடிய ‘நவரத்ன மாளிகை” என்ற 9 பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

இந்த இசைமூவர்களைத் தவிர கிரிராஜகவி வீரபத்ரர், இராமசாமி தீட்சிதர், ஸ்ரீதர அய்யாவாள் போன்ற இசைக் கலைஞர்களும் அக்காலத்தில் வாழ்ந்து பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளனர்.

**நடனக்கலை**

தஞ்சை மராத்தியர் காலத்தில் **“இசைக்கு மூவர்”** என்று குறிப்பிட்டது போல **“நாடனத்திற்கு நால்வர்”** என்று கூறுத்தக்க வகையில் நான்கு நடனக் கலைஞர்கள் வாழ்ந்தனர். அவர்கள்,

**பொன்னையா**

**சின்னையா**

**சிவானந்தம்**

**வடிவேலு**

இவர்கள் பரதநாட்டியத்தையும், தேசி நடனத்தையும் கோவில்களில் நடனமாடும் தேவரடியார்கள் எனப்பட்ட தேவதாசிகளுக்குக் கற்றுக் கொடுத்தனர். அக்கால நடனடி மங்கையரில் புகழ் பெற்றவர் சுந்தரி ஆவார். நவராத்திரி, தீபாவளி போன்ற விழாக்களில் முதல் நாள் நடனமாடும் சிறப்புரிமை அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

**நாடகக்கலை**

புராணக் கதைகயும் இராமாயண, மகாபாரத நிகழச்சிகளையும் உட்கருவாகக் கொண்ட யக்காடி கானம் எனப்பட்ட இசை நாடகங்கள் பல நடிக்கப்பட்டன மற்றும் தேசி நாடகங்களும், மேனா நாடகங்களும் அக்காலத்தில் தஞ்சையில் பிரபலமாக விளங்கின.

**இலக்கிய வளர்ச்சி**

மராத்திய மன்னர்கள் காலத்தில் ஒன்றிண்டு தமிழ் மொழி இலக்கியங்களும் இயற்றப்பட்டன. அவைகளில் முக்கியமானவை தத்துவ நூலான **“அத்வைத கீர்த்தனை”.**

ஏது பிறப்பை பற்றி வேதநாயகர் பாடிய **“பெத்லேகம்”.**

சிவக்கொழுந்து தேசிகரின் **“சரபேந்திர பூபாலக் குறிஞ்சி”** தெலுங்கு இலக்கியங்களில் குறப்பிடத்தக்கவை.

**சகராஜ விலாச நாடகம்** : மராத்திய மன்னர் ‘ஷாஜி இஸ்லாமியரை மதுரையில் தோற்கடித்து பெற்ற வெற்றியை விவரிப்பது.

பிரதாபசிங்கின் **ஆசை நாயகி** முத்துப்பழனி இயற்றிய ராதிகா சந்தாவனமு, சப்தபாடாலாது. இவை கண்ணின் காதல் களியாட்டங்களை சுசைபட விவரிப்பாவை.

குப்பம்மா இயற்றிய **ஆசாரிய விஜயமு** : இது சங்கராச்சாரியாரின் சமய வெற்றிகளை விவரிப்பது.

நெல்லூரி சீத்தாராமர் இயற்றி **காம கலாநிதி**.

**சமஸ்கிருத இலக்கிங்கள்**

| | |
|---|---|
| ஸ்ரீ கிரு‘ணன் இயற்றிய பாரிஜாத காண சம்பு | இவை உரைநடையும் |
| சக்ரகவி இயற்றிய திரௌபதி பரிணய சம்பு வெங்கடகிரு‘ண தீட்சிதரின் உத்தரவு சம்பு சரபெஜி மன்னரின் குமராசம்பவ சம்பு | செய்யுளும் கலந்த இலக்கியங்களாகும். |
| இராமபத்திர தீட்சிதரின் ஜானகி பரிணயம் வெங்கடகிரு‘ண தீட்சிதரின் குசலவிஜயம் | இவை நாடக இலக்கிங்கள் |
| வெங்கமே தீட்சிதரின் நடேச விஜயகாவியம் ஜகன்னாதரின் இராகவரிதம் | காவியங்கள் |

**சரஸ்வதி மகால்**

தஞ்சை மராத்தியரின் கலைத்துறை சாதனைகளை விளக்கும் எந்தக் கட்டுரையும் சரஸ்வதி மகாலைப் பற்றிய விளக்கங்கள் இன்றி முழுமை பெறாது சோழர் காலத்தில் “சரஸ்வதி பண்டார்” என்ற பெயரிலிருந்த நூலகம் மராத்திய மன்னர்கள் காலத்தில் முழு வளர்ச்சி பெற்றது என்று ஒரு சில வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். எது எவ்வாறெனினும் இரண்டாம் சரபோஜி காலத்தில்தான் (1798 – 1836) இந்த நூலகம் உலகப் புகழ் பெற்றது. ஸ்வார்ட்ஸ் பாதரியரின் மணவரான இவர், 1799-இல் தஞ்சையின் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்றபினர். தம் முழு அறிவாற்றலையும் கலை. கல்வி, இலக்கிய வளர்ச்சிகளில் செவிட்டார். அதன் விளைவு தான் சரஸ்வதி மகால்.

சரபோஜி மன்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அறிஞர்களை அனுப்பி மருத்துவம், விண்ணியல், கணிதம், இலக்கியம், இலக்கணம், இசை ஆகிய துறை சார்ந்த பழைய சுவடிகளைச் சேகரித்தார். தாமே லண்டன், பாரிஸ் நகரங்களுக்குச் சென்று அறிவியல் நூற்களையும் அரிய ஓவியங்களையும் விலைக்கு வாங்கி வந்தார். சுருங்கக் கூறின் ஆங்கில அரசு அவருக்களித்த ஓய்வூதியத்தின் பெரும் பகுதியை இந்த நூலக வளர்ச்சிக்கே செலவிட்டார். அதன் பயனாக 40000 சுவடிகளடங்கிய நூலகமாக வளர்ச்சியுற்றது.

நூல் நிலையத்தின் உள் கூடத்தில் பிரஞ்சு அறிஞர் சார்லஸ் லொபானின் மனித முகத்தேற்ற பரிணாம வளர்ச்சி பற்றிய ஓவியத் தொகுப்பு பாாத்து ரசிக்கத்தக்கது. சரபோஜி மன்னர் மேல்நாட்டு மற்றும் இந்திய மருந்து முறைகளைக் கலந்து புதிய மருந்து முறைகள் பற்றிய “சரபேந்திர வைத்திய சாத்திரம்” என்ற நூலை எழுதியுள்ளார்.

5 மதிபெண் வினாக்கள்

1. சேர மன்னர்களை பற்றி விளக்குக.
2. சோழர்களின் ஆட்சி சிறப்பைக் கூறு
3. பாண்டியர்களின் சமயப் பணிகளை விவரி
4. சுல்தான்களின் முக்கிய மூன்று படையெடுப்பு பற்றி விவரி
5. நாயக்கர் கால சமய நிலை பற்றி விவரி

8 மதிபெண் வினாக்கள்

1. சோழர் கால கலைகளை பற்றி விவரித்து கூறு
2. மகேந்திர வர்மன், நரசிம்மவர்மன் சாதனைகளை பட்டியலிட்டு விளக்கு
3. நாயக்கர்களின் ஆட்சிமுறையை விவரித்து எழுது
4. மராத்தியர் ஆட்சியில் கலை, இலக்கிய வளர்ச்சி பற்றி விவரி
5. நாயக்கர் கால கலைகளை விவரி
6. பாண்டியர் கால சமூகமும், பணபாடும் பற்றி விளக்குக.

## அலகு-3

## 16 - ஐரோப்பியர் கால வரலாறு

### ஐரோப்பியர்களின் இந்திய வருகைக்கான காரணங்கள்

“இந்தியா ஐரோப்பியர்கள் நீண்டகாலமாகக் கவர்ந்து கொண்டிருந்தது. அ.்.துஅவர்களுக்கு அதிசய உலகமாக விளங்கியது என்கிறார். வேதி.செல்லம் அவர்கள்.

இன்று ஐரோப்பிய தேசங்களுக்குச் செல்வதைக் கனவாகக் கொண்டு வாழும் இந்திய இளைஞர்களைப்போல அன்றைய ஐரோப்பிய இளைஞர்களுக்கு இந்தியாவின் வளமும் உற்பத்தியும் ஈர்ப்பினை உடையதாக அமைந்ததில் ஆச்சரியமில்லை.

ஐரோப்பியர்களின் முதல் நுழைவு போர்த்துக்கீசிரியர்களின் வருகையே ஆகும்.

ஐரோப்பியர்களுக்குத் தேவையான நறுமணப் பொருட்களை நேரடியாகப் பெறுவது என்பதே ஐரோப்பியரின் முதன்மை நோக்கமாக இருந்தது.

பண்டைய நாட்களில் நறுமணப் பொருட்கள் கடல் வழியாகப் பாரசீக வளைகுடாவிலுள்ள துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட அங்கிருந்து நலவழிப் பாதை மூலம் மத்திய தரைக்கடல் பகுதியைச் சென்றடையும். இதில் ஐரோப்பியர்களுக்கு எளிமையான நேரடியான வணிகத்திற்கு வாய்ப்பில்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

ஒரு புறம் ஐரோப்பிய உணவுகளைச் சமைக்கவும் பதப்படுத்தவும் தேவையான நறுமணப் பொருட்களின் தேவை ஐரோப்பியர்களைத் தமிழகம் நோக்கி இழுத்தது.

மற்றொருபுறம் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சந்தைகளில் இந்தியத் துணிகளுக்கு இருந்த உலகளாவிய தேவையால் இந்தியத் துணிகள் செலவாணி ஊடகமாக ஆயிற்று.

இந்தோனேசியத் தீவுகளில் சோழ மண்டலக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த வண்ணம் பூசப்பட்ட துணிகளுக்கான தேவை டச்சுக்காரரையும் ஆங்கிலேயரையும் கிழக்குக் கடற்கரையில் தங்க் நிறுவனங்கள் அமைத்துக் கொள்ளச் செய்தது.

இங்கிருந்து கொண்டு துணிகளைக் கொள்முதல் செய்து அவற்றை இலாகரமான நறுமணப் பொருட்களை பண்டமாற்று செய்து கொண்டனர்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாஸ்கோடகாமா ஐரோப்பாவில் இருந்து இந்தியாவிற்கு ஒரு நேராயன கடல்வழியைக் கண்டுபிடித்தார்.

இது தொடர்ச்சியான டச்சுக்காரர்கள், டேனி‘காரர், ஆங்கிலேயர் பிரெஞ்சுகாரர்களின் வருகையை எளிமையாக்கியது.

ஒருவரையொருவர் போட்டிக் கொண்டு வணிகத் தளங்களை அமைத்தனர். இதில் இறுதியாக ஆங்கிலேயர் மற்றவரை வென்று நீண்ட காலம் நீடித்தனர். இறுதியில் ஆங்கிலேயர் உள்;ர் விவகாரங்களையும் அரசியலும் தலையிட்டு நாட்டினைத் தன்வயப்படுத்தினர்.

**போர்த்துக்கீசியரின் இந்திய வருகை & ஐரோப்பியர் ஆட்சி**

வாஸ்கோடகாமா 1498 மே 20-ல் மலபார் கடற்கரையில் உள்ள கோழிக்கோட்டில் வந்து இறங்கினார். அரேபியர்களின் ஆட்சேபனைகளை மீறி ஜாமோரிடம் கோழிக்கோடு வர்த்தகம் செய்ய அனுமதி பெற்றார்.

வாஸ்கோடகாமா பொருட்களின் மீதான சுங்கவரி விலையைச் செலுத்த இயலவில்லை. எனவே அவரது ஆட்கள் சிலரை கைது செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த அவர் சில பூர்விகவாசிகளையும் மீனவர்களையும் கடத்திச் சென்றார்.

170 பேருடன் வந்த வாஸ்கோடகாமா 1498 ஆகஸ்ட் 29இல் தன்னுடன் வந்தவர்கள்ள உயிரோடிருந்த 55 மாலுமிகளுடன் ஊர் திரும்பினார்.

மீண்டும் 1502 வந்தார். இம்முறை கள்ளிக்கோட்டையிலிருந்து அதிக வசதிகள் கொண்ட கொச்சிக்குச் சென்றார். இது மன்னர்களிடையே நிலவிய பகைமையைத் தனது நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

போர்ச்சுக்கல்லுத் திரும்பும் முன் கொச்சியில் ஒரு சரக்குக் கிடங்கையும் கண்ணுனூரில் ஒரு சிறைச்சாலையையும் நிறுவனார்.

ஆண்டுதோறும் பயணம் மேற்கொள்வதை நிறுத்தி ஆளுநர்களை நியமித்தனர். இதில் பிரான்சிஸ் கோ.டி.அல்மெய்டர் முதல் ஆளுநர் ஆவார். பின்னர். 'அல்புகர்க்' பதிவியேற்றார். இந்தியாவில் போர்த்துக்கீசிய பேரரசை உண்மையில் நிறுவியர் இவரே ஆவார்.

பிஜப்பூரின் அரசர் யூசூப் அபுல்கானைத் தோற்கடித்த அவர் 1510-இல் கோவாவைக் கைப்பற்றினார்.

அவர்களது ஆதிக்கத்தை மேலும் விரிவாக்கியவர்கள் நினோடா குன்கா, ஆன்டானியோ டி நெரென்சா முதலிய ஆளுநர்களும் ஆவர்.

சென்னை – சாந்தோம் போர்த்துகீசியரின் தமிழக வருகைக் காண சான்றாகும்.

பின்னர் இயேசு சபையினர் இந்தியா வந்து கிறிஸ்த்துவத்தைப் பரப்பினர். அவர்களுள் இராபர்ட்-டி-நொபிலியும், ஹென்ரிக்சும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்.

புனித பிரான்ஸிஸ் சவேரியார் 1542-இல் கோவா வந்தார். அவர் தூத்துக்குடி புன்னைக்காயல் வரை பயணம் செய்தார். சோழ மண்டலக் கடற்கரைக் கிராமங்களில் உயர் கோபுரங்களோடு உருவான தேவாலயங்களை இன்றும் காணலாம்.

இந்தியாவிற்குள் முதலில் நுழைந்தவர்களும் கடைசியாகக் கடைகளைக் காலி செய்தவர்களும் இவர்களே

**கிறித்துவத்தை பரப்பிய போர்த்துகீசியாரின் செயல்பாடுகள்**

போர்த்துகீசிய மன்னர் கத்தோலிக்க சமயத்தின் காவலனாக விளங்கினார். சமயம் அங்கே அரசின் துணையாக விளங்கியது.

கி.பி. 1500 இல் ஐந்து பிரான்சிஸ்கள் துறவிகளின் சமயத் தொண்டுக்கு தலைமையகமாக்கினர். துறவிகள் பயிற்சி நிலையமும் துவக்கப்பட்டது.

கி.பி. 1542 இல் புதின சவேரியாரின் வருகை பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. புனித சவேரியார் கடற்கரையில் பரதவ மக்களிடையே சமயத் தொண்டாற்றினார். வேணாற்றின் ஒரு பகுதியான கோட்டாற்றில் அவர் பணியைச் சிறப்புற செய்தார்.

தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் கிறித்தவம் பரவத் தொடங்கியது. தூத்துக்குடி, புன்னக்காய் ஆகிய இடங்கள் முக்கிய கேந்திரமானது. சோழ மண்டல கடற்கரை கிராமங்களில் உயர் கோபுரங்களோடு உருவான தேவாலயங்களை இன்றும் காணலாம்.

போர்த்துகீசிய குடியேற்றகளுக்குப் பிறகு இயேசு சபையைச் சார்ந்த சமயப்பரப்பாளர்கள் இந்தியா வந்தனர்.

அவர்களின் குறிப்பிடத்தக்கவர்கள் இராபர்ட்-டி-நொபிலி தமிழிலும் சமஸ்கிருதத்திலும் விரிவாக எழுதினார். இவர் 40 உரைநடை நூல்களை எழுதி ‘தமிழ் உரைநடையின் தந்தை’ எனக்கருதப்படுகிறார்.

1606 முதல் மதுரை வந்து தமிழ்துறவி போல் வாழத் தொடங்கினார். காவியுடையும் பூணூலம் அணிந்தார். அகஉணர்வில் கிறித்துவ கோட்பாடுகளில் மாறாதவராக இருந்தார்.

இவரது ஞானோபதேச காண்டம், மந்திரமாலை ஆத்தும நிர்ணயம், தத்துவக் கண்ணாடி, சேசுநாதர் சரித்திரம், கடவுள் நிர்ணயம், தேவமாதா சரித்திரம் ஆகியன குறிப்பிடத்தகுந்த சிலவாகும்.

ஹென்ரிக்ஸ் எனப்படும் பாதிரியர் வாழ்நாளில் பெரும் பகுதியை தென்னிந்தியாவில் கிறத்துவத்தைப் பரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்ட முதல் புத்தகம் ‘தம்பிரான் வணக்கம்’ நூலை அச்சிட்டார்.

தமிழ் - போர்த்துகீசிய அகராதியை முதன்முதலில் தயாரித்தவர் இவரே.

போர்த்துகீசிய மொழி ‘டாக்ரினா கிறஸ்தாம்’ என்பதன் 16 பக்க தமிழ் மொழிபெயர்ப்பை வெளியட்டார்.

சென்னை – சாந்தோம் போர்த்துகீசியரின் வருகைக்கான முக்கிய சான்றாக உள்ளது.

## இந்தியாவில் போர்த்துகீசியம்

### முன்னுரை

இந்தியாவிற்கு கடல்வழியைக் கண்டுபிடித்து நுழைந்த முதல் ஐரோப்பியர்கள் போர்த்துகீசியர்கள். பின்னால் வந்த டச்சு, டேனி‘, பிரெஞ்சு, ஆங்கிலேயர்களுக்குத் தூண்டுதலாகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர்கள் இவர்களே. இதற்கு முதன்மைக் காரணமாக இருந்தவர் மூன்று கப்பல்களில் 170 நபர்களோடு கள்ளிக்கோட்டை வந்திறங்கிய போர்த்துகீசியர் வாஸ்கோடகாமா ஆவார். அவருக்குப் பின்ன பிரான்ஸிஸ்கோ-டி-அல்மெய்டா, அல்போன்சா-டி-அல்புகர்க், நினோ-டி-டூன்கா போன்ற ஆளுநர்கள் போர்த்துகீசிய இந்திய அரசை வலுவாகக் கட்டமைத்தார்கள்.

**போர்ச்சுக்கல்**

ஐரோப்பிய நாடுகளில் போர்ச்சுகல் இந்தியாவிற்கு புதிய கடல் வழியை கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது.

போர்ச்சுகல் இளவரசர் ஹென்றி பொதுவாக 'மாலுமி ஹென்றி' என்று அறியப்படுகிறார்.

அவர் உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும் சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.

1487-ஆம் ஆண்டு போர்த்துகீசிய மாலுமியான பார்த்தலோமியா டயஸ் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்தார். மன்னர் இரண்டாம் ஜான் அவரை ஆதரித்தார்.

**வாஸ்கோடகாமா**

வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

பின்னர் இந்திய மாலுமி ஒருவரின் துணையோடு கி.பி. 1498-ல் கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார். அவரை மன்னர் சாமரின் வரவேற்றார்.

இரண்டாவது போர்த்துகீசிய மாலுமி பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல் என்பவர் வாஸ்கோடகாமாவின் கடல் வழியைப் பின்பற்றி 13 கப்பல்களில் சில நூற வீரர்களுடன் 1500 இல் கள்ளிக்கோட்டை வந்தார்.

1501-இல் வாஸ்கோடகாமா இரண்டாவது முறை வந்து கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.

1524-இல் மூன்றாவது முறையாக இந்தியா வந்து நோய்வாய்ப்பட்டு டிசம்பரில் கொச்சியில் காலமானார்.

**பிரான்சிஸ்கோ - டி - அல்மெய்டா**

பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா என்பவர் இந்தியாவிலிருந்து போர்த்துகீசிய பகுதிகளுக்கு 1505-ல் அனுப்பப்பட்ட முதல் ஆளுநர் ஆவர்.

துறைமுகங்களின் கட்டுப்பாட்டை விரிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற கடற்படை போரில் முஸ்லீம் கூட்டுப்படைகள் போர்த்துகீசியத்தைத் தோற்கடித்தன. அல்மெய்டா மக்ன கொல்லப்பட்டார்.பின்னர் டையூவில் நடைபெற்ற போரில் அல்மெய்டா முஸ்லீம் கூட்டுப்படைகளைத் தோற்கடித்தார்.

**அல்போன்சா-டி-அல்புகர்க்**

இந்தியாவில் போர்த்துகீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியர் அல்போன்சா-டி-அல்புகர்க் ஆவார்.இவர் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510-ல் கோவாவைக் கைப்பற்றினார்.1515-இல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்த்துகீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார். அல்போன்சா-டி-அல்புகர்க் இந்திய பெண்களுக்கான திருமணங்களை ஊக்குவித்தார். விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டார்.

**நினோ-டி-குன்கா**

இவர் தலைநகரை 1530-ல் கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.1534-ல் குஜராத் பகதூர்'ாவிடமிருந்து பசீன் பகுதியையும் 1537-ல் டையூவையும் கைப்பற்றினார்.குஜராத்தின் உள்ளூர்த் தலைவர்களிடமிருந்து டாமனையும், பின்னர் 1548-ல் சால்செட்டையும் ஆக்கிரமித்தார்.வங்காள கடற்கரையில் ஜுக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றியவர்.

**போர்த்துகீசிய அரசின் விளைவுகள்**

இந்திய அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஐரோப்பியர் இந்தியரை வென்று அரசைக் கைப்பற்றினர்.போரிடுவதில் ஐரோப்பியர் புதிய முறையைக் கையாண்டனர். வெடிமருந்தும் வலிமை மிகுந்த பீரங்கியையும் முதன்மை வகித்தன.

போர்த்துகீசியர் அரேபியரின் வணிக முற்றுரிமையை அழித்தனர். ஆனால் அது பின்னால் வந்த ஆங்கிலேயருக்கு வழிவகுத்துக் கொடுத்தது.போர்த்துகசீய - இந்திய திருமணங்களை ஆதரித்தனர்.

சென்னை சாந்தோம் போர்த்துகீசியர் வருகைக்கான முக்கிய சான்றாகும்.போர்த்துகீசியர் செல்வாக்கினாலும், இயேசு சபையின் மற்றும் மி'னரியின் முயற்சியினாலும் கத்தோலிக்க கிறித்துவம் இந்தியாவின் மேற்கு கிழக்குக் கடற்கரையோர கிராமங்களில் பரவியது. போர்த்துகீசிய கலைவடிவில் கோபுரங்களோடு தேவ ஆலயங்கள் இன்றும் காணக்கிடக்கிறது.

**ஐரோப்பியரின் வருகை**

**முன்னுரை**

இந்தியாவிற்குள் ஐரோப்பியர்கள் எவ்வாறு நுழைந்தனர். அவர்தம் ஆதிக்கம் எத்தகைய நிலையில் இருந்தது என்பது குறித்த காணலாம்.

**போர்க்சுகீசியர்கள்**

இந்தியாவிற்குள் முதன் முதலில் அடியெழுத்து வைத்த ஐரோப்பியர்கள் போர்ச்சுகீசியர்கள் ஆவர். அவர்கள் வாணிகம் செய்து பொருளீட்டும் நோக்கத்துடனே நாட்டிற்குள் நுழைந்தனர்.

போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா என்பவன் முதல் முதலில் கி.பி. 1498-ல் கள்ளிக்கோட்டை வந்து நங்கூரம் பாய்ச்சினான். அவன் வகுத்த கடல்வழியே ஏனைய ஐரோப்பியரும் வந்து இந்தியாவுடன் கடல் வாணிகம் மேற்கொள்வதற்கு ஏற்றதொரு நெடுஞ்சாலையாக உதவிற்று. வாணிகக் கப்பல்களைத் தொடர்ந்து போர்க்கப்பல்களும் வந்தன.

பின்னாளில் போர்ச்சுகீசியர்கள் தம் வாணிகச் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும், அரசியல் ஆதிக்கத்தை பெருக்கிக் கொள்ளவும், சமய வளர்ச்சியை தூண்டி விடவும் மக்களுக்கு எவ்விதமான இன்னல்களையும், கொடுமைகளையும் விளைவிக்க தயங்கவில்லை. கண்ணனூரிலும், கோவாவிலும் போர்ச்சுகீசியர் இந்துக் குடிமக்களைத் துண்டு துண்டாய் வெட்டியும், உயிருடன் அவர்களின் உறுப்புகளை அறுத்துப் படுகொலைகள் செய்தும் நெஞ்சைப் பிளக்கக்கூடிய கொடுமைகள் பல இழைத்தனர்.

போர்ச்சுகீசியரைத் தமிழர்கள் பறங்கிகள் என்று இழித்துக் கூறினர். அவர்கள் மாட்டு இறைச்சியை உண்டதையும் மதுபானம் குடித்ததையும் தமிழர்கள் வெறுத்தனர்.

**டச்சுக்காரர்கள்**

போர்ச்சுகீசியருக்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையே நடந்த பூசல்களிலும் போராட்டங்களிலும் போர்ச்சுகீசியரின் கால்சறுக்கி வந்தது. அவர்கள் இலங்கையை டச்சுக்காரர்களிடம் இழந்தனர். பிறகு டச்சுக்காரர்கள் தூத்துக்குடியையும், நாகப்பட்டினத்தையும் போர்ச்சுகீசியரிடமிருந்து பறித்துக் கொண்டனர். டச்சுப் பாதிரியான ஆபிரகாமத் ரோசர் புலிக்காட்டில் தங்கித் தன் பணிகளைத் செய்து வந்தார். டச்சுக்காரரின் செல்வாக்கு உயர்ந்து கொண்டே போயிற்று. அவர்களுக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது.

**டேனியரும் பிரெஞ்சுக்காரரும்**

தரங்கம்பாடியில் டேனி‘ கிழக்கிந்தியக் கம்பெனி வணிகர்கள் கோட்டை ஒன்றை கட்டிக் கொண்டு தம் வாணிகத்தை தொடங்கினர். நாட்டின் அவலநிலையை அறிந்த பிரெஞ்சுக்காரர்கள் ‘எரிகின்ற வீட்டில் பிடுங்கின வரை இலாபம்’ என்ற பழிமொழியின் அடிப்படையில் ஆங்காங்கே தம் கம்பெனிகளை நிறுவி இடம் பிடித்தனர்.

**கிழக்கிந்திய கம்பெனி**

சோழ மண்டலக் கடற்கரையோரத்தில் ஆங்கிலேயா் கைவசம் இருந்த சென்னைப்பட்டினமும், பிரெஞ்சுகாராிடம் இருந்து புதுச்சேரியும் இருபெரும் வாணிகத்துறைமுகங்களாக விளங்கின.

மராட்டியா்கள் 1740 ஆம் ஆண்டில் கா்நாடகத்தின் மேல் படையெடுத்து மக்களை சூறையாடினாா்கள். நாடெங்கும் கொள்ளையும், கொலையும் விளைவித்தாா்கள். குழப்பங்களும் கலகங்களும் ஏற்பட்டன. மக்களின் கண்ணீாிலும் கெந்நீாிலும் நாடு நனைந்தது.இந்நிலையில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் அமைதியாகக் தத்தம் அளவில் வாணிகத்தில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தனா்.

**முதல் கற்நாடகப்போா்**

ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திாிய அரசுாிமை போட்டி ஒன்றில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் எதிா்க்கட்சிகளுக்குத் துணை நின்று ஏழாண்டுகாலம் போாில் ஈடுபட்டு இருந்தனா். அக்காரணத்தினால் இந்தியாவிலும் அவ்விரு நாட்டு கம்பெனிகளுக்கும் இடையே பகையும் போரும் மூண்டன. பல்வேறு நிகழ்வுகளுக்குப் பிறகு சென்னையானது மீண்டும் ஆங்கிலேயா் வசம் ஒப்படைக்கப்பட்டது. இதைத் தொடா்ந்து இரண்டாம் கருநாடகப்போரும் நடைபெற்றது.

**மைசூா்ப்போா்கள்**

ஐதரலி 1780-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 90,000 காலாட்களுடன் 100 பீரங்கிகளுடனும் போரைத் தொடங்கினான். ஐதாின் சேனைகள் நாடெங்கும் தீ முட்டின. தம் வழியில் நேரிட்ட ஊா்களை சூறையாடின. குழந்தைகள், பெண்கள், மக்கள் அனைவரையும் படுகொலை செய்தன. ஐதரலியின் வழியில் சிக்குண்ட ஊா்கள், உயிா்கள் யாவும் காற்றில் பஞ்சாய் பறந்தன. பக்கத்து ஊா்களில் வாழ்ந்த மக்கள் பயத்தினால் வீட்டையும், நாட்டையும் கைவிட்டு காடுகளிலும் மலைகளிலும் ஓடி மறைந்தாா்கள். ஆா்க்காடும் ஐதரலியின் வசமாயிற்று.

ஐதரலி மிகச் சிறந்த வீரன். நல்ல உடற்கட்டும் நெஞ்சுரமும் வாய்ந்தவன். எழுதப்படிக்கத் தெரியாதவனாயினும் பலமொழிகள் பல பேசுவான் அரசாங்க நிா்வாகத்திலும் போா்த்தொழிலிலும் அளவற்ற ஆற்றல் வாய்ந்தவன். ஒரே சமயத்தில் பல அலுவல்களையும் புரிவது. ஐதாின் சிறப்பம்சமாகும். ஒழுக்கநெறிகளிலும், சமயச் சடங்குகளிலும் அவனுக்கு பற்றுதல் கிடையாது. ஆனால் இஸ்லாமிய மதத்தில் மட்டும் ஆழ்ந்த ஈடுபாடுடையவனாக இருந்தான் அவன் நெஞ்சில் ஈரமும், இரக்கமும் கிடையாது.

அவனுடைய பகைவர்களுக்கும், அவன் பரிவை இழந்தவர்களுக்கும் அவ்ன செய்த கொடுமைகள் கேட்டோர் நெஞ்சை பிளக்கக் கூடியனவாகும்.

ஐந்தருக்குப் பின்னர் அவன் மகன் திப்பு மைசூர் சுல்தானாக முடிசூட்டிக் கொண்டான். அவன் ஆங்கிலேயரிடம் அளவற்ற வெறுப்புக் கொண்டு இருந்தான். எனினும் பிரெஞ்சுக்காரரிடம் மாறாத நட்புக் கொண்டிருந்தான். திப்பு சுல்தான் தன் ஆட்சியின் தொடக்கத்தில் இருந்தே ஆங்கிலேயருக்கு பல தொல்லைகள் கொடுத்து வந்தான். இவன் பல்வேறு கலைகளில் தேர்ந்தவன். பாரசீக மொழியில் ஆழ்ந்த புலமை வாய்ந்தவன். அவன் அரசியல் வாழ்வில் ஓய்வென்பதை கண்டதே இல்லை. இடையறாமல் உழைத்துக் கொண்டே இருந்தான். அவன் புதிய பஞ்சாகம் ஒன்றையும், நாணயங்களையும் அளவைகளையும் அறிமுகப்படுத்தினான்.

ஆங்கிலேயர்கள் சீரங்கப்பட்டணத்தை சூறையாடினர். அரண்மனைகளும், கட்டங்களையும் இடித்து நிறுவனர். மைசூர் தேசம் ஆங்கிலேயரின் உடைமையாயிற்று. தீப்புவின் மக்கள் வேலூர்க்கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

ஆர்காட்டு நவாபும் பெயரளவில் தான் கர்நாடகத்தின் நவாபாக விளங்கினார். அவருடைய அரசு முத்திரைகள் யாவும் ஆங்கிலேயரிடமே இருந்தன. இதனால் மக்கள் பல்வேறு இன்னலகளுக்கு ஆளாயினர். இறுதியில் நவாபு தன் நாட்டையும், அரசையும் ஆங்கிலேயருக்கு வழங்கினான். அவனுடைய இழப்புக்கு ஈடாக சென்னை அரசாங்கமே அவனுடைய கடன்களை தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

## 17. டச்சுக்காரர்கள்

### தமிழகத்தில் டச்சுக்காரர்கள்

ஹாலந்து மற்றும் நெதர்லாந்து மக்கள் பொதுவாக டச்சுக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். வரலாற்று ரீதியாக அவர்கள் கடல் வணிகத்தில் நிபுணர்களாக இருந்தனர்.

1602-இல் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி உருவாக்கப்பட்டது. இந்தியாவிற்குள் வந்த முதல் ஐரோப்பியர்களில் டச்சுக்காரர்களும் அடங்குவர்.

முதல் டச்சு தொழிற்சாலை ஆந்திரப்பிரதேசத்தின் மசூலிப்பட்டினத்தில் 1605-ல் நிறுவப்பட்டது. பின்னர் இந்தியா முழுவதும் பல்வேறு வர்த்தக மையங்களை நிறுவத் தொடங்கினர்.

போர்த்துக்கீசியரிடமிருந்து நாகப்பட்டினத்தைக் கைப்பற்றி தென்னிந்தயாவில் தங்களை வலிமைப்படுத்திக் கொண்டனர்.

1502-லிருந்து தமிழகத்தின் பழவேற்காடு போர்துகீசியரின் தலைநகராக விளங்கியது. அதனை டச்சுக்காரர்கள் கைப்பற்றி தன்வயப்படுத்திக் கொண்டனர்.

சென்னை நகருக்கு வடக்கே 60 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பழவேற்காட்டில் டச்சுக்காரர் ஜெல்டிரியா என்னும் பாதுகாப்புக் கோட்டையைக் கட்டினார். 400 ஆண்டுகள் கடந்தும் அதன் எச்சங்கள் இன்னும் காணலாம்.

1605-இல் தங்கள் அதிகாரத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவிய டச்சுக்காரர்கள் 1610-இல் பழவேற்காட்டில் சில குடியேற்றங்களை நிறுவினர்.

நாகப்பட்டினம், புன்னைக்காயல், பரங்கிப்பேட்டை, கடலூர் (திருப்பாதிரிப்புலியூர்), தேவனாம்பட்டினம் ஆகியனவும் டச்சுக்காரர்களின் ஏனைய காலனித்துவ பகுதிகளாயின.

பழவேற்காடு டச்சுக் கம்பெனியின் சோழ மண்டலப் பகுதியில் தலைமையிடமாயிற்று. அங்கிருந்து மேலை நாடுகளுக்கு வைரம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஜாதிக்காய், ஜாதிபத்தி, கிராம்பு ஆகியவையும் இங்கிருந்து ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டன.

17-ம் நூற்றாண்டில் டச்சுக்காரர் கிழக்குப் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வெடிமருந்து தொழிற்கூடம் ஒன்றையும் நிறுவனர்.

அடிமை வியாபாரத்தில் டச்சுக்காரர்கள் ஈடுபட்டனர் என்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு டச்சுக்காரர்கள் பழிவேற்காடு நாகப்பட்டினம் முதலிய பகுதிகளில் செழித்து வளர்ந்திருந்தனர்.

கடற்பயணத்திலும், வாணிபத்திலும், தொழிலும் டச்சுக்காரர்கள் பிற ஐரோப்பியர்களை விடத் திறனுடையவர்களாக விளங்கினர். அவர்கள் தங்கள் நோக்கத்தை உணர்ந்து செயல் வீரத்தைப் பயன்படுத்தி முன்னேறினர். டச்சுப் பாதிரிமார்கள் புலிக்காட்டில் இருக்கை வைத்துக் தனது சமயப் பணியைத் தொடர்ந்தன.

**டச்சுக்காரர்களின் அடிமை வணிகம்**

பழவேற்காடு டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியில் தலைமையிடமாயிற்று வைரம் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்ததோடு அடிமைகளை ஏற்றுமதி செய்யும் வணிகமும் செய்தனர் என்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

டச்சுக்காரர்களின் பிற குடியேற்றப் பகுதிகளான வங்காளத்திலிருந்து தேங்காய்ப்பட்டினம், காரைக்கால் ஆகிய இடங்களிலிருந்தும் அடிமைகள் பழவேற்காட்டிற்குக் கொண்டு வரப்பட்டு வணிகம் செய்யப்பட்டனர்.

அடிமைகளைப் பிடிப்பதற்காக டச்சுக்காரர்கள் சென்னையில் தரகர்களை நியமித்திருந்தனர்.

பஞ்சமும், வறட்சியும் போர்களும் அடிமை வாணிகம் செழிக்கக் காரணமாயிற்று.

பிஜப்பூர் சுல்தான் மேற்கொண்ட படையெடுப்பு தஞ்சாவூரின் வளமான வேளாண் நிலங்களைப் பாழ்படுத்தியதால் மேலும் பல மக்கள் அடிமைகளாக மாறினர்.

புலிக்காட்டில் ஒரு அடிமை 4 கில்டர்கள் முதல் 40 கில்டர்கள் வரை எங்கும் விற்கப்படலாம். கில்டர் என்பது டச்சு நாணயமாகும்.

பஞ்சம் ஏற்பட்டபோது தானியங்களின் விலை அபரிதமாக உயர்ந்தது. அரிசி மற்றும் பிற தானிய விலை உயர்ந்து அடிமைகள விலை மலிவானது.

மெய்டன் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளர் வில் ஓ டிஜிக் என்பார் தனது ஆய்வுக் கட்டுரை ஒன்றில், இங்கிருந்தும் வங்காள விரிகுடாவிலிருந்து கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்ட அடிமைகளின் பட்டியலைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி 1621 ஜூன் முதல் 1665 நவம்பர் வரை மொத்தம் 26, 885 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடிமைகளாக அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களில் 1379 பேர் உயிரிழந்தனர்.

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தஞ்சாவூர், செஞ்சி, மதுரை நாயக்க அரசுகளால் உருவான பஞ்சம் முதலான காரணங்களால் சோழ மண்டலத்தில் அடிமை ஏற்றுமதி பெருகியது என்றும் அவ்வாய்வாளர் மேலும் குறிப்பிடுகிறார்.

1646-ல் 2118 அடிமைகள் பெரும்பாலும் அதிராமப்பட்டினம், தொண்டி காயல்பட்டினம் போன்ற கடற்கரை ஓரமாக அமைந்திருந்த பகுதிகளைச் சார்ந்தவர் விற்கப்பட்டனர் என்றும் தெரிய வருகிறது.

**இந்தியாவில் டச்சுக்காலனியம்**

**முன்னுரை**

நெதர்லாந்து நாடு 1605 முதல் கிழக்கிந்திய டச்சு நிறுவனத்தை துவக்கியது. இந்தியாவில் உள்ள கடற்கரை பகுதிகளை இந்திய மன்னர்களிடமிருந்து கைப்பற்றி

கோட்டை கொத்தளங்கள், குடியிருப்புகளை அமைத்துத் தங்கினர். இங்கே 1605 முதல் 1825 முடிய வணிகம் செய்து வந்துள்ளனர்.

**டச்சு கிழக்கிந்திய கம்பெனி**

டச்சு கிழக்கிந்திய டச்சு மொழியின் சுருக்கமாக ஏழுஊ என்றழைக்கப்பட்டது. உலகின் முதல் உலகின் முதல் உலகளாவிய நிறுவனமாகக் கருதப்படுகிறது.

போர்களில் சண்டையிடுதல், கைதிகளைத் தூக்கிலிடுதல், பணம் சம்பாதித்தல், காலனிகளை நிறுவுதல் போன்ற காலனித்துவ நடவடிக்கைகளில் பங்கேற்க அதிகார் வழங்கப்பட்ட முதல் நிறுவனம் இதுவாகும்.

இந்தியாவில் 1605-இல் மசூலிப்பட்டினத்தில் தங்கள் முதல் தொழிற்சாலையைத் திறந்தனர். அதைத் தொடர்ந்து 1610-இல் புலிக்காடு 1616இல் சூரத் 1641-ல் பிமிலிபடம், 1653 சின்சுரா தொழிற்சாலையைத் திறந்தனர்.

1610-இல் புலிகாட்டில் நிறுவிய தொழிற்சாலை டச்சுக்காரர்களின் முக்கிய செயல்பட்டு மையமாக மாறியது.

புலிக்காட்டில் உள்ள கோட்டை கெல்டிரியா என்று அழைக்கப்பட்டது.

1652-ல் நன்னம்பிக்கை முனையைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர்.

150 வணிகக் கப்பல்கள், 40 போர்க்கப்பல்கள், 50 ஆயிரம் பணியாளர்கள், 10,000 பேர் கொண்ட இராணுவம் உலகில் மிகப்பெரும் தனியார் நிறுவனமாக 1669 டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி உச்சத்தைத் தொட்டது.

1741இல் டச்சு கிழக்கிந்திய நிறுவனத்திற்கும் திருவிதாங்கூர் அரசருக்கும் ஏற்பட்ட கோலாச்சல் போர் தோல்வியில் முடிந்தது. இது டச்சு மேலாதிக்கத்தின் முடிவை எடுத்துக் காட்டியது.

1800-ல் ஊழல் மற்றும் திவால் தன்மையின் விளைவாகக் கலைக்கப்பட்டது. எனினும் இவர்கள் இந்தோனேசியாவில் சக்தி வாய்ந்தவர்களாகவே இருந்தனர்.

**இந்தியாவில் டச்சு குடியிருப்புகள்**

1605ல் டச்சு மசூலிப்பட்டினம் மற்றும் பிற பகுதிகளில் வணிக மையங்களில் நிறுவயது போர்த்துகீசியர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தியது.

போர்த்துகீசியரிடமிருந்து நாகப்பட்டினத்தை பிடுங்கி தங்களின் முக்கிய கோட்டையாக மாற்றினர்.

கோரமண்டல, குஜராத், வங்காளம், பீகார் உத்திரபிரதேசம் போன்ற இடங்களிலும் தங்களது குடியிருப்புகளை நிறுவினர்.

**ஆங்கிலோ– டச்சு போட்டி**

இந்நேரத்தில் ஆங்கிலேயர்கள் கிழக்கு வர்த்தகத்தில் முக்கியத்தும் பெற்றனர். டச்சு பொருளாதார நலன்களுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. வணிகப் போட்டி இரத்தளக்களரியாக மாறியது

1623-ல் டச்சுக்காரர்கள் 10 ஆங்கிலேயர்களையும் ஒன்பது ஜப்பானியர்களையும், அல்போய்னாவில் கொன்றனர். இது ‘அம்போய்னா படுகொலை’ எனப்பட்டது. இதன்பிறகு டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையிலான வெறுப்பு உச்சக்கட்டதை எய்தியது.

பல வருட சண்டைகளுக்குப் பிறகு 1667-ல் இந்நாடுகளும் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவில் வர்த்தகம் செய்வதற்காக இந்தியாவிலிருந்து வெளியேறிவிடுவோம். அதற்கு ஈடாக ஆங்கிலேயர்கள் இந்தோனேசியாவிலிருந்து முழுவதுமாக வெளியே உறுதியளித்தனர்.

**டச்சுக்கம்பெனியின் சரிவு**

ஆங்கிலோ டச்சுப்போர்கள், ஹுகலி போர், கோலாச்சல் போர் ஆகிய டச்சுக்காரர்களின் மனஉறுதியை குலைத்தன.

மேலும் டச்சுக்காரர்கள் இந்தியாவில் பேரரசை நிறுவுவதில் ஆர்வம் காட்டவில்லை. அவர்களின் முக்கிய கவனம் வணிகத்திலேயே இருந்தது.

அவர்களின் முக்கிய பொருளாதார ஆர்வம் இந்தோனேசிய ஸ்பைஸ் தீவுகளில் இருந்தது. அதிலிருந்து அவர்கள் பெரும் பொருளை ஈட்டினர். எனவே அவர்கள் இந்திய வர்த்தகத்தை விட்டுக் கொடுக்கத் தயாராயினர்.

## 18. டேனிஷ்க்காரர்கள்

**அறிமுகம்**

டேனியர்கள் டென்மார்க் மற்றும் நார்வே இணைந்திருந்த நாட்டிலிருந்து வந்தவர்கள். இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் குடியேற்றங்களை ஏற்படுத்தினார்கள். தமிழ்நாட்டில் தரங்கம்பாடி மேற்கு வங்கத்தின் செராம்பூர், நிக்கோபர் தீவுகள் ஆகிய டேனியர்கள் வசம் இருந்தன. 1616 மார்ச் 17-ல் டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டியன் ஒரு பட்டயத்தை வெளியிட்டதன் மூலம் டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனியை

உருவாக்கினார். 1618இல் கடற்படைத் தலைவர் 'ஒவி ஜெடி' இலங்கைக்கு முதல் கடற்பயணத்தை மேற்கொண்டார்.

1620 நவம்பர் 20-ஆம் கையெழுத்தான ஒப்பந்த்தின்படி தரங்கம்பாடியில் கோட்டைக் கட்டி கொள்ளும் உரிமை பெற்றனர். இடையில் நிறுத்தப்பட்டு இரண்டாவது டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனி 1696-ல் தொடங்கப்பட்டது.

**டேனியரும் தமிழரும்**

தரங்கம்பாடியில் டேனியரால் கட்டப்பட்ட கோட்டை இன்றும் சீர்கெடாமல் பாதுகாத்து வருகின்றனர். தமிழகம் வந்த சமயப் பரப்பாளர்களன பார்த்த லோமிஸ் சீகன்பால்கு, எழுத்து மற்றும் தமிழ் இலக்கியப் பணி மொழிபெயர்ப்பு பணியிலும் முக்கியத்துவம் பெறுகிறார். அச்சுக்கூடத்தை நிறுவினர்.

தரங்கம்பாடி கோட்டை கட்டி 400 ஆண்டுகள் முடிந்த நிலையில் டென்மார்க் நல்லுறவை மேம்படுத்தும் நிலையிலும் பழைய வரலாற்று சின்னங்களைப் பாதுகாக்கும் வகையில் தரங்கம்பாடி கோட்டை புதுப்பிக்கப்பட்டது.

**டேனியவரும், மதப்பரப்பாளர்களும்**

டென்மார்க் மற்றும் நார்வே பகுதியினர் இந்தியாவிலும் தமிழ்நாட்டிம் வந்து குடியேற்றங்களை அமைத்தனர்.

தமிழ்நாட்டிலும் தரங்கம்படி, மேற்கு வங்கத்தில் செராம்பூர், நிக்கோபர் தீவுகள் ஆகியன டேனியர் வசம் இருந்த பகுதிகளாகும்.

தஞ்சாவூர் ரகுநாத் நாயக்கர் அரசர் தரங்கம்பாடியைச் சுற்றியிருந்த மேலும் மூன்று கிராமங்களையும் பரிசாக அளித்தார்.

தரங்கம்பாடியில் நல்லதொரு கோட்டையை அமைந்திருந்தனர்.

இந்நிலையில் 1706 ஜுன் 9-ம் நாள் டென்மார்க்கிலிருந்து முதன்முதலாக இரண்டு லுத்தரன் சமயப்பரப்பாளர்கள் வந்தனர்.

1755 இல் அந்தமானிலும் நிகோபாரிலும் குடியேறினார். சிறிது காலத்தில் அங்கு ஏற்பட்ட மலேரியாத் தொற்று பயம் காரணமாக 1848-இல் கைவிட்டுச் சென்றனர்.

லுத்தரன் சபையினைச் சார்ந்த சமயப் பரப்பாளர்களான பார்த்தலோமியஸ் சீகன்பால்கு, ஹென்ரிச் புலுட்சோ ஆகி இருவரும் தரங்கம்பாடி வந்திறங்கினர்.

அங்கு சமயப்பரப்புரை செய்த இவர்கள் கிறித்தவத்திற்கு மாறியவர்களுக்கு பத்துமாதங்களிள் திருமுழுக்கு சடங்கு நடத்தினர்.

இவர்களின் பணியை உள்;ர் டேனிய அதிகாரிகளும் இந்தக்களும் எதிர்த்தனர்.

உள்;ர் மக்களை மதமாற்றம் செய்வதன் மூலம் சீகன்பால்கு கலகத்தைத் தூண்டுகிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டு நான்கு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

பின்பு சீகன்பால்கு ஓர் அச்சுக்கூடத்தை நிறுவினார். தமிழ்மொழி இந்திய மதங்கள், பண்பாடு குறித்த நூல்களை வெளியிட்டார்.

1715-இல்அவர் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

சீகன்பால்குவும் அவருடைய சகாக்களும் 1718-இல் கட்டிய தேவாலயக் கட்டமும் இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

உள்;ர் மத குருமார்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு இறையியல் பயிற்சிப் பள்ளியையும் நிறுவினர்.

1719 பிப்ரவரி 23-ம் நாள் அவர் இயற்கை எய்தினார்.

அப்போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புதிய, பழைய ஏற்பாடுகள், தமிழில் சுருக்கமாக எழுதப்பட்ட பல ஏடுகள், இரண்டு தேவாலயங்கள், இறையியல் பயிற்சிப்பள்ளி புனித நீராட்டல் முடிந்த 250 கிறித்தவர்கள் ஆகியனவற்றை விட்டுச் சென்றார்.

‘புலுட்சோ'' என்ற பாதிரியார் சீகன்பால்குவின் உடன்வந்தவர். சீகன்பால்கு இறந்த பின்னரும் தொடர்ந்து தனது பணியைச் செய்தார்.

ஜே.பி.எச். பெப்ரியஸ் என்ற பாதிரியார் கி.பி.1740 முதல் 1742 வரை தரங்கம்பாடியில் சமயப்பரப்புச் செய்தவர். இவரும் விவிலியத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் பெப்பரியஸ் அகராதி ஒன்றும் தயாரித்தார்.

ே.மி.ரோட்டலர் என்பவரு் சமயப் பரப்புரை செய்ததோடு தமிழ் அகராதியைப் பல தொகுதிகளாகப் பிரித்து வெளியிட்டவர்.

‘சுவார்ஸ் பாதிரியர்’ மராட்டிய அரசர் துளசாவின் நெருங்கிய நண்பர். தரங்கம்பாடியில் 16 ஆண்டுகள் தங்கி சமயப்பணி ஆற்றினார். இரண்டாம் சரபோஜியை தம் பாதுகாப்பில் வளர்த்தவர். 1796இல் அவரை அரசாராக்க உதவியரும் ஆவார்.

டேனி‘ திருச்சபையின் சார்பில் கடைசியாக வந்த போதகர் ‘ஏ.எப்.கே.மெதர்’ ஆவார்.

**டேனிக்காரருக்கான பொன்னோலை ஒப்பந்தம்**

1616-ஆம் ஆண்டு டென்மார்க்கின் தலைநகர் கோபன் ஹேக்கனின் டேனி‘ கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டது.

அப்போது டென்மார்க்கின் மன்னர் நான்காம் கிறிஸ்டியன் இந்திய வர்த்தகத்தை மிகவும் விரும்பி ஆதரித்தார்.

1618-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு ஒரு கப்பலை அனுப்பினார். நாகப்பட்டினத்திலிருந்து வணிகம் செய்து வந்த போர்த்துகீசியர்கள் அக்கப்பலை மூழ்கடித்தனர்.

அதே ஆண்டில் மன்னரின் தூதுவன் என்ற சிறப்புப் பெற்ற ‘அட்மிரல் ஓல் ஜெட்டே’ தலைமையில் இரண்டு போர்க்கப்பல்களும் மூன்று வணிகக் கப்பல்களும் இலங்கையின் கண்டிக்கு வந்தன.

1620-ஆம் ஆண்டு தஞ்சைக்கு ‘ஓல் ஜெட்டே வந்தார். மன்னர் ரகுநாத நாயக்கரைச் சந்தித்தார்.

1620-இல் மன்னருடன் போர்த்துகீசிய மொழியில் ஒப்பந்தம் செய்து கொண்டார். இது பனையோலை போன்று பொன்னால் செய்யப்பட்ட தகட்டில் எழுதப்பட்டிருந்தது. எனவே இது ‘பொன்னோலை ஒப்பந்தம்’ எனப்பட்டது.

பொன்னோலை ஒப்பந்தம் குறிப்பிடும் செய்திகள்

1. ரௌத்திரி ஆண்டு சித்திரை மாதம் 22-ம் நாள் இப்பொன்னோலை எழுதப்பட்டது.

2. கேப்டன் லுவண்ட் கிரேப் என்ற டென்மார்க் அதிகாரிக்கும் பரங்கியவர்கள் (போர்த்துகீசியர்) கடலில் தொல்லையளித்தனர் என் அறிந்தோம். எனவே மன்னர் ரகுநாத நாயக்கர் அப்பரங்கியருக்கு 12 ஆயிரம் பொன்னை அபராதமாக விதித்ததோடு, கேப்டனுக்கு பல்லக்கு முதலிய மரியாதைகள் செய்து நட்பு பாராட்டப்பட்டது.

3. டென்மார்க் நாட்டினர் தரங்கம்பாடி என்ற கரைத்துறையில் குடியேற உரிமை அளிக்கப்பட்டது.

4. மிளகும். பீதாரம்பரம், புருசர் துப்பட்டி முதலிய துணி வகைகளும் சமதாடு முதலிய ஆயுதங்களும் டென்மார்க் அரசருக்கு இத்துடுன் அளிக்கப்பட்டது.

5. டென்மார்க் அரசர் ‘டேமாற்க் றாசாவினவர்கள்’ என்று அழைக்கப்பட்டுள்ளார்.

6. போர்த்துகீசிய மொழியில் எழுதப்பட்ட இவ்வோலையில் மன்னர் ‘ரகுநாத்’ எனத் தெலுங்கில் கையெழுத்திட்டுள்ளார்.

7. இவ்வொப்பந்தப்படி 5 மைல் நீளமும் 3 மைல் அகலமும் கொண்ட தரங்கம்பாடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் டேனிசாரின் ஆட்சிக்குப்பட்டும், இதற்காக இவர்கள் வருட வாடகையாக 3111 ரூபாய் செலுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது இப்பொன்னோலை டென்மார்க் நகரில் உள்ள ராயல் ஆவணக் காப்பகத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. இதன் நகல் உரிய விளக்கங்களும் சென்னை டேனி‘ கோட்டை அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## 19. பிரெஞ்சுக்காரர்கள்

### அறிமுகம்

பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி 1664-இல் முதன்முதலில் உருவாக்கப்பட்டது. கி.பி.1668-இல் சூரத்திலும் கி.பி. 1669-இல் மசூலிப்பட்டினத்தில் இக்கம்பெனியின் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. ஏனைய ஐரோப்பியர்களைப் போல பிரெஞ்சுக்காரரும் அரசியலில் ஈடுபடலாயினர். இவர்கள் தமிழகத்தில் நுழையும் போது அரசியல் நிலை திடநிலையல் இல்லை. இதனைப் பயன்படுத்திக் கொண்டு 1671-இல் சாந்தோமை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டனர்.

தமிழகத்தில் சாந்தோமமிலிருந்தும் மயிலாப்பூரிலிருந்து 1672-ல் டச்சுக்காரரை வெளியேற்றினர். புதுச்சேரியைத் தங்கள் குடியேற்றமாக்குவதில் பிரெஞ்சுக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாயினர். டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் பலத்த போட்டியாளர்களாக காணப்பட்டனர். இடையில் சில ஆண்டுகள் புதுச்சேரியைக் கைவிட்டாலும் 1697-இல் ரிஸ்விக் உடன்படிக்கையின் மீண்டும் பிரெஞ்சுக்காரர் வசம் வந்தது. மாகி, காரைக்கால், காசிம்பஜார், சந்தன்நகர், பாலசோர் ஆகிய இடங்களையும் கைப்பற்றி விரிவுபடுத்தினர்.

### பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தின் இந்தியக் குடியேற்றம்

பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ‘மன்னர் 14-ஆம் லூயிஸின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664ல் உருவாக்கப்பட்டது.

1667-இல் பிரான்காய்ஸ் கரோன் தலைமையின்கீழ் ஒரு குழு இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டது.

வியாபாரத்திற்காக இந்தியா வந்த கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும்.

இந்தியாவின் முதல் பிரெஞ்சு வணிகத்தை கரோன் என்பவர் சூரத் நகரில் நிறுவினர்.

1669-ல் மார்கரா என்பவர் கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.

1673-ல் பிஜப்பூர் ஆட்சியாளர் ெ்கான் லோடிக்கு வழங்கப்பட்ட மானியத்தின் கீழ் மார்டின் என்பவர் பாண்டிச்சேரியில் குடியேற்றத்தை நிறுவினார்.

பாண்டிச்சேரி இந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வளமான பிரெஞ்சுக் குடியேற்றமானது.

**இந்தியாவின் பிரெஞ்சுக்காரர்களின் காலனியம்**

**முன்னுரை**

வணிக நோக்கத்துடன் இந்தியாவிற்குள் நுழைந்து ஐரோப்பியர்களுள் பிரெஞ்சுக்காரர்களும் அடங்குவர். ‘புதுச்சேரியை’ தனது அதிகார மையமாகக் கொண்டு வர்த்தகமும், ஆட்சியும் போரும் செய்து தன்னைப் பல காலம் தக்க வைத்துக் கொண்டவர்கள் இவர்கள்.

பிரெஞ்சுக்காரர் வருகை

இந்தியாவுடன் வணிக உறவை மேற்கொள்ள பிரெஞ்சு நாட்டினர் 1527ம் ஆண்டிலேயே முயற்சி மேற்கொண்டனர்.

போர்த்துகீசியராலும் டச்சுக்காரர்களாலும் தூண்டப்பட பிரெஞ்சுக்காரர்கள் 1664-ல் உருவாக்கப்பட்ட பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் தங்கள் வணிகச் செயல்பாடுகளைத் தொடங்கினார்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளின் வணிக நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களாக இருக்க, பிரெஞ்சுக்கிழக்கிந்தியக் கம்பெனி அரசர் பதினான்காம் லூயியின் திட்டமாக அமைந்து அரசினுடையதாக இருந்தது.

ஆரசர் பதினான்காம் லூயியின் அமைச்சர் கோல்பெர்க் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி உருவாவதற்கு மிக முக்கியக் காரணமாக இருந்தார்.

**மடகாஸ்கர் வழியாக புதுச்சேரி**

1602-ல் பிரெஞ்சு வணிகர்கள் ஆப்ரிக்காவிலுள்ள மடகாஸ்கர் வழியாக மடகாங்கரை அடைந்தனர்.மடகாஸ்கர் தீவைக் காலனி ஆதிக்கமாகக் கொண்டிருந்தாலும் அதனைப் புதுப்பிக்க நிறை நேரத்தையும் வளங்களைச் செலவிட்டும் முயற்சி வெற்றி

பெறவில்லை.எனவே ∴பிராங்கோயிஸ் கரோன் 1667-இல் இந்தியாவிற்கு ஒரு பயணத்தை வழி நடத்தினார்.

இந்தியாவிலிருந்த பிரெஞ்சு முகவரான பெர்பர் 1666 செப்.4-ல் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பிடமிருந்து அனுமதி ஆணை பெற்று தங்கள் முதல் நிறுவனத்தை டச்சுக்காரர் எதிர்ப்பையும் மீறி சூரத்தில் அமைத்தனர்.ஓராண்டிற்குள் மசூலிப்பட்டிணத்தில் மற்றுமொரு நிறுவனமும் அமைக்கப்பட்டது.

1673-ம் ஆண்டில் வங்காளத்தில் முகலாய சுபேதாரான 'ாயிஸதா கான், கல்கத்தாவிற்கு அருகிலுள்ள சந்தர்நாகூரில் ஒரு காலனியை நிறுவ பிரெஞச்சுக்காரர்களுக்கு அனுமதி வழங்கினார்.1683 வாக்கில் பாண்டிச்சேரிக்கு தங்கள் கவனத்தைத் திருப்பினர் ஆனால் நிறுவனத்தின் அப்போதயை நிதி சிக்கல்களால் இடமாற்றம் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

**பிரெஞ்சுக்காரரின் அதிகார மையம் புதுச்சேரி**

இந்தியாவில் காலூன்ற வலுவான இடம் தேவை என்பதை உணர்ந்த பிரெஞ்சு நிதியமைச்சர் கோல்பெர்ட், ஜேக்கப் பிளான்குமிட்டி டிலாஹேய் (துயஉழடி டீடயதெரநவ னந டய ர்யலந) என்பாரின் தலைமையில் கப்பற்படை ஒன்றை அனுப்பி வைத்தார்.சாந்தோமிலிருந்தும் மயிலாப்பூரிலிருந்தும் டச்சுக்காரரை வெளியேற்றுவதில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றி கண்டனர்.

டச்சுக்காரர்களுக்கு எதிராகப் பிஜப்பூர் சுல்தானின் பிரநிநிதியான உள்ளர் ஆளுநர் செர்கான் லோடியின் உதவியை பிரெஞ்சுக்காரர் நாடினர்.பிரெஞ்சுக்காரர் குடியேறுவதற்குப் பொருத்தமான இடமென புதுச்சேரியை செர்கான் லோடி வழங்கினார்.

## 20. ஆங்கிலேயர்கள்

### அறிமுகம்

ஆங்கிலேயர் எனப்படுவோர் இங்கிலாந்தை நாடாகக் கொண்ட ஆங்கிலம் பேசும் இனக்குழுவினார் ஆவர். 1611-இல் அரசர் முதலாம் ஜேம்ஸ், வில்லியம் ஹாக்கினஸ் மூலம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையை முகலாய அரசர் ஜஹாங்கீரிடம் பெற்றார். ஆங்கிலேயர்கள் முதல் தொழிற்சாலையை 1613-ல் சூரத்தில் நிறுவினர். 17-ஆம் நூற்றாண்டில் முதல் பாதியில் பல தொழிற்சாலைகளை நிறுவினர். தெற்கிலும் மேற்கிலும் தங்கள் கோட்டைகளை விரைவாக நிறுவினர். 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்குப்பின் இந்தியாவின் மீதான தங்கள் அதிகாரத்தை கம்பெனியார் பிரிட்டி' அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டியிருந்தது.

**தமிகத்தில் கம்பெனி ஆட்சி**

தமிழகத்தில் முதன்முதலில் 16-ஆம் நூற்றாண்டில் கால் பதித்தனர். தற்கால சென்னை நகரத்தில் புனித ஜார்ஜ் கோட்டையைக் கட்டினர். முதலில் வர்த்தகம் மட்டும் செய்து வந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பின் மெல்ல மெல்ல உள்;ர் அரசியல் விவகாரங்களில் தடையிடத் தொடங்கியது. பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த கர்நாடகப் போர்களால் ஆங்கிலேயர்களின் கை ஓங்கியது. ஆற்காடு நவாம் மற்றும் பிரெஞ்சுப் படைகளை வென்றதால் அவர்களின் ஆதிக்கத்தில் இருந்த பல பகுதிகள் ஆங்கியேலம் வசம் வந்தன. ஐதர் அலி மற்றும் திப்பு சுல்தான் வீழ்த்தியதின் மூலம் மேற்கிலும் கட்டபொம்மன், மருதுபாண்டியன் முதலில் பாளையக்காரர்களை வென்றதன் மூலம் சென்னை மாகாணத்தில் கம்பெனி ஆட்சி அறிவித்தது.

1877-78ல் ஏற்பட்ட கடும்பஞ்சம் சென்னை மாகாணத்தைத் தாக்கியது. பருவ மழை தவறியதாலும் அரசின் மெத்தனத்தாலும் 50 லட்சம் மக்கள் மாண்டனர். பல்லாயிரக் கணக்னோர் இலங்கை, பர்மா, மிஜி தீவுகளுக்கு ஒப்பந்த தொழிலாளர்களாக இடம் பெயர்ந்தனர். 1892-இல் தாழ்த்தப்பட்ட மக்களின் பொளாதார விடுதலைக்கு ‘பஞ்சமி நிலச்சட்டம்’ இயற்றப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் இந்திய சுதந்திரத்திற்கான போராட்டங்கள் தொடங்கின. அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கம் தமிழகத்தில் தீவிரமாகச் செயல்பட்டது.

1919-ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்.ஃபோர்டு சட்ட சீர்திருத்தங்களின் விளைவாக இந்திய அரசாங்கச் சட்டம் பிரித்தானிய அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. மத்திய அரசிலும் மாகாணங்களிலும் ‘ இரட்டை ஆட்சி முறை’ அறிமுகப்படுத்தப்பட்டது.

1935 இயற்றப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டது. 1937-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு வென்று ராஜகோபாலச்சாரி முதல்வரானார். 1939 அக்டோபரில் இரண்டாம் உலகப்போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதைக் கண்டித்து காங்கிரசு அரசு பதவி விலகியது.

1946 இந்தியாவிற்குச் சுதந்திரம் அளிப்பதாக பிரிட்டன் வாக்குறுதி அளித்த பின்னர் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் காங்கிரஸ் வென்று ‘தங்கு குரி பிரகாசம்’ சென்னை மாகாணத்தின் முதல்வரானார். ஆனால் உட்கட்சி பூசலினால் அவர் பதவி விலகினார். பின்னர் ‘ஓமந்தூர் ராமசாமி’ முதல்வரானார்.

**ஆங்கிலேய ஆட்சிமுறையில் கல்வித்துறையின் மாற்றங்கள்**

இந்தியாவில் ஆரம்பகால கல்விமுறை முக்கியமாக பாரம்பரிய மற்றும் மதக்கூறுகளைக் கற்பிப்பதை அடிப்படையாகக் கொண்டது. இந்திய மதங்கள், மொழி, இலக்கியம், கணிதம், தர்க்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

கல்விக்கான மையங்கள் இந்து, பௌத்த மையங்களாக விளங்கின.ஆரம்பத்தில் பிரிட்டி'ார் கல்வி முறையை மேம்படுத்தாது குறித்து ஆர்வம் காட்டவில்லை. அவை வர்த்தகம் மற்றும் இலாபம் ஈட்டுவதில் மட்டுமே கவனம் செலுத்தின.

இந்தியாவில் ஆட்சி செய்ய உயர்தர மற்றும் நடுத்தர இந்தியர்களுக்கு ஆங்கில ரசனை கொண்ட இந்திய மக்களை உருவாக்க நினைத்தார்.

- 1781 கல்கத்தா மதரஸா முஸ்லீம் சட்டம் மற்றும் பிற பாடல்களைப் படிக்க உருவாக்கப்பட்டது.
- 1791-இல் ஜொனாதன் டங்கன் பெனாரஸிக் சமஸ்கிருதக் கல்லூரி நிறுவினார். இது இந்துசட்டம் தத்துவம் படிக்க நிறுவப்பட்டது.
- 1813 சாசனத்தின்படி இந்தியாவில் கிறிஸ்தவ மதக் கருத்துக்களைப் பரப்ப மி'னரிகளை அனுமதித்தது.
- 1817-இல் கல்கத்தா கல்லூரியை மேற்கத்திய மனிதயேம் மற்றும் அறிவியலில் கல்வி கற்பதற்காக ஒரு மானியத்தை அனுமதித்தனர்.
- 1835 மெக்காலே கல்வித்திட்டம் மிக முக்கியமானது கல்விக்கென 1 இலட்சம் ஒதுக்கப்பட்டது. உயர்வகுப்பினர் அல்லாதோர் சமஸ்கிருதம் படிக்க பரிந்துரைத்தார். சாதி மத வேறுபாடின்றி கல்வி வாய்ப்பை வழங்க வேண்டும் என்றார். இது போன்ற பல கருத்துக்களை வழங்கிய மெக்காலே 'நவீன கல்வி முறையின் தந்தை' என்று புகழப்பட்டும், பல ஆண்டுகளுக்கு பிறகும் விமர்சிக்கப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்கது.
- 1854 வாட்ஸ் டெஸ்பாட்ச் இது வெகு ஜனங்களின் கல்வி, பெண் கல்வி, ஆசிரியர் பயிற்சியில் கவனம் செலுத்தியது.
- 1882-1883 (ஹண்டர் கமி'ன்) ஆரம்பக் கல்வியின் முக்கியக் கவனம் செலுத்தவும் பெண் கல்வியை மேம்படுத்தவும் பரிந்துரைத்தது. மேலும் கற்பித்தல் மற்றும் தேர்வு செய்யும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. 1887இல் அலகாபாத் 1882-ல் பஞ்சாப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன.

- ராலே கமி‘ன் பல்கலைக்கழகங்களின் நிலையை எடுத்தரைத்தது. மேம்படுத்தவும் பரிந்துரைத்தது. அதன்படி 1904 இல் இந்திய பல்கலைக்கழக சட்டத்தை நிறைவேற்றியது.
- 1906இல் பரோடோ மாநிலம் தனது பிரதேசங்கள் முழுவதும் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கியது.
- 1917இல் சாட்லா் பல்கலைக்கழக ஆணையம் கல்கத்தா பல்கலைக்கழகச் சிக்கலைகளை களைய அமைக்கப்பட்டது.
- 1929 - ஹார்டேக் குழு – அத்தியாவசிய பயிற்சியின் முக்கியத்துவம் - தகுதி உள்ள மாணவர்கள் மட்டும் - உயர்நிலை இடைநிலை படிப்பிற்குச் செல்ல வேண்டும் - கல்லூரிக் கல்வியின் வழிகாட்டுதல் - ஆகியனவற்றை பரிந்துரைத்தது.

**பிளாசி, பக்சார் போர்கள்**

**பிளாசிப்போர்**

வங்காளத்தல் உள்நாட்டு வணிகத்தில் பங்கேற்பதற்காக வங்காள நவாபுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்தாமல் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழு தட்டிக் கழித்தது.

வங்காள நவாப் சிராஜ் உத்தௌளலாவுடன் பகை கொண்டிருந்த அவருடைய சகோதரியின் மகனுக்கு வணிக்குழு அடைக்கலம் வழங்கியது.

அவரைத் தன்னிடம் வழங்க நவாம் கோரியபோது வணிகக்குழு மறைத்துவிட்டது.

வில்லியம் கோட்டையை நவாப் கைப்பற்றி ஆங்கிலேயரைச் சிறையல் அடைத்தார்.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்த வணிகக்குழு ஒரு வலுவான படைப்பிரிவை ராபர்ட்கிளைவ், வாட்சன் ஆகியோர் தலைமையில் அனுப்பி வைத்தது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற போரே பிளாசிப்போர் ஆகும்.

பிளாசிப் போர் வணிக நிறுவனமாக இருந்த ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தை அரசியல் சக்தியாக மாற்றியது.

சிராஜ் உத்தௌளலாவிற்குப் பதிலாக மீர் ஜாபர் வங்காள நவாப் ஆக்கப்பட்டார்.

ஆங்கிலப் படைகளைப் பராமரிக்க வணிகக் குழுவிற்கு வங்காளத்தில் நிலம் வழங்கப்பட்டது.

**பக்சர் போர்**

மீர்காசிம், முகலாய அரசர் இரண்டாம் ஷா ஆலம், அவத்தின் நவாப் சூஜா உத்தெளலா ஆகிய மூவரும் ஆங்கிலேயருக்கு எதிராக கூட்டுச் சேர்ந்தனர்.

போர் அறிவிப்புச் செய்தனர். அதன்படி 1764 பக்சார் என்னுமிடத்தில் போர் நடைபெற்றது.

போரில் மூவரும் வீரத்துடன் போரிட்டனர். ஆனால் வணிகக் குழுவின் பை சிறப்பு வாய்ந்தாக இருந்தால் கம்பெனியார் வெற்றி பெற்றனர்.

1765-இல் அலகாபாத் உடன்படிக்கைக்கு இட்டுச் சென்றது. ராபர்ட் கிளைவும் இரண்டாம் ஷா ஆலமும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

இதன்படி வணிகக்குழு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளுக்கு வரிவசூல் செய்யும் உரிமையைப் பெற்றனர்.

கல்கத்தாவின் மீதான இறையான்மையைப் பெற்று ஆங்கிலேயர் வங்காளத்தின் ஆட்சியாளராக மாறினார்.

**கர்நாடகப் போர்கள்**

**முன்னுரை**

ஆங்கிலேயர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவதற்கு (1746 – 1763) காலப்பகுதியில் பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக மூன்று போர்களை நடத்தினார். இப்போர்கள் வரலாற்று அறிஞர்களால் கர்நாடகப் போர்கள் என அழைக்கப்படுகின்றன. இப்போர்களின் முடிவில் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனம் தென்னிந்தியாவில் பலம் பொருந்திய ஆதிக்கச் சக்தியாக உருவெடுத்து கர்நாடகம் என்பது தற்கால இந்தியாவின் ஆந்திரச் பிரதேசம் தமிழ்நாடு ஆகிய பகுதிகளைக் குறிக்கிறது.

**முதலாம் கர்நாடகப் போர் (1746 – 1748)**

ஐரோப்பாவில் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையே ஏற்பட்ட போர்களால் இந்தியாவில் இருந்த இரு நாட்டுக் குடியேற்றங்களுக்கு இடையே போர்கள் ஏற்பட்டன.

ஆற்காடு நவாப் ஐதராபாத் நிசாம் போன்ற இந்திய ஆட்சியாளர்களிடையே ஏற்பட்ட மோதல்களினால் பிரித்தானிய மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனங்கள் தலையிட்டு வந்தன.

முகலாயப் பேரரசு வலுவிழந்த பின்னர் கர்நாடகப் பகுதி டெல்லி ஆட்சியாளர் கட்டுப்பாட்டிலிருந்து விலகி சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கியது.

ஐதராபாத் பகுதியில் நிசாம் பெயரளவில் ஆட்சியில் இருந்தார். அவரது நண்பர் அலி கர்நாடகப் பகுதியில் உண்மையில் ஆட்சி செலுத்தி வந்தார்.

சதாமின் இறப்பிற்குப் பின் அவரது மருமகன் ‘சந்தா சாகிப்பும்’ ஆற்காடு நவாப் ‘அன்வாருதின் முகமதுகானும்’ கர்நாடக நவாப் ஆகி முயன்றனர்.

இருவருக்குமிடையே மூண்ட போரில் சந்தாசாகிப்புக்கு ஆதரவாக பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியும் ஆற்காடு நவாபுக்கு ஆதரவாக பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியும் களமிறங்கின.

புதுச்சேரியில் புதிதாக பொறுப்பேற்ற ஆளுநர் ஐரோப்பிய போர் நிகழினும் இங்கு அமைதிகாக்கும்படி கேட்டுக் கொண்டார். சில காலம் அமைதி ஏற்படினும் மறுபடியும் போர் வெடித்தன.

ஆளுநர் தூப்ளேயின் பிரெஞ்சுப் படைகள் 1746 செப் 15 சென்னையைக் கைப்பற்றியது. ஆளுநர் மோரிஸ் சரணடையுமாறு அறிவுறுத்தப்பட்டார்.

மோரிஸ் ஆற்காடு நவாப் அன்வாருதீனிடம் உதவியை நாடினார்.

தூப்ளே விவேகத்துடன் முந்திக்கொண்டு அன்வாருதீரிடம் சென்னையை ஒப்படைத்தாக உறுதி கொடுத்தார்.பின்னர் தூப்ளே வாக்குறுதியை மறத்தார்.இதனால் நவாபின் படைகள் ஜார்ஜ் கோட்டையை சுற்றி வளைத்தன. சாந்தோம் வரை பின்னுக்குத் தள்ளின.பின்னர் அடையாறு ஆற்றங்கரையில் நடந்த போரில் நவாபின் படைகள் பெரும் தேசத்திற்கு உள்ளாயின.பின்னர் தூப்ளே கடலூரில் இருந்த ஆங்கிலேயரின் டேவிட் கோட்டையில் மீது கண் வைத்தார்.அங்கேயும் ஒரு அரசியல் விளையாட்டை விளையாடி கோட்டையைத் தன் வயப்படுத்த முயன்றார்.

இதற்கிடையில் ஐரோப்பாவில் நடந்த ‘சபேல் உடன்படிக்கையால்’ இருவரும் மோத்களை முடித்துக் கொண்டனர். சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பித் தந்தனர். அதற்குப் பதிலாக வட அமெரிக்காவின் ‘லூயிஸ்பார்க் என்ற இடம் பிரெஞ்சினருக்கு அளிக்கப்பட்டது.

**இரண்டாம் கர்நாடகப் போர் (1749 – 1754)**

1748 ஐதராபாத் நிசாம் உல் முல்க் இறந்தார். அவரது மகன் நசீர் ஜங்கும் பேரன் முசா.ஃ.பர் ஜங்கும் அடுத்த நிசாமாகப் போட்டியிட்டனர்.அதே வேளை சந்தா சாகிப் ஆற்காடு நவாபாக முயன்றார்.முசா.ஃ.பர் ஜங்கும், சந்தாசாசிப்பும் பிரெஞ்சு ஆதரவைப் பெற்றிருந்தனர்.நசீர் ஜங்கும், ஆற்காடு நவாப் அன்வாருதீனும் பிரித்தானிய ஆதரவைப் பெற்றனர்.

போரின் தொடக்கத்தில் பிரெஞ்சு தரப்புக்குத் தொடர் வெற்றிகள் கிடைத்தன.அன்வாருதீன் 1749-இல் கொல்லப்பட்டார். சந்தாசாகிபும் முசா.ஃ.பர் ஜங்கும் முறையே கர்நாடக நவாபாகவும் ஆற்காடு நவாபாகவும் பதவியேற்றனர்.ஆனால் 1751-இல் ராபர்ட் கிளைவ் தலைமையிலான பிரித்தானியப படைகள் ஆற்கர்டைக் கைப்பற்றின.

1754இல் கையெழுத்தான ஒப்பந்தத்தின் மூலம் அமைதி திரும்பியது.முகமது அலி கான் வாலாஜா ஆற்காட நவாபானார்.இப்போர்களின் பலனான பிரெஞ்சு தரப்பு பலவீனமடைந்து பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்தின் நிலை பலப்பட்டது.

**மூன்றாம் கர்நாடகப் போர்**

தென்னிந்தியாவில் பிரித்தானிய ஆதிக்கத்தை முறியடிக்க பிரெஞ்சிலிருந்து லால்லி இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்.

புனித டேவிட் கோட்டையை பிரித்தானியரிடமிருந்து கைப்பற்றிய பின்னர் சென்னையை முற்றுகையிட்டார். ஆனால் கைப்பற்ற இயலவில்லை.

1760-ல் பிரித்தானியப் படைகள் வந்தாவாசிப் போரில் வென்றது. காரைக்காலைக் கைப்பற்றினார். பின்னர் பாண்டிச் சேரியும் செஞ்சியும் பிரித்தானியரிடமே சென்றன.

1763-ல் கையெழுத்தான பாரிசு ஒப்பந்தம் ஏழாண்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தன.

அவ்வுடன்படிக்கையின்படி புதுச்சேரியில் சந்தன்நகரும் மீண்டும் பிரெஞ்சுக்காரருக்கு வழங்கப்பட்டத.

**மைசூர் போர்கள்**

ஹைதர் அலி, திப்பு சுல்தானுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே மைசூர் இராஜ்ஜியத்திற்காக தொடர்ந்து நான்கு மைசூர் போர்கள் நடைபெற்றன. ஹைதர் அலி மைசூர் தக்க வைத்துக் கொண்டார். அவரது மகன் திப்பு சுல்தான் மிகுதியாகப் போராடி இறுதியில் மைசூர் இராஜ்ஜியத்தை ஆங்கிலேயரிடம் இழந்தார்.

## 21. பாளையக்காரர்கள்

**அறிமுகம்**

தமிழகத்தில் விஜயநகரப் பேரரசின் ஆட்சி நடைபெற்ற போது 1529-இல் பாளையக்கா முறை ஆரம்பிக்கப்பட்டது. இம்முறையின் கீழ் மதுரை மண்டலம் 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. இப்பாளையம் ஒவ்வொன்றும் ஒரு ‘படைநிலை’ ஆகும் இதனை நிர்வாகம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட தலைவன் பாளையக்காரர் எனப்பட்டார்.

பாளையக்காரர்கள் தங்கள் நிர்வாகத்துள் அடங்கிய பகுதியில் ஓரளவு சுயமான அதிகாரத்துடன் கூடிய ஆட்சியதிகாரம் இருந்தது. இவர்களின்கீழ் அமைச்சராகவும் தளபதியாகவும் செயல்படக்கூடிய தளவாய ஒருவரும் பாளையப்பட்டுக்கு மேலுள்ள அரசு தொடர்பான காரியங்களைக் கவனிக்கத் தானாபதி ஒருவரும் இருந்தன. பாளையங்களின் பாதுகாப்பு, சட்ட ஒழுங்குப் பராமரிப்பு, வரி வசூலிப்பு ஆகியனவற்றைச் செய்தனர். படை திரட்டி பராமரிக்க பாதுகாப்பு கோட்டை கட்டி கொள்ள, நிதி விசாரணை செய்து தீர்ப்பு, தண்டனை வழங்க அதிகாரம் பெற்றிருந்தனர்.

நாட்டில் மன்னர்கள் ஈடுபடும் போரில் உதவியாக நின்று போர் புரிந்து வெற்றி தோல்விகளைத் தீர்மானித்தனர். அரசுரிமைப் போட்டி, உள்நாட்டுக் கலகங்கள் போன்றவற்றிலும் இவர்கள் பங்கு பெற்றனர். மன்னர்கள் வெள்ளையர் ஆதிக்கங்களுக்குப் பணிந்த பின்னரும் பாளையக்காரர்கள் அவர்களை எதிர்த்தும் நின்றனர். இவை பாளையக்காரர் கிளர்ச்சி எனப்படும்.

**தீரன்சின்னமலையின் போராட்டங்கள்**

தீரன்சின்னமலை ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தை எதிர்த்து போரிட்ட கொங்கு நாட்டுப் பாளையக்காரர் ஆவார். கொங்கு நாட்டில் ஓடாநிலைக் கோட்டை கட்டி ஆண்டவர்.

அவர் இன்றைய திருப்பூர் மாவடடம் காங்கேயம் வட்டம் மேலப்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தார். இவர் இளம் பருவத்தில் தீர்த்தகிரிச் சர்க்கரை என்னும் பெயர் பெற்றார்.

இளமையிலேயே மல்யுத்தம், தடிவரிசை, வில் பயிற்சி, வாள் பயிற்சி, சிலம்பாட்டம் கற்றார். இளமையில் ஒரு நாள் வேட்டைக்குச் செல்லும் வழியில் வரிப் பணத்தைப் பிடுங்கி ஏழைகளுக்கு விநியோகித்தார். தண்டல்காரிடம் சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையே ஒரு சின்னமலை பறித்தாகச் சொல் என்று சொல்லி அனுப்பினார். அன்று முதல் சின்னாலை என்ற பெயர் வழங்கலாயிற்று.

இவர் பின்னாளில் தீப்புவாலும் பிரெஞ்சுக்காரர்களாலும் பயிற்சியளிக்கப்பட்ட பாளையக்காரர் ஆனார். பின் ஆங்கிலேயருக்கு எதிரான போர்களையும் முன்னெடுத்தார்.

கோயமுத்தூரில் உள்ள கோட்டை மீது தங்கள் நடத்தும் முயற்சியில் மருதுபாண்டியர்கள் உதவியை நாடினார். பாளையக்காரர் சிலரை ஒன்று கூட்டினார்.

கடைசி நேரத்தின் மருது சகோதாரர்களின் உதவியை கம்பெனி தடுத்:துவிட்டதால் சின்னமலையின் திட்டங்கள் தடைபட்டது.

எனினும் மனம் தளராது தனது திட்டத்தை மாற்றி திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னரே கோட்டையைத் தாக்கினார்.

கம்பெனியாரிடம் சிக்காமல் தப்பினார். பின்னர் அவர் செய்த போர்கள் மூன்று முக்கியமானதாகும். 1801-ல் காவிரிகரையில் நடைபெற்ற போர், 1802-ல் ஓடாநிலையில் நடைபெற்ற போர், 1804-ல் நடந்த அரச்சலூர் போர் ஆகிய மூன்றிலும் தீரன் சின்னமலை தீரகுடம் போரிட்டார்.

இறுதியில் அரச்சலூர் போரின்போது அவரது சமையல்காரரால் துரோகம் இழக்கப்பட்டார். அவர் சங்ககிரி கோட்டையில் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

**தமிழகத்தில் பாளையக்காரர்களின் எழுச்சி**

**முன்னுரை**

விஜயநகரப் பேரரசின் போது அறிமுகப்படுத்தப்பட்டதே பாளையக்காரர் முறை ஆகும். நாயக்கர் அரசு வீழ்ச்சிக்குப் பின்ன பாளையக்காரர் சுயவுரிமை பெற்று ஆங்காங்கே ஆட்சி செய்து வந்தனர் தமிழகம் 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவர்களுக்கு ஐரோப்பியர் வரவு சவாலாக அமைந்தது. அவர்களை எதிர்த்து இவர்கள் நடத்திய போராட்டமே சுதந்திரப் போரின் முன்னோட்டமாகும்.

**புலித்தேவர் கிளர்ச்சி**

புலித்தேவர் தொடர்நது கிழக்கிந்திய நிறுவனத்தின் அதிகாரத்தை மீறுவதால் ‘கர்னல் ஹெராஸ்’ அவரைச் சமாளிக்க வலியுறுத்தப்பட்டு திருநெல்வேலி அனுப்பபட்டார். ஹெரனால் சமாளிக்க முடியததால் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டார். புலித்தேவர் ஆங்கிலேயருடன் போராட பாளையக்காரர்களின் கூட்டமைப்பை உருவாக்கினர். சிவகிரி, எட்டயபுரம் பாஞ்சாலக்குறிச்சி தவிர மற்றவர்கள் இணைந்து கொண்டனர். களக்காடு போர், யூசுப்கானுடன் போர் ஆகியனவற்றில் புலித்தேவர் வீரத்துடன் போரிட்டார். இவருடைய படைப்பிரிவு ஒன்றின் தலைவன் ‘ஒண்டிவீரன் வீரமுடன் பேரிட்டத்தைக் கதைகப்பாடல்கள் செப்பும், யூசுப்கானின் மறைவுக்குப்பின், கேப்டன் கேம்பலால்’ புலித்தேவர் நாடு கடத்தப்பட்டு உயிர் துறந்தார்.

**வேலுநாச்சியார்.**

இராமநாதபுரம் செல்லமுத்து சேதுபதிக்கு மகளாகப் பிறந்து சிவகங்கை மன்னர் முத்து வடுகருக்கு மனைவியானார். ஆங்கிலேயாரால் கணவர் கொல்லப்பட்டபின் புலி போல் பதுங்கியிருந்து கோபால நாயக்கர், ஹைதர் அலியின் உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி வென்றார். சிவகங்கை இராணியாக தீரமுடன் அமர்ந்தார்.

**வீரபாண்டிய கட்டபொம்மன் கிளர்ச்சி**

வீரபாண்டிய கட்டபொம்மன் தந்தை மறைவிற்குப் பின் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரானார். கட்டபொம்மன் அமைதியான குணம் கொண்டவரெனக் கருதப்பட்டாலும் நாளடைவில் கிழக்கிந்திய கம்பெனிக்கும் இவருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. வரிபாக்கி உள்ளதால் கலெக்டர் ஜாகசன் இராமநாதபுரத்தில் தன்னைச் சந்திக்கக் கட்டபொம்மனுக்குக் கட்டளையிட்டார். ஆனால் ஜான்சனை சந்திக்க கட்டபொம்மனின் முயற்சிகள் பலனளிக்கவில்லை. இறுதியாக 1798 ராமநாதபுரத்தில் ஜாக்சனை சந்தித்தார். அங்கு ஏற்பட இருந்த ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் தப்பிக்க ஊமைத்துறை உதவினார். இதனைக் கவுன்சிலிடம் கட்டபொம்மன் எடுத்துரைத்தார். ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டார். இவரும் பின்னர் ஆங்கியேலருக்கு எதிராக பாளையக்காரர்களுடன் கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டார். 1799-ல் வெல்லெஸ்லி உத்தரவின்படி பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை நிகழந்தது. திருவிதாங்கூர் படையும் ஆங்கியேருடன் இணைந்து பானர்டுமன் தலைமையிலான குழு சுற்றி வளைத்தது. கட்டபொம்மன் புதுக்கோட்டைக்குத் தப்பினார். ஆனால் அங்கிருந்த சிலரால் காட்டிக் கொடுக்கப்பட்டு, நெல்லை அருகே கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கலிடப்பட்டார்.

**மருது சகோதரர்கள்**

சிவகங்கை மன்னரின் திறமையான தளபதிகளாக இருந்தர்கள் பெரிய மருது, சின்ன மருது என்படும் மருது சகோதரர்கள் ஆவர். முத்துவடுகர் இறந்தபின் வேலுநாச்சியார் அரியணை ஏற உதவியவர்கள். ஆங்கிலேயருக்கு எதிரான போராடடங்களை நடத்தியவர்கள். கட்டபொம்மன் மறைவுக்குப்பின் அவர் சகோதரர் ஊமைத்துரையுடன் இணைந்து பணியாற்றினர். 1800 ஏற்பட்ட கிளர்ச்சி இரண்டாம் பாளையக்காரர் போர் எனப்படுகிறது. இதில் கோபால நாயக்கர் மலபார் கேரள வர்மா, கிரு‘ணப்ப நாயக்கர். தூண்டாஜி ஆகியோர் கூட்டமாகச் செயல்பட்டனர்.

1801 கட்டபொம்மனின் சகோதரர்கள் ஊமைத்துரையும், செலத்தையாவும் பாளை சிறையிலிருந்து தப்பித்தனர். அவர்களுக்கு மருது சகோதரர்கள் அடைக்கலம் தந்தனர். ஆங்கிலேயர்களின் வேண்டலைப் புறக்கணித்தனர். 1801-ல் திருச்சிராப்பள்ளி பிரகடனத்தை அறிவித்தனர். தொடர்ந்து கூட்டாகப் பேராடினார். 1801 கர்நாடக ஒப்பந்தத்தின்படி னைத்து உள்;ர் தலைவர்களும் கலைக்கப்பட்டு ஆங்கிலேயரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் தமிழகம் வந்தது. கோட்டைகள் இடிக்கப்பட்டு இராணுவம் கலைக்கப்பட்டதன்வழி பாளையக்காரர் அமைப்பு முடிவுக்கு வந்தது.

**தீரன் சின்னமலை**

தீர்த்தரி என்ற தீரன் சின்னமலை போர்க்கலைகளில் வல்லவன், கொங்கு நாட்டின் ஒப்பற்ற வீரன், மைசூர் திவானுக்கு வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தைப் பறிமுதல் செய்து ஏழைகளுக்குக் கொடுத்தான். திவானிடம் சிவலைக்கு சென்னிமலைக்கும் இடையே இருக்கும் சின்னமலை தன் வரிகளைப் பறித்தான் என்று சொல்லுங்கள் என்று தீரமுடன் கூறினான். எனவே'தீரன் சின்னமலை' எனப்பட்டான். திவான் அனுப்பிய படையுடன் எதிர்த்து வென்றான். திப்புவின் மரணத்திற்குப் பிறகு ஆங்கிலேயரை எதிர்த்துப் போட்டவன். கோட்டைக்குள் இருந்து எதிர்த்துப் போரிட்டதால் 'ஓடாநிலை' போர் எனப்பட்டது. ஆங்கிலேயரின் ஆட்சியை ஏற்க மறுத்ததால் இறுதியில் சங்ககிரிக் கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

**வேலூர் கலகம்**

அரியணையை இழந்த அரசர்கள், குறுநிலை மன்னர்கள். பிறரும் வேலூரை மையமாகக் கொண்டு செயல்பட்டனர். திப்பு மகன்களின் பிரநிதிகளும் பங்கேற்றார். வேலூர் சிறைக்குள் புதிய தலைப்பாகை, துப்பாகக்கிகளின் காரணமாக புரட்சி துவங்கியது திடீரென ஒருநாள் புரட்சி வெடித்து பல ஐரோப்பியகளும் சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

**பாளையக்காரரின் நிர்வாகப் பணிகள்**

பாளையக்காரர்கள் தங்கள் ஆட்சிப் பகுதியில் ஒரு மன்னரைப் போலவெ ஆட்சி புரிந்தனர் மற்றும் மூன்று முக்கியப் பணிகளை பாளையக்காரர் புரிந்து வந்தார்.

1. சட்ட, ஒழுங்கை நிலை நாட்டி அமைதியைப் பராமரிப்பதே அவரது தலையாயப் பணி.

2. அமைதியை நிலைநாட்டுவதற்கு அவர் படை வைத்துக்கொள்ளலாம். நாயக்கர் கேட்கும் போது அவருக்கு படை கொடுத்து உதவ வேண்டும். பாளையத்தின் வருவாயைப் பொறுத்து அவரது படை உதவி அமையும். ஏசுசபைக்குரு விக்கோ என்பார் எழுதிய கடிதத்திலிருந்து எருமைக்கட்டி பாளையக்காரர் 3000 காலாட்படையும் 200 குதிரைப்படையும் 50 யானைகளையும் கொண்ட படை வைத்திருந்தார்.

3. மூன்றாவது முக்கியப் பணி நில வரி வசூல் செய்தவாகும். வசூல் செய்த தொகையில் மூன்றிலொரு பகுதியை நாயக்கருக்கு அனுப்பி விட வேண்டும்.

மற்றொரு மூன்றிலொரு பகுதியை படை பராமரிப்பிற்கும் எஞ்சிய மூன்றிலொரு பகுதியை சொந்த செலவிற்கும் வைத்துக் கொள்ளலாம்.

இவைகளைத் தவிர நீதி வழங்குதல், திருடர் பயம் நீக்குதல் ஆகிய பணிகளையும் புரிந்து வந்தார்.

**பாளையக்காரரும் காவலும்**

பாளைக்காரர்கள் இராணுவ அமைப்பினைத் தவிர "காவல்" என்றழைக்கப்பட் போலீஸ் அமைப்பும் இருந்தது. இந்தக் காவல் பணியைப் புரிபவர் தலையாரி எனப்பட்டர். கிராமங்களின் தொன்று தொட்டு காவல்காரர்கள் இருந்தனர். அவர்கள் கிராம சமூகத்தாலோ மன்னராலோ நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் கால்நடைகள், வீட்டைச் சார்ந்த பொருட்கள், அங்காடிகள், சாலைகள் போன்ற பொது இடங்களையும் பாதுகாத்தனர். ஏதாவது கொள்ளை நடந்ததென்றால் திருடப்பட்ட சொத்துக்களை மீட்பது காவல்காரன் பொறுப்பாகும். மீட்கத் தவறினால் இழப்பை ஈடு செய்ய வேண்டும். காவல்காரரின் பணிக்கு ஊதியமாக "ஸ்தலம் காவல்" என்றழைக்கப்பட்ட சம்பளம் வழங்கப்பட்டது. இது அவர்கள் பாதுகாத்த தானிய விளைச்சலின் ஒரு பகுதியாகவோ அல்லது பணமாகவோ இருக்கும்.

இந்தக் காவல் தொழில் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்ட கள்ளர் மற்றும் மறவர் இனத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது "திருடனைப் பிடிக்க திருடனைப் பயன்படுத்துதல்" என்ற கொள்கையை அடிப்படையாக் கொண்டிருந்தது.

காவல்காரர்களுள் நான்கு பிரிவுகள் இருந்தன. அவை,

1. அரசுக் காவல்காரர்கள்
2. நாடு காவல்காரர்கள் (மாவட்டம்)
3. திசைக் காவல்காரர்கள் (பிரதேசம்)
4. ஸ்தலக் காவல்காரர்கள் (கிராமம்)

பாளையக்காரர், காவல் ஆகிய இரண்டு முறைகளும் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை. பாளையக்காரர்கள் நாயக்கர்களுக்கு உதவியளித்து, வெளியார் தாக்குதல்களிலிருந்து நாட்டிற்குப் பாதுகாப்பளித்தபோது காவல்காரர்கள் உள்நாட்டு திருட்டுக் குற்றங்களிலிரந்து மக்களைப் பாதுகாத்தனர். ஆனால் காவல் பணிகளுக்கு பாளையக்காரர்தான் பொறுப்பாயிருந்தார். எனவே 'தேசக்காவல்' என்ற பெயரில் மூன்று வித மக்களை மக்களிடமிருந்து வசூலித்து வந்தனர்.

**பாளையக்காரர் முறையின் நன்மைகள்**

1. இதன் மூலம் நாயக்கர் பெரியதொரு நிலைப்படைய சேகரித்து வைக்கும் சிரமத்திலிருந்து விடுபட்டார். மேலும் ராணுவப் பளுவை இது பரவலாக்கியது.

2. அரசின் முக்கிய நிர்வாகப் பணியான சட்ட ஒழுங்கைப் பராமரித்தல் திருட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டித்தல் ஆகியவற்றில் நாயக்க அரசிற்கு உதவியாய் இருந்தனர்.

3. படை அதகாரம் பாளையக்காரர்களிடமிருந்தால் நாயக்கர் கொடுங் கோலாட்சியாளராகவே வல்லாட்சியாளராகவோ மாறும் வாய்ப்பு குறைவாக இருந்தது.

4. உள்நாட்டில் அமைதி நிலவ பேருதவி புரிந்தனர்.

5. வரி வசூல் செய்யும் பணியை பாளையக்காரர்களே மேற்கொண்டதினால் நாயக்கர் அந்த பொறுப்பிலிருந்து விடுபட்டார்.

6. நாயக்க அரசு வீழ்ச்சியுற்ற காலத்தில் மக்களுக்கும் மக்கள் சுதந்திரத்திற்கும் பாதுகாலாய் இருந்தவர்கள் பாளையங்காரர்கள் தான் பல சமயங்களில் அன்னியப் படையெடுப்பை தடுத்து நிறுத்தியவர்கள் பாளையக்காரர்கள்தான்.

7. ஆங்கில ஏகாதிபத்தியம் நாயக்கர்களையும், சேதுபதிகளையும், நவாபுகளையும் ஒப்பந்தங்கள் மூலம் வசப்படுத்தியபின் பாளையக்காரர்கள்தான் அன்னிய எதிர்ப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கினார்.

**தீமைகள்**

1. நாயக்கராட்சிக்கு வலுவூட்ட உருவாக்கப்பட்ட பாளையக்காரர் முறை அதனை வலுவிழக்கச் செய்தது. சிற்றரசர்கள் மற்றும் சுதந்திர மன்னர்கள் போல் பாளையக்காரர் செயல்படத் தொடங்கினார். நாயக்க அரசை தங்கள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் ஏகாதிபத்திய அரசு என்று கருதினர்.

2. பாளையக்காரர் வரி வசூல் முறை மிகவும் கொடுமையாக இருந்தது. படை பலத்தின் மூலம் தான் வரி வசூல் நடைபெற்றது. இவ்வளவுதான் வரி என்று நிர்ணயிக்கப்படாததால் விருப்பப்படி அதிக வரி வசூல் செய்தனர். போர்க்காலங்களில் ஐந்தில் நான்கு பங்கு வரியாக வசூல் செய்யப்பட்டது.

3. பாளையக்காரர்கள் தங்களை சிற்றரசர்களாக கருதிக் கொண்டதால் மக்களிடை தேசிய உணர்வும் தேசிய அரசும் உருவாக வழியில்லாது போயிற்று.

4. தேசிய ஒருமைப்பாட்டின் ஒட்டு மொத்த எதிரிகளாயினர்.

5. அமைதியை நிலைநாட்ட வேண்டியவர்களே அமைதியைப் கொடுத்தார்கள். இடைக்கால ஐரோப்பிய நிலமானியப் பிரபுக்களைப் போல் தங்களுக்குள்ளே சச்சரவில் தொடங்கினர்.

6. இறுதியாக, பாளையக்காரர் போர் முறைகளும் போர்க்கருவிகளும் பழங்காலத்தவை. அவர்கள் போர் முறை பெரும்பாலும் கொரில்லாப் போர் முறையாகவே இருந்தது. நவீனா போர் முறைப் பயிற்சியும் ஆயுதங்களும் பெறும் அளவிற்கு நிதி வசதியும் அவர்களிடம் இல்லை. எனவே ஐரோப்பிய படைகளின் பீரங்கிகள் முன் பாளையக்காரர்கள் கோட்டையும், படையும் தூள் தூள் ஆனது.

## 22. இந்திய விடுதலைப் பேராட்டத்தில் தமிழ்நாடு

### அறிமுகம்

விஜயநகர வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி 1792-ல் கிழக்கிந்திய கம்பெனி ஆற்காடு நவாபுடன் கர்நாடக உடன்படிக்கை செய்து கொண்டு பாளையக்காரர்களிடம் வரி வசூல் செய்யும் உரிமை பெற்றது. இதனால் ஆங்கிலேயரின் அழுத்தம் பாளையக்காரர்களுக்கு அதிகமாகும். மக்களிடம் பாளையக்காரர் மிக அதிகமான அழுத்ததுடன் அதிக அளவு வரி வசூலும் செய்தனர். வீர பாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியில் பாளையக்காரர் ஆனார். ஆங்கிலேயத் தளவதி தந்த அவமானத்துடன் மோதலாலும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடத் துணிந்தார். இறுதியில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். நெற்கட்டும் செவல் பூலித்தேவர் மீது முறையான கப்பம் கட்டதாற்குப் போர் அறிவித்தார். ஆங்கிலேயரைப் போராடி வென்றார்.

### வீரமங்கை வேலுநாச்சியாரின் வீரத்தைப் பறைசாற்றுக.

இராணி வேலுநாச்சியார் 18-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் சிவகங்கைப் பகுதியின் இராணியாகத் திகழ்ந்தவர். ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய விடுதலைப் போராட்ட வீரப் பெண்மணி. இவரே இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்ட வீராங்கனை ஆவார்.

### இளமைப்பருவம்

1730-ஆம் ஆண்டு இராமநாதபுரம் சமஸ்தானம் மன்னர் விஜயரகுநாத சேதுபதி, சக்கந்தி முத்தம்மாளுக்கு ஒரே பெண் மகவாகப் பிறந்தார். ஆண்டு வாரிசு போலவே வளர்க்கப்பட்டார். ஆயுதப் பயிற்சியும் பன்மெரிப் பயிற்சியும் பெற்றார். 1746-இல் சிவகங்கைச் சீமை மன்னர் முத்துவடுகநாதத் தேவருக்கு மனைவியானார்.

**ஆங்கியேலா் படையெடுப்பு**

ஐரோப்பியரின் படையெடுப்பால் கணவா் கொல்லப்பட்டாா். மனம் தளராத வேலுநாச்சியாா் தன் மகளுடன் தப்பித்து திண்டுக்கல் அருகே விருப்பாச்சியில் கோபால நாயக்கா் மற்றும் ஹைதா் அலியன் பாதுகாப்போடு எட்டாண்டுகாலம் புலி போல் பதுங்கியிருந்தாா்.

**படையைக் கட்டமைத்தல்**

பதுங்கியிருந்த காலத்தில் படையைக் கட்டமைத்தாா். பெண்கள் படை ஒன்றையும் உருவாக்கியிருந்தாா். 1780-ல் ஒரு படை திண்டுக்கல்லிலிருந்து சிவகங்கை நோக்கிப் புறப்பட்டது. ஹைதா் அலியிடம் தனத நிலையை உருது மொழியில் எடுத்துக்கூறி அவரிடம் படை உதவியும் பெற்றாா். 5000 குதிரை வீரா்களையுமு், 5000 போ் வீரா்களையும் பீரங்கிப்படை ஒன்றையும் அனுப்பி வைத்தாா். படை வைகை ஆற்றின் வழியில் சோழவந்தானையும் சிலைமனையும், திருப்புவனம், முத்தனேந்தல் நகரங்களையும் வென்றாா். கடைசியாக மானாமதுரை நகரத்தில் மக்களின் துணை கொண்டு அந்நிய பாரங்கியா்களை வென்றாா்.

**சிவகங்கை இராணியானாா்**

சிவகங்கையை மிண்டும் கைப்பற்றிய வேலுநாச்சியாா் மருது சகோதாரா்களின் துணையுடன் இராணயாக முடிசூடினாா். சின்னமருது நாச்சியாரின் ஆலோசகராகவும் பெரிய மருது படைத்தளபதியாகவும் நியமிக்கப்பட்டனா்.

**வேலுநாச்சியாரின் பெண்கள் படை**

வேலுநாச்சியாா், பெண்கள் படையும் உளவு அமைப்பையும் உருவாக்கினாா். அதன்வழி ஆங்கிலேயரின் வெடி மருந்துக் கிடங்குகளைக் கண்டறிந்து அழித்தனா். நாச்சியாரின் படையிலிருந்த குயிலி எனற பெண் வெடிமருந்து கிடங்கு ஒன்றை அழிக்க தன்னைத்தானே நெருப்பு வைத்துக் கொண்டு குதித்து அழித்தாா் என்றும் வரலாறு கூறுகிறது. இதன்வழி வேலுநாச்சியாரின் வீரமும் அவா் தம் பெண்கள் படையினா் வீரமும் கண்கூடாக வெளிப்பட்டது.

இவ்வாறு வேலுநாச்சியாா் என்ற பெண்ணரசி ஆங்கியேலருக்கு முதன்முதலாக தோல்வியைக் கொடுத்து வெற்றிப் பெண்ணாகவும் வீரப் பெண்மணியாகவும் திகழந்தாா்.

**மூவலூர் ராமாமிர்தம் அம்மையாரின் போராட்டம்**

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் ஒரு தமிழ்ச் சமூக சீர்திருத்தவாதி எழுத்தாள் மற்றும் திராவிட இயக்கத்தின் அரசயில் ஆர்வலர் ஆவார்.

தேவதாசிகளின் மரபில் பிறந்த இவர் அவர்களின் அவல நிலையை அம்பலப்படுத்திய இவர் 1936-ஆம் ஆண்டு 'தாசிகளின் மோசவை' அல்லது 'மதி பெற்ற மைனர்' என்ற நாவலை எழுதினார்.

இந்திய தேசிய காங்கிரசின் ஆதரவாளராக இருந்தவர். 1925-இல் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறிய பிறகு பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் உறுப்பினரானவார்.

தேவதாசி முறை ஒழிப்பிற்காக மயிலாடுதுறையில் தனது போராட்டத்தை தொடங்கினார். பின்னர் தேவதாசி ஒழிப்பு மசோதா நிறைவேறும் வரை தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார்.

பெரியாரின் மீது கருத்து வேறுபாடு கொண்டு அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்.

அறிஞர் அண்ணாவால் தமிழகத்தின் அன்னிபெசண்ட் என்று அழைக்கப்பட்டார்.

தன் வீட்டின் முன்னர் "கதர் அணிந்தவர்கள் உள்ளே வரவு' என்று எழுதி வைத்த பெருமைக்குரியவர் இவர்.

1938-ல் நடந்த மொழிப்போரில் உறையூர் முதல் சென்னை வரை 577 மைல் நடைப்பயணம் மேற்கொண்டு 57 பொதுக்கூட்டங்களில் உரையாற்றியவர்.

1989 முதல் இவர் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு ஏழைப் பெண்கள் உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கியது.

தற்போத அரசுப் பள்ளியில் படித்து உயர்க்கல்வியை அரசுக் கல்லூரிகளில் தொடரும் ஏழை மாணவியருக்கு மாதந்தோறும் உதவித்தொகை அளிக்கும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

**தமிழக சுதேசி இயக்கங்களின் செயல்பாடுகள்**

சென்னை சுதேசி சங்கம் வங்காள பிரிட்டி' இந்தியக் கழகத்தின் கிளையாகத் துவக்கப்பட்டது.

சென்னை மாகாணத்தில் மக்கள் உரிமைகளை நிலைநாட்ட மேற்கத்திய முயையில் ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு சென்னை சுதேசி சங்கம் ஆகும்.

சென்னை ஹார்லி, லட்சுமி நரத சீனிவாசனார் ஆகியோர் நிறுவினர். இச்சங்கம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் கொள்கைகளை விமர்சனம் செய்தது.

1856-ல் வருவாய்த்துறை அதிகாரிகள் செய்த சித்ரவதை பற்றி விசாரணை செய்ய வற்புறுத்தியது.

1858-ல் திருநெல்வேலியில் ஏற்பட்ட சமயக் கலவரங்களைச் சரியாகக் கையாளவில்லை என அதிகாரிகள் மீது குற்ற் சாட்டியது.

1860-ல் தஞ்சைம ன்னர் மீண்டம் பதவியில் அமர்த்த பாராளுமன்றத்திற்கு விண்ணப்பம் அளித்தது.

சுதேசி இயக்கத்தின் வட்டாரமொழியில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

1907-இல் சந்திபால் சென்னை மெரினா கடற்கரையில் உரையாற்றினார்.

மாணவர்கள் சுதேசி இயக்கத்தில் கலந்து கொண்டு 'வந்தே மாதரம்' என முழங்கினார்கள்.

1906-இல் வ.உ.சி சுதேசி நீராவிக்கப்பல் கம்பெனியை ஆரம்பித்தார்.

1908-இல் கோர மண்டல நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஜி.சுப்பிரமணியம் 'தி இந்து' மற்றும் 'சுதேசமித்திரன்' பத்திரிக்கைகளைத் தொடங்கினார்.

1908-இல் வ.உ.சியும் சிவாவும் திருநெல்வேலி கலவரத்தில் கைதாசி சிறை சென்றனர்.

திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் 'ஆ்'' என்பவரைச் சுட்டுக்கொன்று வாஞ்சிநாதனைச் சுட்டுக் கொன்றார்.

இவ்வாறாக தமிழகத்தில் கூட்டங்கள் நடத்துவது முதல் பல்வேறு செயல்பாடுகள் சங்கிலித் தொடர் போல நிகழ்ந்து ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியை ஆட்டங்காணச் செய்தன.

**தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம்**

தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம் ராஜாஜி தலைமையில் நடைபெற்றது ஊர்வலங்கள், பொதுகூட்டங்கள், மறியல்கள் நடைபெற்றன. உச்சக்கட்டப் போராட்டமாக உப்பு சத்தியாகிரகம் நடைபெற்றது.

1930 ஏப்ரல் 30 அன்று வேதாரண்யத்தில் உப்பு காய்ச்சுவதற்காக இராஜாஜி தலைமையில் நூறு தொண்டர்கள் திருச்சியிலிருந்து புறப்பட்டனர்.

சத்யாகிரகிகள் பாரதியாரின் அச்சமில்லை பாடலையும் இந்த வேதாரண்யம் யாத்திரைக்கென்றே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் புனைந்த கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது பாடலையும் பாடியவாறே நடந்து சென்றனர்.

தஞ்சை மாவட்ட ஆட்சியாராக அப்போதிருந்த எ.ஜே.தார்மன் என்பவர் இப்போராட்ட நசுக்க பல வழிகளில் முயன்றார். ஆனாலும் போராட்ட வீரர்களுக்குத் திருவையாறு, தஞ்சாவூர், கும்பகோணம் போன்ற நகரங்களில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

வேதாரண்யத்தை அடைந்து தடையை மீறி உப்புக் காய்ச்சிய ராஜாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து சர்தார் வேதரத்தினம், டாக்டர் ராஜன், திருமதி ருக்மணி லட்சுமிபதி போன்ற தலைவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர்.

திருச்சியிலிருந்து இராஜாஜி தலைமையில் உப்பு சத்தியாகிரகிகள் புறப்பட்ட அன்றே அதுதிர கேசரி பிரகாசம் தலைமையில் சென்னை நகரில் உப்புச்சத்தியாகிரகப் போராட்டம் தொடங்கப்பட்டது. போரட்டத் தொண்டர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

காந்தி 1930 மே 5-ம் தேதி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

சென்னை மாநில சட்டமன்ற நியமான உறுப்பினரான திருமதி.முத்துலெட்சுமி, காந்தி கைது செய்யப்பட்டதை கண்டித்து தனது பதவியை ராஜினாமா செய்தார்.

காந்தி கைது செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து ஆறுமாத காலத்திற்குத் தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம் தீவிரமாக நடைபெற்றது.

1932 ஜனவரி 26-ல் சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த இயக்கம் தமிழ்நாட்டில் படித்தவர்களிடம் பாமர மக்களிடமும் அரசியல் விழிப்புணர்வினை ஏற்படுத்தி தேசிய இயக்கம் வளர்ச்சியடைய உதவியது.

**1801-ல் தென்னிந்தியக் கலகம் தோன்றுவதற்கான சூழ்நிலை**

1801-ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கு எதிராகப் பாளையக்காரர்கள் குறுநிலைத் தலைவர்கள் ஒன்று தேர்ந்து மேற்கொண்ட முயற்சியினைத் தென்னிந்தியக்கலகம் (ளுழரவா ஐனெயைெ சுநடிநடடழைெ) என்று பெயரிட்டு அழைத்தனர்.

**முதல் முயற்சி**

ஆங்கிலேயருக்கு எதிராக அணி திரட்டும் முயற்சியில் முதலில் ஈடுபட்டனர். நாகலாபுரம் மன்னார் கோட்டை, பவுளி, கோலார்ட்பட்டி சின்னூல் குடி, ஏழாயிரதம் பண்ணை, கடம்குடி, குளத்தூர் முதலிய பாளையக்காரர்களும் இளவரசனூர் மறவர்களும் கட்டபொம்மன் தலைமையில் அணி திரண்டனர். ஆங்கிலேயரின் முயற்சி வெற்றி பெறவே கட்டபொம்மன் தூக்கலிடப்பட்டார். 1799-ல் நடைபெற்ற பாஞ்சாலங்குறிச்சிப் போர் தோல்வியில் முடிந்தது.

**இரண்டாம் முயற்சி**

கட்டபொம்மன் வீழ்ச்சிக்குப் பின்னர் அவருடைய தம்பிகள் செவத்தையா, ஊமைத்துரை ஆகியோரை பாஞ்சாலக்குறிச்சியிலிருந்து பாளைச் சிறைக்கு அனுப்பினார். பதினைந்து மாதங்கள் அங்கிருந்தனர். 1801-ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ஆம் நாள் ஊமைத்துரையின் ஆதரவாளர்கள் சிறையைத் தாக்கித் தங்கள் தலைவர்களை விடுதலை செய்தனர்.

எட்டையாபுரம் ஊத்து மலைப் பாளையக்காரர்கள் தவிர மற்றையத் திருநெல்வேலிப் பாளையங்கள் ஊமைத்துரையின் தலைமையில் திரண்டனர். மருபாண்டியன் 30,000 வீரர்களை ஊமைத்துரைக்குக் கொடுத்து உதவினர். தூத்துக்குடி கைப்பற்றப்பட்டது.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை ஆங்கிலேயரால் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. ஆறே நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. ஆங்கியேலர் திருவாங்கூர் மன்னன் அனுப்பிய படை உதவியுடன் படை திரட்டிக் கொண்டு காலின் மெக்காலே என்பவர் தலைமையில் மார்ச் 31-ம் நாள் பஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கினார். ஆங்கிலேயர் பின் வாங்கிட நேர்ந்தது.

**மூன்றாம் முயற்சி**

காலின் மெக்காலே ஏப்ரல் மாதம் மீண்டும் பாஞ்சாலங்குறிச்சி முற்றுகையை மேற்கொண்டார். ஐம்பத்தி மூன்று நாட்கள் மே 24-ஆம் தேதி வரை முற்றுகை நீடித்தது. தஞ்சை சரபோஜியின் ஆதரவைப் பெற செல்வத்தையா மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. புதுக்கோட்டைத் தொண்டைமானை நடுநிலை வகிக்கச் செய்யும் முயற்சிகளும் வெற்றி பெறவில்லை. சென்னை, மலபார், ஆர்க்காடு, திண்டுக்கல், திருச்சி முதலிய பகுதியிலிருந்து மெக்காலேக்கு உதவியாக ஆங்கிலேயர் படைகள் வந்தன. லெப்டினன்கர்னல் அக்கினயூ மே 22-ஆம் நாள் பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டையில் பீரங்கி கொண்டு தாக்கினார். கோட்டையில் விரிசல் ஏற்பட்டது. இருவரும் போர் செய்தனர்.

கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று. ஊமைத்துரை படுகாயங்களுடன் தப்பிச் சென்று மருது பாண்டியரிடம் கமுதியில் அடைக்கலம் பெற்றார்.

**கோபாலநாயக்கரின் முயற்சி**

விருப்பாட்சி பாளையக்காரரான கோபால நாயக்கர் திண்டுக்கல் பகுதியில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பாளையக்காரர்களை ஒன்று திரட்டினார். கள்ளர் நாட்டின் தலைவர் காலியாணித்தேவனும், பெருமாள் பிள்ளையும்கூட இந்த அணியில் சேர்ந்து கொண்டனர். திப்புச்சுல்தான் தன் தளபதி காசிகானை அனுப்பினார். கோயம்புத்தூர், சேலம் பகுதிகள் மூதூர் சின்னாள் கவுரும் காவி ஜகானும் கிளர்ச்சிக்கான ஆயுதங்களைச் செய்தனர். பண்டை நாட்டுத் தலைவர் தூண்டாஜி வாக் அவர்களுக்கு உதவியாகக் கூறினார் உதவி தக்க நேரத்தில் கிட்டவில்லை.

**ஆணைமலைப் போர்**

1800-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் நாள் கிளாச்சியாளர்கள் தான் ஜகான் தலைமையில் கோயம்புத்தூரைக் கைப்பற்ற முயற்சித்த போது ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியாளர்களைத் தாக்கி முற்றுகையை முறியடித்தனர். கிளர்ச்சியாளர் பலர் தூக்கிலிடப்பட்டனர். ஆங்கிலேயரின் அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாமல் கோபால நாயக்கர் கிளர்ச்சியைத் தீவிரமாக்கினார்.

1801 மார்ச் 17-ல் லெப்டினன் கர்னல் இன்சு திண்டுக்கல்லைத் தாக்கியபோது, கோபால நாயக்கரும் பிறதலைவர்களும் ஆனைமலைக் காடுகளுக்குள் மறைந்து கொரில்லப் போரை நடத்தினார். மே நான்காம் நாள் கோபால் நாயக்கரும் பிறதலைவர்களும் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டனர். எனினும் கோபால நாயக்கரின் மகன் முத்து வெள்ளை நாயக்கர் சிவகங்கைக்குத் தப்பி ஓடினார். அவர் ஊமைத்துரையுடன் சேர்ந்து கொண்டு கிளர்ச்சியைத் தொடர்ந்தார். கோபால நாயக்கரும் கைது செய்யப்பட்ட மற்றவர்களும் நவம்பர் தூக்கலிடப்பட்டனர்.

**மருதுபாண்டியரின் பங்கு**

மருதுபாண்டியர் வெள்ளை மருதுவும், சின்ன மருதுவும் மதுரை நாட்டுக்கள்ளர் உள்ளிட்ட பலரும் சேர்ந்து தணி திரண்டினர். மருது பாண்டியர் ஆங்கிலேயருக்கு எதிரான இறுதிப் போருக்கு அவர்களைத் தயார்படுத்தினர்.

**விடுதலை அறிக்கை**

1801-ல் பாளையங்கோட்டையில் ஆங்கிலேயர்களால் சிறைப்படுத்தப்பட்டுப் பதினைந்து மாதங்களாக வாடிக் கொண்டிருந்த ஊமைத்துரையையும் அவர்

உறவினர்களையும் விடுவிக்க மருதுபாண்டியர் உதவினர். சிறையிலிருந்து தப்பி மருதுபாண்டியரிடம் அடைக்கலம் புகுந்ததையும் கண்டோம். கமுதியில் ஊமைத்துரையை வரவேற்றுத் தன் சிறு வயல் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். 1801 ஜுன் மாதம் விடுதலை அறிக்கை ஒன்றை மருதுபாண்டியர் வெளியிட்டனர். இந்த அறிக்கை அனைத்து மக்களையும் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழும்படி கேட்டுக்கொண்டது திருச்சி, திருவரங்கத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

**காளையார் கோயில் போர் 1801**

ஊமைத்துரையைத் தங்களிடம் ஒப்படைக்காததைத் காரணம் காட்டி சிவகங்கையின் மீது ஆங்கிலேயர் படையெடுத்தனர். அக்னியூ 1801 ஜுன் 7-ஆம் நான் திருப்பாச்சேத்தியில் முகாமிட்டார். ஆங்கிலப்படை இராமநாதபுரம் செல்லும் வழியில் தாக்குதலுக்குள்ளாயிற்று.

எதிர்ப்பின் கடுமையின் விளைவால் ஆங்கிலேயர் திருச்சி, திருவாங்கூர், புதுக்கோட்டை, இலங்கை முதலிய இடங்களிலிருந்தும் படையைக் கொண்டு வந்து குவித்தனர். உடையத் தேவர் என்பவரை ஆங்கிலேயர் சிவகங்கை மன்னராக்கிப் பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டனர்.

1801-ஆம் ஆண்டு 30-ம் நாள் சிறுவயலை ஆங்கிலேயர் கைப்பற்றினர். அக்டோபரில் காளையார் கோவில் வீழ்ந்தது. காளையார் கேரிவல் வீழ்ந்ததும் ஊமைத்துரை விருப்பாட்சி காடுகளுக்குச் சென்று போரைத் தொடர்ந்தார். வத்தலகுண்டில் அக்டோபர் 21-ஆம் நாள் ஆங்கிலேயர்கள் ஊமைத்துரையைக் கைது செய்து நவம்பர் 16-ல் தூக்கிலிட்டனர்.

சிங்கம்புணரி காடுகளில் ஓடித் தப்பித்த மருதுபாண்டியர் சோழபுரத்தில் கைதாயினர். அக்டோபர் 24-ஆம் நாள் திருப்பத்தூர்க் கோட்டையில் வெள்ளை மருதுவும், சின்னமருதுவ் பிறதலைவர்களும் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டனர். மருதுபாண்டியரின் மகன் துரைசாி உட்பட 13 தலைவர்கள் நாடு கடத்தப்பட்டனர். “ஏராளமான உயிர்களைப் பலி கொண்ட சோதனைகள் மிகுந்த போர் முடிவுக்கு வந்தது” என் வெல்ஸ் பவம்ஸ் குறிப்பிட்டார்.

1801-ல் தென்னகம் விடுதலைப் போருக்கு ஒருங்கிணைந்த முதல் முயற்சியினைக் காட்டியது என்று கருதப்படுகிறது.

**கிளர்ச்சியின் தோல்விக்குக் காரணங்கள்**

1. இக்கிளர்ச்சியின் தோல்விக்குக் காரணங்களில் முதலாவது காரணம் ஆற்றல், திறமைமிக்க தலைவர் இல்லாமையே, ஆங்கிலேயர்களிடையே மிக்கத் திறமையான பானர்மென், அக்னியூ இன்சு முதலானவர்கள் இந்தனர்.
2. கிளர்ச்சியாளர்களிடையே ஒற்றுமையில்லை. ஒன்று கூடித் திட்டமிட்டு ஒரே நேரத்தில் செயல்படவில்லை.
3. இக்கிளர்ச்சியில் தமிழகம் முழுவதும் பங்கேற்கவில்லை. சென்னை, செங்கற்பட்டு, ஆர்க்காடு முதலிய மாவட்டங்களின் கிளர்ச்சி சிறிதளவும் இல்லை. திருநெல்வேலி, இராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய மாவடடங்களிலும், கோயம்புத்தூரின் சில பகுதிகளிலுமே கிளர்ச்சிகள் நடைபெற்றன.
4. எட்டயபுரம், ஊத்துமலைப் பாளையக்காரர்கள் கிளர்ச்சிகாரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு விசுவாசமாயிருந்தனர். கிளர்ச்சிகாரர்களுக்கு நேர்ந்த கதி மற்றவர்களைக் கலக்கமுறச் செய்தது.
5. கிளர்ச்சியாளர்களுக்கு ஆர்க்காட்டு நவாபு, இராமநாதபுரம் அரசர், திருவிதாங்கூர் மன்னர், தஞ்சை மராட்டிய மன்னர் ஆகியோரின் வழிகாட்டல், ஆதரவு எதுவும் இல்லை.
6. கிளர்ச்சியாளர்களுக்கு மக்களின் ஆதரவும் முழுமையாக இல்லை. பொருள் வேண்டி மக்களைக் கொடுமை செய்ததே காரணம்.
7. ஆங்கியேலர் வலிமைமிக்க பேர்க்கருவிகள் கொண்டிருந்தனர். தேவைப்பட்ட போது வேறு இடங்களில் இருந்தெல்லாம் படையைத் திரட்டிக் கொண்டனர்.
8. கிளர்ச்சியின் பங்கெடுப்பவர்கள் முறையான பயிற்சி பெற்ற படைமறவர்கள் அல்லர், மைசூர், தஞ்சை, மதுரை அரசுகள் செயலிழந்தால் வேலை இழந்தவர்கள் பங்கேற்றது இதற்கு எடுத்துக்காட்டு.
9. இந்திய நாட்டைக் கைப்பற்றியே தீருவது என்ற முடிவிற்கு வந்த ஆங்கிலேயர் எந்தவிதமான வழியையும் கையாளத் தயாராயிருந்தனர்.
10. புதுக்கோட்டைத் தொண்டைமான் துரோகம் செய்தார். புரட்சிக்காரர்களைக் கைது செய்து ஒப்படைத்தார்.

இதுபோன்ற காரணங்களால் புரட்சி தோற்றது, முதல் தெனந்தியக் கலகம் தோல்வியில் முடிந்தது.

2. வேலூர்ப் புரட்சி பற்றி விளக்க வரைக

புரட்சிக்காரர்களின் பாசறையாக வேலூர் மாறியதன் விளைவாக உருவானதுதான் வேலூர் புரட்சி. கன்னட நாட்டிலிருந்த 3000 கிளர்ச்சிக்காரர்கள் வேலூரை மையமாகக் கொண்டனர். வேலூரில் ஆங்கிலேயரின் ஆறுபடை பிரிவினர் 1801-ஆம் ஆண்டு புரட்சிக்குப்பின். அங்கு புரட்சியை ஒடுக்கப்பெற்ற பின்னர் திரட்டப் பெற்றனர். இந்த சிப்பாய்களும், கன்னடப்படை வீரர்களும் வேலூரில் சந்தித்து தங்கள் திட்டங்களைத் தீட்டினர்.

திருநெல்வேலியில் திரட்டப்பெற்ற படைவீரர்களை வேலூரில் ஆங்கிலேயர் கொண்டு போய் வைத்தனர். இவர்கள் ஒன்று சேர்ந்து திப்புசுல்தானின் மக்களுடன் சேர்ந்து திட்டம் தீட்டினர். தங்களுக்குள் வெற்றிலை மாற்றித் தங்கள் எண்ணத்தை நிறைவேற்ற விழைந்தனர்.

**புரட்சிக் காரணங்கள்**

1. புரட்சிக்குத் திட்டம் வகுத்த வேளையில் படைப்பிரிவினருக்கு ஆங்கியேலர் சில கட்டுபாடுகளை விதித்தனர். எதிர்ப்பிற்குரிய வாய்ப்பினை ஆங்கியேலர் உருவாக்கினர்.
2. ஆங்கிலேயப் படையிலிருந்து சிப்பாயங்களில் நிலை மகிழச்சி நிரம்பியதாக இல்லை.
3. ஐரோப்பிய அதிகாரிகளின் கெடிபிடி அதிகமாக இருந்தது.
4. படைவீரருக்குக் குறைந்த ஊதியம் கிட்டியது.
5. ஐரோப்பியர் இந்தியர் ஆகியோர் உடைகளில் சீரான அமைப்பு எதுமில்லை.
6. 1805-ல் பதவிற்ேற ஜான் கிரடாக் சிப்பாய்களின் நடை, உடை, தோற்றம் முதலியவற்றில் மாறுதல்களைக் கொண்டு வரச் சொன்ன அரசின் ஒப்புதலைப் பெற்றார். அதன்படி சிப்பாய்கள் புதிய தலைப்பாகை அணிய வேண்டும். மீசையை எடுத்துவிட வேண்டும். சாதி வேற்றுமை காட்டுகின்ற அணிகலன்கள் அணிதல் கூடாது. புதிய விதிமுறைகள் ஏற்கெனவே நிறைவு கொண்டிராத சிப்பாய்களுக்கு ஐயத்தை உருவாயிற்று.
7. திருப்புவின் ஆதரவாளர்கள் புதிய தலைப்பாகை சிப்பாய்களை கிறிஸ்துவர்களாக்கி விம் என்று கருதினர். இந்தியரின் பண்பாட்டைச் சிதைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்றும் கருதினர்.

**தோற்றம்**

புதிய தலைப்பாகை 1806 மே மாதம் 6-ஆம் தேதி வேலூர் வந்தது. அதை அணிய வேண்டும் என்ற தளபதி அக்னியூ வற்புறுத்தினார். பதினான்காவது இந்தியப் படையினர் மறுக்காமல் அணிந்திட வற்புறுத்தினர். நான்காவது பிரிவைச் சேர்ந்தவர்கள் துண்டைக் காட்டிக் கொண்டு படைப்பயிற்சியில் கலந்து கொண்டதாலும் துப்பாக்கி எடுக்க மறுத்தாலும் கைது செய்யப்பட்டனர். சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டு ஆணை மீறல் குற்றத்திற்காக 900 சவுக்கடிகள் பெற்றனர். மன்னிப்புக் கேட்டவர் தண்டனையிலிருந்து தப்பினார்.

போக்கு

வரலாஜாபத்திலிருந்து சிப்பாய்களும் தலைப்பாகை அணி மறுத்தனர் எதிர்ப்பு பெருகியது.

இந்து முஸ்லீம் பண்டிதர்களை வாணிக குழுவின் அலுவலர்கள் கலந்தனர். எனவே சென்னை ஆளுநராக அப்போது விளங்கிய வில்லியம் பென்டிங் கட்டுப்பாட்டிற்கு வரா படைவீரர்கள் மீது நடவடிக்கை எடுக்க விரும்பிய படை விதிமுறைகளை மீறுவோர் கடும் தண்டனைக்குள்ளாவர் என்று சுற்றறிக்கை வெளியிட்டார். தண்டனைக்கு அஞ்சி சிப்பாய்கள் அடங்கினர்.

புரட்சிக்கு வில்லிய் பெண்டிங் பிரபுவின் திருவாகச் சீர்திருத்தங்களும் காரணமாக அமைத்தன. வருவாய்த் துறையிலும் நீதித் துறையிலும் சீர்திருத்தங்கள் பல செய்திருந்தார்.

வெல்லெஸ்லி பிரபுவின் நாடு பிடிக்கும் கொள்கைகளை இந்திய அரசு மரபினர் வெறுத்தனர். திப்புசுல்தான் 1799-ல் 4-ஆம் மைசூர்ப் போரில் மறைந்ததும் அவருடைய 12 புதல்வர்களும், புதல்விகளும், உறவினர்களும் வேலூரில் பழைய நவாபுகளின் அரண்மனையில் கைதிகளாக வைக்கப்பெற்றனர்.

முஸ்லீம்களில் ஆங்கிலேயரின் கொள்கைகளால் பதவியிழந்தவர்கள் இந்த நிலையை தங்களுக்கு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள விழைந்தனர். தென்னிந்திய மக்களின் ஆதரவினைப் பெற்று திப்புவின் வாரிசுகளை மீண்டும் அரியணையில் அமர்த்தக் கனவு கண்டனர். இசுலாமியர்கள் ஷேக் ஆதம், ஷேக் உசேன் ஆகியோர் தலைமையில் குமாரன் மீது சத்தியம் செய்து புரட்சிக்கு ஆயத்தமானார்கள்.

முஸ்தபா பெக் என்பவன் சூழ்ச்சி உருவாதை ஆங்கிலேயரிடத்து அறிவித்தான். எனினும் வெற்றி மமதையில் அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

**புரட்சி**

புரட்சியை என்று, எப்படி நடத்துவது என்று திட்டம் தீட்டினர். தேதியும் குறிக்கப்பெற்றது. 1806-ல் ஜூலை 10-ஆம் நாள் புரட்சி செய்து வேலூர்க் கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் என்று முடிவு செய்தனர். அதிகாலை இரண்டு மணிக்கு படையினருக்கு அடையாளத் தகலவ் கொடுத்தனர். 64-வது படை பிரிவினைக் சூழ்ந்து தாக்கினார். எங்கும் துப்பாக்கி வெடி கேட்டது. பலர் பதுங்கினர் பெண்கள் குழந்தைகளை விட்டு ஆங்கிலேயரைச் சாய்த்தனர் கோட்டை பிடிப்பட்டது திப்புவின் புதல்வர் மூயிஸ் உத்தீன் தலைமைப் பொறுப்பேற்றுப் படை வீரருக்கு இரட்டை ஊதியம் என்று அறிவித்துக் கோட்டையில் திப்புவின் கொடியே ஏற்றினார்.

**தோல்வி**

இச்செய்தி ஆர்க்காட்டிலிருந்து ஆங்கிலேயரின் முகாமிற்கு எட்டியதும் விரைந்து வந்தனர். ஜில்லெஸபி பெரும் படையுடன் கோட்டைய வாயினுள் புகுந்தார். இரு பிரிவினரும் மோதப் போர் ஏற்பட்டது. கோட்டையை ஆங்கிலேயர் மீட்டனர். காலை இரண்டு மணிக்கு இழந்த கோட்டையை ஆங்கிலேயர் எட்டுமணி நேரத்தில் கைப்பற்றினர். ஜூலை 10-ஆம் நாள் 10 மணிக்கு மீண்டும் வேலூர் ஆங்கிலேயர் வசமாயிற்று திப்புவின் மக்கள் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு கல்கத்தாவிற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

**மதிப்பீடு**

ஆங்கிலேய ஆட்சியாளர் இப்புரட்சி குறித்து வேறுபாடான கருத்துகள் கொண்டிருந்தனர். சென்னை ஆளுநர் வில்லிம் பெண்டிங் விசாரணை நடத்திக் தலைப்பாகை இந்துச் சமயத்திற்கோ இசுலாமியச் சமயத்திற்கோ மாறுபட்ட கொள்கையினைதக் கொண்டதன்று என்று கண்டார்.

ஹார்கோர்ட், ஜில்லெஸ்பி, கென்னடி, மன்றோ முதலானவர்கள் அடங்கிய விசாரணைக் குழுவும் புரட்சிக் சீர்த்திருத்தங்கள் காரணமன்று என்று அறிவித்தது. திப்புவின் மக்களும் அவர் தம் உறவினர்களுமே காரணம் என்று கூறியது. மேஜர் ஜெனரல் பேட்டர் சீர்திருத்தங்களும், திப்புவின் குடும்த்தவர் செல்வாக்கும் காரணமாக அமைந்தன என்று கூறினர்.

1806 அனுப்பிய அறிக்கையில் கிரடாக் இயக்குநர் குழுவிடம் ஆடைச் சீர்திருத்தத்தை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு புரட்சி செய்தனரே தவிர உண்மையான காரணம் இசுலாமிய ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதே என்று குறிப்பிட்டார்.

இருப்பினும் எஸ்காட், மால்கோக், ஜான் மற்றோ முதலானவர்கள் கொண்ட விசாரணைக்குழு 1857-ல் படைவீரர் இசுலாமியர் ஆட்சியை நிறுவ முயன்ற புரட்சி செய்தனர். என்னும் கூற்றுப் போதுமான அடிப்படையினைக் கொண்டதன்று என்று முடிவு செய்தனர்.

இவ்வாறான மாறுபட்ட கருத்துக்களால் பெண்டிங்கும், கிராடக்கும் பதவி நீக்கம் செய்யப் பெற்றனர். அவ்வளவு பெரிய புரட்சிக்கு ஆடை மாறுதல் என்பது புரட்சியை இழிவுப்படுத்துவதாகும் 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆதிக்கத்தை அகற்ற முயன்ற பெருமுயற்சி ஒன்று வீணாய்ப் போயிற்று.

**விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் பங்கு**

இந்திய விடுதலைப் போரைக் காந்தியடிகளின் விடுதலைக்கு முந்தியகாலம், காந்தியடிகளின் காலம் என இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

**காங்கிரசுக்கு முன்**

காங்கிரசுக்கு முன் சென்னையில் பிப்ரவரி 26, 1852-ல் சென்னை சுதேசி சங்கம் என்னும் அமைப்பு மக்களின் குறகைளை அரசுக்கு அறிவிக்க உருவாயிற்று. இதற்குக் காரணமானவர்கள் கஜுலா லட்சுமி நாகசெட்டி ஜி சுப்பிரமணிய அய்யர், எம் விஜயராகவாச்சாரியார் முதலானவர்களை குறிப்பிடலாம்.

1868-ல் லட்சுமி நாகசெட்டி இறந்துவிடவே, அவருக்கு பின் செயல்படாது நின்ற சென்னை சுதேசிய சங்கத்தை ஜி.சுப்பிரமணியமும் விஜயராகவாச்சாரியாரும் உயிர்ப்பித்தனர். 1884-ல் சென்னை சுதேசியக் சங்கம் செ்னனை மகாஜன சபாவுடன் இணைக்கப் பெற்றது.

**காங்கிரசுக்குப் பின்**

1885 முதல் 1905 வரை காங்கிரசு மாநாடுகள் கூட்டப்பட்டு விண்ணப்பம் வாயிலாக அரசுக்குக் கோரிக்கை விடுத்து வந்தனர். 1887-ல் சென்னையில் அகில இந்திய காங்கிரசு மாநாடு கூடியது 1885-ல் கூடிய முதல் காங்கிரசுக்கு சென்ற 72 உறுப்பினர்களில் சென்னை மாநிலத்தவர் 21 பேர் முதல் காங்கிரசு மாநாட்டில் முதல் தீர்மானத்தை முன் மொழிந்தவர் ஜி.சுப்பிரமணியய்யர்.

1887-ல் கூடிய சென்னை மாநாடு ஆயிரம் விளக்கில் கூடியது தலைவர் பக்ருதீன் தாயப்ஜி இம்மாநாட்டில் தமிழ்மொழியிலும் மேடையில் பேசினார்.

**1919 வரை தமிழகத்தில் இயக்கங்கள்**

1905ல் கர்சனின் வங்கப் பிரிவினையின் விளைவாகப் புரட்சி இயக்கம் சுதேசி

சிதம்பரம், அரிகரன் முதலானோர் தண்டனை அடைந்தனர். திருநெல்வெலிச் சதி வழக்கு என இது அழைக்கப்பட்டது. இவ்வழக்கில் தொடர்புடைய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவரை மலேசியா அனுப்பி வைத்தார். இரகசியமாக அன்று மாடசாமி மலேசியா சென்றவர் என்னவானார் எனத் தெரியவில்லை.

நீலகண்ட பிரம்மச்சாரி 1916-ஆண்டு சிறையிலிருந்து வெளியேறினார். நீலகண்டர் தொடர்ந்து தீவிரவாதக் கொள்கையில் ஈடுபாடு கொண்டார். அரசைக் கவிழக்கப் புரட்சி செய்தார் எனப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். 17 ஆண்டுகள் சிறையிலிரந்து 1930-ல் விடுதலையானதும் ஒங்கார சுவாமிகள் என்று மாறினார். புரட்சி இயக்க வரலாற்றில் குறப்பிடத்தக்கவர் செண்பகராமன் பிள்ளை 1934-ல் மறைந்தார்.

**தன்னாட்சி இயக்கம்**

1916-ல் பூனாவில் ஏப்ரல் 23-ஆம் தேதி திலகர் ஹோம்லே லீக் என்னும் அமைப்பினைத் தொடங்கியிருந்தார். அதே ஆண்டில் சென்னையில் அன்னபெசன்ட் அம்மையார் அகில இந்திய ஹோம்ரூல் லீக் அல்லது அகிய இந்தியத் தன்னாட்சி இயக்கத்தினைத் தொடங்கியருந்தார். ‘பாரதம் ஒரு நாடே’ என்று உலகம் ஒப்புக்கொள்ளும் முறையில் பாரத நாட்டை அம்மையார் பயன்படுத்தினார் என்று திரு.வி.க கூறினார். அம்மையாரின் பத்திரிக்கை பிணையத் தொகையினை அரசு பறிமுதல் செய்தது. அம்மையார், கைது செய்யப்பட்டு நீலகிரியில் பாதுகாப்புக் கைதியாக வைத்து 1917 ஆகஸ்டில் விடுதலையானார். 1917-ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரசு அமைப்பின் தலைவியானார்.

**ஒத்துழையாமை இயக்கம்**

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் சென்னையில் பிறந்தது. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத் கொள்கையில் ஈடுபாடு காட்டி அண்ணலின் அடிச்சுவட்டில் நடந்த தவைலர்களில் தந்தை பெரியார் குறிப்பிடத்தக்கவர். ஒத்துழையாமைக் கொள்கைக்காக வழக்குமன்றம் சென்று தனக்கு வர வேண்டிய தொகைக்கு வழக்குத் தொடுக்கவில்லை. மக்கள் இறக்ககூடாது என்பதற்காகத் தென்னை மரங்களை வெட்டித் தள்ளியவர் அவர்கள் குடும்பமே விடுதலைப் போரில் பங்கேற்றது.

**சுயராஜ்ஜிய கட்சி**

மோதிலால் நேரு தாசு முதலானவர்களின் அடிச்சுவட்டில் தமிழ்நாட்டில் சட்டமன்ற நுழைவை வலியுறுத்திய சுயராஜ்ஜியக் கட்சியினர் சீனிவாச அய்யங்கார் சத்தியமூர்த்தி, விஜயராகவாச்சாரியார் ஆவர். பெரியாரும் இராஜாஜியும் காந்தியடிகளின் கொள்கையான ஒத்துழையாமைக் கொள்கையுடன் உறுதியாக நின்றனர்.

**நீலன் சிலை நீக்கப் போராட்டம்**

விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீலன் சிலை நீக்கப் போராட்டம் குறிப்பிடத்தக்கது. கொடுங்கோலன் சிலையைத் தகர்த்தெறிய வேண்டும் என்று என்.கே.திருமலாச்சாரியார் முதலில் அறிக்கை வெளியிட்டார். அதன்பின் சோமயஜூலு. திருமங்கலம் நித்தியான்நதம் அடிகள் வெங்கட்ராமன், சிதம்பரபாரதி. சேலம், சுப்ரமணியம், விருதுநகர் முத்துச்சாமி முதலானோர் முயன்றனர். முகம்மதுசாலி கப்பராயலு ஆகியோர் ஆறுமாதம் சிறைத்தண்டனை பெற்றனர். நீலன் சிலையகற்றும் போராட்டத்தை விறுவிறுப்புடையதாக ஆக்கியவர்களில் சாமிநாத முதலியார் இலட்சுமணசாமி முதலியார் சோமயாஜூலு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் கடலூர் அஞ்சலை அம்மாள் குடும்பம் முழுவதுமே சிறை சென்றது.

**ஆயுதமேந்தும் போராட்டம்**

லிட்டனின் ஆயுதத் தடைச் சட்டத்தை மீறுவதன் பொருட்டுத் தமிழகத்தில் வாளேத்தும் போராட்டம் ஒன்று 1927 ஜூன் 16ல் நடைபெற்றது. மதுரையில் சோமயாஜூனு தலைமயில் நடந்தது இப்போராட்டம்.

**உப்பு அறப்போர்**

1930-ஆம் ஆண்டு தண்டியல் உப்பு அறப்போர் நடத்தியதைப் போன்றே இராஜாஜியின் தலைமையில் வேதாரண்யம் உப்பு அறப்போர் நடைபெற்றது. 100 தொண்டார்களைச் சேர்த்துக் கொண்டு 1930 ஏப்ரல் 13-ஆம் நாள் இராஜாஜி திருச்சியிலிருந்து பயணத்தைத் தொடங்கினார். 'வந்தே மாதரம்''ஜெய ஜெய பாரத்' ஆகிய பாரதியின் பாடல்களையும் 'கத்தியின்றி இரத்தமின்றி' என்ற நாமக்கல் கவிஞர் பாடல்களையும் பாடிக்கொண்டு சென்றனர். திருச்சியிலிருந்து உணவு வழங்கினர். இராஜாஜி, சந்தானம், காமராஜ் மட்டப் பாறை வெங்கடராமய்யர், இளையாழ்வார், ஜி.இராமச்சந்திரன் சர்தார், வேதவரத்தின் பிள்ளை, ஏ.என்.சிவராமன், மதுரை வைத்தியநாதர் முதலானோர் புளியூ விளாரினால் அடிக்கப்பட்டுச் சிறை தண்டனை பெற்றனர்

**மீண்டும் ஒத்துழையாமை**

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் 1930-க்குப் பின்னர் மீண்டும் தமிழகத்தில் நடைபெற்றது. பெண்கள் பலர் இவ்வியக்கத்தில் கலந்து கொண்டனர். ஆடவர் அரசுடன் ஒத்துழைக்க மறுத்தனர். அன்னியத் துணி எரிப்பு, கள்ளுக்கடை மறியல் முதலியன நடைபெற்றது.

**திருப்பூர்க் குமரன்**

1932-ல் திருப்பூரில் காந்தியடிகள் கைது ஆனதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நிகழ்வற்ற நிகழ்ச்சிகள் வரலாற்றுச் சிறப்புடையன ஜுன் 10-ம் தேதி அறப்போருக்குத் தலைமை தாங்கியவர் லெட்சுமி அம்மாள் புதல்வர் சுந்தரம் கலந்து கொண்ட பத்துப்பேரில் நாச்சிமுத்து கருபப்பாயியின் புதல்வர் குமாரசாமியும் ஒருநாள் காவலர்களால் தாக்கப்பட்ட போதும் கொடியை கவிடாமல் 'வந்தே மாதரம்' என்றே முழங்கியது அவர் வாய். குமரன், இராமன், சுந்தரம் ஆகிய மூவரும் காவல் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர். கொடிகாத்த குமாரன் என்று பெயர் பெற்றார் குமாரசாமி.

**கோட்டையில் கொடி**

இதே ஆண்டில் புனித ஜார்ஜ் கோட்டையில் வானொலி நிலையத்திற்காக அமைக்கப்பெற்ற உயரமான கோபுரத்தின் மீது ஜனவரி 26, 1932-ல் ஒருவருத் அறியா வண்ணம் தேசியக் கொடியாம் மூவர்ணக் கொடியைப் பறக்கவிட்டார். பர்'யம். சென்னைச் சதி வழக்கில் ஈடுபட்டு முகந்தலால் சார்க்கார், எஸ்.இரங்கராஜன் முதலனாவர்கள் கடுங்காவல் தண்டனை பெற்றனர். வீரசவர்க்கரின் எரிமலையைத் தமிழில் மொழி பெயர்த்தார் சௌந்தரம் இராமச்சந்திரன் 1932-33-ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கைதாயினர்.

**1933-ஆம் ஆண்டுச் சட்டம்**

1935-ஆம் ஆண்டுச் சட்டப்படி 1937-ல் நடைபெற்ற தேர்தலில் பங்கேற்ற சென்னை மாநிலக் காங்கிரசு வெற்றி பெற்று ஆட்சி அமைத்து இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் இருந்து 1939-ல் இரண்டாம் உலகப் பெரும் போரில் இந்தியர்களைக் கேட்காமல் ஈடுபடுத்தியதைக் கண்டித்து நாடு முழுவதும் அமைச்சரவை பதவி விலகினர். எனவே சென்னையில் இராஜாஜி அமைச்சரவையும் பதவி விலகியது.

**தனிநபர் அறப்போர்**

காந்தியடிகள் 1940-ல் தனிநபர் அறப்போரினை அறிவித்தபோது தமிழகமும் இதில் பங்கேற்றது. தினமும் தனிநபராக நின்று அரசு அலுவலகம் முன் என்ன காரணத்திற்காக இந்த அறப்போரில் பங்கேற்கிறோம் என்று முன்னரே அறிவித்து இதில் பங்கேற்றனர் பலரும் இப்போரில் பங்கேற்றுத் தனிநபர் அறப்போருக்கு வலுவூட்டினர்.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8-ஆம் நாள் 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்று இரவே தலைவர்கள் கைது செய்யப்பட்டு

வழிகாட்ட ஆள் இன்மையால் மக்கள் பொதுச் சொத்துக்களுக்கு தீ வைத்தல், தண்டவாளத்தைப் பெயர்த்தல், தந்திக் கம்பங்களை அறுத்தல் முதலிய வன்செயல்களில் ஈடுபட்டனர். மில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். கோவையிலும் சிங்காநல்லூர் வட்டாரத்திலும விமான நிலையத்தைத் தாக்கினர். நெல்லை மாவட்ட உப்பளத் தொழிலாளிலிருந்து சென்னை ஆலைத் தொழிலாளர் வரை இப்போரில் கலந்தனர். சீர்காழியில் பாலம் தகர்க்கப்பட்டது. இராஜாஜி காங்கிரசை விட்டு வெளியேறியிருந்ததையால் அவரை தவிர மற்றைய தலைவர்கள் கைது செய்யப்பட்டு வெளிமாநிலம் கொண்டு செல்லப்பட்டனர்.

அரசு, ஆகஸ்டு புரட்சியில் ஈடுபட்டவர்களைத் தோய்ந்த துபைப்பத்தால் அடித்து கழுதை மீது ஏற்றி நிர்வாணமாக்கி மிளகாய்த்பொடி தூவிப் கொடுமை செய்தது. இப்புரட்சியின் போது 600 தடவைகளுக்கு மேல் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. குலசேகரபட்டினம் சதிவழக்கு என்னும் வழக்கு லோன் துரை என்பவரைச் சுட்டதற்காக நடைபெற்றது. காசிராஜன் இராஜகோபால் ஆகிய தூக்கு இருவரும் மேடை வரை சென்று இராஜாஜியின் முயற்சியால் விடுதலை ஆயினர்.

**பொதுப்பணி முடக்கப் போராட்டம்**

1932-ல் கைதான் பலரும் 1945 வழக்கில் விடுலையாயினர். தென் இந்திய ரயில்வே தொழிலாளர் நாடு முழுவதும் பணி முடக்கம் செய்தனர். ஆங்கிலேய அரசு அடக்குமுறையைக் கையாண்டது. காங்கிரசு இயக்கத்தவர் பலர் நேதாஜியின் தலைமையில் பிரிந்தனர். அவர்களில் பசும்பொன் முத்துராமலிங்கனாரும் ஒருவர்.

1945-ல் உலகப்போர் முடிந்தவுனட் இங்கிலாந்தில் தொழில் கட்சி அமைச்சரவை பதவியேற்றது. விடுலைச் சூரியனின் வெளிச்சம் மெல்லப் பரவியது 1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் அடிமை இருள் இந்திய நாட்டிற்கு அகன்றபோது தமிழகத்திலும் அகன்றது.

5 மதிபெண் வினாக்கள்

1. ஐரோப்பியர்களின் இந்திய வருக்கைக்கான காலணங்கள் யாவை?
2. மைசூர் போர் பற்றி எழுது
3. டச்சுக்காரர்கள் டேனிஸ்காரரர்கள் குறிப்பு வரைக
4. பிரெஞ்ச் கிழக்கிந்திய நிறுவனத்தின் இந்திய குடியேற்றததை எழுது
5. ப்ளாசி போர் குறித்து குறிப்பு வரைக
6. பாளையக்காரர் பற்றி சிறுகுறிப்பு வரைக

8 மதிபெண் வினாக்கள்

1. தமிழகத்தில் பாளையக்காரர்களின் எழுச்சி குறித்து விவரி

2. கர்நாடகப் போர்கள் விவரித்து எழுது
3. ஆங்கிலேய ஆட்சி முறையில் கல்வித்துறையில் ஏறபட்ட மாற்றங்களை விவரி
4. டேனிஸ்காரர்களுக்கான பொன்னோலை ஒப்பந்தத்தை எழுது
5. பாளையக்காரர்களின் நிர்வாகப் பணிகள் பற்றி விவரி
6. விடுதலைப் போராட்டத்திற்காக தமிழகத்தில் பாடுபட்டவர்கள் பற்றி விவரித்து எழுது

## அலகு-4

## விடுதலைக்குப்பின் தமிழ்நாட்டு வரலாறு

### 23.மொழிப் போராட்டம்

**அறிமுகம்**

மொழிப்போராட்டம் என்பது மொழிக்காகக் குரல் கொடுப்பது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலக அளவில் பல நாடுகளிலும் நடந்திருக்கிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை ஐரோப்பிய நாடுகளில் ஒருவர் கிறிஸ்துவப் பதிரியாராக வேண்டுமென்றால் லத்தீன மொழியில் தான் பைபிளைப் படிக்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் விக்ளிப் என்பவர், எனது தாய்மொழியான ஆங்கிலத்தில்தான் பைபிளைப் படிப்பேன், லத்தீன் மொழியில் படிக்க மாட்டேன் என்று மறுத்த காரணத்தால் அன்றைய இங்கிலாந்தின் சட்டத்தின்படி சாட்டையால் பலமுறை அடிக்கப்பட்டார். அதனால் ஏற்பட்ட நோயின் காரணமாக அவர் மரணமடைந்தார். சில ஆண்டுகள் கழித்து இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் அவர் படம் திறக்கப்பட்டு “தாய்மொழிக்காக உயிர் நீத்த தனயன்” என்று அவர் போற்றப்பட்டார்.

அதைப்போல் செங்கோஸ்லோவியா நாட்டில் “பைபிளை லத்தீன் மொழியில் படிக்க மாட்டேன், என்னுடைய தாய்மொழியான செக் மொழியில் தான் படிப்பேன். லத்தீன் மொழியில் படித்தால்தான் இறைவனுடைய அருள் கிடைக்குமென்றால் அத்தகைய அருள் எனக்குத் தேவையில்லை” என்று முழக்கமிட்டார் ஜான்கஸ். இவர் கூறியதைக் கேட்டுக் கொதிப்படைந்த பாதிரியார்களின் சூழ்ச்சியில் உயிரோடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டார் ஜான்கஸ். அதன்பின் அவர் பிறந்தநாளை செக் மொழிக்காக உயிர்விட்ட தியாகியின் பிறந்தநாள் என்று அரசாங்கமே அவர் புகழைப் போற்றி வருகிறது.

துருக்கி நாட்டு அதிபரான முஸ்தபா கமால் பாட்சா பொறுப்பேற்றபோது துருக்கி மொழியில் ஏராளமான அரபிச் சொற்களும் பாரசீகச் சொற்களும் கலந்திருப்பதைக் கண்டு கோபமுற்றார். அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு தூய துருக்கி மொழிச் சொறகளை உருவாக்க வேண்டுமென்று மொழியறிஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் மக்கள் அவர் கருத்தை எதிர்த்தனர்.

அரபிச் சொற்களை நீக்க வேண்டும் என்கிறீர்களே, அப்படியென்றால் திருக்குரானை எந்த மொழியில் படிப்பீர்கள் என்று மக்கள் கேட்டனர். ஏனென்றால் இஸ்லாமிய நாடுகளில் திருக்குரானை அரபி மொழியில்தான் படிக்க வேண்டும் என்ற விதிமுறை இன்றும் இருக்கிறது.

துருக்கி மக்கள் அவ்வாறு கேட்டவுடன் மதத்தின் பெயரால்கூட எனது தாய்மொழியை இன்னொரு மொழி அடிமைப்படுத்துவதை நான் விரும்பவில்லை. எனது மக்களும் அப்படியே இருக்க வேண்டும என்று சொல்லிவிட்டு இருபதாயிரம் அரபி, பாரசீகச் சொற்களை நீக்கிவிட்டு ஒரு லட்சத்து 58 ஆயிரம் தூய துருக்கி மொழிச் சொற்களை உருவாக்கி நாட்டில் உலவவிட்டார்.

அவர்காலத்தில்தான்உலகம்அறிந்தகான்ஸ்டாண்டிநோபிள் என்னும் ஊரில் பெயர் **'இஸ்தான்புல்'** என்று மாற்றப்பட்டது. துருக்கி நாட்டின் தலைநகரம் இப்போது இஸ்தான்புல் எனப்படுகிறது.

**தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம்**

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் கட்டமாக 1937ல் இருந்து 1940 வரையிலும், இரண்டாம் கட்டப் போராட்டம் 1965லும் நடைபெற்றது. இதில் முதல் கட்ட போராட்டத்தில் இரண்டுபேர்தான் இறந்தார்கள். இரண்டாம் கட்டப் போராட்டத்தில்700க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ஆனால் இரண்டாவது கட்டப் போராட்டதான் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய போராட்டமாகும்.

1937இல் நடந்த பொதுத் தேர்தலில் ர்ஜாஜி தலைமையில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் 1937ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி சென்னை தியாகராய நகரிலுள்ள இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதலமைச்சர் ராஜாஜி "இந்தியைக் கட்டாயப் பாடமாக்கப் போகிறேன்" என்று அறிவித்தார்.

முதன்முதலில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் கரந்தைத் தமிழ் சங்கத்திலே 1937ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் நாள் திருவையாற்றிலே மிகப்பெரிய இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளும்தான் பின்னாட்களில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குக் கால்கோள் நாட்டிய நிகழ்ச்சியாகும்.

**தமிழ்நாட்டின் மொழிப்போர் வரலாறு**

உலகில் எங்கெல்லாம் திணிப்பு, அடக்குமுறை தொடங்குகிறதோ அங்கெல்லாம் எதிர்ப்பும், புரட்சியும் கிளம்பியது. முக்கியமாக தமிழ்நாட்டில் 'இந்தி திணிப்பு' என்பது கடுமையான எதிர்ப்பு மட்டுமல்லாமல் மொழிப் போராகவும் வெடித்து பலர் உயிரிழந்துள்ளனர். தமிழ் காக்கும் மொழிப்போரில் மாணவர்கள், இளைஞர்கள் என இந்தி திணிப்புக்கு எதிராகப் போராடி வழக்குகளைச் சந்தித்து சிறைதண்டனை அனுபவித்தும், தீக்குளித்தும், நஞ்சுண்டும், குண்டடிப்பட்டும் பலியான தமிழர்கள் பல நூறு பேர், நம் தமிழ்மொழியைக் காக்க நம் முன்னோர்கள் செய்த தன்னலமற்றப் பங்களிப்பை நினைவு கூறும் நாளாக 'மொழிப் போர் தியாகியர் நாள்' தமிழில் தை மாதம் 11ஆம் தேதி, ஆங்கிலத்தில் ஜனவரி 25ஆம் நாளில் வீரவணக்கம் செலுத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றது. இதுவரை தமிழ்நாட்டில் நான்கு மொழிப்போர் நடந்துள்ளது.

1. முதல் மொழிப்போர் - 1937-1940

2. இரண்டாம் மொழிப்போர் - 1948-1952

3. மூன்றாம் மொழிப்போர் - 1965 (50 நாட்கள்)

4. நான்காம் மொழிப்போர் - 1986 (140 நாட்கள்)

**மொழிப்போரில் மாணவர்களின் போராட்டம்**

1. பலமொழிகள் பேசப்படும் இந்தியாவில் அனைத்தும் ஒன்றே. அப்படியிருக்க ஒரு மொழியை ஆட்சி மொழியாக்குவது மற்ற மொழிகளுக்குச் செய்யும் துரோகமாகும். அந்த வகையில் மாணவர்கள் களத்துக்கு வந்து போராடியது நியாயமானதாகத் தமிழர் உணர்ந்தனர்.

2. மாணவர்களாக இருப்பினும் நியாயமான கோரிக்கையுடன் ஒருங்கிணைந்து கட்டுக்கோப்புடன் போராட்டம் நிகழ்த்தினர். சரியாகத் திட்டமிட்டு விவேகத்துடன் செயல்பட்டனர். உணர்ச்சிகரமாக பிரச்சாரத்தையும் செய்தனர்.

3. கட்சி பேதமற்ற தலைமையை ஏற்படுத்திக் கொண்டனர், தலைமை சொற்படி ஒற்றுமையுடனும் ஒருங்கிணைப்புடனும் செயல்பட்டனர்.

4. மாணவர்கள் போராட்டங்கள் எழுச்சியுடனும் தொடர்ந்தும் நடந்ததற்குக் காரணம் பொதுமக்களும் கொடுத்த ஆதரவே ஆகும்.

5. மாணவர்களின் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்றன. மத்திய, மாநில அரசுகள் மிகவும் இறுக்கத்துடன் செயல்பட்டனர். அடக்குமுறை நடவேடிக்கைகளை நிறுத்தவில்லை.

6. அளவுக்கு மீறிய அடக்குதுறை கூட மாணவர்களின் மனதில் இருந்த நெருப்பை அணைக்க இயலவில்லை. இவை மேலும் மேலும் அவர்களைத் தூண்டியதே தவிர குறைக்கவில்லை. எனவே மாணவர் போராட்டம் வெற்றியை நோக்கி சளைக்காமல் சென்றது.

7. அரசு, மாணவர்களுக்கான தேர்வை அறிவித்தது. இதனால் பெற்றோர்களும் தலைவர்களும் மாணவர்களின் எதிர்காலத்தை நினைத்து கலக்கமடைந்தனர்.

8. அண்ணாவும், பெரியாரும் மாணவர் தலைவர் ரவிசந்திரனும் கேட்டுக் கொண்ட பிறகும் மாணவர் சமுதாயம் விடாது போராடியது. அதற்குக் காரணம் மனதில் நின்ற தூய்மையான மொழிப்பற்றே ஆகும்

9. இவையெல்லாம் மாணவர் தம் போராட்டத்தை தொடர்ந்து உச்சக்கட்டத்திற்கு அழைத்துச் சென்றது. நியாயமான கோரிக்கையும், கொள்கை உறுதி கொண்ட மாணவர்களும், விடாத மக்கள் ஆதாரவும் இருந்த போது அரசின் பிடிவாதமான கொள்கையும் அலட்சியமும் பல மாணவர்களின் எதிர்காலத்தை பலிவாங்கின.

10. இவ்வாறு போராடி இந்தி திணிப்பு புறக்கணிக்கப்பட்டது. ஆனால் அந்த இடத்தில் தற்போது ஆங்கிலம் வலுவாக அமர்ந்து கொண்டது. ஆங்கில எதிர்ப்புப் போராட்டம் நடத்துகின்ற அளவிற்கு இன்று தமிழ்ப் பள்ளிகளும், தமிழ்க கல்வியும் குறைந்தும் தொலைந்தும் வருகின்றன. எல்லாம் அந்த மாணவர்கள் கையில்!

**தமிழ்நாட்டின் மொழிப்போர் வரலாறு**

உலகில் எங்கெல்லாம் திணிப்பு அடக்குமுறை தொடங்குகிறதோ அங்கெல்லாம் எதிர்ப்பும், புரட்சியும் கிளம்புகிறது. முக்கியமாக தமிழ்நாட்டில் 'இந்தி திணிப்பு' என்பது கடுமையான எதிர்ப்பு மட்டுமல்லாமல் மொழிப் போராகவும் வெடித்து பலர் உயிரிழந்துள்ளனர். தமிழ காக்கும் மொழிப்போரில் மாணவர்கள், இளைஞர்கள் என இந்தி திணிப்புக்கு எதிராகப் போராடி வழக்குகளை வாங்கி சிறைதண்டனை அனுபவித்தும், தீக்குளித்தும், நஞ்சுண்டும்,குண்டடிப்பட்டும் பலியான தமிழர்கள் பல நூறு பேர் உள்ளனர். நம் தமிழ்மொழியைக் காக்க நம் முன்னோர்கள் செய்த தன்னலமற்றப் பங்களிப்பை நினைவு கூறும் நாளாக 'மொழிப் போர் ஈகியர் நாள்' தமிழில் தை மாதம் 11ஆம் தேதி, ஆங்கிலத்தில் ஜனவரி 25ஆம் நாளில் வீரவணக்கம் செலுத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றது. இதுவரை தமிழ்நாட்டில் நான்கு மொழிப்போர் நடந்துள்ளது.

1. முதல் மொழிப்போர் - 1937-1940
2. இரண்டாம் மொழிப்போர் - 1948-1952
3. மூனறாம் மொழிப்போர் - 1965 (50 நாட்கள்)
4. நான்காம் மொழிப்போர் - 1986 (140 நாட்கள்)

**இந்தி எதிர்ப்பு குறித்து தமிழ்நாடு சட்டப் பேரவை**

23 ஜனவரி 1968 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் எடுக்கப்பட்ட சில முடிவுகள்,

1. மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டு இந்தி முழுமையாக கல்வித் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டது தமிழும் ஆங்கிலமும் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டன.
2. தேசிய மாணவர் படையில் இந்தி ஆணைச் சொற்கள் விலக்கப்பட்டன.
3. அனைத்துக் கல்லூரிகளும் தமிழ்வழிக் கல்வி அறிமுகப்படுத்தப்படும்
4. ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழ் அலுவல் மொழியாக அரசு நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.
5. நடுவண் அரசை, இந்திக்கு அளிக்கப்படும் தனிநிலையை முடிவுக்குள் கொண்டு வந்து அனைத்து மொழிகளுக்கும சமநிலை அளிக்க வற்புறுத்தியது.

6. அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளின் வளர்ச்சிக்கு நிதி உதவி அளித்திட இந்திய அரசைக் கோறியது.

**தமிழகத்தின் மொழிப் போரின் ஏழு நிலைகள்**

**முன்னுரை**

மொழிப்போராட்டம் என்பது தமிழகத்தில் மட்டுமன்று உலகின் பல நாடுகளிலும் நடந்தேறி உள்ளது. தாயின்மீது அன்புணர்வு உள்ள யாரும் தாய்மொழி மீதும் அன்புணர்வோடு இருப்பது இயல்புதான். தாய்மொழிக்கு ஒரு ஆபத்து வந்தால் பிள்ளைகள் வெறுமனே குந்தியிருக்க மாட்டார். இந்தித் திணிப்பால் தமிழன்னைக்கு ஆபத்து வந்தது என எண்ணி தமிழகமும் இளைஞர்களும் தலைவர்களும் திரண்ட வரலாறே மொழிப் போராட்டம் ஆகும்.

**1. காந்தி நிலைப்பாடு**

விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் காந்தி பல்வேறு முயற்சிகளைக் கையாண்டார்.

அம்முயற்சிகளில் ஒன்றாக இந்தியர் அனைவரும் ஒரு மொழியால் ஒன்றுபட்டால் எண்ணம் ஒன்றாகி விடுதலை எளிதாகும் என்று நம்பினார்.

எனவே இந்தியாவில் உள்ள அனைவரும் இந்தி மொழியைக் கற்றுக் கொண்டு தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் காந்தி.

இதனை மேடைகளில், பத்திரைக்களின் வழி வெளியிடத் தொடங்கினார் காந்தி, வட இந்தியாவில் இதற்கு நல்ல ஆதரவு இருப்பினும் தென்னிந்தியாவில் இல்லை.

1925ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி மாநாட்டில் காந்தி இந்திக்குப் பதிலாக 'இந்துஸ்தானியைப்' பரிந்துரைத்தார். காரணம் இந்தியும் உருதும் கலந்த இந்துஸ்தானி சமய ஒற்றுமையை வலுப்படுத்தும் என நம்பினார்.

**2. இராஜாஜியின் அறிவிப்பு - ஆதரவும் எதிர்ப்பும்**

காங்கிரஸ் கட்சிக்குள் மட்டுமே இருந்த இந்திப் பிரச்சாரம் மெல்ல மெல்ல தமிழக மேடைகளில் பிரதிபலித்தது.

ஜூலை 15 1937 அன்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக சென்னை மாகாண முதல்வாரன பின்பு சென்னை பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் 'இந்தியைக் கட்டாய பாடமாகப் பள்ளிகளில் ஆக்கப் போகிறேன்' என்று அறிவித்தார்.

ஆனந்த விகடன் இந்திப் பாடத்துக்கு வரவேற்பு தெரிவித்தது.

'மெயில்' பத்திரைக்கை, 'பதற்றத்தோடு செய்ய வேண்டாம்' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டது.

“பின் விளைவுகளை முழுமையாக ஆராயமல் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம்” என்று எச்சரிக்கை செய்தது.

**3. முதல் எதிர்ப்பு**

பல இடங்களில் இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளம்பத் தொடங்கியது.

முதன்முதல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 1937 ஆகஸ்ட் 27ல் ‘இந்தி திணிப்பு எதிர்ப்புக் கூட்டம்’ நடைபெற்றுது.

மறுநாள் திருவையாற்றில் மிகப்பெரிய ஊர்வலம் நடைபெற்றது.

**4. அரசின் ஆணை வெளிவந்தது**

1938 ஏப்ரல் 21ம் தேதி சென்னை மாகாணப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி அரசு ஆணை பிறப்பித்தது.

அதன்படி கர்நாடகத்தில் 4 பள்ளிகளிலும், கேரளத்தில் 7 பள்ளிகளிலும், ஆந்திராவில் 54 பள்ளிகளிலும், தமிழ்நாட்டில் 60 பள்ளிகளிலும் நடைதுறைப்படுத்தப்பட்டன. ஏனெனில் அன்று இவையணைந்து பகுதிகளும் சென்னை மாகாணமாக இருந்தது.

**முதல் கட்ட போராட்டம்**

1938 ஜூன் 3ல் முதலமைச்சர் ராஜாஜியின் வீட்டின் முன்னர் மறியல் போராட்டம் நடந்தது.

முதலில் செ.தெ.நாயகம் தலைமையிலும் பின்னர் செ.தெ நாயகம் தலைமையிலும் போராட்டம் நடைபெற்றது.

காங்கிரஸ் தொண்டர் பல்லடம் பொன்னுசாமி முதல்வர் வீட்டின் முன்பு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதானார். இவரே இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்ட முதல் நபராவார்.

சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசியதற்காக மூன்று மாதங்களுக்குப் பின் சி.என்.அண்ணாதுரை கைதானார்.

1938 ஜூலை1 இந்தி எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்பட்டது.

1938 ஆகஸ்ட்1 திருச்சி, உறையூரிலிருந்த இந்திஎதிர்ப்புப் படை புறப்பட்டது. சென்னை வரை கூட்டங்கள் நடத்தியும், பாடல் பாடியும், ஊர்வலமாகவும் சென்று சேர்ந்தனர்.

1938 நவம்பர்24 வடசென்னை சௌகார்பேட்டை இந்து தியாலஜிகள் பள்ளிக்கு முன்பு பெண்கள் தாய்மார்கள் கைக்குழந்தையோடு கைது செய்யப்பட்டனர்.

1938 டிசம்.8ல்பெரியார்பொதுமக்களையும், பெண்களையும் போராட்டத்திற்குத் தூண்டினார் என்று கைது செய்யப்பட்டார்.

சிறையிலடைக்கப்பட்டிருந்த நடராசன் என்ற இளைஞரும், தாளமுத்து என்பவரும் சிறைக் கொடுமையால் உடல்நலமின்றி உயிர்த் தியாகம் செய்தனர்.

இடையே இரண்டாம் உலகப்போர் காரணமாக சூழ்நிலை மாறியது. எனவே போராட்டம் சற்றே ஒத்தி வைக்கப்பட்டது. இனி இந்தி திணிப்பு இருக்காது என்று அரசு கூறியதை போராட்டத்தில் ஏற்கவில்லை.

### 5. இரண்டாம் கட்ட போராட்டம்

1948 ஜூலை 20 காங்கிரஸ் அரசு ஓமாந்தூர் முதலமைச்சராக தமிழகத்தில் நடைபெற்றது. அப்போது இந்தியைத் திணிக்க ஆணை ஒன்றைப் பிறப்பித்தது.

1946ம் ஆண்டு கல்வி முறை பற்றி ஆராய்ந்த நிபுணர் குழு பரிந்துரையை மீறி இந்தியாவில் கட்டாயமாக்கியது.

மறைமலையடிகள், பெரியார், திரு.வி.க., ம.பொ.சி, பாரதிதாசன், அண்ணா உள்ளிட்டோர் போராட்டத்தில் கைதானார்கள்.

அப்போது இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக 'இராஜாஜி' மாறியிருந்தார். அவரது தமிழக வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்கள் நடைபெற்றன.

இப்போது இந்தி திணிப்பு எதிர்ப்பு தேசிய அளவில் விவாதமாக மாறியது.

ஆட்சிமொழி பற்றிய ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் கே.எம்.முன்ஷி, கோபால்சாமி ஐயங்கார், அம்பேத்கார் உள்ளிட்டவர்கள் இருந்தனர். அவர்களது அறிக்கை முன்ஷி-அய்யங்கார் அறிக்கை எனப்பட்டது.

### 6. மூன்றாம் கட்ட போராட்டம்

இந்தியை வளர்ப்பதற்கு பல்வேறு திட்டங்களை மத்திய காங்கிரஸ் அரசு தீட்டியிருந்தது.

இந்த முறை தொடர்வண்டி நிலையங்களில் பெயர்ப் பலகைகளில் காணப்படும் இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தை மேற்கொண்டனர்.

மூன்றாம் கட்டப்போரில் முக்கியத்துவம் பெறுவது கல்லக்குடி போராட்டமாகும்.

வட இந்திய அதிபரின் இந்திப் பெயரைக் கொண்ட ஊர் பெயரை அதன் பழைய பெயரான 'கல்லக்குடி' என்று கருணாநிதி தலைமையில் போராட்டம் நிகழ்ந்தது.

இப்போராட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் கேசவன், நடராசன் என்ற இரு தியாகிகளின் உயிர்கள் பலிகொடுக்கப்பட்டன.நேருவின் உறுதிமொழியால் இந்த மூன்றாம் கட்டப் போராட்டம் நிறைவடைந்தது.

### 7. நான்கு, ஐந்து, ஆறு, ஏழாம் கட்ட போராட்டங்கள்

இப்போது காமராசர் தமிழ்நாட்டில் முதலமைச்சரானார், பின்னர் காமராசர் விலகி பக்தவச்சலம் முதலமைச்சரானார்.

இம்முறை சின்னச்சாமி களப்பலியானார்.இம்முறை மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர். தஞ்சை சரபோஜி கல்லூாயில் தொடங்கியது. தமிழ்நாடு முழுவதும் தீப்பற்றி எரிந்தது.

எல்.கணேசன், பெ.சீனிவாசன், வை.கோபால் போன்ற பலரும் அடங்குவர்.மதுரை மாவட்டம் கூடலூரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 28 மாணவர்கள் பலியாயினர். பலரை சிறையிலடைத்தனர்.தேர்வு தேதி அறிவிக்கப்பட்டதால் பெரியாரும், பெற்றோரும் கலங்கி மாணவர்கள் வெளியேறுமாறு கேட்டுக் கொண்டர்.

மொரார்ஜி வழி காரணமாக ஐந்தாம் கட்ட போராட்டம், இந்தி வாரம் கொண்டாடச் சொன்னதால் ஆறாம் கட்ட போராட்டமும், வானொலி, தொலைக்காட்சிகளில் இந்தி நிகழ்ச்சிகளின் நேரம் கூட்டப்பட்டு தமிழ் குறைந்ததால் ஏழாம் கட்ட போராட்டமும் சூடு பிடித்து நடந்தது.

## 24.சமூக மறுமலர்ச்சி

### அறிமுகம்

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பது பண்டைய மரபு. விடுதலைக்குப்பின் தமிழகத்தில், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், குஜராத்தி, மராத்தி, உருது, ஆங்கிலம் முதலிய மொழிகள் பேசும் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.1953க்குப் பின் தெலுங்கு தேசம் தனியாகப் பிரிந்தது. 1956ல் மலையாளம் பேசப்பட்ட மலபார் கேரளத்துடன் இணைந்தது. எஞ்சிய தமிழகத்தில் மிகப் பெரும்பாலோர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தனர். தமிழகத்து மக்கள் இந்து, கிறித்துவம், இகலாம், சமணம், பார்சி முதலிய சமயங்களையும் நாத்திக வாதம், பகுத்தறிவு வாதம் ஆகிய கோட்பாடுகளையும் தழுவியவர்களாக இருந்தனர். மக்களுள் மிகப் பெரும்பாலோர் கிரமங்களிலும், எஞ்சியோர் நகரங்களிலும் வாழ்ந்தனர். சாதாரண மக்கள் குடும்பம், கிராமம், தமது தொழில் வாரச் சந்தைகள் ஆகிய உள் வட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தனர். பெரிய சந்தைகளும், அலுவலங்களும், கோயில் திருவிழாக்களும் வெளி வட்டத் தொடர்பினை ஏற்படுத்தின. சமூகத்தில் ளளளளளமேல்மட்டத்திலிருந்தோர் வெளியுலகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதற்கு இரயில்கள் உதவியாக இருந்தன.

### சமூகச் சீர்த்திருத்த இயக்கங்களில் பெரியாரின் பங்கு

1. ஈரோடு வெங்கடப்பா இராமசாமி எனும் இயற்பெயர் கொண்டு ‘ஈ.வெ.ரா’ என்றும் ‘பெரியார்’ எனறும் அழைக்கப்பட்ட இவர் செப்.17 1879ஆம் ஆண்டு பிறந்தார்.

2. சமூக சீர்த்திருத்திற்காகவும், சாதியை அகற்றவும், மூடநம்பிக்கையை மக்களிடம் களையவும் பெண் விடுதலைக்காகவும் போராடியவர்.

3. இவரைப் ‘ பெரியார்’ என்று அழைத்தவர் நாகர்கோவில் வழங்கறிஞர் திரு.பி.சிதம்பரம் ஆவாா.

4. காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்து சுதந்திர போராட்ட இயக்கத்திலும் சமுகச் சீர்த்திருத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினர். வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு ‘வைக்கம் வீரர்’ என அழைக்கப்பட்டார்.

5. காங்கிரஸில் வர்ணாசிரமக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சியில் இணைந்தார்.

6. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதன்பின் பெரியாரின் பங்களிப்புகள், செயல்பாடுகளும் இந்திய, தரிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாக மாறியது.

7. தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

8. சாதிமுறையை ஒழிப்பது, மாண்பற்ற தன்மையை நீக்குவது, பெண் பாலினத் தடை நீக்கம், பரம்பரை அர்ச்சகம் உரிமையை எதிர்ப்பது மூடநம்பிக்கைகள் எதிர்ப்பு ஆகியனவற்றை குறித்து பல வழிகளில் விவாதித்தது.

9. சுயமரியாதை இயக்கம் அதன் இயக்க சாதி மத அடையாளங்களைக் கைவிட ஆணைவிட்டது.

10. பெண்ணுரிமை பேசுவதோடு நின்று விடவில்லை. பெண்களின் சமவாய்ப்புக்காக பல்வேறு நிலைகளில் உழைத்தது. இன்றைய பெண் விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தின் பங்கும் பணியும் இணையற்றது.

11. பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராமசாமிக்கு ‘பெரியார்’ என்ற பட்டம் வெளிப்படையாக வழங்கப்பட்டது.

12. குடியரசு, புரட்சி, விடுதலை நாளேடுகளை நடத்தி சமூக விடுதலை,பெண் விடுதலை, இந்தி மொழி திணிப்பு எதிர்ப்பு குறித்தும் தீவிரமாக எழுதினாா.

13. ‘யார் சொல்லியிருந்தாலும் எங்குப் படித்திருந்தாலும் நானே சொன்னாலும் உணது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே’ என்று முழுங்கிய அறிவுத் திறவகோல் பெரியார் ஆவார்.

14. ‘தென்னிந்தியாவின் சாக்ரடீஸ்’ என்றும் பகுத்தறிவு சிற்பி’ ‘வைக்கம் வீரர்’ ‘பகுத்தறிவு பகலவன’ என்று மக்களால் போற்றப்பட்டவர்.

15. “புத்துலக தொலை நோக்காளா, தென்கிழக்காசியாவின் சாக்ரடீ சமூக சீர்த்திருத்த இயக்கத்தின் தந்தை, அறியாமை, மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சமபிரதாயங்கள், மட்டமான பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி” என்று யுனஸ்கோ நிறுவனத்தால் பாராட்டப்பட்டவர் பெரியார்.

**19ம் நூற்றாண்டின் சமூக மறுமலர்ச்சி.**

**முன்னுரை**

சமூக சீர்த்திருத்தங்களும் மறுமலர்ச்சியும் நாட்டின் முக்கியத் தேவைகள் என தலைவர்கள் உணர்ந்தனர். இந்தியா முழுவதும் ஆங்காஙகே தலைவர்களும் வழி நடத்தும் பெரியவர்களும் தோன்றி வேகமாக மாற்றத்தைக் கொணர்ந்தனர். தமிழ்நாட்டிலும் சமய, சமூக, பெண் சமூகத்தினரிடையே காணப்பட்ட தகாத வேண்டாத பழக்க

வழக்கங்கள், நம்பிக்கைகளையும் நீக்கி தூய்மையடைச் செய்தனர். அதனைக் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**சமயச் சீர்த்திருத்தங்கள்**

கிறித்துவ சமயம் தமிழகத்திற்குள் வந்த பின்பு மேலை நாட்டார் இந்து சமயத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டினர். இதனைக் களைந்து தூய்மையாக பல பெரியவர்கள் தோன்றினர்.

இராமலிங்க சுவாமிகள் - வள்ளலார் என்றழைக்கப்பட்ட இவர் உயிர் நேயத்தையும் வலியுறுத்தினார்.

இறைவனை ஒளி வடிவமாகக் காண அறிவுறுத்தினார். 1856இல் சமரச வேத சன்மார்க்க சங்கம எனும் அமைப்பை நிறுவினார்.

தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தினால் உயிர்கள் வாடி அழிவதைக் கண்டார். எனவே 1867ல் சாதி எல்லைகளைத் தாண்டி அணைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் தொடங்கினார்.

‘திருவருட்பா’ எனும் தலைப்பில் தொகுக்கப்பட்ட பாடல்கள் பாடினார்.

**வைகுண்ட சுவாமிகள்**

தென்னிந்தியாவின் தொடக்கக்கால சமூகப் போராளிகளுள் குறிப்பிடத்தக்கவர்.

கன்னியாகுமரி அருகே சாமித் தோப்பில் பிறந்தவர்.

‘முடி சூடும் பெருமாள்’ எனும் இவருக்கு இட்ட பெயருக்கு உயர் சாதியினர் எதிர்ப்புத் தெரிவித்ததால் ‘முத்துக்குட்டி’ என்றழைத்தனர்.

முறையான கல்வி பெறவில்லை எனினும் உயர் வேதங்களைக் கற்ற அறிவுடையராய்த் திகழ்ந்தார்.

அடித்தட்டு மக்களின் உரிமைகளுக்காகப் போராடினார்.

உருவ வழிபாடு, சடங்குகள், உயிர்ப்பலி வேண்டாம் என வலியுறுத்தினார்.

ஆங்கில ஆட்சியை ‘வெள்ளைப் பிசாசுகளின் ஆட்சி என்னும் திருவிதாங்கூர் ஆட்சியை ‘கருப்புப் பிசாசுகள் ஆட்சி’ எனவும் விமர்சித்தார்.

**அயோத்திதாசர்**

பண்டிதர் அயோத்தி தாசர் என்றழைக்கப்பட்ட இவர் தீவரத் தமிழறிஞரும், சித்த மருத்துவரும் பத்திரிக்கையாளரும் ஆவார்.

சென்னையில் பிறந்த இவர் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், பாலி மொழிகளில் புலமை பெற்றவர்.

இதழியலைத் தனது கருவியாகக் கொண்டு புதிய அறிவைப் பரப்பினார்.

சாதிகளற்ற அடையாளத்தை நிறுவ முயன்றார்.

சாதிய மேலாதிக்கத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராக குரல் எழுப்பினார்.

ஒடுக்கப்பட்டோரின் கோவில் நுழைவுக்கும் ஆதிரவாக குரல் எழுப்ப ‘அத்வைதானந்தா சபா’ நிறுவினார்.

1882ல் இவரும் ஜான் திராவியம் என்பாரும், ‘திராவிடர்க் கழகம்’ எனும் அமைப்பை நிறுவினர்.

1985இல் திராவிட பாண்டியன் எனும் இதழையும் நடத்தினார்.

திராவிட மகாஜனசபை எனும் அமைப்பை 1891ல் நிறுவினார். அதன் முதல் மாநாட்டை நீலகிரியில் நடத்தினார்.

1907இல் ‘ஒரு பைசா தமிழன்’ என்ற பெயரில் ஒரு வாராந்திர பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார்.

இலங்கை சென்று புத்த மதத்தைத் தழுவினார்.

‘சாக்கிய பௌத்த சங்கம்’ எனும் அமைப்பைச் சென்னையில் நிறுவினார்.

**தென்னிந்திய நல உரிமை சங்கம்**

1916 நவம்பர் 20இல் டாக்டர் நடேசனார், சர்.பிட்டி, தியாகராயர், டி.எம்.நாயர், அலமேலு மங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை’ ஒருங்கிணைத்தனர்.

இல்லமைப்பு தமிழில் திராவிடன் ஆங்கிலத்தில் ஜஸ்டின், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய இதழ்களை வெளியிட்டது.

பின்னர் ஜஸ்டின் என்ற இதழின் பெயரால் ‘ஜஸ்டின் பார்ட்டி’ ‘நீதிக்கட்சி’ என்று அழைக்கப்பட்டது.

1929இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தது.

நிலமற்ற தாழ்த்தப்பட்டவர்க்குநிலப்பட்டாக்கள் வழங்கியது

சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீக்கினார்.

பொது நீர்நிலைகளைத் தாழ்த்தப்பட்டவர்களும் பயன்படுத்துவதில் இருந்த தடைகளைத் தகர்க்க சட்டங்கள் இயற்றினர்.

ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கென 1932இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன.

தேர்தலில் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921இல் அங்கீகரித்தது. இதனால் 1926இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினரானார்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது.

**சுயமரியாதை இயக்கம்**

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடும் பொருட்டு 1925இல் 'எஸ்.ராமநாதனால்' நிறுவப்பட்டது.

அவர் பின்னாளில் பெரியார் என்றழைக்கப்பட்ட ஈ.வி.ராமசாமியை இவ்விடத்திற்குத் தலைமை தாங்க அழைத்தார்.

இவ்வியக்கம் தமிழ்நாடு மட்டுமன்றி தமிழர் வசிக்கும் சிங்கப்பூர், பர்மா, மலேசியா போன்ற நாடுகளிலும் கவனம் பெற்றது.

இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் பகுத்தறிவை வளர்த்தல் போன்ற கோரிக்கைகள் கொண்டது.

**இரட்டை மலை சீனிவாசன்**

'தாத்தா' என்று அறியப்பட்ட இவர் 1859ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகநீதி, சமத்துவம், சமூக உரிமைகளுக்காகப் போராடினார்.

1893இல் 'ஆதி திராவிட மகாஜன சபை' எனும் அமைப்பை உருவாக்கினார்.

1939இல் வெளியான இவரது 'ஜிவிய சரித சுருக்கம்' தமிழில் எழுதப் பெற்ற முதல் 'சுயசரிதை' நூல்களில் ஒன்றாகும்.

**மயிலை சின்னத்தம்பி ராஜா**

மக்களால் எம்.சி.ராஜா என்றழைக்கப்பட்ட இவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த தலைவர்பளில் முக்கியமானவர்.

நீதிக்கட்சியில் செயல்பாட்டாளராகவும் முக்கிய பதவிகளிலும் இருந்தவர்.

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும். பொது நீர்நிலைகள் பாதைகள் முதல் இடுகாடுகள் வரை ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தோரும் பயன்படுத்தும் உரிமைக்காகப் போராடியவர்.

**பெண்கள் இயக்கங்கள்**

சென்னை மாகணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்ற பல பெண்ணிய இயக்கங்கள் நிறுவப் பெற்றன.

தமிழ்நாட்டில் உருவான 'இந்தியப் பெண்கள் சங்கம்' அகில இந்திய பெண்கள் மாநாடு ஆகியவை முக்கியத்துவம் பெறுவனவாகும்.

1917இல் அன்னிபெசண்ட், டோரமி, மாக்கரெட் ஆகியோரால் அடையாரில் இந்தியப் பெண்கள் சங்கம் தொடங்கப்பட்டது.

துனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு, பொது வாழ்வில் பெண்களின் பங்கு குறித்த விழிப்புணர்வை பல்வேறு மொழிகளில் பிரசுரங்களையும் மடல்களாகவும் எழுதி வெளியிட்டது.

சுயமரியாதை இயக்கத்தின் வழியும் பல்வேறு நிகழ்வுகளும், கூட்டங்களும் நடத்தப் பெற்றது.

முத்துலெட்சுமி அம்மை, நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் ராமாமிர்தம், ருக்மணி, அலமெலு மங்கை, நீலாம்பிகை, சிவகாமி ஆகியோரும் பிறரும் பெண்கள் அமைப்பு இணைந்து பெண்ணுரிமைக்காகப் போராடினர்

## 25.தொழில்நுட்ப வளர்ச்சி

### அறிமுகம்

தொழில்நுட்ப வளர்ச்சி என்பது பல்வேறு துறைகளில் திறன்களை மேம்படுத்துவதற்கு செயல்திறனை மேம்படுத்துவதற்கும் புதிய நுட்பங்கள், கருவிகள் மற்றும் இயந்திரங்களின் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் பயன்பாடு ஆகும். புதுமையின் மூலம் வாழ்க்கையை எளிதாகவும், வேகமாகவும் திறமையாகவும ஆக்குவது தொழில்நுட்ப வளர்ச்சி எனப்படும்.

### அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் செயல்பாடுகள்

2022-ஆம் ஆண்டு டிசம்பரில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் செயல்பாடுகளாக அமைச்சகம் வெளியிட்ட செய்தியின் சுருக்கம் பின்வருமாறு கூறுகிறது.

1. அறிவியல் வெளியீடுகள் இந்தியா முதல் 3 இடங்களில் தொடர்ந்து நீடித்து வருகிறது. முனைவர் பட்ட ஆய்வுகள் உயர்கல்வி நடைமுறை என அனைத்திலும் இந்தியா தொடர்ந்து முன்னேறி வருகிறது.
2. தொழில்நுட்ப தொடர்பான பாதுகாப்பகங்கள் நிறுவுவதிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை முன்னோடியாக உள்ளது.
3. இதன் அடிப்படையில் ‘புதுமைகளை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துவதற்காக தேசிய முன் முயற்சி (நிதி –ஜெனுர்ஜ) என்ற திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் அறிவியல் மற்றும் தொழில் முனைவோர் பூங்காங்களை அரசு அமைச்சகம் ஏற்படுத்தி உள்ளது.

4. ‘நிதி என்ற திட்டத்தின் கீழ் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2022-ம் ஆண்டில் ஐதராபாத்தில் உயர்திறன் மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5. இளம் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோரை ஊக்குவித்தல் என்ற பிரயாங் முன் முயற்சியின் கீழ் 2022-ல் புதிதாக 13 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

6. அதிவேக கணினித்திறனில் இந்தியா புதிய உச்சங்களை அடைந்துள்ளது. குராக்பர், குஹாததி, காந்திநகர், மண்டி, ஐஐடிக்களிலும் திருச்சி, என்.ஐ.டி.யிலும் புதிதாக 5 உயர்திறன் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன.

7. செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் உள்ளிட்டவற்றில் ஆய்வுகள் அதிகரிக்கப்பட்டு தொழில்நுட்பங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

8. குவாண்டம் கணினி தொடர்பான மையத்தை இந்தியாவும் பின்லாந்தும் இணைந்து நிறுவுகின்றன.

9. ஐ.நா.வின் 2வது உலகளாவிய புவியியல் தகவல் தரவு மாநாடு ஐதராபாத்தில் அக்டோபர் 10-ம் தேதி முதல் 14 வரை நடைபெற்றது.

10. குறைந்த செலவில் சுத்தரிக்கப்பட்ட குடிநீர் உற்பத்தி செய்வது. குளிர் சாதனங்களால் ஏற்படும் கார்பன் உமிழ்வைக் குறைப்பது உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் பல் ஸ்டார்ட் - அப் - நிறுவனங்களால் கண்டறியப்பட்டுள்ளன.

11. சுற்றுச்சூழல் மற்றும் எரிசக்தி தொடர்பாக தொழில்நுட்பங்கள் அடிப்படையில் பல்வேறு திட்டங்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆதரவளித்து வருகிறது.

12. அறிவியல் கல்வியில் பெண்களை ஊக்குவிக்கும் நோக்கில் ‘விஞ்ஞான ஜோதி’ என்ற முன்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 9 முதல் 12-ம் வகுப்பு வரை மாணவிகள் இத்திட்டத்தன்கீழ் பயனடைகின்றனர்.

13. அடிப்படை மற்றும் இயற்கை அறிவியல் தொடர்பான படிப்புகளில் உயர்கல்வி பயிலும் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

14. டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் மூலம் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் திட்டத்தை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் தொடங்கியுள்ளது.

15. இத்திட்டத்தின் கீழ் சாஸ்திரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் தமிழகத்தில் சுமார் 22 பாரம்பரிய நெல் வகையினைக் கண்டறிந்து அவற்றை 10 விதை வங்கிகள் மூல் பாதுகாக்கிறது.

16. அறிவியல் ஆராய்ச்சி உள்கட்டமைப்புப் பகிர்வு, பராமரிப்பு மற்றும் நெட்வொர்க் வழிகாட்டு நெறிமுறை அறிவியல் சமூகப் பொறுப்புணர்வு தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சகம் தமது செயல்பாடுகளை வரிசைப்படுத்தியுள்ளது. தொழில் நுட்பத் துறையின் எதிர்காலத் திட்டங்களை முன்வைத்து நாட்டின் வளர்ச்சி நிலையில் முன்னிலை வகிப்பதையும் எடுத்துரைக்கிறது.

**செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பததின் அவசியம்**

செயற்கை நுண்ணறிவு என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட நுண்ணறிவைக் குறிக்கிறது. முனிதர்களைப் போல சூழ்நிலைக்கு ஏற்ப புத்திசாலித்தனமான பணிகளைச் செய்ய மனிதனால் உருவாக்கப்பட்ட நுண்ணறிவுடன் எந்திரங்கள் செயற்பட்டால் அது செயற்கை நுண்ணறிவு என்று அழைக்கப்படுகிறது. இது கணினி அறிவியலின் ஒரு பகுதியாகும். இது மனிதனைப் போல சிந்திக்கவும், சொந்தமாக முடிவுகளை எடுக்கவும் திறன் கொண்ட அறிவார்ந்த எந்திரங்களை உருவாக்குவதைக் குறிக்கிறது.

A1 செயற்கை நுண்ணறிவு வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுள் ஒன்றாகும். குடினமானச் சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குவதன் வழி மனிதனது வாழ்வை எளிதாக்குகிறது. எனவே இது சந்தைகளில் மிகவும் தேவைப்படும் பொருட்களில் ஒன்றானதாகவிட்டது. இது மனிதத் தவறுகளைக் குறைக்கும். மனிதர் அடைய முடியாத உயரமான, குறுகிய, இடங்களில் சென்று கண்டறிந்து தகவல்களைத் தரவும் ஆராயவும் பயன்படும். மீண்டும் மீண்டும் செய்யும் ஒரே வேலை மனிதனுக்குச் சலிப்பை ஏற்படுத்தும். இதில் செயற்கை நுண்ணறிவு பொருத்தப்பட்ட எந்திரங்கள் சலிப்பின்றி நல்ல செயல் திறனுடன் செயல்படும் தன்மை வாய்ந்தது.

இவை குறுகிய நுண்ணறிவு, பொது நுண்ணறிவு, சூப்பர் நுண்ணறிவு கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. ஆப்பிள் சிரி குறுகிய A1-க்கு சிறந்த எடுத்துக்காட்டு. பொது நுண்ணறிவு முழுமையாக ஆராய்ச்சியில் உள்ளது. சூப்பர் நுண்ணறிவு சிந்தித்தல், பகுத்தளித்தல், புதிரைத் தீர்ப்பது, தீர்ப்புகள் சொல்வது திட்டமிடுவது கற்றுக்கொள்வது தொடர்பு கொள்வது ஆகிய அடங்கும். இது உலகத்தையே மாற்றக்கூடியது.

இந்நுண்ணறிவு மருத்துவம், விவசாயம், கல்வி, உற்பத்தித்துறை, பொலிவுறு நகரமைப்பு சில்லரை வணிகம், போக்குவரத்து போன்ற துறைகளில் பயன்பாட்டு வருகின்றது.

**1. பயன்பாடுகள்**

மின் வணிகத்தில் நமக்கு விருப்பப்பட்ட பொருட்களைத் தேர்வு செய்ய உதவுகிறது. தேடும் பொருட்களைப் பரிந்துரைக்கிறது.

**2. கல்வி**

கல்வி நிலையங்களில் செயற்கை அலுவலகப் பணிகளில் பயன்படுத்துவதோடு கற்றல், கற்பித்தலிலும் பயன்படுகிறது.

**3. அன்றாட வாழ்வியில்**

மின்னஞ்சல் சேவைகளில் குப்பை மற்றும் ஸ்பேம் மின்னஞ்சல்களை முதன்மையானவற்றிலிருந்து பிரித்து தானாக கோப்புறைக்கு அனுப்புகிறது. குணினி, அலைபேசியில் முக அடையாளத்தைப் பயன்படுத்துதலும் இதுவே.

**விவசாயம்**

வானிலை முன்னறிவிப்பு, பூச்சி மேலாண்மையில் செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.

இவ்வாறாக செயற்கை நுண்ணறிவு இன்று பலவற்றிலும் எதிர்காலத்தில் நீக்கமற அனைத்துத் துறையிலும் பயன்படும் ஒன்றாகவும் அமையும்.

**3. எதிர்காலத்தை வளமாகும் நானோ தொழில்நுட்பம்**

நானோ தொழில் நுட்ப அல்லது மீநுண் தொழில்நுட்ப என்பது அணு மூலக்கூறு, மீமூலக்கூறு அளவில் பொருட்களைக் கையாளும் தொழிலகலை ஆகும். மீநுண் தொழில் நுட்பத்திற்கான கரு 1959-இல் இயற்பியலாளர் ‘கிரிச்சர்டு மீய்ன்மளஸ்’“There is plenty of Room at the bottom” எனும் உரையில் தொடங்கி வைக்கப்பட்டது என்கின்றனர். மீநுண் தொழில் நுட்பம் எனும் சொல் முதலில் 1974-இல் நோரியோ தாளிகுச்சி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

மீய்ன்மன் கருத்துக்களால் கவரப்பட்ட கேலரிக் டிரெக்சிலர் என்பவர் 1986 இல் வெளியிட்ட Engines of creation : The Coming Era of Nanotechnology எனும் நூலில் ‘மீநுண் தொழில் நுட்பம்’ என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். முதலாவது

கண்டுபிடிப்பு 'ஊடுருவும் அலகீட்டு நுண்ணோக்கி 1981-ல் வெளிவந்தது. இது தனித்தனி அணுக்களையும் அவற்றுக்கிடையில் அமைந்த பிணைப்பையும் தெளிவாகக் காண வழிவகுத்தது. நானோ தொழில்நுட்பத்தின்வழி சுத்தம் சுகாதாரம், சுற்றுச்சூழல், விவசாயம், உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பு, விண்வெளி தொழில்நுட்படம் தடய அறிவியல், மின்னணுவியல், தகவல் தொடர்பு போன்ற பல்வேறு துறைகளிலும் பயன்படுகிறது.

சமீப காலமாக உலக வள நாடுகள் அனைத்தும் இத்தொழில் நுட்பத்திற்குக் கணிசமாக நிதியை ஒதுக்கி தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மருத்துவத் துறையில் நானோ தொழில்நுட்பம் புற்று நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும் நானோ அளவிலான கருவிகள் மற்றும் பொருட்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. நானோ மருந்தியல் மிகக் குறைவான பக்க விளைவுகளைக் கொண்ட மருந்துகள் உற்பத்தி செய்ய உதவுகிறது.

கண்கண்ணாடி, கணினி, வண்ணப்படம் எடுக்கும் கருவிகள், சாளரக் கண்ணாடி பரப்புகளில் நானோ அளவிலான மெல்லிய படலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை நீர்விரட்டி, எதிர் பிரதிபலிப்பு, சுயசுத்தம், புறஊதாக் கதிர் எதிர்ப்பு நுண்ணுயிர் எதிர்ப்பு, கீறல் எதிர்ப்பு ஆகியவைகளாகப் பயன்படுகின்றன. சூரிய மின்கலன்கள் தயாரிப்பில் நானோ துகள்கள் பயன்படுகின்றன. இவை குறைந்த வெப்பநிலை செயல்முறையைப் பயன்படுத்தி உற்பத்தி செலவைக் குறைக்கின்றன.

இவ்வாறு பல துறைகளில் பயன்படுத்தப்பட்ட நானோ எனப்படும் மீநுண் தொழல்நுட்பம் குறித்த ஆராய்ச்சிகள் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எதிர்கால வளர்ச்சி குறித்து ஆய்வுகள் ஆதலால் மிக இரகசியமாக நடைபெற்று வருகின்றன.

**4. தொழில்நுட்ப வளர்ச்சியில் மின்நூலகம்**

துமிழ் இணையப் பல்கலைகக்கழகத்தின் மின் நூலகம், தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையப் பாடத்திட்டத்தில் சேர்ந்து பயில்வோர் மற்றும் உலகு தழுவி வாழும் தமிழர்கள் அனைவரது பயன்பாட்டிற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மின்நூலகத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன. ஆவை,

1. இலக்கிய நூல்கள்
2. ஆகராதிகள்
3. பிற பார்வைகள்

**1. இலக்கிய நூல்கள்**

சங்க காலம் முதற்கொண்டும் இன்று வரை படைக்கப்பட்ட இலக்கிய நூல்கள் அனைத்தும் இடம் பெறுகின்றன.

1. சங்கம், உரையுடன் கூடிய சங்கம் மருவிய கால இலக்கிய நூல்கள்,
2. மொழிபெயர்ப்பு நூல்கள்.
3. தமிழ் இலக்கிய நூல்கள் ரோமன் எழுத்து வடிவில் கொடுக்கப்படுகின்றன.

நூல்களின் பாடுபொருள், தேடுபொருள் ஆகியவற்றுக்கான விரிவான வசதிகளை வழங்குவது இம்மின்நூலகத்தின் தனிச்சிறப்பாகும்.

**2. அகராதிகள்**

ஆகராதிப் பிரிவில் தமிழ் - தமிழ், தமிழ் - பிறமொழிகள், பிறமொழிகள் - தமிழ் அகராதிகள், நிகண்டு நூல்கள் போன்ற பலதரப்பட்ட அகராதிகள் இடம் பெற்றுள்ளன.

1. சென்னைப் பல்கலைக்கழகதின் பேரகராதி.
2. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் - தமிழ் அகராதி.
3. பழனியப்பா சகோதாரர்களின் பால்ஸ் என்னும் ஆங்கிலம் - தமிழ் அகராதி.
4. மு.சண்முகம்பிள்ளை அவர்களின் தமிழ் - தமிழ் அகராதி.

**3. பிற பார்வைகள்**

1. கலைச் சொற்கள்
2. தமிழ்ப்பண்பாட்டு நிகழ்வுகளின் ஒளிப்படக் காட்சிகள்
3. பிற தமிழ் இணையத் தளங்களுக்கு இணைப்பு.

இவை தவிர தொழில்நுட்பக் கலைச்சொல் பிரிவில் கலை. ஆறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளின் தமிழ் கலைச்சொற்கள் இடம் பெறுகின்றன. தற்போது தேடு வசதியுட் 2 லட்சம் கலைச்சொற்கள் வரை வலைத்தளத்தில் இடம் பெறுகின்றன

**இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி**

தகவல் தொழில் நுட்பம் என்பது தகவல்களைக் கணினியைப் பயன்படுத்தித் தேக்குதல், ஆய்தல் மீட்டல், செலுத்தல் கையாளல் சார்ந்த அறிவியல் தொழில் நுட்பப் புலனாகும். இது கணினியையும் கணினி வலையமைப்பை குறித்த தொலைக்காட்சி, தொலைபேசி, அலைபேசி போன்ற பலவற்றையும் உள்ளடக்கியதாகும். இதில் கணினி

மென்பொருள். வன்பொருள், மின்னணுவியல், குறைகடத்திகள், இணையம், தொலைதொடர்புக் கருவிகள் மின்வணிகம் ஆகியனவும் உள்ளடக்குவதாகும்.

நமது பொளாதாரம் அதிவேகமாக முன்னேறவும் மில்லியன் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் தகவல் தொழில்நுட்பத் துறை முதுகெலும்பாக உள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நம்மை வளரத் தூண்டும், உலகச் சந்தையைப் பிடிக்க உதவும். இந்தியாவில் வணிகத் தடைகளைக் குறைத்தல் தொழில்நுட்பத் தயாரிப்புகள் மீதான இறக்குமதி வரிகளை நீக்குதல் போன்ற தாராளமாக்கல் கொள்கைகளினால் இந்தியாவில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

தகவல் தொழில் நுட்பத் துறையானது இந்தியாவில் மொத்த உள்நாடு உற்பத்தியில் 1998-ல் 1-2மூ ஆக இருந்த பங்களிப்பை 2019-இல் கிட்டத்தட்ட 10மூ ஆக அதிகரித்துள்ளது என்று பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன. மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்கள் (STP) ஏற்றுமதி சார்ந்த அலகுகள் நுழுருஇ சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZ) மற்றும் அந்நிய நேரடி முதலீடு (FDI) போன்ற அரசின் பல்வேறு முயற்சிகள் உலகத் தகவல் தொழில்நுட்பத் துறையின் இந்தியா முன்னணி இடத்தைப் பெற இத்துறைக்கு உதவியுள்ளன.

NASSCOM கருத்துப்படி 2019-ஆம் ஆண்டு இந்தியாவில் இந்தத் துறையின் மொத்த வருவாய் 180 மில்லியன் டாலர்கள். ஏற்றுமதி வருவாய் 99 மில்லியன் டாலர்கள் உள்நாட்டு வருவாய் 48 மில்லியன் டாலர்கள் ஆகும். இந்தியாவில் 4.30 மில்லியன் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. தொழில்நுட்ப சேவைகள் ஏற்றுமதியில் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்காவுடன் உள்ளது. இந்தியாவின் டிஜிட்டல் திறன் கொண்ட குருவானது வெகுவாக வளர்ச்சியடைந்துள்ளது. உலகளாவிய டிஜிட்டல் திறமையாளர்களில் இந்தியா 76 பேரைக் கொண்டுள்ளது வியக்கத்தக்க வளர்ச்சியாகும். இந்தியாவில் நான்கு பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான TCS, Infosys, Wipro, Hch, Tech, ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளனர்.

டெலி மெடிசின் ரிமோட் கண்காணிப்பு போன்ற புதிய தகவல் தொழில் நுட்பத்துறைகள் இத்துறையின் தேவையை அதிகப்படுத்தியுள்ளது. செயற்கை நுண்ணறிவு மிக் டேட்டா அனலிட்டிக்ஸ் (Big Data Analyties) கிளவுட் கம்யூட்டிஸ் (Cloud Computing) ஆகியவற்றின் வளர்ச்சியும் இந்தியாவில் இத்துறைகளின் தேவையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. Ib நிறுவனங்கள் தங்களது மையங்களை அடுக்கு II மற்றும் III

நகரங்களில் நிறுவுகின்றனர். இதனால் இது வளர்ச்சியை மேலும் மேம்படுத்தி நகர வளர்ச்சியின் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கிறது.

**கல்வித்துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியின் பங்கு**

**அ) அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கணினிக் கல்வி**

மாநில முழுவதிலும் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் 11வது மற்றும் 12வது வகுப்புகளுக்கு கணினிக் கல்வி அளிப்பதற்காக பொது – தனியார் கூட்டு செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 666 பள்ளிகளும் இரண்டாம் கட்டத்தில் 531 பள்ளிகளும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இத்திட்டத்தில் சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். தேசிய அளவில் இத்திட்டம் ஒரு முன்மாதிரித் திட்டமாக விளங்குகிறது.

**ஆ) கலை அறிவியல் கல்லூரிகளில் கணினிக் கல்வி**

கல்லூரி மாணவர்களை கணினி அறிவு மற்றும் இணையத் திறனை அளிக்க மாநிலம் முழுவதிலும் அனைத்து அரசு காலை அறிவியல் கல்லூரிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 28,000 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**இ) மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் கணினிக் கல்வி**

அரசு மருத்துவக் கல்லூரிகளும் அரசுப் பல் மருத்துவக் கல்லூரிகளும் கணினிக் கல்வித்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. சுமார் 1500 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**ஈ) சட்டக்கல்லூரிகளில் கணினிக் கல்வி**

அரசு சட்டக் கல்லூரிகளில் கணினிக் கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. சுமார் 400 மாணவர்கள் இத்திட்டத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகம்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் கல்வித் திட்டத்தின் கீழ் அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரையிலான தமிழ்க்கல்வி இணையம் வழியாக வழங்கப்படுகிறது. ஊலகம் தழுவி வாழும் தமிழ் மக்கட்கும் தமிழில் ஈடுபாடு உள்ள மற்றையோர்க்கும் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தோடு

அரசின் நிதியுதவியுடன் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒரு சங்கமாக 2000-ஆம் ஆண்டு மே திங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இணைய வழித் தேர்வு**

இணைய வழித் தேர்வு, பாட ஆசிரியர்களால் இணையம் வழியாக நடத்தப்படும். முாணவர்கள் அவர்களுக்கு அருகில் உள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழக கல்வி மையங்களில் இணையம் மூலமாக தேர்வு எழுதலாம்.

**மின் நூலகம்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகம், தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையப் பாடத்திட்டத்தில் சேர்ந்து பயில்வோர் மற்றும் உலகு தழுவி வாழும் தமிழர்கள் அனைவரது பயன்பாட்டிற்காகவும் உருவாக்கப்பட்டள்ளது. இந்த மின்நூலகத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன. ஆவை,

1. இலக்கிய நூல்கள்
2. அகராதிகள்
3. பிற பார்வைகள்

**1. இலக்கிய நூல்கள்**

சங்க காலம் முதற்கொண்டு இன்று வரை படைக்கப்பட்ட இலக்கிய நூல்கள் அனைத்தும் இடம் பெறுகின்றன.

1. சங்கம், உரையுடன் கூடிய சங்கம் மருவிய கால இலக்கிய நூல்கள்.
2. மொழிபெயர்ப்பு நூல்கள்
3. தமிழ் இலக்கிய நூல்கள் ரோமன் எழுத்து வடிவில் கொடுக்கப்படுகின்றன.

நூல்களின் பாடுபொருள், தேடுபொருள் ஆகியவற்றுக்கான விரிவான வசதிகளை வழங்குவது இம்மின்நூலகத்தின் தனிச்சிறப்பாகும்.

**2. அகராதிகள்**

ஆகராதிகள் பிரிவில் தமிழ் - தமிழ், தமிழ் - பிறமொழிகள், பிறமொழிகள் - தமிழ் அகராதிகள், நிகண்டு நூல்கள் போன்ற பலதரப்பட்ட அகராதிகள் இடம் பெற்றுள்ளன.

1. சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரகராதி.
2. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் - தமிழ் அகராதி.
3. பழனியப்பா சகோதாரர்களின் பால்ஸ் என்னும் ஆங்கிலம் - தமிழ் அகராதி

4. மு.சண்முகபிள்ளை அவர்களின் தமிழ் - தமிழ் அகராதி.

**3. பிற பார்வைகள்**

1. கலைச் சொற்கள்

2. தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளின் ஒளிப்படக் காட்சிகள்.

3. பிற தமிழ் இணையத் தளங்களுக்கு இணைப்பு.

இவை தவிர தொழில்நுட்பக் கலைச்சொல் பிரிவில் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம் சட்டம், வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வெறு துறைகளின் தமிழ் கலைச்சொற்கள் இடம் பெறுகின்றன. தற்போது தேடு வசதியுடன் 2 லட்சம் கலைச்சொற்கள் வரை வலைத்தளத்தில் இடம் பெறுகின்றன.

5 மதிப்பெண் வினாக்கள்

1. தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு போராட்டம் குறித்து சிறு குறிப்பு வரைக
2. இந்தி எதிர்ப்பு குறித்து தமிழ்நாடு சட்டபேரவையில் நிறைவேற்றப்பட்டவை எவை.
3. சமூக சீர்திருத்த இயக்கங்களில் பெரியாரின் பங்கு விவரி
4. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் செயல்பாடுகள் எவை குறிப்பு வரைக
5. தொழில்நுட்ப வளர்ச்சியில் மின் நூலகம் குறிப்பு வரைக

8 மதிப்பெண்கள் வினாக்கள்

1. தமிழகத்தின் மொழி போரின் ஏழு நிலைகளை விளக்குக
2. மொழிப்போரில் மாணவர்பளின் போராட்டம் குறித்து விவரித்து எழுது
3. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்களின் மூலம் ஏற்பட்ட சமூகம் மறுமலர்ச்சி குறித்து கட்டுரை வரைக.
4. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அவசியத்தை பற்றி விளக்கு
5. தொழில்துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியின் பங்கை பற்றி விவரி.

## அலகு-5

## 26 நிறுத்தற் குறிகள்

நிறுத்தற்குறி என்பது வாக்கியங்களையும் சொற்சொறடர்களையும் பிரிக்கவும் இடைநிறுத்தங்களைக் குறிப்பிடவும், உரையின் நோக்கத்தைத் தெளிவுப்படுத்தவும் எழுத்துப்பூர்வமாக பயன்படுத்தும் குறியீடுகள் அல்லது குறியீடுகளின் தொகுப்பைக் குறிக்கிறது. எந்த இடைவெளியும் இல்லாமல் முடிவில்லாத வாக்கியத்தை வாசிக்க முடியாது.

**நிறுத்தற்குறிகளின் பயன்பாடு**

நிறுத்தற்குறிகள் தெளிவானக் கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை செய்கின்றன பேசும்போது சரியான ஏற்ற இறக்கத்துடனும் எழுதும்போது சரியான நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்துவதும் செய்தி பரிமாற்றத்தில் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்க்கும்.

காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, உணர்ச்சிக்குறி, வினாக்குறி முதலான நிறுத்தற்குறிகள் ஆங்கில மொழியினால் தமிழுக்கு ஏற்பட்டப் புதுமையாகும். வினைமுற்றச் சொல்லின் இறுதியில் அமைத்தெழுதல் முற்றுப்புள்ளியாகக் கையாளப்பட்டது. ஏகார, ஓகார உம்மைகள் காற்புள்ளி, அரைப்புள்ளியாகப் பயன்படுத்தப்பட்டது.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழியின் நிறுத்தற்குறியீடுகளின் பயன்பாடு அதிகரித்தது. ஆங்கில மொழியின் பயன்படும் அதிகரித்தது.

அறிஞர் வி.கோ. சூரியநாரயண சாஸ்திரியார் “குறியீட்டு இலக்கணம் தமிழின்கண் முழுவதும் தழுவிக் கொள்ளப்படல் வேண்டும். ஆதனால் பொருள் தெளிவும் விரைவு உணர்ச்சியும் உண்டாகின்றன. இவை காரணமாகப் படிப்பவனுக்குப் படித்த நூலின்கண் ஆர்வமும் உண்டாகிறது என்று கூறியுள்ளார். தமிழ்மொழிக்கு இக்குறியீடுகள் இன்றியமையாதது என்றும் தமிழ் இலக்கணத்திற்கு எவ்வித இடர்பாடுமின்றி இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

இன்றைய காலத்தில் தமிழ்நாடு இலக்கணத்திற்கு மாறாக நிறுத்தற்குறியீடுகளைப் பயன்படுகின்றனர். காற்புள்ளிக்கும் உம்மைக்கும் உள்ள தொடர்பினை அறிவதில்லை.

அண்ணன் தம்பி ஸ்ரீ அண்ணனும் தம்பியும்

இவ்வாறு கால்புள்ளி அல்லது ‘உம்’ சந்தியிட்டு எழுத வேண்டும். சில உம்மைக்குப்பின்னர் காற்புள்ளியிட்டு எழுதுவர். இது தவறானதாகும். தொடரில் பயன்படுத்த வேண்டிய நிறுத்தற்குறியீடுகளை அறிந்து தெளிவாகச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

**நிறுத்தற்குறியீடுகள்**

வாக்கிய அமைப்பில் பயன்படுத்தும் ஒவ்வொரு நிறுத்தற்குறியீட்டிற்கும் ஒவ்வொரு பொருள் உண்டு.

| | | |
|---|---|---|
| , | காற்புள்ளி | (Comma) |
| ; | அரைப்புள்ளி | (Semicolon) |
| : | முக்காற்புள்ளி | (colon) |
| . | முற்றுப்புள்ளி | (Full Stop) |
| ? | வினாக்குறி (கேள்விக்குறி) | (Question Mark) |
| ! | உணர்ச்சிக்குறி | (Interjection Mark) |
| “” | இரட்டை மேற்கோள் குறி | (Double Quotation) |
| ‘’ | ஒற்றை மேற்கோள் குறி | (Double Quotation) |
| ..... | தொடர் விடுபாட்டுக்குறி | |
| , | விடுகுறி (எச்சக்குறி) | |
| ” | மேற்படிக்குறி | |
| * | உடுக்குறி | |
| - | இணைப்புச் சிறுகோடு | |
| -....- | இடைப்பிறவரல் வைப்புக்குறி | |
| ( ) | பிறை அடைப்பு | |
| [ ] | பகர அடைப்பு (சதுர அடைப்பு) | |
| ... | முப்புள்ளி | |
| . | புள்ளி | |
| , | தனிமேற்கோள்குறி | |
| ∴ | சாய்கோடு | |
| - | இணைப்புக் கோடு | |
| ு | அடிக்கோடி | |

**காற்புள்ளி ( , )**

1. சொற்களைத் தனித்தனியாக அல்லது அடுக்கடுக்காகப் பிரிக்கும்போது காற்புள்ளி இடல் வேண்டும்.

(எ.கா) அறம், பொருள், இன்பம், வீடு என்பவை நால்வாக உறுதிபொருளாகும். (தனித்தனியாகப் பிரித்தல்)

(எ.கா) நட்புக்குப் பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும், பாரியும் கபிலரும் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். (அடுக்கடுக்காகப் பிரித்தல்)

(குறிப்பு) கபிலபரணர், காய்கறிகள், தாய்தந்தையர் என்ற சொற்களுக்குப் பன்மை ஈறு இறுதியில் வந்துள்ளது. எனவே காற்புள்ளி இடுதல் கூடாது.

2. எழுவாய் ஒன்றாக நின்று, பல பயனிலைகளைப் பெற்று வரும்போது காற்புள்ளியிட வேண்டும்.

(எ.கா) தன் கணவன் கொலையுண்டான் என்று கேட்ட கண்ணகி

பொங்கியெழுந்தாள், விம்மனாள், அரற்றினாள்,

மயங்கினாள், விழுந்தாள்.

3. அதனால், இதனால், ஆதலால், ஆகையால், ஆகவே, எனவே, எனும் காரணச் சொற்களுக்குப் பின்னர் காற்புள்ளியிடல் வேண்டும்.

(எ.கா) அழுகிப்போன பண்டங்களை உள்ளேபோட நம் வயிறு
குப்பைத்தொட்டி அன்று. அதனால், நாம் நல்ல
பண்டங்களையே சாப்பிட வேண்டும்.

4. ஆயினும், எனினும், என்றாலும், எனும் சொற்களுக்குப் பின்னர் காற்புள்ளியிடல் வேண்டும்.

(எ.கா) செய்யுள் படிப்பதற்குக் கடினமாகவே இருக்கிறது. எனினும், அது தனிமையில் இனிமை தருகிறது.

5. விளி, முகவரி, மேற்கோள் குறிக்கு முன்னர், பொருள் மயக்கம் நீங்கித் தெளிவுபடுத்த என்பன போன்ற இடங்களில் காற்புள்ளி இட வேண்டும்.

(எ.கா) விளி கடவுளே, கருணை செய்வாயாக.

முகவரி திரு.ஆ.இராமலிங்கம், 20, பெருமாள் தெரு, புரசை,

சென்னை – 600 007.

மேற்கோள் குறிக்கு முன்னர் - சந்திர மதி,"நாயகனே என் மேலுள்ள அன்பினால் அறம் வழுவேல்" என்றாள்.

பொருள் மயக்கம் நீங்க – அண்ணன், தம்பி வீட்டுக்குச் சென்றதால் நான் அவரைப் பார்க்கவில்லை.

**அரைப்புள்ளி ˙()**

1. ஒரே எழுவாய்ப் பல பயனிலைகளைக் கொள்ளும்போது அரைப்புள்ளியிடல் வேண்டும்.

(எ.கா) மழை இல்லாவிட்டால் விளைவு இல்லை˙ அறுவடை
இல்லை˙ மக்களுக்கு உணவு இல்லை.

2. ஏனென்றால், ஏனெனில் ஆகிய காரணிகிளவிகளுக்கு முன் அரைப்புள்ளியிடம் வேண்டும்.

(எ.கா) நாள் இன்று பேசமாட்டேன்˙ ஏனென்றால்
என் தொண்டை புண்பட்டுள்ளது.

ராதா தேர்வில் வெற்றி பெற்றாள்˙ ஏனெனில் அவள்
கையெழுத்து அழகாக இருந்தது.

முக்காற்புள்ளி (:)

1. வாக்கியத்தில் கூறிய ஒன்றை விரித்துக் கூறும்போது முக்காற் புள்ளியிடலாம்.

(எ.கா) வாழ்வு இரு திறத்தது : ஒன்று உயிர் வாழ்வு : மற்றது உடல்
வாழ்வு

2. எடுத்தாண்ட மேற்கோள் இன்ன நூலில் இருக்கிறது என்பதைக் காட்ட முக்காற்புள்ளி இட வேண்டும்.

(எ.கா) குறள் அதிகாரம் 8 : 5

**முற்றுப்புள்ளி (.)**

1. வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளியிடல் வேண்டும்.
(எ.கா) தமிழ்மொழி எளிமையும் வளமையும் கொண்ட மொழி.
2. சொற்குறுக்கத்திற்கு முற்றுப்புள்ளியிடல் வேண்டும்.
(எ.கா) திரு., உயர்திரு., கிமு., கி.பி.
(திருவாளர், உயர்திருவாளர், கிறிஸ்துபிறப்பதற்கு முன், கிறிஸ்து பிறந்த பின் என்பவற்றின் குறுக்கங்களே மேற்சொல்லப்பட்டவை)
3. ஆங்கிலப்பட்டத்தை எழுதும் போதும் முற்றுப்புள்ளியிடல் வேண்டும்.
(எ.கா) திரு.ச.நாகராஜா,டீ.யு.இ

வினாக்குறி (?) (கேள்விக்குறி)

1. வினாப்பொருளில் வரும் சொற்களுக்குப்பின் வினாக்குறியிடல் வேண்டும்.

(எ.கா) பாடுபட்டால் பலன் இல்லாமல் போகுமா?

**உணர்ச்சிகுறி (!)**

1. மனிதன் தனது மன உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதாக அமையும் தொடரில் உணர்ச்சிக்குறியிடல் வேண்டும்.

(எ.கா) அவர்தம் பெருமை என்னே! என்னே

வாழி! வாழி! தமிழ்நாடு வாழியவே!

தம்பி ! நீடுழி வாழ்வாயாக!

**மேற்கோள்குறி**

இரட்டை மேற்கோள் குறி, ஒற்றை மேற்கோள்குறி என மேற்கோள் இருவகைப்படும்.

**இரட்டை மேற்கோள் குறி (“ ”)**

ஒருவர் கூறியத் தொடரை அப்படியே எழுத்தாளும்போது இரட்டை மேற்கோள் குறியிடல் வேண்டும்.

(எ.கா) ஆட்டோ யெஸ்பர்சன் என்பவர்,“ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்றால், பல சொற்களை அடுக்கி எழுதப் படித்துக் கொள்வது மட்டுமாகாது .... மரபு தவறாது சொற்களைச் சேர்த்தெழுதக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**ஒற்றை மேற்கோள் குறி (‘’)**

1. நேர்க்கூற்றுக்குள் இருக்கும் நேர்க்கூற்றை ஒற்றை மேற்கோள் குறிக்குள் எழுதுவர்.

(எ.கா) பரதன்,“நான் என் செய்வேன்! தமயனார்,‘நீ போ, நான்

பதினான்கு ஆண்டுகள் கழித்தே வருவேன்’ என்று

சொன்னார். ஆதனால் வந்து விட்டேன்” என்றான்.

2. பிரித்துக்காட்டுவதற்கு, பழிமொழிகளைத் தெரிவிப்பதற்கு ஒற்றை மேற்கோள் இடல் வேண்டும்.

(எ.கா) ‘ட’,‘ட’இ ‘டி’ எனும் எழுத்துக்கள் மொழி முதலில் வராது.

‘இமயம்’ சேர்ந்த காக்கை பொன்னிறமாகும். (பழமொழி)

**தொடர்விடுபாட்டுக்குறி (....)**

1. தொடரில் வேண்டாதனவற்றை விட்டுவிடும்போது தொடர் விடுபாட்டுக்குறியிட வேண்டும்.

(எ.கா) மாணாக்கர்களே, உங்கள் நாட்டை நோக்குங்கள் ......

குற்றம் குறைகள் இருப்பின் பொறுப்பீர்களாக!

**விடுகுறி (')**

1. எழுதும் போது ஒன்று விட்டுவிட்டால் இந்தக் குறியைப் பயன்படுத்த வேண்டும்.

   (எ.கா) 15.08.'47 (1947)

**மேற்படிக்குறி –(" ")**

முன்பு கூறப்பட்டதே இந்த அடிக்கும் என்று காட்டுவது மேற்படிக்குறியாகும்.

(எ.கா) ஆடுகொடி – வினைத்தொகை

கடிநாய் – வினைத்தொகை

**உடுக்குறி (மூ )**

பக்கத்தின் அடியில் சிறப்புத்தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்ட உடுக்குறி பயன்படும்.

மூ ஆசிரியா் தமது கல்லூரிப்படிப்பின் போது எழுதிய கட்டுரை.

**இணைப்புச் சிறுகேடு ( - )**

1. ஒன்றை மற்றொன்றோடு இணைக்க இக்குறியிடலாம்.

   (எ.கா) வினாடி – வினா நிகழ்ச்சி

2. விரித்துக் கூறுவதைத் தொகுத்துக் கூறுமிடத்தில் சிறுகோடு இடப்படும்.

   (எ.கா) நண்பா், சுற்றத்தாா், ஊராா் - எல்லாரும் எனக்குப் பாதுகாப்பளித்தனா்.

**இடைப்பிறவரல் வைப்புக்குறி ( - - )**

ஒரு சிறு வாக்கியத்தின் முன்னும் பின்னும் உள்ள இரு சிறு கோடுகளைக் குறிக்கும்.

(எ.கா) இறுதியாக – சுருங்கக் கூறுமிடத்து – நாங்கள் வீட்டுக்கே திரும்பி வந்தோம்.

**அடைப்புக் குறிகள் ( ) ஐ ஸ**

**அடைப்புக்குறிக்ள இரு வகைப்படும்.**

1. பிறை அடைப்பு
2. சதுர அடைப்பு அல்லது பகர அடைப்பு

**1. பிற அடைப்பு ()**

ஒன்றை விளக்க, மற்றொருறோடு இணைக்க இக்குறியிடலாம்.

(எ.கா) உயிா் உடம்பில் நிற்றல் ஊன் (இறைச்சி) உண்மையாலேயாம்.

**2. பகர அடைப்புக் குறி (சதுர அடைப்பு) ஐ ஸ**

பிறரது உரைகளை மேற்கோளுக்காக எடுத்தாளும்போது, எழுதுகிறவர் இடையிடையே தம் கருத்தைத் தெரிவிக்கப் பகர அடைப்பைப் (சதுர அடைப்பைப்) பயன்படுத்தலாம்.

(எ.கா) அகராதியில் வல்லுநர் சுகுஸ்தா இவ்வாறு பேசுகிறார். “ஜபுதிய அகராதிக்குத் திட்டமிடும் போதுஸ அந்த மொழியில் வேறு அகராதி இருத்தல் ..... தகுந்த தகவல் ஆதாரங்கள் எனலாம்”.

(எ.கா) மக்களுக்கு நீதி, அரசு, மதம் ..... நம்பிக்கை இல்லாமல் போய்விடக்கூடாது.

அறையில் குடும்பமே கூடிவிட்டது. அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி ....

**புள்ளி (.)**

சுருக்கக் குறியீடு பயன்படுத்தம்போது, ஒருவரின் பெயருக்கு முன்போ அல்லது பின்போ துணையெழுளத்து இடும்போது, வரிசைக்கு எண்களை எழுதும் போது தேதி, மாதம், வருடம் குறிப்பிடும்போது புள்ளியைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா) கி.பி.

எ. அன்பரசன்

இறையன்பு, சொ.வி

1. உணவு
2. உடை
3. உறைவிடம்
4. 02.01.2002

தனிமேற்கோள்குறி (’)

எழுத்து அல்லது எண் விடுபட்டிருப்பதைக் குறிக்கத் தனிமேற்கோள் குறி பயன்படுத்தப்படும்.

(எ.கா) 25 மே ‘90

ஆமாம் ‘மா (ஆமாம் அம்மா)

**சாய்கோடு ( ∴ )**

ஒன்றுக்குப் பொருத்தமான சில மாற்றுகளைத் தரும்போது அவற்றுக் இடையிலும் சில சுருக்கக் குறியீட்டு எழுத்துக்களுக்கு இடையிலும் சாய்கோடு பயன்படுத்தப்படம்.

(எ.கா) அதிகபட்ச வெப்பம் 104கு ∴40உ

த.∴பெ.(தந்தையின் பெயர்)

**இணைப்புக்கோடு ( - )**

1. தனித்தனியாகக் கூறப்பட்டவற்றை முடிவில் அவை ஒரு தொகுப்பு என உணர்த்தும் சொல்லின் முன் இணைப்புக்கோடு பயன்படுத்தப்படுகிறது.

   (எ.கா) வரிசையானப் பற்கள், அழகானத் கண்கள்

   கன்னத்தில் கறுப்பு மச்சம்

2. என்று, என்பது போன்ற சொற்களைத் தவிர்த்து எழுத இணைப்புக்கோடு பயன்படுத்தலாம்.

   (எ.கா) என்ன தம்பி, நீ அநாதையா? – யாரே கேட்க,"ஆமாம்" என்றான்.

3. 'முதல் ... வரை' என்னும் பொருள் தரும் முறையில் இரு இலக்கங்களுக்கு இடையில், மேற்கோளுக்கு – நூல் பெயர் அல்லது ஆசிரியர் பெயரைக் குறிப்பிடும் போது இணைப்புக்கோடு பயன்படுத்தப்படும்.

   (எ.கா) ழூ சங்க காலம் : கி.மு. 300 – கி.பி.200

   ழூ எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

   மங்காத தமிழென்று சங்கே முழங்கு – பாரதிதாசன்

அடிக்கோடு ( ‿ )

முக்கியமான வார்த்தையோ, கவனிக்க வேண்டிய வாக்கியத்தையோ குறிப்பிட்டுக் காட்ட அடிக்கோடிடப்படும்.

(எ.கா) ழூ இயல்பாகக் கையை நொடிக்கும் நேரமும் கண்

இமைக்கின்ற நேரமும் மாத்திரை ஆகும்.

ழூ கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்கள் ஒன்று பெயர்சொல்லின் ஈற்றில் வரும்போது குற்றியலுகரம் ஆகும் என்றும் வினைச்சொல் ஈற்றில் வரும்போது முற்றிலுகரமாக நிற்கும் என்றும் நச்சினார்க்கினியார் கூறுகிறார்.

இவ்வாறு சொற்களை எழுதும்போதும் சரியான இடத்தில் தவறாது நிறுத்தற்குறியீட்டினைப் பயன்படுத்த வேண்டும். நிறுத்தற்குறியீடுகளைப் பயன்படுத்துவதில் சிலர் பொறுப்பற்ற நிலையில் தமிழ் மொழியினைப் பயன்படுத்துவது நடைமுறையில் உள்ளது. தமிழில் எழுதுபவர், பேசுபவர் ஏற் இறக்கத்தையும் குறியீட்டையும் நன்குத் தெளிவாகக் கையாள வேண்டும். அப்போதுதான் கன்னித்தமிழ் இன்னும் அழகுடன் மிளிரும். தமிழர்களுக்கு இயல்பாகவே இலக்கண முறைகளைப் பயன்படுத்தும் விதம் எளிமையான ஒன்றாகும். ஆனால் சிலர் மெத்தனப் போக்கில் நடந்து கொள்கின்றனர். இதனால் தவறான கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட்டுப் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும். ஆகவே முறையாகக் குறியீடுகளைக் கருத்தில் கொண்டு கருத்து, செய்தி பரிமாற்றத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

**சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும் முறைகள்**

தமிழில் வேர்ச் சொல்லுடன் பல்வேறுப்பட்ட ஒட்டுகள் இணைக்கின்றன. அவ்வாறு இணையும்போது அவற்றுக்குள்ளேயே ஓர் இயைபு விதி உருவாகின்றது. இவ்வாறு சொற்களுடன் ஒட்டுகளை இணைக்கும்போது சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுகின்ற வழக்கம் உள்ளது.

தமிழில் மொழியியல் விதிப்படி தனித்து நின்ற பொரள் தராத துணைவினைகள், ஒட்டுகள், மிதவை ஒட்டு போன்றவற்றைப் பிரித்து எழுதக்கூடாது என்பதை மீறுவத பொருள் மயக்கத்திற்கு முக்கிய காரணமாகும்.

பொதுவாக ஒரு சொல்லை சேர்த்தோ பிரித்தோ எழுதும்போது கூறவந்த கருத்தின் அடிப்படையே மாறுகின்ற நிலை ஏற்படுகிறது.

எ.கா. அவனுடன், அவன் உடனே
அவர்கள் படித்துவிட்டுச் சென்றனர்.
அவர்கள் படித்து விட்டுச் சென்றனர்

இவ்விரு தொடர்களிலும் வேறுபாடு உள்ளது. எனவே மிகக் கவனத்தோடு இடமறிந்து பொருள் மயக்கம் ஏற்படாதவாறு சேர்த்தோ பிரித்தோ எழுத வேண்டும்.

பல்கலைக்கழகம், தொழில்நுட்பம் போன்ற சில கலைச் சொற்களையும் பிரித்து எழுதக்கூடாது.

இதுபோல மொழிப் பயன்பாட்டு விதிகளை முறையாகப் பயன்படுத்தினால் கணினி வழி மொழியாய்வுக்கும் பொருள் மயக்கமின்றி வாசிப்பதற்கும் பயன்படும்.

**பேச்சும், கால இடைவெளியும் நிறுத்தற்குறிகளும்**

பேசும்போது சில சொற்களுக்குப்பின் சிறு கால இடைவெளி விடுகிறோம். வேறு சில இடங்களில் சற்றே அதிகம் கால இடைவெளி தருகிறோம். மேலும் சொற்களையும் தொடர்களையும் வேண்டிய இடங்களில் ஏற்ற இறக்கத்தோடு ஒலிக்கிறோம். கால இடைவெளி தருதல், நிறுத்தல், ஏற்ற இரக்கம் தருதல் போன்ற முறைகளால் செய்தி பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கிறோம்.

எழுதும்போதும் பேச்சில் பயன்படுத்தப்படும் மேற்கூறிய முறைகளுக்கு ஈடாகச் சிறு கால இடைவெளிக்குக் காற்புள்ளி, சற்று அதிகக் கால இடைவெளிக்கு முற்றுப்புள்ளி,

ஏற்ற இறக்கங்களுக்கு உணர்ச்சிக்குறி, கேள்விக்குறி போன்ற குறிகளைப் பயன்படுகிறோம்.

பேச்சின் ஒலிப்பு வேறுபாடுகளை உரைநடையில் காட்டும் இந்தக் குறிகள் தவிர இன்னும் சில குறிகள் உரைநடைக்குத் தேவைப்படுகின்றன. இவை அனைத்தையும் 'நிறுத்தக்குறிகள்' என்று கூறுகிறோம். இந்த நிறுத்தற்குறிகளுள் சிலவோ பலவோ கவிதையிலும் பயன்படலாம் என்றாலும் கவிதையில் இவற்றின் பயன்பாடு குறித்து எதுவும் கூறப்படவில்லை.

நிறுத்தற்குறிகள் தற்கால உரைநடையில் பின்வருமாறு பரவலாகக் பயன்படுத்தப்படுகின்றன.

1. காற்புள்ளி (இ)
2. அரைப்புள்ளி ˙()
3. முக்கால் புள்ளி (:)
4. முற்றுப்புள்ளி (.)
5. புள்ளி (.)
6. முப்புள்ளி (...)
7. கேள்விக்குறி (?)
8. உணர்ச்சிக்குறி (!)
9. இரட்டை மேற்கோள் குறி (" ")
10. ஒற்றை மேற்கோள் குறி (' ')
11. தனி மேற்கோள் குறி (')
12. மேற்படிக்குறி (")
13. பிறை அடைப்பு ( )
14. சதுர அடைப்பு ஜ ஸ
15. இணைப்புச் சிறுகோடு (--)
16. இணைப்புச் சிறுகோடு (-)
17. சாய்கோடு (∴)

18. அடிக்கோடு (‗)

19. உடுக்குறி (※)

மேலே குறிப்பிட்ட நிறுத்தற்குறிகள் ஒவ்வொன்றையும் பயன்படுத்தத் தேவையான நெறிமுறைகள் தரப்பட்டுள்ளன. நிறுத்தற்குறிகளை முரணாகவே மிகையாகவோ பயன்படுத்துவதைத் தவிர்த்து முறையாகப் பயன்படுத்த இந்த நெறிமுறைகள் உதவுகின்றன

## 27. கலைச் சொற்கள்

தகவல் தொடர்பு சாதனங்கள், பிரயாணம் ஆகியவற்றால் பெரிய உலகமானது இன்று மிகச் சிறியதாகிவிட்டது தூரத்தைக் குறைத்து. நேரத்தைச் சுருக்கி மனிதன் சாதனை படைத்துவிட்டான். புதிய, புதிய கண்டுபிடிப்புகளால் அனைத்து நாடுகளும் புதுவாழ்வைத் தொடங்கிவிட்டன. புதுவாழ்வுக்கு ஏற்ப கண்டுபிடிப்புகளுக்கேற்ப ஒவ்வொரு மொழியிலும் புதுப்புதுச் சொற்கள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. இதற்குத் தமிழ்மொழியும் விதிவிலக்கல்ல. தமிழ் மொழியில் கலந்துவிட்ட அயல்நாட்டுக் கலைச்சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்வது சிறப்புடையதா? என்ற எண்ணம் எழுகிறது. ஆனால் நடைமுறைக்கு ஏற்ற நிலையில் தமிழ்க்கலைச் சொற்களைப் பயன்படுத்துவதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை. அறிவியல் கலைச் சொற்களில் ஏற்கக் கூடிய சொற்களைக் கலைச் சொல்லாக்கித் தமிழில் வழங்குவதில் தவறில்லை. முடியாதபட்சத்தில் அவ்வாறே வழங்கிவிடுவது மேலானது. சான்றாக, ரப்பரை ரப்பர் என்றே எழுத வேண்டும். இகரம் சேர்த்தால் யாசிப்பவர் என்று பொருட்சிதைவு ஏற்படும். ஆப்பிளை ஆப்பிள் என்றே கூற வேண்டும்.

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றது. இந்த வளர்ச்சி இரண்டு வகைகளில் அமைகிறது. ஒன்று குறிப்பிட்ட மக்களினத்தின் அக வளர்ச்சியால் உருவாகின்றது. மற்றது புற வளர்ச்சியால் அமைகின்றது. இவ்விரு வளர்ச்சிகளையும் மொழி பதிவு செய்தல் வேண்டும்

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் அக வளர்ச்சி என்பது தமிழ் மக்களால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட கருத்துகளையும் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளையும் குறிப்பதற்குத் தேவைப்படும் சொற்கள் இயல்பாகத் தமிழிலேயே அமைந்துவிடுகின்றன.

புறவளர்ச்சி என்பது பிறநாட்டின் அல்லது பிற மொழியினரால் உருவாக்கப்பட்ட கருத்துக்களையும் தமிழ்நாட்டிற்குத் தமிழ் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதைக் குறிப்பதாகும். இதற்குத் தமிழ் மொழியில் புதிய கலைச் சொற்களைப் படைக்க வேண்டியுள்ளது.

கலைச் சொல்லாக்கம் என்பதற்குத் துறைசார் சொற்களை உருவாக்குதல் என்று பொருள் கூறலாம். இக்கலைச் சொல்லாக்கம் கலையியல் துறைகள், அறிவியல் துறைகள் என இருவகைத் துறைச் சொற்களையும் குறிப்பதாகும். இவ்விரு வகையில் அறிவியல் துறைகளில் வளரும் பல்வகைப்பட்ட அறிவியல் கருத்துக்களைத் தமிழில் ஏற்றுக்கொள்வதற்கு அறிவியல் கலைச்சொல்லாக்கம் பயன்படுகிறது.

தமிழில் கலைச்சொற்களை உருவாக்கும்போது பின்வரும் மூன்று கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

- வடிவில் சிறியதாக இருத்தல்
- எளிதில் வியங்கும் தன்மையில் இருத்தல்
- கூடுமானவரையில் தனித்தமிழ்ச் சொல்லாக இருத்தல்.

பல்வேறு அறிவியல் துறைகளில் வழங்கும் இன்றியமையாத கலைச்சொற்களுக்கான தமிழாக்கம் பின்வருமாறு:

**விண்வெளிக் கலைச் சொற்கள்**

Galaxy - விண்மீன் மண்டலம்

Light year - ஒளி ஆண்டு

Star - விண்மீன்

Gravity - புவியீர்ப்பு

Orbit - சுழல் பாதை

Remote control - தொலைக் கட்டுப்பாடு

Ultra violet - புறஊதா

Velocity - நேர்வேகம்

Telescope - தொலைநோக்கி

Space station - விண்வெளி நிலையம்

**கணினியியல் கலைச் சொற்கள்**

Computer - கணிப்பொறி,கணிப்பான்,கணினி

Chil - சில்லு

Cursor - சுட்டி

Disc - வட்டு

Compact Disc - கையகவட்டு

Floppy Disc - நெகிழ் வட்டு

Monitor - கணினித் திரை

| | | |
|---|---|---|
| Multimedia | - | பல் ஊடகம் |
| Network | - | வலையகம் |
| Input | - | உள்ளீடு |
| Output | - | வெளியீடு |
| Key board | - | சாவிப்பலகை |
| Online | - | உடனடி முறை |
| rogram | - | கட்டளை நிரல் |
| Software | - | மென்கலம் - மென்பொருள் |
| hardware | - | வன்கலம் - மென்பொருள் |
| Mouse | - | சுண்டி, சுட்டி |
| Debugger | - | பிழைநீக்கி |
| Video Cassette | - | ஒளிப்பேழை |
| Audio Cassette | - | ஒலிப்பேழை |
| Date | - | தரவு, தகவல் |
| Electronic Mail | - | மின்னணு அஞ்சல் |
| Internet | - | இணையம் |

**பொதுவான கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Agency | - | முகமை |
| Anthropology | - | மானிடவியல் |
| Archeology | - | தொல்லியல் |
| Pollution | - | மாசு |
| Heavy Vehicle | - | கனரக வாகனம் |
| Broardcast | - | ஒலிபரப்பு |
| Telecast | - | ஒளிபரப்பு |

| | | |
|---|---|---|
| Modernization | - | நவீனமயமாக்கல் |
| Globalisation | - | உலகமயமாக்கல் |
| Liberalisation | - | தாராளமயமாக்கல் |

**மருத்துவ கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Antiseptic | - | நச்சுத்தடை |
| Dentist | - | பல் மருத்துவர் |
| Physician | - | மருத்துவர்(பொது) |
| Specialist | - | வல்லுநர் / சிறப்பு மருந்துவர் |
| Chicken pox | - | தட்டமை / சின்னம்மை |
| Small pox | - | பெரியம்மை |
| Mums | - | அம்மைக்கட்டு / பொன்னுக்குவீங்கி |
| Accupuncture | - | சீன மருத்துவம் / ஊசி மருத்துவம் |
| Diabetes | - | நீரழிவு நோய் / சர்க்கரை நோய் |
| Therapy | - | நோய் நீக்கல் முறை |

**கணிதக் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Analiysis | - | பகுமுறை |
| Calculus | - | நுண் கணிதம் |
| DivisibleNumber | - | பகு எண் |
| DecimalSystem | - | தசமமுறை பதின்முறை |
| Diameter | - | விட்டம் |
| Radius | - | ஆரம் |
| Circumference | - | சுற்றளவு |
| Formula | - | சூத்திரம் வாய்ப்பாடு |
| Square | - | சதுரம் |

| | | |
|---|---|---|
| Pentagon | - | ஐங்கோணம் |
| Integer | - | முழு எண் |
| Perpendicular | - | செங்குததான் |
| Addition | - | கூட்டுதல் |
| Multiplication | - | பெருக்கல் |
| Subtraction | - | கழித்தல் |
| Divide | - | வகு |
| Triangle | - | முக்கோணம் |
| Quadrangle | - | நாற்கோணம் |
| Pentajon | - | ஐங்கோணம் |
| Hexahedron | - | அறுங்கோணம் |
| Kinematics | - | இயக்கவியல் |
| Statistics | - | புள்ளியியல் |

**உளவியல் சொற்கள்**

| | | |
|---|---|---|
| Distraction | - | கவனச்சிதறல் |
| Conscious mind | - | ஆழ்மனம் |
| Frustration | - | உள்ள முறிவு |
| Presure | - | உள்ள இறுக்கம் |
| Stress | - | இறுக்கம் |
| Tension | - | மன இறுக்கம் |
| Depression | - | சோர்வு |
| Personality | - | ஆளுமை |
| Ego | - | தான் என்ற அகந்தை |
| Psyche | - | உள்ளம் சார்ந்த |

**வானியல் சொற்கள்**

| | | |
|---|---|---|
| Planet | - | கோள் |
| Milky way | - | பால்வீதி |
| Astroids | - | சிறுகோள் |
| Comets | - | வால்விண்மீன் |
| Meteors | - | எரி நட்சத்திரம் |
| Space station | - | வான்வெளி நிலையம் |
| Rocket | - | ஏவுகணை |
| Satellite | - | துணைக்கோள் |

**கேட்கிற, படிக்கிற கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Vocatinal course | - | தொழிற்கல்வி |
| Poultry farm | - | கோழிப்பண்ணை |
| Steel plant | - | எ.்.கு ஆலை |
| Dyeing factory | - | சாயப்பட்டறை |
| Power loom | - | விசைத்தறி |
| Starter | - | தொடக்கி |
| Valve | - | திறப்பி |
| Micro cven | - | நுண்ணலை அடுப்பு |
| Massmrdia | - | மக்கள் ஊடகங்கள் |
| Vegetable oil | - | தாவர எண்ணெய் |
| Wildlifeconservation | - | வனவிலங்குபாதுகாப்பு |

**மருத்துவச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| Adenoid | - | தொண்டை சதை வளர்ச்சி |
| Apoplexy | - | ஜன்னி |

| | | |
|---|---|---|
| Asthma | - | சுவாச கவசம் |
| Bronchitis | - | மார்பகச் சளி நோய் |
| Heart transplantation | - | இதய மாற்று பதியம் |
| Tuberculosis | - | என்புருக்கி நோய் |
| Tutpentine | - | கற்பூரத் தைலம் |
| Prescription | - | மருந்து |
| Oinment | - | மருந்தெண்ணெய் |
| Diet | - | பத்திய உணவு |
| Clinic | - | சிறு மருத்துவமனை |
| Dispensary | - | மருந்தகம் |
| Epilepsy | - | காக்கை வலிப்பு |
| Operation theatre | - | அறுவைக்கூடம் |
| Laboratory | - | ஆய்வகம் |
| Dentist | - | பல் மருத்துவர் |
| Influenza | - | கபவாதசுரம் |
| Aids | - | பாலியல் நோய் |
| Cancer | - | புற்றுநோய் |
| Coma | - | ஆழ்ந்த மயக்கநிலை |
| Cough | - | இருமல் |
| Sprain | - | சுளுக்கு |

**இயற்பியல் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Acceletator | - | முடுக்கப்பொறி.∴.முடுக்கி |
| Amplifier | - | ஆற்றல் பெருக்கி |
| Booster | - | ஊக்கி |

| | | |
|---|---|---|
| Capacitor | - | மின் கேக்கி |
| Power loom | - | விசைத்தறி |
| Speedometer | - | வேகமானி |
| Spectrum | - | நிறமாலை |
| Dynamo | - | மின்னியக்கி |
| Equlilibrium | - | சமநிலை |
| Fluorescence | - | ஔிர்வு |

**வேதியியல் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Acid | - | அமிழம் |
| Alkaline | - | காரத்தன்மை |
| Anode | - | நேர் மின்முனை |
| Cathode | - | எதிர்முனை |
| Atom | - | அணு |
| Compound | - | சேர்மம் |
| Element | - | தனிமம் |
| Molecule | - | மூலக்கூறு |
| Catalyst | - | வினைவேகமாற்றி |
| Evaporation | - | ஆவியாதல் |

**உயிரியல் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| genes | - | ரபணுக்களஅ |
| genera(piural of genus) | - | பேரிணங்கள் |
| genus | - | பேரினம் |
| species | - | சிற்றினம் |
| geen house eff | - | பசுங்குடில் விளைவு |

| | | |
|---|---|---|
| metabolism | - | வளர்சிதை மாற்றம் |
| hybrid | - | கலப்பினம் |
| synthesis | - | தொகுப்பு முறை சோக்கை் |
| bio-synthesis | - | ஒளிச்சேர்க்கை |
| bio-synthesis | - | உயிரியல் தொகுப்பு முறை |
| osmosis | - | சவ்வூடு பரவல் |

**கல்வியியல் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| book catalogue | - | நூல் அட்டவனை |
| brain drain | - | அறிவு கழித்தல |
| case study | - | தனி அலகுமுறை தனியார் ஆய்வு |
| crash course | - | மீவிரை பயிற்சி |
| data | - | விவரங்கள் தகவல் |
| educational research | - | கல்வி ஆய்வு |
| exchange teacher | - | பரிமாற்ற ஆசிரியர் |
| fables test | - | நீதிக்கதைகள் சோதனை |
| faculty-student ratio | - | ஆசிரியர் மாணவர் விகிதம் |
| memorandum of understanding | - | புரிந்துணர்வு ஒப்பந்தம் |

**சட்டவியல் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Writ of haneas corpus | - | ஆட்கொணர்வு நீதிப்பேராணை |
| Judician Review | - | நீதி மறு ஆய்வு |
| Sessins Court | - | அமர்வு நீதிமன்றம் |
| First informstion Reporrt(FIR) | - | முதல் தகவல் அறிக்கை |
| LLLegal Gratification | - | லஞ்சம் |

| | | |
|---|---|---|
| Execution | - | நீதி நடவடிக்கை நிறைவேற்றம் |
| Bench | - | நீதி பீடம்/நீதி ஆயம் |
| Affidavit | - | எழுத்து மூலம் அளிக்கப்படும வாக்குமூலம் |
| Tribunal | - | தீர்ப்பாயம் |
| Juvenile Offendrs | - | இளம் குற்றவாளிகள் |

**ஆட்சியில் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Amendment | - | திருத்தம் |
| Embassy | - | தூதரகம் |
| Law and Order | - | சட்டம் ஒழுங்கு |
| Secular Sate | - | சமயச் சார்பற்ற அரசு |
| Lieutenant Governor | - | துணைநிலை ஆளுநர் |
| Governing Body | - | ஆட்சிக்குழு |
| Executive Committee | - | செயலாற்றும் குழு |
| Block development | - | வட்டார வளர்ச்சி |
| Immigration | - | குடியேறுதல் |
| Testimony | - | சாட்சியம் |

**முக்கியக் கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| Indexing | - | மின் அட்டவணையிடும் பொறி |
| Tele Printer | - | மின்னனுத் தட்டச்சு |
| Electronic Typewriter | - | மின்னனுத் தட்டசு |
| Draftsman | - | வரைவாளர் |
| Self-finance Cillege | - | சுயநிதிக் கல்லூரி |
| Aerogram | - | விமானத் தந்தி செய்தி |
| Autonomous college | - | தன்னாச்சி கல்லூரி |

| | | |
|---|---|---|
| Accupunctue | - | ஊசி மருத்துவம் |
| Man nade Fibre | - | செயற்கை இமை |
| Fire Sevice | - | தீயணைப்புப் படை |
| Sodium Vapour Lamp | - | சோடிய ஆவி விளக்கு |
| Momps | - | தட்டமை |
| Technical Education | - | தொழில் நுட்பக் கல்வி |
| T.V.Channel | - | தொலைக்காட்சி அலைவரிசை |
| Hydro Power | - | புனல் மின்சாரம் |
| Refrigerator | - | குளிருட்டும் சாதனம் |
| Infrastructure | - | உள்மட்டமைப்பு |
| Light Vehicle | - | இலகு வாாகனம் |
| Heavy vehicle | - | கன வாககம் |
| Natural Gas | - | இயற்கை வாயு |
| Speedo Meter | - | வேகமானி |
| Robot | - | இயந்திர மனிதன் |
| Expeiments | - | ஆய்வுச் சோதனை |

## 28.மொழி பெயர்ப்பு

## (அலுவலகக் கடிதங்கள்)

**அறிமுகம்**

உங்கள் பாடத்தில் அலுவலகத் தொடர்பான மொழிபெயர்ப்பும் இடம் பெற்றுள்ளது. அரசு நிறுவனம். தனியார் நிறுவனம் , அரசு அறிக்கை முதலிய ஆங்கிலப் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்

மொழிபெயர்ப்பு ஒரு கடினமான பணி. அதுவும் தேர்வில் உங்களுக்குக் கிடைக்கும் நேரத்தில் அதற்குரிய காலமும் ஒதுக்கப்பட வேண்டும். பொறுமையாக ஒருமுறைக்கு இருமுறை படித்துப் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும். மையக் கருத்தை நன்கு புரிந்து கொண்டு,மாதிரி மொழி பெயர்ப்பை அமையுங்கள். அதன்பின்னர் முழுமையான மொழிபெயர்ப்பை எழுதுங்கள். சுமார் பத்து மணித்துளிகள் ஒதுக்குங்கள்! போதும்!

அதற்குமேல் நீட்டித்தால் பிற வினாவிற்குப் போதிய நேரம் கிடைக்காது. மொழிபெயர்ப்பின்போது கீழ்கண்டவற்றை எண்ணிப் பார்க்கவும்

1. மொழிபெயர்ப்பிற்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆங்கில பகுதி சரியாகப் புரிகிறதா?
2. ஒருமுறைக்கு இருமுறை படிக்க வேண்டும் என்பதை நினைவில் இருத்துக
3. அலுவலகத் தொடர்பான சொற்களுக்கு இணையான தமிழ் மொழிபெயர்ப்பு.·.தமிழ்ச் சொற்கள் எவை என்பதைக் கணிக்க வேண்டும்
4. மையப்பகுதி (அல்லது) கூறப்படும் செய்தி நன்றாக விளங்கிக் கொள்ள முடிகிறதா?
5. மாதிரி மொழிபெயர்ப்பை முதலில் அமைத்த பின்னர், அதனைச் சரிசெய்து முழுமை வடிவத்தைப் பின்னர் பிழையில்லாமல் எழுத வேண்டும்
6. எழுதிய பின்பு ஒருமுறை ஆங்கிலப்பகுதியோடு சரிபார்த்துக் கொள்வது நல்லது.
7. மொழிபெயர்ப்பிற்குரிய நேரத்தை மீறாது பார்த்துக் கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம்

மொழிபெயர்ப்பின் வெற்றியே வாக்கியத்தை எளிய தொடரில் அமைப்பதுதான், தொடர்களுக்கிடையே இயைபு இருத்தல் வேண்டும். நடையை ஆற்றொழுக்காக அமைக்க வேண்டும். மொழிபெயர்ப்பு என்று தோன்றாதவாறு மொழிபெயர்க்க வேண்டும்

**மொழிபெயர்க்கும்போது கவனிக்க வேண்டியவை**

1. மூலத்தின் கருத்து சிதையாமல் மொழி பெயர்க்க வேண்டும்.
2. எளிய சொற்களில் சிறுசிறு தொடர்களில் மொழி பெயர்த்தல நலம்.
3. ஒரே சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்தாமல் அதே பொருளில்(எ-டு)யபசஉைரடவரசந-உழவு, விவசாயம், வேளாண்மை.
4. ஆங்கிலத்தில் தொடர்கள் பெரும்பாலும் செயப்பாட்டுவினை அமைப்பில் இருக்கும். தமிழில் செய்வினை அமைப்பில் மொழிபெயர்த்தல் வேண்டும்.
5. ஒவ்வொரு தொடராக மொழிபெயர்க்காமல் மூலத்தை நன்கு விளங்கிக் கொண்டு மொழிபெர்த்தல் வேண்டும்.
6. மொழிபெர்த்ததை மீண்டும் ஒருமுறை வாசித்துத் தேவையான திருத்தங்களைச் செய்தல் வேண்டும்.
7. அலுவல் தொடர்பான மொழிபெயர்ப்புகளில் மூல்த்தில் உள்ளவாறே நாள், பார்வை, பொருள் எனத் தலையிட்டு மொழிபெயர்க்க வேண்டும்.
8. அலுவலக ஆணைகள், பொதுநியமனங்கள், உயர் அதிகாரிக்கு முறையீடு செய்தல் போண்ற பல்வேறு நிலைகளில் அலுவலகக் கடிதங்கள் அமையும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவம் உடையவை. அவ்வடிவ அமைப்பை மொழிபெயர்ப்பிலும் பின்பற்றுதல் வேண்டும்.

account - கணக்கு

ccountant - கணக்கர்

allowance - படி

affidavit - வாக்கு மூலம்

| | | |
|---|---|---|
| affilication | - | இணைப்பு |
| annexure | - | பின்னிணைப்பு |
| Appointment | - | பணியில் அமர்த்தும் ஆணை |
| Attention | - | கவனம் |
| Auditor | - | தணிக்கையாளர் |
| Brach | - | கிளை |
| By order | - | உத்திரவுப்படி |
| Board | - | வாரியம் |
| By law | - | சட்ட விதி |
| Budget | - | நிதிநிலை அறிக்கை |
| Cancel | - | நீக்கல் |
| Cashier | - | காசாளர் |
| Casual leave | - | தற்செயல் விடுப்பு |
| Challan | - | செலுத்தும் சீட்டு |
| Confidential | - | இரகசியமான |
| Department | - | துறை |
| design | - | வடிவமைப்பு |
| Director | - | இயக்குநர் |
| Directrate | - | இயக்கம் |
| Document | - | ஆவணம் |
| Enquiry | - | விசாரணை |
| Engineer | - | பொறியாளர் |
| Executive officer | - | நிர்வாக அதிகாரி |
| Endor | - | வலியுறுத்தல் |

| | | |
|---|---|---|
| Faculty | - | புலம் |
| Fine | - | ஒறுப்புக் கட்டணம் |
| File | - | கோப்பு |
| Form | - | படிவம் |
| Function | - | செயல் |
| Gazette | - | அரசிதழ் |
| Grant | - | மானியம் |
| Governmrnt order | - | அரசாணை |
| Honorarium | - | மதிப்பூதியம் |
| Increment | - | ஊதிய உயர்வு |
| Index | - | அட்டவணை |
| lnvoice | - | விவரப்பட்டியல் |
| lnterview | - | நேர்காணல் |
| Limited | - | வரையறை |
| Memorandum | - | குறிப்பாணை |
| Medical Leave | - | மருத்துவ விடுப்பு |
| Memo | - | குறிப்பு |
| Official | - | அலுவலகத் தொடர்பான |
| Order | - | ஆணை |
| policy | - | கொள்கைமுடிவு |
| Quatation | - | விலைப்பு |
| Record | - | ஆவணம் |
| Revenue | - | வருவாய் |
| Reference | - | பார்வை |

Tender - ஒப்பந்தப்புள்ளி

Vacant - காலியிடம்

Waming - எச்சரிக்கை

**சில பதவிகளின் பெயர்கள்**

Collector - மாவட்ட ஆட்சித் தலைவர்

DRO(District Revenue Officer) - மாவட்ட வருவாய் அலுவலர்

DDO(Divisional Development Officer)- கோட்டாச்சித் தலைவர்

Tashilder - வட்டாச்சியாளர்

Renenue Inspector(R.I.) - வருவாய் அய்வாளர்

Commissione - ஆணையாளர்

Inspector - ஆய்வாளர்

Sub Inspector - துணை ஆய்வாளர்

Clerk - எழுத்தர்

Superintendent - கண்காணிப்பாளர்

Regidtrar - பதிவாளர்

Vice Chancellor - துணைவேந்தர்

Chancellor - வேந்தர்

principal - கல்லூரி முதல்வர்

Senior - முன்னவர்

Junior - பின்னவர்

Secretary - செயலாளர்

Chief-Secretary - தலைமைச் செயலாளர்

Department Secretary - துறைச் செயலாளர்

Special Officer - தனி அலுவலர்

| | | |
|---|---|---|
| Manager | - | மேலாளர் |
| Typist | - | தட்டசு செய்பவர் |
| Record clerk | - | ஆவண எழுத்தர் |

**தொடர்களின் பொருள்**

| | | |
|---|---|---|
| 1. It is submitted | - | பணிந்தனுப்பலாகிறது |
| 2. It deemed fit | | தகுதி/தக்கது எனக்கருதினால் |
| 3. On the dates noted here | - | இங்கே குறித்த நாளில் |
| 4. On and from the date notification | - | இந்த அறிவிக்கைத் தேதி முதற்கொண்டு |
| 5. With his lette read above | - | மேற்கண்டஅவரதுகடித்துடன் |
| 6. In due course | - | உரிய காலத்தில் |
| 7. For necessary action | - | தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு |
| 8. On receipt of Government order | - | அரசாணை கிடைக்கப் பெற்றதும் |
| 9. Forwrded fo being looked into | - | கவனிப்புக்காக அனுப்பலாகிறது |
| 10. A copy is enclosed for information | - | செய்தியறியப் படி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது |
| 11. For compliance | - | இணங்குதல்கோரி/வேண்டி |
| 12. It will be preumed | - | என்று கருதப் பெறும் |
| 13. Should be ackowleged | - | ஒப்புகை அனுப்புக |
| 14. Provided the application was made in time | - | தக்க காலத்தில் விண்ணப்பித்திருததால் |
| 15. Look into the without further delay | - | மேலும்காலதாமதமின்றி கவனிக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| 16. | At an early date | - | கூடிய விரைவில் |
| 17. | Subject to the following condition | - | பின்கண்டகட்டுப்பாடுகளுக்கு உட்பாடு |
| 18. | Under the provision of the said act | - | மேற்குறித்த சட்டப்பிரிவு களின் கீழ் |
| 19. | Shall come into force | - | செயலுக்கு வரும் |
| 20. | ApprovedandForwarde | - | ஏற்பளித்துஅனுப்பலாகிறது |
| 21. | In the proceeding of the commissioner readabove | - | ஆணையர்அவர்களின்மேற்கு குறித்த செயல்முறைகளில் |
| 22. | It is therefore construed | - | எனக் கொள்ளலாகின்றது |
| 23. | To,the individuals through the head of the department | - | துறைதலைவர்கள்வழியாக குறிப்பிட்டவர்களுக்கு |
| 24. | Permission is accorded | - | இசைவுஅளிக்கலாகின்றது. |
| 25. | In order to | - | அதற்காக...அதன்பொருட்டு |
| 26. | On accunt of | - | காரணத்தால் |
| 27. | At all times | - | எப்போதும் |
| 28. | At the same time | - | அதே நேரத்தில் |
| 29. | Uponthewhole,onthewhole | - | மொத்தத்தில் |
| 30. | Go through | - | ஆய்க |
| 31. | Call for | - | கேள் |
| 32. | Over and above | - | குறிப்பிட்டதற்குமேலாக |
| 33. | In the eleventh hour | - | கடைசி நேரத்தில் |
| 34. | I am directed to inform | - | கட்டளைப்படிஅறிவிக்கும் கடமை உடைபேன். |
| 35. | I am to inform | - | அறிவிக்கும் கடமைஉடைப்பேன். |
| 36. | In the circumstances stated | - | தெரிவித்துள்ள சூழ்நிலையில் |
| 37. | Submitted for acceptance | - | ஏற்புக்காகப் பணிந்தனுப்படுகின்றது |

| | | | |
|---|---|---|---|
| 38. | Sent for personal inspection | - | நேராய்வுக்காக அனுப்பலாகின்றது. |
| 39. | Will not be entertained | - | ஏற்கப்பட மாட்டர். |
| 40. | Reserves the right | - | உரிமைகொண்டுள்ளார் |
| 41. | Please state | - | குறிப்பிடுக |
| 42. | Can be considered | - | கருதப்படனம். |
| 43. | Subject to the following | - | கீழ்க்கண்ட நிபந்தைனைகளுக்குஉட்பட்டு |
| 44. | Throughtheproperchannel | - | உரிய வழியாக |
| 45. | Shall be applicable | - | பொருந்தும் |
| 46. | Approved as a special case | - | தனிவகையாககொண்டு ஏற்பளிக்களாகின்றது. |
| 47. | Advance copy of his application | - | அவரதுவிண்ணப்ப முன்படி |
| 48. | For resubmission | - | மீண்டும் பணிந்தனுப்ப திருப்பலாகின்றது. |
| 49. | Is under the consideration of the Government | - | அரசினர் ஆய்வில் உள்ளது. |
| 50. | Favorable orders | - | ஆதரவானஆணை. |

**தமிழில் மொழி பெயர்க்க**

**பயிற்சி- 1**

Alfred Nobel was Swedish Chemist and Scientist. He is best known for the Nobel prizes awarded every year. When success smiled on him,money flowed to him from many sources. Alfred Nobel knew that he would not live long and it was in that last of his life phase he made great decision in drawing up his will in which he made set aside money to found the Nobel Trust from which the nobel prizes are awarded every year regardless of the nationality of the candidate. Totally 3 noble prizes: one for anyone of the subject i.e., physics, chemistry and medicine, One for literary work and another to whoever has done most to promote the friendship of nations and the abolition of warfare.Which is called the Nobel Peace price.

**நோபல் பரிசின் வரலாறு**

ஆல்ஃப்ரட் நோபல் சுவீடன் நாட்டு வேதியியலாளரும் அறிவியலாளரும் ஆவார். ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும் நோபல் பரிசுகள்மூலம் இவர் நன்கறியப்பட்டவராக

விளங்குறார் வெற்றி அவரிடம் புன்னகை பூத்தது. பல வழிகளிலுமிருந்தும் அவருக்குப் பணம் கொட்டியது.ஆல்∴பிரட் நோபல், தான் நீண்ட காலம் உயிரோடு இருக்க மாட்டோம் என்பதை அறிந்து கொண்ட அந்தக் கடைசி காலகட்டத்தில் ஓர் உன்னதமான முடிவுக்கு வந்தார். அவர் தன்னுடைய உயிலை எழுதும்போது நோபல் அறக்கட்டளை நிறுவ ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கினார். தேர்ந்தெடுக்கப்படும் நபரின் நாடுபற்றிய வேற்றுமை கருதாமல் ஒவ்வோர் ஆண்டும் நோபல் பரிசுகள் தரவேண்டும் என்பதற்காக அது நிறுவப்பட்டது. மூன்று பரிசுகள் - இயற்பியல், வேதியியல், மருத்துவம் என்ற பிரிவுகளுக்கு ஒன்று, சிறந்த இலக்கியப் பணிக்கு மற்றொன்று, நாடுகளுக்கு இடையில் நட்புறவு ஏற்படவும் போரின்றி அமைதி உருவாகவும் பாடுபட்ட யாராயிருந்தாலும் அவருக்கு மற்றொன்றும் வழங்கப்படுகின்றன.

இறுதியான பரிசே நோபல் அமைதிப் பரிசு என்று அழைக்கப்படுகிறது.

## Government of Tamilnadu - Order

To

The Collector Office

Wherever the public approach the offcers concerned to get certificates,to get ration cards,every precaution must be taken to see that they are treated with respect and dignity. Routine matters should like community certificates need not take more than seven days. Ration cards be issued within ten days. The government expects the offers to help poor downtrodden and illiterate public.

(By order)

chief Secretary to the Government of Tamilnadu

**தமிழக அரசு - ஆணை**

பெறுநர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.

பொதுமக்கள் சான்றிதழ்கள், உணவுப்பொருள் வழங்கல் அட்டை ஆகியன பெற விளையும்போது அரசு அலுவலர்கள் மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும். சாதிச் சான்றிதழ்கள் ஏழு நாட்களுக்குள்ளும், உணவுப்பொருள் வழங்கல் அட்டை பத்து நாட்களுக்குள்ளும் வழங்கப் பெறல் வேண்டும். ஏழை, பின்தங்கிய, படிக்காத பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் நல் உதவிகள் செய்வதையே அரசு எதிர்பார்க்கிறது.

தலைமைச் செயலர்

தமிழக அரசு

5 மதிபெண் வினாக்கள்

1. நிறுத்தற் குறிகள் என்றால் என்ன?விளக்குக
2. காற் புள்ளி அரைப்புள்ளி என்றால் என்ன?
3. வினாக்குறி ஆச்சரியக்குறி விளக்கம் தருக
4. கலைச் சொற்கள் என்றால் என்ன சான்று தருக
5. மொழிப் பெயர்ப்பின் பயன்களை பட்டியலிடு

8 மதிபெண் வினாக்கள

1. நிறுத்தற்குறிகளையும் அதன் வகைகளையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக
2. கலைச் சொற்களையும் அவற்றினால் வரக் கூடிய பயன்களையும் விவரித்து எழுது.
3. விண்வெளி கலைச் சொற்களை பட்டியலிட்டு எழுது
4. மொழிபெயர்ப்பு அதன் வகைகளையும் விவரித்து அதனால் ஏற்படக் கூடிய பயன்களை எழுது

**முனைவர் த.ஆதிலெட்சுமி**

தமிழியல் துறை

உதவி பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி

தொலைபேசி எண்: 9789177719

EMAIL ID: athipraba1979@gmail.com